REGISTERED AS A NEWSPAPER IN SRI LANKA
www.thinakaran.lk
/ Thinakaran.lk / ThinakaranLK

# தினகரன்
THINAKARAN தினகரன்
2022 செப்டெம்பர் 30 வெள்ளிக்கிழமை
1932 - 2022

வரு. 90 இல. 231 | Friday 30, September, 2022 | 24 பக்கங்கள் | 40/-

## SLBC தமிழ்ச் சேவை
### குரல்தேர்வில் வெற்றிபெற்றோர் விபரங்கள் வாரமஞ்சரியில்....

தினகரன் வாரமஞ்சரி

இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபன தமிழ் பிரிவுக்காக அண்மையில் நடத்தப்பட்ட குரல்தேர்வில் வெற்றி பெற்றோர் விபரம் இவ்வார 06

## ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க பிலிப்பைன்ஸ் ஜனாதிபதி சந்திப்பு
### இரு நாட்டு நீண்டகால நட்புறவு குறித்து பேச்சு



விரிவான செய்தி 06

## பூகோள அரசியல் போக்குகள் காரணமாக
# பொருளாதார நெருக்கடி மேலும் மோசமான நிலையில்
### ஆசிய அபிவிருத்தி வங்கி வருடாந்த மாநாட்டில் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தெரிவிப்பு

கொவிட் 19 தொற்று மற்றும் உக்ரைன் யுத்தம் காரணமாக ஏற்பட்ட உலகப் பொருளாதார ஸ்திரமின்மையின் பாதக விளைவுகள், உணவு, எரிபொருள் மற்றும் உரம் என்பவற்றின் விலைகளை அதிகரித்து, பாரிய சுமையாக மாற்றியுள்ளதாக ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க சுட்டிக்காட்டியுள்ளார்.

உலகளாவிய அரசியல் போக்குகள் பொருளாதார நெருக்கடியை மேலும் மோசமாக்கியுள்ளதாகவும் ஜனாதிபதி இதன்போது தெரிவித்தார்.

பிலிப்பைன்ஸின் மணிலா நகரிலுள்ள ஆசிய அபிவிருத்தி வங்கியின் தலைமையகத்தில் நேற்று (29) காலை நடைபெற்ற ஆசிய அபிவிருத்தி வங்கி




ஆளுநர்களின் 55 ஆவது வருடாந்த கூட்டத்தின் பிரதான அமர்வில் உரையாற்றும் போதே, ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க மேற்கண்டவாறு தெரிவித்தார்.

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் தலைமையில் இந்தக்கூட்டம் நடைபெற்றது. பிலிப்பைன்ஸ் ஜனாதிபதி பெர்டினான்ட் ஆர்.மார்கஸ் (ஜூனியர்) மற்றும் ஆசிய அபிவிருத்தி வங்கியின் தலைவர் மசட்சுகு அசகாவா ஆகியோரின் பங்கு பற்றுதலுடன் நடைபெற்ற இக்கூட்டத்தில் உறுப்பு நாடுகளின் மத்திய வங்கி ஆளுநர்களும் கலந்து கொண்டனர். 06

## தேசிய கொள்கை மற்றும் பொருளாதார ஸ்திரத்தன்மை தொடர்பில் அவதானம்
# தேசிய சபையின் முதலாவது கூட்டத்தில் இரு உப குழுக்களை அமைக்க தீர்மானம்
### ஆளும், எதிர்க்கட்சிகளின் பங்குபற்றலுடன் இணக்கப்பாடு





ஆளும் கட்சி, எதிர்க் கட்சியின் பங்களிப்புடன் நேற்று முதல் முறையாக கூடிய "தேசிய சபையின்" முதலாவதுகூட்டத்தில் தேசிய கொள்கை மற்றும் பொருளாதார ஸ்திரத்தன்மை தொடர்பில் இரு உப குழுக்களை அமைக்கத் தீர்மானிக்கப் பட்டுள்ளது.

குறுகிய, நடுத்தர மற்றும் நீண்டகால தேசிய கொள்கைகளை வகுப்பதற்கான வழிகாட்டல்கள் தொடர்பான பாராளுமன்றத்தின் பொதுவான முன்னுரிமைகளைத் தீர்மானிப்பது மற்றும் பொருளாதார ஸ்திரத்தன்மை தொடர்பான குறுகிய மற்றும் மத்திய கால நிகழ்ச்சித்திட்டத்தை உருவாக்குவது தொடர்பில் இணக்கப்பாட்டை ஏற்படுத்துவது என்பனவே, இந்த உப குழுக்கள் அமைக்கப்படுவதற்கான நோக்கங்களாகும். 06



முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவின் உத்தியோகபூர்வ இல்லத்தில் நடந்த நவராத்திரி விழாவில் கலாநிதி சுப்பிரமணியம் சுவாமி சிறப்பு அதிதியாகக் கலந்து கொண்ட போது.

## மே 09 அரசியல்வாதிகள் வீடுகள் தீக்கிரை
# தடுக்கத் தவறியதாக கூறி 23 OIC மாருக்கு இடமாற்றம்
### பொலிஸ் பேச்சாளர் நிஹால் தல்துவ தெரிவிப்பு

23 பொலிஸ் நிலையங்களின் பொறுப்பதிகாரிகள் உடன் அமுலுக்கு வரும் வகையில் இடமாற்றம் செய்யப்பட்டுள்ளனர்.



இவர்கள் பொலிஸ் பொறுப்பதிகாரி கடமையிலிருந்து நீக்கப்பட்டு, வேறு சாதாரண பொலிஸ் கடமைகள் தொடர்பில் இடமாற்றம் செய்யப்பட்டுள்ளதாக பொலிஸ் ஊடகப் பேச்சாளர் சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சர் நிஹால் தல்துவ கூறினார். 06

## கொழும்பிலிருந்து கண்டிக்கு அதிசொகுசு ரயில் சேவை
### நாளை முதல் வார இறுதி நாட்களில்

(லோரன்ஸ் செல்வநாயகம்)

கொழும்பு கோட்டையிலிருந்து கண்டிக்கு விசேட சொகுசு ரயில் சேவையொன்றை நாளை முதலாம் திகதி முதல் ஆரம்பிப்பதற்கு தீர்மானித்துள்ளதாக ஊடகத்



துறை மற்றும் போக்குவரத்து அமைச்சர் பந்துல குணவர்த்தன தெரிவித்துள்ளார்.

அதன்படி காலை 6.30 மணிக்கு கொழும்பு கோட்டை ரயில் நிலையத்திலிருந்து புறப்படும் சொகுசு ரயில் 06

## வைத்திய பணிக் குழுவின் அலட்சியம்
# ஊன நிலைக்கு ஆளான பிள்ளைக்கு ரூ.30 மில். செலுத்த நீதிமன்று உத்தரவு!

மகப்பேற்றுக்காக கம்பஹா அரசாங்க ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டுள்ள தாய் ஒருவர் வலது குறைந்த பிள்ளையொன்றை பெற்றெடுத்துள்ளமைக்கு மருத்துவர்களின் கவனயீனமே காரமென தெரிவித்து அதற்காக வலது குறைந்த பிள்ளைக்கு 30 மில்லியன் ரூபாவை அரசாங்கம் நட்ட ஈடாக வழங்க வேண்டுமென கொழும்பு மாவட்ட நீதிமன்றம் தீர்ப்பளித்துள்ளது.

கொழும்பு மாவட்ட நீதிமன்றம் அரசாங்கத்திற்கு நேற்று அந்த உத்தரவை 06

## நிந்தவூர் கடலரிப்பு விவகாரத்திற்கு தீர்வு
# கடலரிப்பை தடுக்க நிரந்தர வேலைத்திட்டம்
### பணிப்பாளர் நாயகம் நேரடி விஜயம் செய்து அறிவிப்பு

(நிந்தவூர் குறூப் நிருபர்)



கரையோர பாதுகாப்பு மற்றும் கரையோர வளங்கள் முகாமைத்துவ திணைக்களத்தின் பணிப்பாளர் நாயகம் பொறியியலாளர் ஆர். ஏ.எஸ். ரணவக்க, (28) மாலை நிந்தவூருக்கு விஜயம் செய்தார்.

நிந்தவூர் பிரதேச சபையின் பிரதித் தவிசாளர் வை.எல் சுலைமா லெவ்வையின் அழைப்பையேற்றே, அவர் அங்கு சென்றார்.

நிந்தவூர் பிரதேசத்தில் ஏற்பட்டு வரும் தொடர் கடலரிப்பு, இதனால் ஏற்பட்டுள்ள சேதங்களை நேரில் பார்வையிடல், கடலரிப்பைத் தடுப்பதற்கான தடுப்புச்சுவரை அமைத்தல் உள்ளிட்ட நடவடிக்கைகளை மீளாய்வு செய்வதற்காகவும் பணிப்பாளர் அங்கு விஜயம் செய்தார். 06

## குறைந்த வருமானம் பெறும் 25,000 வீடுகளுக்கு சோலார்
### பெனல்கள் மூலம் மின்சாரம் வழங்கும் திட்டம்



குறைந்த வருமானம் பெறும் 25,000 வீடுகளுக்கு சூரிய சக்தி சோலர் பெனல்கள் மூலம் மின்சாரம் வழங்கும் திட்டம் ஆரம்பிக்கப்படவுள்ளது. 500 மெகாவோற் புதுப்பிக்கப்பட்ட எரிசக்தியை, தேசிய மின் சக்தி கட்மைப்பில் சேர்க்க எதிர்பார்க்கப்படுவதாக நகர அபிவிருத்தி மற்றும் வீடமைப்பு அமைச்சர் பிரசன்ன ரணதுங்க தெரிவித்துள்ளார். 06

## அச்சமின்றி திரிபோஷாவை பயன்படுத்துமாறு அறிவுறுத்தல்



Aflatoxin என்ற பதார்த்தம் அடங்கியுள்ள திரிபோஷா சத்துணவு அழிக்கப்பட்டுள்ளதால், அரசாங்கத்தால் விநியோகிக்கப்பட்டுள்ள திரிபோஷா சத்துணவு தொடர்பில் எவ்வித சந்தேகமுமின்றி இன்று முதல் அதனை பயன்படுத்த முடியுமென கர்ப்பிணித் தாய்மார் உள்ளிட்ட பெண்களுக்கு சுகாதார அமைச்சு அறிவித்தல் விடுத்துள்ளது. 06

## 22 ஆவது திருத்தம் மீதான விவாதம் 06 மற்றும் 07ஆம் திகதிகளில்

(லோரன்ஸ் செல்வநாயகம்)



அரசியலமைப்பின் 22 ஆவது திருத்தம் தொடர்பான பாராளுமன்ற விவாதம் எதிர்வரும் 06 மற்றும் 07ஆம் திகதிகளில் நடைபெற உள்ளதாக பாராளுமன்ற தொடர்பாடல் திணைக்களம் தெரிவித்துள்ளது.

அரசியலமைப்பின் 22 ஆவது திருத்தம் ஏற்கனவே பாராளுமன்றத்தில் 06



யாழ். போதனா மருத்துவமனையில்
## கைபேசி திருட்டில் ஈடுபட்ட இளைஞன் கைது
03

## மக்களின் பாதுகாப்புக்காகவே உயர் பாதுகாப்பு வலய பிரகடனம்
ஐக்கிய தேசிய கட்சி சட்டத்தரணி சுகத் தெரிவிப்பு 03



முல்லைத்தீவு ஆஸ்பத்திரியில்
## புற்றுநோய்க்கு வெற்றிகர அறுவை சிகிச்சை ! டொக்டர் அகிலன் தலைமையில் மருத்துவர்கள் சாதனை
03

## கட்டுநாயக்க விமான நிலையத்தில் அதிரடி
# ஐந்து கோடி ரூபா கொக்கைன் கடத்தல் முயற்சி முறியடிப்பு
### விழுங்கிய நிலையில் வந்த விவசாயி கைது

சுமார் 05 கோடி ரூபா பெறுமதியான கொக்கேய்ன் போதைப்பொருளை உருண்டைகளாக விழுங்கி நாட்டுக்குள் கடத்த முற்சித்த உகண்டா 06



## ராகம வைத்தியசாலையில் சம்பவம்
# தவறான சிகிச்சையால் இளம் பெண் உயிரிழந்தாரா?
### சுகாதார அமைச்சு அறிக்கை கோரல்

திருமணமான இளம் பெண்ணொருவர் சத்திரசிகிச்சையின் போது ஏற்பட்ட தவறினால் 06



## நீதிமன்ற அவமதிப்பு
# இராஜாங்க அமைச்சர் சனத் நிஷாந்தவுக்கு அழைப்பாணை!

நீதிமன்றத்தை அவமதித்த குற்றச்சாட்டுக்கு தண்டிக்கப்படாதமைக்கான காரணங்களை முன்வைப்பதற்காக, இராஜாங்க அமைச்சர் சனத் நிஷாந்தவுக்கு எதிர்வரும் ஒக்டோபர் (13) ஆஜராகுமாறு மேன்முறையீட்டு நீதிமன்றம் அழைப்பாணை 06






முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ தலைமையில் நவராத்திரி பூஜை சிறப்பு வழிபாட்டு நிகழ்வு நேற்றுமுன்தினம் (28) இரவு அவரது உத்தியோகபூர்வ இல்லத்தில் நடைபெற்றது. விசேட பூஜையையடுத்து முப்பெரும்தேவியருக்கு தீபாராதனை நடைபெற்றது. முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவும் அவரது பாரியார் ஷிரந்தி விக்கிரமசிங்க ராஜபக்ஷவும் பூஜையில் பங்கேற்றபோது பிடிக்கப்பட்ட படங்கள்.

# கல்வி கற்றுக் கொண்டே தொழில் புரியும் வகையிலான அகடமியொன்று லேக் ஹவுஸில் நிறுவப்பட்டமை பத்திரிகைத் துறையின் திருப்புமுனை

கல்வி கற்றுக் கொண்டே வேலை செய்வதற்கும், வேலை செய்து கொண்டே கல்வி கற்பதற்கும் ஏற்றவாறு ஊடக அகடமி ஒன்றை லேக் ஹவுஸ் நிறுவனத்தில் நிறுவியுள்ளமை பத்திரிகை துறையின் திருப்பு முனை என போக்குவரத்து, பெருந்தெருக்கள் மற்றும் ஊடக அமைச்சர் கலாநிதி பந்துல குணவர்தன தெரிவித்துள்ளார்.

அவர் இதனை லேக் ஹவுஸ் நிறுவனத்தில் ஊடக டிப்ளோமா பாடநெறியை கடந்த 28 ஆம் திகதி ஆரம்பித்து வைத்த போதே தெரிவித்தார்.



உலகம் டிஜிட்டல் மயமாகியுள்ளதால் புத்தகங்களில் இருந்து விலகி இருக்க நேரிடுகிறது. லேக் ஹவுஸ் அகடமியில் புத்தகங்களை அச்சிடும் பிரிவு ஒன்றையும் ஆரம்பிக்கும்படி அவர் பரிந்துரைத்தார்.

இந்த அகடமியில் டிப்ளோமா பாடநெறியை கற்கும் போதே செயன்முறை பயிற்சிகளை பெற்றுக் கொள்ளலாம். ஒன்றரை மாதமளவில் புகைப்பட ஊடக டிப்ளோமா பாடநெறி ஒன்றும் ஆரம்பிக்க உத்தேசிக்கப்பட்டுள்ளது.

இளம்தலைமுறையினர் நாட்டையும் நாட்டு மக்களையும் சூழலையும் நேசிக்க தவறுவார்களேயானால் நாட்டை ஒருபோதும் கட்டியெழுப்ப முடியாது. மனிதாபிமானம் சிறந்து விளங்கிய எமது நாட்டில் மனிதர் மனிதரை படுகொலை செய்யுமளவுக்கு மனிதாபிமானம் வீழ்ச்சியடைந்துள்ளதாக தெரிவித்த அமைச்சர், இதுபோன்ற குரோத மனப்பான்மைகள் மாற்றப்படவேண்டும் என்றும் அதற்கான பொறுப்பு ஊடகங்களுக்கு மிக அதிகமாக உள்ளதாகவும் தெரிவித்தார்.

இராஜாங்க அமைச்சர் சாந்த பண்டார, அமைச்சின் செயலாளரும் லேக்ஹவுஸ் நிறுவனத்தின் தலைவருமான அனுஷ பெல்பிட்ட, கல்விமான்கள், பேராசிரியர்கள், ஊடகத்துறை சார்ந்தவர்கள் மற்றும் முக்கியஸ்தர்கள் கலந்து கொண்ட இந்த நிகழ்வில் தொடர்ந்தும் உரையாற்றிய அமைச்சர்,

"லேக்ஹவுஸ் நிறுவனம் பத்திரிகைகளின் தாய்வீடாக விளங்குகின்றது. நாட்டு மக்களுக்காக டி.ஆர்.விஜேவர்தனவினால் ஸ்தாபிக்கப்பட்ட இந்த நிறுவனம் மூன்று மொழிகளிலும் பத்திரிகைகளை அச்சிட்டு வெளியிடுவதுடன் நாட்டின் சுதந்திரத்தின் போது அதற்காக பெரும் பங்களிப்பு வழங்கிய நிறுவனமாக செயற்பட்டுள்ளதைக் குறிப்பிட முடியும்.

அந்தவகையில் தேசியத்துக்கு முக்கியத்துவமளித்து மனிதாபிமானத்தை மதித்து செயற்படும் நிறுவனமான லேக்ஹவுஸ் நிறுவனத்தின் ஆரம்ப பத்திரிகை ஆசிரியர்களான மார்டின் விக்கிரமசிங்க போன்றோரையும் சிறப்பாக குறிப்பிட முடியும்.

எமது கலாசாரம் மனிதத்தன்மை அருகிவருகின்ற நிலையில் ஊடகங்கள் மூலம் அதனை மீளக் கொணர முடியும் என்பதே எமது நம்பிக்கை. குரோதம் நிறைந்ததாக ஒருவரையொருவர் படுகொலை செய்வது வரை எமது கலாசாரம் மற்றும் பண்பாடு மாற்றம்பெற்றுள்ள சூழலையே தற்போது காண முடிகிறது. இந்த நிலை மாற்றப்பட வேண்டும். கடந்த இரண்டு வாரங்களுக்கு முன் நான் கசகஸ்தானில் நடைபெற்ற சர்வதேச சினிமா விருது விழாவில் கலந்து கொண்டிருந்தேன். உலகின் பல்வேறு நாடுகளிலிருந்தும் திரைப்படத் தயாரிப்பாளர்கள் நடிகர்கள் அதில் பங்கேற்றிருந்தனர். அவர்களோடு கலந்துரையாடும் வாய்ப்பு கிடைத்தது. அவர்கள் என்னிடம் "உங்கள் நாட்டு விமான நிலையத்திற்கான பாதைகள் தடை செய்யப்படுகின்றதா? அவ்வப்போது கடவுச்சீட்டுக்கள் அதிகாரமில்லாதவர்களால் பரிசோதனை செய்யப்படுகின்றதா? எந்த நேரத்திலும் வன்முறைகள் இடம்பெறுக்கின்றன. மக்களைத் தாக்கியும் படுகொலை செய்தும், குழப்பங்கள் ஏற்படுத்தப்படுகின்றன. அந்த நிலையில் உங்கள் நாட்டுக்கு நாங்கள் வருகை தந்தால் எங்கள் பாதுகாப்பு தொடர்பில் உங்களால் உறுதிப்படுத்த முடியுமா?" என்று என்னிடம் பல்வேறு கேள்விகளை எழுப்பினர்.

நான் அதற்குப் பதிலளிக்கையில், சிறு சிறு குழப்பங்கள் ஏற்பட்டிருந்தன.இப்போது அங்கு சகஜநிலை காணப்படுகிறது என்று தெளிவுபடுத்தினேன்.

ஊடகங்கள் நாட்டின் நற்பெயருக்கு களங்கம் ஏற்படாதவகையில் செயற்படுவது அவசியம். நாம் கல்வி கற்ற காலத்தில் சிறந்த படிப்பினைகள் எமக்குக் கிடைத்தன. தற்போது அப்படியான நிலைமை மிகவும் அருகி விட்டது. நாட்டில் புதிதாக பிறக்கும் பிள்ளைகள் தமது நாட்டுக்கும் மக்களுக்கும் சூழலுக்கும் அன்பு செய்யாவிட்டால் நாட்டை ஒருபோதும் கட்டியெழுப்ப முடியாது போகும்.

லேக்ஹவுஸ் நிறுவனத்தினால் புதிதாக ஆரம்பிக்கப்பட்டுள்ள ஊடக அகடமி சிறந்த துறை சார்ந்த விற்பன்னர்களின் பங்களிப்புடன் கற்கை நடவடிக்கைகளை மேற்கொள்ளவுள்ளது. இந்த நிறுவனத்தில் பாரிய வளங்கள் உள்ளன. அதனை உபயோகித்து கற்கும்போதே வேலைசெய்வது, வேலைசெய்யும் போதே கற்பது என இரண்டையும் பெற்றுக்கொள்ள மாணவர்களுக்கு வாய்ப்புகள் கிடைக்கும். உலகில் கற்பிப்பதே சிறந்த தொழிலாகும். அந்தவகையில் பேராசிரியர், கல்விமான்கள் பலரும் இந்த அகடமியில் கற்பித்தலில் ஈடுபடவுள்ளனர். இந்த அகடமி மேலும் ஒரு படி உயர்ந்து ஒரு வெளியீட்டகமாகவும் முன்னேற வேண்டும். அதன் மூலம் சிறந்த பல நூல்கள் வெளியிடப்பட வேண்டும் என்றும் அவர் மேலும் தெரிவித்தார்.



**இராஜாங்க அமைச்சர் சாந்த பண்டார:**

முப்பது வருட கால யுத்தத்தை வெற்றிகொண்டுள்ள எம்மால் நாட்டின் பொருளாதாரத்தையும் வெற்றி கொள்ள முடியும் என்றும் அனைத்துத் தரப்பினரும் இணைந்துசெயற்பட்டால் வீழ்ச்சியிலிருந்து நாட்டை மீள முன்னேற்ற முடியும் எனவும் ஊடகத்துறை இராஜாங்க அமைச்சர் சாந்த பண்டார தெரிவித்தார்.

இந்தியா உட்பட பல நாடுகள் பெரும் வீழ்ச்சி கண்டு மீண்டு எழுந்த வரலாறுகள் உள்ளன. அதே போன்று ஒன்றிணைந்து செயற்பட்டால் எமது நாட்டையும் மீளக் கட்டியெழுப்ப முடியும்.

அங்கு தொடர்ந்தும் உரையாற்றிய அவர், உலகம் முழுவதுமே ஊடகங்கள் தொடர்பில் பாரிய கவனம் செலுத்தப்படும் காலமிது. ஒருவரை உருவாக்கவும் அவரை இல்லாதொழிக்கவும் ஊடகங்களினால் முடியும். அதனால்தான் ஜனநாயக நாட்டில் நான்காவது தூண் என ஊடகத்துறை புகழப்படுகிறது.



ஊடகத்துறை பெரும் முன்னேற்றமடைந்து வரும் காலமிது. பொதுவாகவே ஊடகங்கள் மக்களுக்கு தகவல்களை தெளிவுபடுத்துவதாக செயற்பட வேண்டுமே தவிர சில ஊடக நிறுவனங்கள் செயற்படும் விதம் கவலையளிக்கிறது. ஊடகத் துறையில் நிலவும் போட்டித்தன்மையும் இதற்கு முக்கிய காரணமாகும்.

ஊடகங்களில் வெளிவரும் அனைத்துச் செய்தியும் உண்மையல்ல என்பதை அனைவரும் புரிந்து கொள்ள வேண்டும். சில ஊடகங்கள் வெ ளியிடும் செய்திகளினால் பிறருக்கு ஏற்படும் பாதிப்பு தொடர்பில் சிந்திப்பதில்லை. அண்மையில் ஒரு ஊடகம் மூலம் வெளியிடப்பட்ட செய்தி பரபரப்பை ஏற்படுத்தியது. இராஜாங்க அமைச்சரொருவர் ஹெல்மட்டினால் தாக்கப்பட்டார் என்ற செய்தியே அது. அந்தச் செய்தியில் உண்மை கிடையாது. ஜனரஞ்சகமாக செய்திகளை வழங்க வேண்டுமென்பதற்காக நபர்களுக்கு பாதிப்பு ஏற்படுத்துவதை ஏற்றுக் கொள்ள முடியாது. நாடு பொருளாதார நெருக்கடியை எதிர்கொண்டுள்ள நிலையில் ஒரு தரப்பு மட்டுமன்றி அனைத்துத் தரப்பினரும் இணைந்து செயற்பட்டால் மாத்திரமே அதிலிருந்து மீள முடியும்.



ஒரு காலத்தில் இந்தியா மிக வீழ்ச்சியடைந்திருந்தது. ஏனைய சில நாடுகளும் வீழ்ச்சிகளிலிருந்து மீண்டு எழுந்துள்ளதை குறிப்பிடமுடியும்.

நாம் 30 வருட காலம் யுத்தத்தை வெற்றி கொண்டு நாட்டில் அமைதிச் சூழ்நிலையை ஏற்படுத்தியிருக்கிறோம். எம்மால் அதனைச் செய்ய முடியுமானால் நாட்டின் பொருளாதாரத்தை கட்டியெழுப்புவதற்கும் எம்மால் முடியும் என்றும் அவர் மேலும் தெரிவித்தார்.

**நிறுவனத்தின் தலைவர், ஊடகத்துறை அமைச்சின் செயலாளர் அனுஷ பெல்பிட்ட கூறிய கருத்து:**

லேக்ஹவுஸ் நிறுவனத்தில் ஆரம்பிக்கப்படும் ஊடக அகடமியை டிப்ளோமா வரை மட்டுமன்றி பல்கலைக்கழகம் வரை முன்னெடுத்துச் செல்வதே இலக்காகுமென லேக்ஹவுஸ் நிறுவனத்தின் தலைவரும் ஊடகத்துறை அமைச்சின் செயலாளருமான அனுஷ பெல்பிட்ட தெரிவித்தார். அதுதொடர்பில் மேலும் தெரிவித்த அவர், மாணவர்கள் வேறு எந்த நிறுவனத்திலும் சென்று டிப்ளோமா கல்வியை கற்கமுடியும். எனினும் லேக்ஹவுஸ் நிறுவனத்தால் நடத்தப்படுகின்ற ஊடக அகடமியில் அனுபவத்துடனான ஆக்கபூர்வமான ஊடக அறிவினை பெற்றுக்கொள்ள முடியும் என்பதே எமது நம்பிக்கை.

300க்கும் மேற்பட்ட சிறந்த ஊடகத்துறை சார்ந்தவர்கள் இந்த அகடமியில் பங்களிப்பு செய்கின்றனர். இங்கு கல்வி கற்கும் மாணவர்கள் சிலருக்கு அவர்களின் சிறந்த திறமையை கவனத்திற் கொண்டு தொழில் பெற்றுக்கொடுப்பது தொடர்பில் கவனம் செலுத்தப்படும்.

லேக்ஹவுஸ் நிறுவனமானது 100 வருடங்களுக்கு மேலான வரலாற்றைக் கொண்டது. இங்கு இரண்டு ஆங்கிலப் பத்திரிகைகள், இரண்டு சிங்களப் பத்திரிகைகள், இரண்டு தமிழ்ப் பத்திரிகைகள் மற்றும் பல சஞ்சிகைகளும் வெளியிடப்படுகின்றன. நாட்டில் தற்போது நிலவும் பொருளாதார நெருக்கடியை கவனத்திற் கொண்டு நாம் புதுவிதமாக சிந்தித்ததில் இந்த ஊடக அகடமி ஆரம்பமானது. அதற்காக இதுவரை 30 விண்ணப்பங்கள் எமக்குக் கிடைக்கப் பெற்றுள்ள நிலையில் 25 மாணவர்களைத் தெரிவு செய்துள்ளோம். அடுத்த வாரத்தில் கற்கை நடவடிக்கைகளைத் தொடங்குவதற்கு உத்தேசிக்கப்பட்டுள்ளது என்று தெரிவித்தார்.

லோரன்ஸ் செல்வநாயகம் ...

# இஸ்லாமிய பேரறிஞர் கலாநிதி யூஸுப் அல் கர்ளாவி மறைவையிட்டு மு.கா தலைவர் ஹக்கீம் அனுதாபம்

நவீன உலகின் தலைசிறந்த இஸ்லாமிய அறிஞர்களுள் பூரண நிலவாக ஒளிவீசிப் பிரகாசித்த கலாநிதிஅல்லாமா யூசுப் அல் கர்ளாவி காலமான சம்பவம் நமது சமுதாயத்தின் அறிவுசார் பரம்பரையினரை வெகுவாகப் பாதித்து, அதிர்ச்சியூட்டிய நிகழ்வாகும்.அத்துடன் நமது வாழ்நாட்களை அர்த்தமுள்ளதாக்கிய அந்த மா மேதையின் மறைவு இலகுவில் ஜீரணிக்க முடியாத பேரிழப்பாகும்.

இவ்வாறு அன்னாரின் மறைவையிட்டு விடுத்துள்ள அனுதாபச் செய்தியில் ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் தலைவரும்,பாராளுமன்ற உறுப்பினருமான ரவூப் ஹக்கீம் குறிப்பிட்டுள்ளார்.

அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது,

இஸ்லாமிய சன்மார்க்க புலமைத்துவமானது அதனைப் பின்பற்றியொழுகும் பொதுமக்கள் மத்தியிலிருந்து வெகுவாக அந்நியப்பட்ட ஒரு பாரம்பரியமாக வளர்ந்து வருகையில் , அதனை வெகுஜன பாரம்பரிய மொழி ஊடகங்களில் கொண்டு வந்த பிதா மகராக கலாநிதி யூசுப் அல் கர்ளாவி திகழ்கின்றார்.

இஸ்லாமிய அறிவியல் சம்பிரதாயம் கற்றறிந்தவர்களுக்கிடையிலான உரையாடல் வழியாகவே அநேகமாக சென்ற நூற்றாண்டு வரை இருந்து வந்தது. அதனை வெகு ஜனங்களின் அறிவுப் பார்வைக்கு இட்டுச் சென்ற பேரறிஞர்களில் குறிப்பிடத்தக்க ஒருவராக தற்கால இஸ்லாமிய உலகு ஷெய்க் அல் கர்ளாவியை அறிந்துவைத்துள்ளது. அல் குர்ஆனையும், நபிகளாரின் சொல்,செயல், அங்கீகாரத்தையும்(ஹதீஸ்) இஸ்லாமிய ஷரிஆ ஆகவும் ,மெய்யியல் ஆகவும் சராசரி மக்களின் அன்றாட உரையாடல் பொருளாக ஆக்கிய ய பெருமை ஷெய்க் அல் கர்ளாவியையே சாரும்.



பிக்ஹுல் அவ்லவிய்யாத் (பிக்ஹுவில் முன்னுரிமைப்படுத்த வேண்டிய அம்சங்கள்), பிக்ஹுத் தைஸீர் (பிக்ஹுவில் இலகுபடுத்தல் கோட்பாடு), பிக்ஹுல் அகல்லியாத் (பிக்ஹுவில் சிறுபான்மையினருக்கான சிந்தனை முறை) என்பவற்றில் அறிவு மொழியையும் பாரம்பரியத்தையும் மக்களை இலகுவாகச் சென்றடைய வழியமைத்து, இஸ்லாமிய மெய்யியலை சராசரி மனிதனின் வாசல்படி வரை கொண்டு வந்து சேர்த்தமை அன்னார் நிகழ்த்திய அளப்பரிய சாதனையாகும்.

இதனால், இஸ்லாம் காலம் கடந்த மார்க்கம் என்று நிறுவ முயன்ற மேலைத்தேச சிந்தனைப் போக்கைத் தழுவிய புலமைத்துவப் பாரம்பரியம் வாயடைத்துப் போய் நின்றது.

அரபு மொழியில் அவர் எழுதிய ஆய்வு நூல்கள் உலகின் பல்வேறு மொழிகளில் வெளிவந்து இலட்சக்கணக்கான வாசகர்களை ஈர்த்துள்ளன. இத்தகைய பல்துறை ஆளுமை சடுதியாகச் சாய்ந்து விட்டது நமது சமுதாயத்திற்கு நேர்ந்துள்ள பேரிழப்பாகும்.

நாங்கள் அல்லாமா யூஸுப் கர்ளாவி அவர்களை கட்டார் நாட்டில் சந்தித்துக் கலந்துரையாடிய சந்தர்ப்பமொன்றில்,"தேசிய வாழ்வில் பெரும்பான்மைச் சமூகங்களோடு கரைந்து போகாமல் கலந்து வாழ வேண்டும். அத்துடன்,அமைப்புகளாகவும்,இயக்கங்களாகவும் பிளவுபட்டுப் பிரிந்து விடக் கூடாது" என்று கூறிய அறிவுரைகள் இன்னமும் எங்கள் காதுகளுக்குள் ரீங்காரமிடுகின்றன.

இன்னும் இம்மைக்கும்,மறுமைக்கும் பயனளிக்கத்தக்க பல்வேறு ஆலோசனைகளை அவர் எங்களுக்கு வழங்கினார்.

வாழ்நாட்களை முழுமையாக இஸ்லாத்தின் வளர்ச்சிக்கு அர்ப்பணித்த அன்னாருக்கு எல்லாம் வல்ல அல்லாஹ் ஜன்னத்துல் பிர்தௌஸுல் அஃலா என்ற மேலான சுவன பாக்கியத்தை அருள்வானாக.

தினகரன் விளம்பரம்
0112429367
விற்பனை பிரிவு
0112429444,
0112429378
ஆசிரியபீடம்
editor.tkn@lakehouse.lk

2022 செப்டெம்பர் 30 வெள்ளிக்கிழமை

# தினகரன்
THINAKARAN
තිනකරන්

தொழுகை நேரம்
27 முதல் 30வரை
சுபஹ் - 04.44
லுஹர் - 05.59
அஸர் - 03.16
மஃரிப் - 06.05
இஷா - 07.14

இன்றைய சுபதினம்
சுபகிருது வருடம் புரட்டாசி 13
ராகுகாலம் : பகல் : 10.30 - 12.00வரை
சுபநேரம் : காலை : 09.00 - 10.30வரை
யோகம்: சித்தமரண யோகம்
திதி: பஞ்சமி



### பொருளாதார நெருக்கடியை நிவர்த்திக்க:

# ஐரோப்பிய ஒன்றியம் இலங்கைக்கு 1.5 யூரோ மில். மனிதாபிமான உதவி

**லோரன்ஸ் செல்வநாயகம்**

நாட்டில் நிலவும் பொருளாதார நெருக்கடியை நிவர்த்திக்கும் வகையில் ஐரோப்பிய ஒன்றியம் இலங்கைக்கு 1.5 மில்லியன் யூரோக்களை மனிதாபிமான உதவியாக வழங்குவதற்கு நடவடிக்கை எடுத்துள்ளது.

ஐரோப்பிய ஒன்றியத்தினால் பெற்றுக் கொடுக்கப்படும் இந்த புதிய நிதி உதவி முக்கியமாக நாட்டிலுள்ள மக்களின் அடிப்படைத் தேவைகளான உணவு, சுகாதாரம், கல்வி மற்றும் பாதுகாப்பு ஆகியவற்றுக்கு செலவிடுவதற்காக வழங்கப்பட்டுள்ளதாகவும் அந்த ஒன்றியம் தெரிவித்துள்ளது.

ஐரோப்பிய ஒன்றியத்தின் முகாமைத்துவம் தொடர்பான ஆணையாளர் ஜெனெஸ் லெனார்சிக் அது தொடர்பில் தெரிவிக்கையில் நாட்டில் மில்லியன் கணக்கான மக்களின் உணவு பாதுகாப்பு அச்சுறுத்தலுக்கு உள்ளாகியுள்ளது. மக்கள் பொருளாதார நெருக்கடிக்கு முகம் கொடுத்து அசௌகரியங்களை எதிர்கொண்டு வரும் நிலையில் இந்த புதிய மனிதாபிமான நிதியை மிகவும் கஷ்டப்படும் மக்களுக்கான ஒத்துழைப்பாக வழங்குவதாகவும் தெரிவித்துள்ளார்.

# உலக வங்கியிடமிருந்து கிடைக்கும் கடனின் ஒருபகுதி திறைசேரிக்கு

### லிற்றோ கேஸ் நிறுவனம் வழங்கும் என்கிறார் தலைவர்

**லோரன்ஸ் செல்வநாயகம்**



சமையல் எரிவாயு விநியோகத்தை முறையாக முன்னெடுப்பதற்காக உலக வங்கியிடமிருந்து கிடைத்துள்ள கடனின் ஒரு பகுதியை திறைசேரிக்கு செலுத்துவதற்கு நடவடிக்கை எடுத்துள்ளதாக லிற்றோ கேஸ் நிறுவனம் தெரிவித்துள்ளது.

அதற்கிணங்க திறைசேரியிலிருந்து பெற்றுக் கொள்ளப்பட்டுள்ள அனைத்து கடனையும் எதிர்வரும் டிசம்பர் மாதத்திற்குள் மீள வழங்குவதற்கு தீர்மானித்துள்ளதாகவும் லிற்றோ கேஸ் நிறுவனத்தின் தலைவர் முதித்த பீரிஸ் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில்:

உலக வங்கியிடமிருந்து கிடைக்கப்பெற்றுள்ள 70 மில்லியன் டொலர்களை நாம் மீள திறைசேரிக்கு வழங்கும் நடவடிக்கைகளை ஆரம்பித்துள்ளோம்.

06

# யாழ். போதனா மருத்துவமனையில் கைபேசி திருட்டில் ஈடுபட்ட இளைஞன் கைது

யாழ். போதனா வைத்தியசாலை விடுதிகளில் தங்கியுள்ளவர்களின் கையடக்கத்தொலைபேசியை திருடிய குற்றச்சாட்டில் 21 வயதான இளைஞனை பொலிஸார் கைது செய்துள்ளனர்.



யாழ்.போதனா வைத்தியசாலையின் விடுதிகளில் தங்கியுள்ளவர்களின் கையடக்க தொலைபேசிகள் தொடர்ந்து காணாமற்போயுள்ளன.

இச்சம்பவம் தொடர்பில் யாழ்.பொலிஸ் நிலையத்தில் சிலர் முறைப்பாடு செய்திருந்தனர்.

இம்முறைப்பாட்டின் பிரகாரம் விசாரணைகளை முன்னெடுத்த பொலிஸார் 21 வயதான இளைஞனை கைது செய்து விசாரணைக்குட்படுத்தினர். இதன் போது இளைஞனிடமிருந்து 21 கையடக்க தொலைபேசிகள் மீட்கப்பட்டன.

மருத்துவமனைகளிலிருந்து தொலைபேசிகளை தவறவிட்டவர்கள், யாழ்ப்பாண பொலிஸ் நிலையத்துக்கு வந்து தொலைபேசிகளை அடையாளம் காட்ட முடியுமெனவும் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

# மக்களின் பாதுகாப்புக்காகவே உயர் பாதுகாப்பு வலய பிரகடனம்

### ஐக்கிய தேசிய கட்சி சட்டத்தரணி சுகத் தெரிவிப்பு

மக்களின் பாதுகாப்பு மற்றும் நாட்டு வளங்களை பாதுகாக்கும் நோக்கிலேயே உயர் பாதுகாப்பு வலயங்கள் பிரகடனப்படுத்தப்பட்டுள்ளன. இதன் மூலம் பொது மக்களுக்கு எந்த பாதிப்பும் ஏற்படப்போவதில்லயென ஐக்கிய தேசிய கட்சி மஹரகம தொகுதி அமைப்பாளர் சட்டத்தரணி சுகத் ஜயசுந்தர தெரிவித்தார்.

அத்துடன் உயர் பாதுகாப்பு வலய பிரகடனம் மூலம் நாட்டுக்கு பாதிப்பு ஏற்படுமாக இருந்தால் அது தொடர்பில் மீள் பரிசீலனை செய்வதாக ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தெரிவித்துள்ளதாகவும் சட்டத்தரணி சுகத் ஜயசுந்தர தெரிவித்தார்.

ஐக்கிய தேசிய கட்சி தலைமையகம் சிறிகொத்தவில் (28) நடைபெற்ற செய்தியாளர் சந்திப்பில் கலந்துகொண்டு கருத்து தெரிவிக்கையிலேயே இவ்வாறு குறிப்பிட்டார். அவர் அங்கு தொடர்ந்து தெரிவிக்கையில்,

நாட்டை நிர்வகிப்பதுடன் மக்களின் பாதுகாப்பு தொடர்பாக நடவடிக்கைகள் எடுப்பது அரசாங்கத்தின் பொறுப்பாகும்.

அதன் பிரகாரம் மக்களின் பாதுகாப்பு மற்றும் அரச வளங்களை பாதுகாக்கும் பொருட்டே, உயர் பாதுகாப்பு வலயங்களென சில முக்கியமான இடங்களை வர்த்தமானி மூலம் பிரகடனப்படுத்த ஜனாதிபதி நடவடிக்கை எடுத்திருக்கி'ன்றார்.

என்றாலும் உயர் பாதுகாப்பு வலயங்களாக பிரகடனப்படுத்தப்பட்டிருக்கும் இடங்களுக்கு அருகில் வாகனங்கள் நிறுத்துவது, மக்கள் நடமாடுவது, அபிவிருத்தி வேலைத் திட்டங்களை மேற்கொள்வது போன்ற விடயங்களுக்கு பாதிப்பு ஏற்படுவதாக முறைப்பாடுகள் தெரிவிக்கப்பட்டிருக்கிறது.

இவ்வாறான விடயங்கள் தொடர்பிலும் சர்வதேச நாடுகளுடன் நாங்கள் மேற்கொண்டிருக்கும் இணக்கப்பாடுகளுக்கு பாதிப்பு ஏற்படுவதாக இருந்தால், அது தொடர்பாகவும் ஆராய்ந்து உயர் பாதுகாப்பு வலயம் தொடர்பில் மீள் பரிசீலனை செய்ய முடியும் என ஜனாதிபதி தெரிவித்திருப்பதாக ஊடகங்களில் தெரிவிக்கப்பட்டிருக்கின்றன.

அத்துடன் உயர் பாதுகாப்பு வலயங்கள் மூலம் மக்களின் அடிப்படை

06

### முல்லைத்தீவு வைத்தியசாலையில்

# புற்றுநோய்க்கு வெற்றிகர அறுவைச் சிகிச்சை!

### டொக்டர் அகிலன் தலைமையில் மருத்துவர்கள் சாதனை

**முல்லைத்தீவு நிருபர்**

முல்லைத்தீவு வைத்தியசாலையில் முதன் முதலில் புற்று நோயால் பாதிக்கப்பட்ட நோயாளிக்கு அறுவைச்சிகிச்சை மேற்கொள்ளப்பட்டுள்ளது.

முல்லைத்தீவு மாவட்ட வைத்தியசாலையில் வாய், முகம் மற்றும் தாடை சம்பந்தமான சிகிச்சை நடவடிக்கைகள் சத்திர சிகிச்சை நிபுணர்களால் ஆரம்பித்து வைக்கப்பட்டுள்ளது.

சில சிகிச்சைகளுக்காக இம்மாவட்டத்திலுள்ள நோயாளர்கள் யாழ்ப்பாணம், வவுனியா வைத்தியசாலைகளுக்கு கொண்டு செல்லப்படு கின்றனர். எனினும், இப்போது இந்நடவடிக்கைகள் இங்கயே ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

கடந்த (27) சத்திர சிகிச்சை நிபுணர் வைத்தியர் அகிலன் தலைமையிலான குழுவினர், புற்று நோயால் பாதிக்கப்பட்ட ஒரு நோயாளிக்கு ஆறு மணி நேர முயற்சியில் அறுவைச்சிகிச்சை மேற்கொண்டனர்.

முல்லைத்தீவு மாவட்ட வைத்தியசாலையில் முதல் முதலாக இந்த அறுவை சிகிச்சை மேற்கொள்ளப்பட்டமை குறிப்பிடத்தக்கது.



கவிச்சுடர் சிவரமணி எழுதிய "நவீன சீதை"எனும் சிறுகதை தொகுதியின் முதல் பிரதி இலக்கிய புரவலர் ஹாசிம் உமருக்கு அவரது இல்லத்தில் வைத்து வழங்கப்பட்டது. நூலாசிரியர் முதற்பிரதியை வழங்குவதையும் அருகில் கவிஞர் மேமன் கவியையும் காணலாம்.




### கொழும்பு துறைமுக நகரத்தில்:

# வர்த்தக நடவடிக்கைகளுக்கு வருடாந்தம் 2000 டொலர் அறவிட தீர்மானம்

### ஜனாதிபதியின் கையொப்பத்துடன் விசேட வர்த்தமானி வெளியீடு

**லோரன்ஸ் செல்வநாயகம்**

கொழும்பு துறைமுக நகரத்தில் வர்த்தக நடவடிக்கைகளை மேற்கொள்வதற்காக 2000 அமெரிக்க டொலரை வருடாந்தம் அறவிடுவதற்கு கொழும்பு துறைமுக நகர பொருளாதார ஆணைக்குழு தீர்மானித்துள்ளது.

இது தொடர்பான அனுமதிப்பத்திரத்தை விநியோகிப்பதற்காக நிதி, பொருளாதார மற்றும் தேசிய கொள்கைகள் அமைச்சர் என்ற வகையில் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் கையொப்பத்துடன் விஷேட வர்த்தமானி அறிவித்தல் வெளியிடப்பட்டுள்ளது.

சமர்ப்பிக்கப்படும் விண்ணப்பங்கள் ஆய்வுக்குட்படுத்தப்பட்டு நிபந்தனைகளுக்கு உட்பட்டு மேற்படி நடவடிக்கை அனுமதிப்பத்திரம் தொடர்பில் அனுமதி வழங்கப்படவுள்ளது. முதலீட்டாளர்கள் மத்திய வங்கியின் நியதிகளை பின்பற்றி அதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டுமென்றும் கொழும்பு துறைமுக நகர பொருளாதார ஆணைக்குழு மேலும் தெரிவித்துள்ளது.

தினகரன் THINAKARAN

35, டி. ஆர். விஜயவர்தன மாவத்தை, கொழும்பு - 10
தபால் பெட்டி இலக்கம்: 834
தொலைபேசி இலக்கம்: 2429429, 2429272, 2429279
பெக்ஸ்: 2429270, 2429329, விளம்பர முகாமையாளர்: 2429321

சுபகிருது வருடம் புரட்டாதி மாதம் 13ஆம் நாள் வெள்ளிக்கிழமை
ஹிஜ்ரி வருடம் 1444 ரபீஉனில் அவ்வல் பிறை 03

### குறள் தரும் சிந்தனை



மணிநீரும் மண்ணும் மலையும் அணிநிழற்
காடும் உடைய தரண்

*மணிபோல் தெளிந்த நீரும், வெட்ட வெளியான நிலமும், மலையும், அழகிய நிழல் உடைய காடும் ஆகிய இவை நான்கும் உள்ளதே அரண் ஆகும்.*

## நெருக்கடியிலிருந்து மீண்டெழுவதற்கு சர்வதேச உதவிகளே கைகொடுக்கும்

**இலங்கையில் ஏற்பட்ட பொருளாதார வீழ்ச்சி படிப்படியாக நீங்கி வருகின்றது. அதற்கான அறிகுறிகள் ஒவ்வொன்றாகத் தென்படுகின்றன. ஆனாலும் பொருளாதார நெருக்கடி துரிதகதியில் நீங்கி விடுமென்று ஒருபோதுமே நாம் எதிர்பார்க்கலாகாது. அதற்கு நீண்ட காலம் செல்லுமென்றுதான் பொருளாதார நிபுணர்கள் கூறுகின்றனர். அதுவரை மக்கள் பொறுமையுடன் இருக்க வேண்டியது அவசியமாகின்றது.**

**எமது அன்றாட பாவனைப் பொருட்களின் விலைகள் இன்னுமே குறைவடையத் தொடங்கவில்லை. ஆனாலும் அன்றாட பாவனைப் பொருட்களுக்கான தட்டுப்பாடு பெரிதும் நீங்கியுள்ளது. பெற்றோல், டீசல், சமையல் எரிவாயு போன்ற எரிபொருட்களுக்கான பற்றாக்குறை இப்போது கிடையாது. 'கியூ ஆர் கோர்ட்' நடைமுறையில் உள்ளதனால், வாகனம் வைத்திருப்போர் தங்களுக்கான எரிபொருளை பெற்றுக் கொள்வதிலுள்ள சிரமங்கள் நீங்கியுள்ளன. அதுவே வாகனம் வைத்திருப்போருக்கு பெரும் நிம்மதி.**

**எமது நாட்டில் ஏற்பட்டுள்ள பொருளாதார வீழ்ச்சி சாதாரணமானதல்ல. இலங்கையின் வரலாற்றில் முன்னர் ஒருபோதுமே இவ்வாறான பொருளாதார சரிவு ஏற்பட்டதில்லை. இந்த வீழ்ச்சியில் இருந்து மீண்டெழுவது இலங்கையர்களால் மாத்திரம் இயலுமான காரியமல்ல. சர்வதேசத்தின் உதவிகளாலேயே நாம் இன்றைய நெருக்கடி நிலைமையிலிருந்து மீண்டெழுவது சாத்தியமாகும். எனவே சர்வதேசத்தின் பொருளாதார உதவிகளைப் பெறுவதிலேயே இலங்கை கவனம் செலுத்த வேண்டியுள்ளது.**

**சர்வதேச நாணய நிதியத்தின் உதவிகள் இலங்கைக்குக் கிடைப்பது ஊர்ஜிதமாகியுள்ளது. சர்வதேச நாணய நிதியத்தின் பிரதிநிதிகள் அதற்கான இணக்கத்தை அண்மையில் இலங்கைக்குத் தெரிவித்திருந்தனர். எமது நாடு பொருளாதார வீழ்ச்சியிலிருந்து மீட்சி பெறுவதற்கான நம்பிக்கையின் முதல் அறிகுறியாக அதனைக் கொள்ளலாம். ஆனால் சர்வதேச உதவிகளை மாத்திரம் நம்பியிருக்கவும் இயலாது. உள்நாட்டில் உற்பத்திகளைப் பெருக்கி வருமானத்தை அதிகரித்துக் கொள்ளும் வழிவகைகள் பற்றியே நாம் சிந்திக்க வேண்டியுள்ளது.**

**இலங்கையின் பொருளாதார நெருக்கடியைத் தீர்த்து வைப்பதில் புலம்பெயர்ந்து வாழ்கின்ற இலங்கையர்களின் ஆதரவைப் பெற்றுக் கொள்வது குறித்தும் தற்போது அரசாங்கம் அதிக கவனம் செலுத்தி வருகின்றது. ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க இந்த விடயத்தில் அதிக கவனம் செலுத்தி வருகின்றார். எலிசபெத் மகாராணியின் இறுதிச் சடங்கில் கலந்து கொள்வதற்காக சமீபத்தில் பிரித்தானியாவுக்குச் சென்றிருந்த ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க, அந்நாட்டில் வாழ்கின்ற புலம்பெயர் இலங்கையர்களைச் சந்தித்துக் கலந்துரையாடலொன்றை நடத்தியிருந்தார்.**

**அங்குள்ள இலங்கையர்களில் பலர் வர்த்தகத்துறைகளில் அதிக உச்சத்தில் உள்ளனர். பிரித்தானியாவில் மாத்திரமன்றி அமெரிக்கா, கனடா, பிரான்ஸ் போன்ற மேற்கு நாடுகள் பலவற்றில் வாழ்கின்ற இலங்கைத் தமிழர்கள் பலர் பெரும் வர்த்தகப் பிரமுகர்களாக விளங்குகின்றனர். அவர்கள் பல்வேறு நாடுகளிலும் தொழில்முதலீடுகளை மேற்கொண்டு வருகின்றனர். அந்நாடுகளில் பெரும் செல்வந்தர்களாக அவர்கள் விளங்குகின்றனர்.**

**அவர்கள் எமது நாட்டில் தொழில் முதலீடுகளை மேற்கொள்ள முன்வருவார்களானால் இலங்கைக்கு அதுவே பெரும் வரப்பிரசாதமாக அமையுமென்பதில் ஐயமில்லை. அந்நிய செலாவணியை நாம் அதிகளவில் ஈட்டிக் கொள்வதற்கு வழியேற்படுவதுடன், இலங்கையர்கள் பலருக்கு தொழில் வாய்ப்பு கிடைப்பதற்கும் வழியேற்படும் எனலாம். இலங்கையில் வடக்கு, கிழக்கில் மாத்திரமன்றி நாட்டின் ஏனைய பிரதேசங்களிலும் புலம்பெயர் இலங்கையர்கள் தொழில் முதலீடுகளை மேற்கொள்வதற்கு வழியுண்டு.**

**ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க புலம்பெயர் இலங்கையர்களிடம் இதுபற்றி விபரமாக எடுத்துக் கூறியுள்ளார். நாட்டின் எப்பகுதியிலும் தொழில் முதலீடுகளை மேற்கொள்வதற்கு இடமளிக்கப்படுமென ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க புலம்பெயர் இலங்கையர்களிடம் லண்டனில் வைத்து எடுத்துக் கூறியுள்ளார். இலங்கையின் பொருளாதார மீட்சிக்கான முயற்சியாக மாத்திரமன்றி, இனநல்லிணக்கத்துக்கான சிறந்ததொரு ஆரம்பமாகவும் இதனைக் கொள்ள முடியும்.**

**மேற்குநாடுகளில் பொருளாதாரத்திலும், அந்நாடுகளின் அரசியலிலும் மிகுந்த செல்வாக்குடன் விளங்கும் புலம்பெயர் தமிழர்களின் ஆதரவைப் பெற்றுக் கொள்வதற்கு முயற்சிப்பதென்பது நாட்டின் நலனுக்கு விரோதமான காரியம் அல்ல. புலம்பெயர் தமிழர்களை அரவணைத்துச் செல்வதற்கு அரசாங்கம் விரும்புவது நல்லதொரு ஆரம்பம் என்பதே நல்லிணக்கத்தை விரும்புகின்ற மக்களின் கருத்து ஆகும்.**

**அவர்கள் வேறுநாட்டு மக்கள் அல்லர். இலங்கையைத் தாயகமாகக் கொண்ட அவர்கள், கடந்தகால வன்செயல்களினால் தமது உயிர்ப்பாதுகாப்புக் கருதியே மேற்குநாடுகளுக்குப் புலம்பெயர்ந்து சென்றனரென்பதை மறந்து விடலாகாது. அவர்கள் இலங்கைக்கு விரோதமானவர்கள் எனக் கருதக் கூடாது! தமது தாயகம் மீது பற்றுக் கொண்ட இலங்கைப் பிரஜைகளான அவர்களை அரவணைத்துச் செல்வது அவசியம்.**

editor.tkn@lakehouse.lk

# முதியோரை அரவணைப்பதே இன்றைய இளையோர் செலுத்துகின்ற நன்றிக்கடன்!



சர்வதேச முதியோர் தினம் நாளை

*மனித இனத்தில் பல பருவங்கள் உள்ளன. இதன் இறுதிப் பருவம்தான் முதுமை பருவமாகும். மூத்த பிரஜைகள் என்று அழைக்கப்படும் இந்தப் பருவத்தினர் கண்ணியமாகவும் கௌரவமாகவும் மதிக்கப்பட வேண்டியதன் அவசியத்தை உணர்த்தும் முகமாக, ஐக்கிய நாடுகள் சபை ஒவ்வொரு வருடமும் ஒக்டோபர் மாதம் முதலாம் திகதியை சர்வதேச முதியோர் தினமாகப் பிரகனப்படுத்தி முதியோர்களை கௌரவப்படுத்தி வருகின்றது.*

*இன்றைய நவநாகரிக உலகிலே முதியோர் என்றால் அதன் முக்கியத்துவம் குறிப்பாக இளைஞர்கள் மத்தியில் உணரப்படுவதில்லை. இது ஒரு துரதிர்ஷ்டமாகும் 1991 ஆம் ஆண்டிலிருந்து அனுஷ்டிக்கப்பட்டு வரும் இந்த முதியோர் தினம் கனடா, அமெரிக்கா போன்ற நாடுகளில் தேசிய விடுமுறை தினமாகவும் ஜப்பானில் முதியோர்களை கௌரவிக்கும் தினமாகவும் கொண்டாடப்படுகிறது.*

*இன்று சிரேஷ்ட பிரஜைகள் என்று அழைக்கப்படுகின்ற இந்த முதியோர் யார் என்பதை நாம் சிந்தித்து பார்ப்போமானால் அவர்கள் யாருமில்லை. பல கஷ்டங்களுக்கு மத்தியில் நம்மை வளர்த்து அறிவூட்டி, சமுதாயத்தின் முன் நம்மை வாழ வைத்தவர்கள் அவர்கள். பல்துறை சார்ந்த அனுபவமும் ஆற்றலும் கொண்ட அவர்கள் நமது எதிர்கால நலனுக்காக உழைத்து உருக்குலைந்தவர்கள் என்பதை மறந்து விடலாகாது.*

*ஆனால் முதியோர்களின் கடந்தகால சிறப்புமிக்க செயற்பாடுகள் சமுதாயத்தில் உணரப்படுவதில்லை, நினைவுபடுத்தப்படுவதுமில்லை. இது மனவேதனையான விடயமாகும்.*

*முதியோர்கள் அன்பாக, பண்பாக, பாசத்தோடு பிள்ளைகளால் பாதுகாக்கப்பட வேண்டியவர்கள். இது பிள்ளைகளின் தலையான கடமை.சில பிள்ளைகள் பெற்றோரை கவனிப்பதில் அக்கறை காட்டுவதில்லை.இவ்வாறான பிள்ளைகளிடமிருந்து முதியோர் பராமரிப்பு பெறமுடியுமென முதியோர் உரிமை பாதுகாப்புச்சட்டத்தின் 15(1) ம் பிரிவில் தெளிவாக குறிப்பிடப்பட்டுள்ளது. பிள்ளைகள் பெற்றோரை பேணிப்பாதுகாக்க வேண்டுமெனவும் அவர்களின் தேவைகள் பூர்த்தி செய்யப்பட வேண்டுமெனவும் அது பிள்ளைகளின் கடமையெனவும் இப்பிரிவில் தெரிவிக்கப்பட்டிருக்கிறது.*

*முதுமைப் பருவத்தை அடைந்த பலர் பலவிதமான நோய்களுக்கு ஆளாகி வருவதை காணக்கூடியதாக உள்ளது. வறுமை, பிள்ளைகளால் கைவிடப்பட்ட நிலை, மருத்துவ கவனிப்பின்மை, நீரிழிவு நோய், பார்வைக் குறைவு என்றெல்லாம் பலவிதத்திலும் முதியோர்கள் பாதிக்கப்பட்டு துன்பங்களுடன் வாழ்ந்து வருவதைக் காண்கின்றோம்.*

*இன்றைய நவீன மருத்துவ ஆராய்ச்சியின் பயனாக உலக நாடுகள் ஒவ்வொன்றிலும் மனிதனின் ஆயுள் அதிகரித்துக் கொண்டே போகின்றது. இது குறித்து மருத்துவ உலகம் பெருமைப்பட்டுக் கொண்டாலும் முதியோர்களின் ஆயுள் அதிகரிப்பதால் எதிர்காலத்தில் எதிர்பார்க்கப்படுகின்ற சவால்களையும் அரசாங்கம் நிறைவு செய்ய தயாராக வேண்டும்.*

*இலங்கையைப் பொறுத்த வரையில் முதியோர்களின் எண்ணிக்கை தினமும் அதிகரித்துக் கொண்டே வருகின்றது. இதனால் முதியோர்களின் நலனில் அக்கறை கொண்ட அரசாங்கம், 2000 ஆம் ஆண்டின் 9 ஆம் இலக்க முதியோர் பாதுகாப்புச் சட்டத்தினை இயற்றி இச்சட்டத்தினூடாக முதியோர்களின் உடல், உள, சமய சமூக நலன்புரி நடவடிக்கைகளில் அக்கறை கொண்டு செயற்பட்டு வருகின்றது.*

*மேலும் முதியோர்களுக்கான தேசிய சபையும் அமைக்கப்பட்டு இதனூடாக முதியோர்களுக்கு ஏற்படும் பிரச்சினை குறித்தும் தீர்வினை பெற்றுக் கொள்வதோடு முதியோர்கள் பாதுகாப்பு தொடர்பிலும் கவனம் செலுத்தப்படுகின்றது. இலவச சட்ட உதவிகள் பெற வசதிகள் இருந்த போதிலும் பெரும்பாலான முதியோர் இது தொடர்பில் அறிந்திராதவர்களாகவே இருக்கின்றனர். இவர்களுக்கு தேசியரீதியில் விழிப்பூட்டல் கருத்தரங்குகளை நடத்த அரசாங்கம் முன்வர வேண்டும்.*

*முதியோர்கள் தாங்கள் செய்த தொழிலிருந்து ஓய்வு பெற்றதும், அவர்களுக்கு வீட்டிலிருந்த மதிப்பும் மரியாதையும் நாளடைவில் குறைந்து வருகின்றது. சில வேளைகளில் கடினமான வார்த்தைகளையும் தாங்கிக் கொண்டு வேதனையோடு பரிதாப நிலையில் வாழ்ந்து வருவதையும் அறியக் கூடியதாக உள்ளது.*

*இன்றைய நவீன உலகில் பெரும்பாலானோர் முதுமைப் பருவத்தினை வெறுப்போடு நோக்குகின்றனர். இந்த வெறுப்பின் காரணமாக பிள்ளைகளால் கைவிடப்பட்ட பல பெற்றோர் வீதியோரங்களிலும், அநாதை இல்லங்களிலும் வேதனையோடு வாழ்ந்து வருகின்றனர்.*

*முதுமைக் காலத்தில் தனிமை, நிம்மதியற்ற நிலை, ஏக்கம் என்பன நிறைந்திருக்கும். இவற்றை மறந்து சந்தோஷமாக மகிழ்ச்சியோடு வாழ வேண்டுமாயின் தினமும் மக்களுடன் தொடர்புடைய அமைப்புகள், சிரமதானப் பணிகள் போன்ற சமூகநலப் பணிகளில் இணைந்து ஈடுபடுவதன் மூலம் தனிமை மற்றும் ஏக்கங்கள் அகன்று விடும்.முதுமைக் காலத்தில் சத்துணவு, உடற்பயிற்சி, வேளை தவறாத மருந்துப் பாவனை,போதியளவு தூக்கம் மற்றும் ஓய்வு என்பன மிக முக்கியமாகும். முதியோர்களின் உடல்நல ஆரோக்கியத்தைப் பேணும் வகையில் சத்துணவுகளைச் சேர்த்துக் கொள்வதோடு நாளாந்தம் உடற்பயிற்சியில் ஈடுபடுதல்,வைத்திய ஆலோசனைப்படி மருந்து மாத்திரைகளை உட்கொள்ளல். போதுமான அளவு நீர் அருந்துதல், மற்றும் ஓய்வெடுத்தல் என்பவற்றில் கவனம் செலுத்த வேண்டும்.*

*புகைத்தல், மதுபானம் அருந்துதல், வெற்றிலை போடுதல், போதைப்பொருள் பாவனை என்பவற்றை முற்றாக தடுத்துக் கொள்வதோடு கொழுப்பு, இனிப்பு, மற்றும் மாமிச உணவுகளையும் முடிந்தளவு குறைத்துக் கொள்வதன் ஊடாக பல நோய்களிலிருந்து உடல் நலத்தை பாதுகாத்துக் கொண்டு சுகமாக வாழ முடியும்.*



*முதியோர்களை அரவணைத்து செயல்படுவதே நாம் முதியோருக்கு வழங்கும் மதிப்பும் மரியாதையுமாகும்.*

கலாபூஷணம்
**M.T.A கபூர்...**
*நிந்தவூர்*

# சம்மாந்துறை பிரதேச அபிவிருத்திக்காக உழைத்த அப்துர் ரஸ்ஸாக் முகம்மதலி

*சம்மாந்துறையின் பூமரச்சந்தி பகுதியில் வாழ்ந்த முகம்மதலி தம்பதியரின் மகன் அப்துர் ரஸ்ஸாக் முகம்மதலி ஆவார். தௌபீக் என்றும் இவர் அழைக்கப்பட்டார். ஏ.ஆர்.முகம்மதலி சிறுவயதில் கொழும்பு உவெஸ்லி கல்லூரியில் கற்ற பின்னர் பட்டப்படிப்புக்காக லண்டன் பல்கலைக்கழக விஞ்ஞானமாணி தேர்வுக்காகப் படித்துக் கொணடிருக்கும் போது ஆசிரிய சேவையில் கால்பதித்தார்.*

*1961இல் கொழும்பு ஸாஹிறா கல்லூரியில் ஆசிரியரானார். பாடசாலைப் பருவத்தில் கரப்பந்து, கால்பந்து கிரிக்கட் போன்ற துறைகளில் சிறந்து விளங்கிய இவர், கிரிக்கட் விளையாட்டிற்கான பொறுப்பாசிரியராகவும் 1967 இல் கொழும்பு அல்ஹிதாயா மஹா வித்தியாலயத்தில் விளையாட்டுத்துறைக்கும், மாணவர் ஒழுக்கத் திற்குமான Discipline Teacherஆகவும் நியமிக்கப்பட்டார்.*

*1971 இல் சம்மாந்துறை மத்திய கல்லூரிக்கு இடமாற்றம் பெற்று வந்தார். மாணவர்களையும் பழைய மாணவர்களையும் இணைத்துக் கொண்டு விளையாட்டுத்துறையை ஊக்கப்படுத்தினார்.*

*இவர் அதிபராகப் பணிபுரிந்த காலத்தில் விஞ்ஞானப்பிரிவை அபிவிருத்தி செய்த அதேசமயத்தில் ஏனைய துறைகளிலும் பட்டப்படிப்பிற்காக மாணவர்களைத் தயார் செய்வதில் உந்துசக்தியாகத் திகழ்ந்தார். இதனால் கூடுதலான மாணவர்கள் பல்வேறு துறைகளிலும் பல்கலைக்கழகங்களுக்கு தெரிவு செய்யப்பட்டனர். இக்காலத்தில்தான் பேருவளை சீனன் கோட்டையைச் சேர்ந்த நளீம் ஹாஜியார் முஸ்லிம் மாணவர்களின் உயர்கல்வி வளர்ச்சிக்காக தேசிய ரீதியில் இஸ்லாமிய மறு மலர்ச்சி இயக்கம் என்ற பெயரில் ஒரு இயக்கத்தை உருவாக்கினார்.*

*இந்தச் சந்தர்ப்பத்தை பயன்படுத்த விரும்பிய ஏ.ஆர். முகம்மதலி சம்பந்தப்பட்டவர்களுடன் தொடர்பு கொண்டு மத்திய கல்லூரியில் கல்வி கற்கும் உயர்தர வகுப்பு மாணவர்கள் அனைவரும் பயன்பெற தன்னாலான முயற்சிகளை மேற்கொண்டார். இவரது காலத்தில் 13 வைத்தியர்களையும் 32 பொறியியலாளர்களையும் 115 கலைப் பட்டதாரிகளையும் உருவாக்கிய பெருமை இவரையே சாரும்.*

*இக்காலங்களில் சம்மாந்துறை பட்டின சபையின் தவிசாளராகவிருந்து காணி விவசாய பிரதி அமைச்சரின் அந்தரங்கச் செயலாளராகவும் போக்குவரத்து அமைச்சின் கிழக்குப் பிராந்தியத்திற்*



*கான தவிசாளராகவும் கடமை புரிந்த எம்.ஏ.அமீர் அலி திடீரென சுகவீனம் காரணமாக மரணமடைந்தார்.*

*1980 இல் அதிபர் ஏ.ஆர் முகம்மதலி போக்குவரத்து அமைச்சின் கிழக்குப்பிராந்திய சபைக்கான தவிசாளராக நியமனம் பெற்றார்.*

*இவரது காலத்தில் இந்தப் பிராந்தியத்தில் தூர இடங்களிலிருந்து பாடசாலைக்குச் செல்லும் மாணவர்களுக்கான பஸ்சேவை, விவசாயிகளுக்கான போக்குவரத்துச் சேவை திருமலைமூதூர் கடல் வழிப் பிரயாண கப்பல் சேவை, நகரங்களுக்கிடையில் தூர இடங்களுக்கான பஸ்சேவை என்பன சிறப்பாகச் செயற்பட்டன.*

*1991 முதல் நெசவுக் கைத்தொழில் அமைச்சராகவிருந்த எம்.ஏ.அப்துல் மஜீத் அவர்களின் அந்தரங்கச் செயலாளராகவும் பணிபுரிந்தார். 1994 இல் முழுமையாக அரசியலில் இறங்கினார். சம்மாந்துறைப் பிரதேச சபையின் எதிர்க்கட்சித் தலைவராகவிருந்து சேவையாற்றினார்.*

*இவர் அதிபராக செயலாற்றிய காலத்தில் சம்மாந்துறையில் உள்ள துறை சார்ந்த கல்விமான்களை அழைத்து சம்மாந்துறையின் அபிவிருத்தி சம்பந்தமாக பாடுபட்டார். 2022.03.30 அவர் காலமானார்.*

*சம்மாந்துறை மண்ணின் முதுசங்களில் ஒன்றான அப்துர் ரஸ்ஸாக் முகம்மதலி அவர்களின் பணிகள் காலத்தால் அழியாதவை ஆகும்.*

கலாபூணம், தேசமான்ய
**ஏ.சி.ஏ.எம்.புஹாரி மௌலவி...**
*(கபூரி)*

# யா/ஈவினை அரசினர் தமிழ்க் கலவன் பாடசாலையில் திறன் வகுப்பறையில் கற்றல் செயற்பாடுகள் ஆரம்பம்

*ஐக்கிய இராச்சியத்தைத் தளமாகக் கொண்ட இரட்ணம் பவுண்டேசன் மற்றும் லண்டன் வாழ் ஈவினை, புன்னாலைக்கட்டுவன் ஒன்றியம் U.K, லண்டன் பழைய மாணவர்கள் ஆகியோரின் நிதிப்பங்களிப்பில் யா/ஈவினை அ.த.க பாடசாலையில் அமைக்கப்பட்ட திறன் வகுப்பறை ஒன்றில் ஆரம்பப்பிரிவு மாணவர்களின் கற்றல் செயற்பாடுகள் அண்மையில் ஆரம்பித்து வைக்கப்பட்டன.*

*இக்கல்லூரியின் முதல்வர் ம.தரணீதரன் தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்வில் பிரதமவிருந்தினராக வலிகாமம் கல்விவலயத்தின் வலயக் கல்விப்பணிப்பாளர் பொ.ரவிச்சந்திரனும்,சிறப்புவிருந்தினர்களாக யா/பிரான்பற்று கலைமகள் வித்தியாலய அதிபர் சோ.ஸ்ரீகிருஷ்ணாவும்,வளவாளராக சி.சிவரதீஸ் அவர்களும் கலந்து கொண்டனர்.*

*வலயக் கல்விப்பணிப்பாளரால் திறந்து வைக்கப்பட்ட திறன் வகுப்பறையானது கல்விப்பணிப்பாளரால் திரைநீக்கம் செய்து வைக்கப்பட்டது.*



*அதனைத் தொடர்ந்து ஆசிரியர் ஒருவரால் கற்றல் செயற்பாடு நடத்தப்பட்டதுடன், மாணவர்களும் தமது செயற்பாட்டை திறன்பலகையில் செய்து காண்பித்தனர்.*

*"பின்தங்கிய, அடிப்படை வசதிகள் குறைந்த இப்பிரதேசத்தில் இத்தகைய கல்வி வசதி கிடைத்துள்ளமை பெரும் வரப்பிரசாதமாகும். இதனைப் பயன்படுத்தி நாம் உச்சப்பயனைப் பெறுவோம்" என்று பாடசாலையின் மாணவத் தலைவரால் தெரிவிக்கப்பட்டது.*

*உதவியளித்திருந்த லண்டன் வாழ் ஈவினை, புன்னாலைக்கட்டுவன் ஒன்றியம், லண்டன் பழைய மாணவர்கள், மற்றும் இரட்ணம் பவுண்டேசன் அமைப்புக்கும் அதிபர் மற்றும் விருந்தினர்களால் நன்றி தெரிவிக்கப்பட்டது. திறன்பலகையை மாணவர்கள் எவ்வாறு பயன்படுத்தி சிறப்பாகத் துலங்கலாம் என்பது பற்றிய அறிவுரைகளும் மாணவர்களுக்கு வழங்கப்பட்டன.*

**எச்.எச்.விக்ரமசிங்க...**

# வரலாற்று ஆளுமைமிக்க சான்றோர்கள் வாழும் போதே வாழ்த்தப்பட வேண்டும்

## அஷ்ஷெய்க் எச். உமர்தீனின் 35 வருட சேவை நலன் பாராட்டு விழாவில் அகில இலங்கை ஜம்மிய்யதுல் உலமா சபையின் தலைவர் ரிஸ்வி முப்தி

இக்பால் அலி

நாட்டில் வாழும் வரலாற்று ஆளுமைமிக்க சான்றோர்கள் வாழும் போதே வாழ்த்தப்பட வேண்டும். அதற்குரிய மன எண்ணங்களும் உள பக்குவமும், தூய்மைத் தன்மையும் அவர்களிடத்தில் அமைந்திருத்தல் அவசியமாகும் என்று அகில இலங்கை ஜம்மிய்யதுல் உலமா சபையின் தலைவர் ரிஸ்வி முப்தி தெரிவித்தார்.

அகில இலங்கை ஜம்மிய்யதுல் உலமா சபையின் உப தலைவர் அஷ்ஷெய்க் எச். உமர்தீனின் கடந்த 35 வருட கால சேவையைப் பாராட்டி கண்டியில் நடைபெற்ற மாபெரும் சேவை நலன் பாராட்டு விழா கண்டி கட்டுக்கலை ஜும்ஆப் பள்ளிவாசலில் மிகவும் சிறப்பாக இடம்பெற்றது.

அல் புர்க்கானிய்யா அரபுக் கல்லூரியின் நிர்வாகம், ஆசிரியர் குழு, கல்லூரியின் பழைய மாணவர் குழு மற்றும் அதிபர், கண்டி சிட்டி ஜம்மிய்யதுல் உலமா, கண்டி சிட்டி மஸ்ஜித் சம்மேளனம், கண்டி முஸ்லிம் வர்த்தக சங்கம், கண்டி ஜனாஸா நலன்புரிச் சங்கம், கண்டி மலே பள்ளிவாசல் ஆகிய அமைப்புக்களின் ஏற்பாட்டில் நடைபெற்ற இந்நிகழ்வுக்கு பிரதம அதிதியாக அகில இலங்கை ஜம்மிய்யதுல் உலமா சபையின் தலைவர் அஷ்ஷெய்க் ரிஸ்வி முப்தி மற்றும் அஷ்ஷெய்க் ஏ. சி. எம். ஜிப்ரி ஹஸ்ரத், கௌரவ அதிதியாக பாகிஸ்தான் நாட்டின் வதிவிடப் பிரதிநிதி அப்சல் மரைக்கார் ஆகியோர் கலந்து கொண்டு சிறப்பித்தனர்.

காத்துக் கொள்ள முடியும் என்ற நிலையில் இருக்கிறாரோ அவரைப் பாராட்டலாம். வாழ்த்தலாம். ஒருவர் பிறருக்காக அவர் ஆற்றிய பணிக்காக நிச்சயமாக நல்லமுறையில் பாராட்டப்பட வேண்டும். வாழ்த்தப்பட வேண்டும். மக்கள் மயப்படுத்தப்பட வேண்டும். இவை மார்க்கத்தில் அனுமதிக்கப்பட்ட விடயம் ஒன்றாகும்.















அந்த வகையில் மௌலவி உமர்தீன் அவர்களிடம் நல்ல பல சிறப்பம்சங்கள் உள்ளன. அதில் நான் காண்பது என்னவென்றால் எதையும் துணிச்சலாகச் செய்யக் கூடியவர். அவரிடம் ஒரு பொறுப்பை ஒப்படைத்தால் அந்த பொறுப்பை துரிதமாக முடித்துக் கொடுக்க வேண்டும் என்ற தன்மை இருக்கிறது. அவர் அதற்காக காலம், நேரம் பாராமல் செயற்பட்டு பொறுப்பை நிறைவேற்றிக் கொடுப்பதில் மிகுந்த திறன்மிக்கவர். இதுதான் நான் அவரிடம் முதலில் காணுகின்ற சிறப்பம்சம்.

நாம் அனைவரும் அல்லாஹ்வின் அழைப்பின் பக்கம் கவனத்தை கொண்டிருத்தல் வேண்டும். மார்க்க அறிவை மதித்து நடத்தல் நடத்தல் வேண்டும். அதில் பிறரையும் ஈடுபடுத்தல் வேண்டும். வணக்க வழிபாட்டில் ஈடுபடுதல், கட்டுப்படுதல், அறிவைத் தேடிப் படித்தல், நல்ல கிரியைகளில் ஈடுபடுதல் குறிப்பாக சமூக சேவைப் பணிகள் போன்ற விடயங்களில் ஈடுபடுதல் என்பது எல்லா மனிதர்களுக்கும் மிக அத்தியாவசியமான தாகும்

நான் ஜம்மிய்யதுல் உலமாவில் இணைந்து கொண்ட காலம் முதல் சுமார் 14 வருடங்கள் நாங்கள் இருவரும் நல்ல பல விடயங்களை செய்துள்ளோம். பள்ளிவாசல் என்னும் போது உலமாக்கள் தன்னை முழுமையாக ஈடுபடுத்திக் கொள்ள வேண்டும்.

இந்த விடயத்தில் மௌலவி உமர்தீன் தன்னை முழுமையாக அர்ப்பணித்து எந்த நேரமும் எந்தச் சந்தர்ப்பத்திலும் இறைபணிக்காக தன்னை முழுமையாக அர்ப்பணித்திருக்கிறார் என்பதை தெளிவாகச் சொல்ல முடியும்.

மார்க்க ரீதியாகவும் ஷரியத் ரீதியாகவும் அவரை எப்படிப் பார்க்க வேண்டும் என்று நான் குறிப்பிட விரும்புகிறேன். பொதுவாக பொது மக்களும் வர்த்தகர்களும் ஏனைய அனைத்து தரப்பினர்களும் மௌலவி உமர்தீன் அவர்களிடத்தில் நல்ல விடயங்களை எடுத்துச் செயற்பட வேண்டும் என்ற மனப்பதிவு எல்லோருக்கும் வருதல் வேண்டும். யாராக இருந்தாலும் இப்படி சமூகப் பணியை செய்தால் அல்லாஹ்தஆலா மகத்தான வெற்றியைத் தருவான்.

ஒரு மனிதனின் முயற்சி முன்னேற்றத்திற்கு காரணமாக அமைவது தியாகம் ஆகும். தனக்கு மேலுள்ளவர்கள், பொறுப்பானவர்கள் சில பொறுப்புக்களை வழங்கும் போது தியாக அர்ப்பணிப்போடு அந்த காரியத்தில் ஈடுபடுதல் வேண்டும். அதற்கு காலம் நேரம் சந்தர்ப்பம் எவற்றையும் பார்க்கக் கூடாது. அதில் தான் வெற்றியும் தங்கியுள்ளது. இந்தப் பின்னணியில் மௌலவி உமர்தீன் தான் கற்றுக் கொண்ட ஒழுக்க மாண்புகளை பின்பற்றி எல்லோரையும் அரவணைத்துக் கொண்டு 'வேற்றுமையில் ஒற்றுமை காணுதல் என்பது இந்தக் காலத்தின் கட்டாயத் தேவை'. ஜம்மிய்யதுல் உலமா சபையின் குரலை நாடெங்கும் ஓங்கி ஒலிக்க வைப்பதற்கு அவர் ஒரு முக்கியமான நபராக இருந்திருக்கிறார் என்பதை நாம் மறந்து விட முடியாது. இவர் பல சந்தர்ப்பங்களில் இதற்காக நாடு முழுக்க சென்று கடுமையாக உழைத்தவர்.

தனக்கு மேலுள்ளவர்களை கண்ணியப்படுத்துதல் அவசியமாகும். மனிதர்கள் மனிதர்களுடைய ஈடேற்றத்திற்கு நல்ல பணிகள் புரிந்தால் அவை அவர்களுடைய வெற்றிக்கு வழிகோலும் என்பதில் எவ்வித சந்தேகமுமில்லை.

எனவே இன்று நாங்கள் பொருளாதார நெருக்கடியின் காரணமாக ஒரு சோதனையான கால கட்டத்தில் வாழ்ந்து கொண்டிருக்கின்றோம். நாம் அனைவரும் ஒன்று சேர்ந்து இந்த நாட்டினுடைய எதிர்காலத்திற்கும், சுபிட்சத்திற்கும் பங்களிப்புக்களை நல்க வேண்டும் என்பதோடு முஸ்லிம்களுடைய வெற்றிக்கும் பாதுகாப்புக்கும் அல்லாஹ் தஆலா நல்லருள் புரிய வேண்டும் என்று நாம் எல்லோரும் துஆச் செய்ய வேண்டும். ஒருவருக்கு ஒருவர் ஒற்றுமையாக இருந்து இந்தப் பயணத்தை முன்னெடுத்துச் செல்ல வேண்டும்.

ஒருவர் பாராட்டப்பட வேண்டும் அவருடைய வாழ்க்கையின் சிறப்புக்கள் அவர் செய்த பணிகள் வெளிக்கொணரப்பட வேண்டும். இது நல்லதொரு எடுத்துக்காட்டான ஒரு பாராட்டு விழாவாகும் என்றார்.

### இந்நிகழ்வில் அஷ்ஷெய்க் ஏ. சி. எம். ஜிப்ரி ஹஸ்ரத் உரையாற்றும் போது,..

மௌலவி உமர்தீன் என்னுடைய மாணவன். அவர் அரபுக் கல்லூரியில் படிக்கின்ற காலத்தில் சுறுசுறுப்பாக துடிப்போடு செயற்பட்டவர். அக்கல்லூரியில் அப்போது முதன் முதலாக கிணறொன்று தோண்ட வேண்டிய நிலைமை ஏற்பட்டது. அவர் அதில் உற்சாகமாக நின்று பணிபுரிந்தார். அவர் என்னுடைய விருபத்திற்குரிய மாணவனாக விளங்கினார்.

அவர் செய்துள்ள பணிகள் ஒன்று இரண்டு அல்ல மட்டிட முடியாத சேவைகள் உள. மார்க்கக் கல்வியின் மேல் ஆர்வமும் ஆற்றலும் உள்ள மாணவன். இவர் உயர்ந்து முஸ்லிம் சமூகத்திற்கு அரும்பணியாற்றிக் கொண்டிருக்கிறார். இவர் பல நூல்களையும் எழுதியுள்ளார். இவர் மாணவ, மாணவிகளுடைய மார்க்க கல்வி வளர்ச்சிக்காக பெரும் சேவையாற்றியுள்ளார். இவர் இன்னும் மென்மேலும் பல சமூகப் பணிகளைச் செய்ய வேண்டும் என்று நான் பிரார்த்தனை செய்கின்றேன் என்றார்.

### பாகிஸ்தான் வதிவிடப் பிரதி அப்சல் மரைக்கார்

மௌலவி உமர்தீன், இலங்கை முஸ்லிம் சமூகப் பரப்பிலும் சர்வ சமய செயற்பாடு நடவடிக்கைகளிலும் குறிப்பாக கண்டி முஸ்லிம் மக்கள் மத்தியில் நன்கு அறியப்பட்ட ஒருவர். ஒரு பள்ளிவாசலின் பிரதான இமாம், சிறந்த மார்க்கச் சொற்பொழிவாளர், எழுத்தாளர், அரபுக் கல்லூரிகளின் அனுபவமிக்க அதிபர், அனைத்திற்கும் மேலாக ஒரு சமூகப் பணியாளர். ஜம்மிய்யதுல் உலமா சபையின் உப தலைவர் என இவரைப் பற்றி நிறைய சொல்லலாம். கல்விக்கு உதவி செய்பவர் எவரும் மரணம் எய்துவதில்லை. அவர் இஸ்லாமிய மார்க்கக் கல்வி மேம்பாட்டுக்காக அரும்பணிகள் ஆற்றியுள்ளார்.

இந்நிகழ்வில் அல் புர்க்கானிய்யாவின் உப அதிபர் மௌலவி ராயிஸ் முப்தி வரவேற்புரையையும் அல் புர்க்கானிய்யாவின் உப அதிபர் மௌலவி ராபி சிறப்புரையினையும், ஜனாஸா நலன்புரிச் சங்கத்தின் தலைவர் மௌலவி பஸ்லுர்ரஹ்மான் மௌலவி உமர்தீனின் வாழ்க்கை பற்றிய அறிமுகவுரையை ஆற்றினார். அரபுக் கல்லூரி மாணவர்களின் வாழ்த்துப் பாடல்களும் மௌலவி உமர்தீன் ஏற்புரை நன்றியுரை வழங்கிதோடு பல முக்கிய நிகழ்வுகள் இங்கு இடம் பெற்றது. அகில இலங்கை ஜம்மிய்யதுல் உலமா சபையின் உப தலைவர் அஷ்ஷெய்க் எச். உமர்தீனுக்கு பல்வேறு இஸ்லாமிய நிறுவனங்கள், பள்ளிவாசல்கள், அரபுக் கல்லூரிகள் பொன்னாடை போர்த்தி விருதுகள் வழங்கி கௌரவித்தன,

இந்நிகழ்வில் கண்டி முஸ்லிம் வர்த்தக சங்கத்தின் தலைவர் எம். எச். சலீம்டீன், அல் புர்க்கானிய்யா அரபுக் கல்லூரியின் நிர்வாகத் தலைவர், ஆசிரியர் குழு, கல்லூரியின் பழைய மாணவர் குழு மற்றும் அதிபர் மற்றும் கண்டி நகர் ஜம்மிய்யதுல் உலமாவின் தலைவர் மௌலவி பி. எம். பாயிஸ், கண்டி சிட்டி மஸ்ஜித் சம்மேளனத்தின் தலைவர் கே. ஆர். சித்தீக்,ஜனாஸா நலன்புரிச் சங்கத்தின் தலைவர் மௌலவி பஸ்லுர் ரஹ்மான், கண்டி மலே பள்ளிவாசலின் தலைவர் பி. எம். அனுர்தீன் உள்ளிட்ட பல்வேறு அமைப்புக்களின் பிரதிநிதிகள், உலமாக்கள். பள்ளிவாசல்களின் நிர்வாகிகள் என பெரு எண்ணிக்கையிலானோர் கலந்து கொண்டனர்.









இந்நிகழ்வில் பிரதம அதிதியாகக் கலந்து கொண்ட அகில இலங்கை ஜம்மிய்யதுல் உலமா சபையின் தலைவர் அஷ்ஷெய்க் ரிஸ்வி முப்தி இவ்வாறு தெரிவித்தார்

அவர் அங்கு தொடர்ந்து உரையாற்றும் போது,..

சில விடயங்களை உரிய நேரத்தில் செய்யத் தவறினால் பின்னர், நாங்கள் கவலை கொள்வோம். அந்த வகையில் மௌலவி உமர்தீனுக்கு அவருடைய 35 வருட சேவை நலன் பாராட்டு விழா எடுப்பது ஒரு வரவேற்கத்தக்க அம்சமாகும்.இந்த நிகழ்வை ஏற்பாடு செய்த அனைத்து கண்டி முஸ்லிம் சிவில், சமூக அமைப்பினர்களுக்கு முதற்கண் நன்றி தெரிவித்துக் கொள்ளுகின்றேன்.

நாம் ஒருவரைப் பாராட்டும் போது அவரது உள்ளத்தில் ஒரு பேணுதல் இருத்தல் வேண்டும். உளப்பக்குவம் இருத்தல் வேண்டும். நபி (ஸல்) அவர்கள் மனிதர்களை நல்லது சொல்லி புகழ்ந்திருக்கிறார்கள். மனிதர்களுடைய சிறப்பை புகழ்ந்துள்ளார்கள். அதே போன்று யார் தன்னுடைய மனப்பக்குவத்தை இழந்து விடுவாரோ அவர்களைப் புகழத்தேவையில்லை. யார் தன்னைப் பாது








## பொருளாதார நெருக்கடியை...

கூட்டத்தில் உரையாற்றிய ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க மேலும் தெரிவிக்கையில்,

உணவு மற்றும் எரிபொருள் விலைகளின் அதிகரிப்பு நடுத்தர வர்க்கத்தினரின் வளர்ச்சியை குறைத்துள்ளதுடன், இந்து சமுத்திர பிராந்திய நாடுகளில் வசிக்கும் நடுத்தர குடும்பங்களின் வாழ்க்கை முறையில் தாக்கத்தையும் ஏற்படுத்தியுள்ளது.

பெரும் பொருளாதார அழுத்தங்களுக்கு மத்தியில், நாட்டின் கடன் நிலைத்தன்மையை மீளமைப்பதற்கு முன்னெப்போதும் இல்லாத வகையில் இலங்கை முயற்சிகளை மேற்கொண்டு வருகின்றது. மேலும் கடனை நிலைநிறுத்துவதற்கான இந்த முயற்சிகளுக்கு அனைத்து தரப்பினரும் ஆதரவளிப்பார்கள் என எதிர்பார்க்கிறோம். இந்த ஆழ மற்றும் அழுத்தமான மறுசீரமைப்புகளை மேற்கொள்ளும் அதேவேளை சமூகத்தில் அதிகம் பாதிக்கப்படக்கூடிய தரப்பினர் தொடர்பில் அரசாங்கம் கவனம் செலுத்திவருகிறது. அதற்கேற்ப சமூகப்பாதுகாப்பிற்கு அதிக நிதி மற்றும் வளங்களை ஒதுக்குவதற்கு அனைத்து முயற்சிகளும் எடுக்கப்பட்டுள்ளன. எமது பொருளாதாரத்தை இன்று நாம் ஸ்திரப்படுத்தியுள்ளோம். நாம் எவ்வாறு இந்த நெருக்கடியை தீர்க்கிறோம் என்பதை பல நாடுகளைப் போலவே பங்குதாரர்களும் உன்னிப்பாகக் கண்காணித்து வருகின்றனர்." என்று ஜனாதிபதி குறிப்பிட்டார். இந்நிகழ்வில் ஜனாதிபதியின் தேசிய பாதுகாப்பு தொடர்பான சிரேஷ்ட ஆலோசகர் மற்றும் ஜனாதிபதி பணிக்குழாம் பிரதானி சாகல ரத்நாயக்க, நிதிஅமைச்சின் செயலாளர் மஹிந்த சிறிவர்த்தன, பிலிப்பைன்ஸிற்கான இலங்கை தூதுவர் ஷோபினி குணசேக்கர மற்றும் இலங்கை தூதுக்குழுவினரும் கலந்துகொண்டனர்.

இதேவேளை, ஆசியஅபிவிருத்தி வங்கி ஆளுநர்களின் 55 ஆவது வருடாந்த கூட்டத்தில் பங்குபற்றிய உறுப்பு நாடுகளின் மத்திய வங்கி ஆளுநர்களுக்கு பிலிப்பைன்ஸ் ஜனாதிபதி மதியவிருந்து வழங்கினார். இதில் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க விஷேட அதிதியாக கலந்துகொண்டார்.

## மக்களின் பாதுகாப்புக்காகவே... (03 ஆம் பக்கத் தொடர்)

உரிமை மீறப்படும் வகையில் எந்த தடைகளும் அங்கு இடம்பெறுவதில்லை.

சில சந்தர்ப்பங்களில் அந்த இடங்களில் போராட்டங்கள் இடம்பெறும்போது,

அங்கு சேவை செய்யும் ஊழியர்களின் பாதுகாப்பை கருத்திற்கொண்டு பொலிஸாருக்கு குறைந்தபட்ச அதிகாரத்தை பயன்படுத்த முடியும். அதேபோன்று மக்கள் போராட்டம் இடம்பெறுவதன் மூலம் அரச தொத்துக்களுக்கு பாதிப்பு ஏற்படுமென்று கருதும் பட்சத்தில் அதனை தடுப்பது அரசாங்கத்தின் பொறுப்பு.

கடந்த அரசாங்கம் அரச சொத்துக்களை பாதுகாக்க நடவடிக்கை எடுப்பதற்கு தவறியதாலே ஜனாதிபதி செயலகம், ஜனாதிபதி மாளிகை போன்ற இடங்களை ஆர்ப்பாட்டக்காரர்கள் கைப்பற்றிக்கொண்டனர். இந்த நிலைமைக்கு இடமளிக்க முடியாது.

இதற்காகவே, உயர் பாதுகாப்பு வலயங்களென்ற பகுதிகள் இருக்கவேண்டும். அது மக்களினதும் நாட்டினதும் பாதுகாப்புக்கு அவசியமாகும்.

என்றாலும் தற்போது பிரகடனப்படுத்தப்பட்டிருக்கும் உயர் பாதுகாப்பு வலயங்கள் தொடர்பில், தெரிவிக்கப்படும் முறைப்பாடுகள் தொடர்பில் ஆராய்ந்து இந்த வர்த்தமானி அறிவிப்பை மீள் பரிசீலனை செய்வது சம்பந்தமாக ஜனாதிபதி நடவடிக்கை எடுப்பார் என்றும் அவர் தெரிவித்தார்.

## உலக வங்கி...

(03 ஆம் பக்கத் தொடர்)

உலக வங்கியிடமிருந்து முதல் தொகை எமக்கு ஜூலை மாதம் கிடைத்தது. தற்போது இரண்டாவது தொகை கிடைத்துள்ளது. இந்நிலையில் மூன்றாவது தொகை விரைவில் கிடைக்கவுள்ளது. தற்போது வரவுள்ள கப்பலுக்கு உலக வங்கி 70 மில்லியன் டொலரை வழங்கியுள்ளது. அந்த வகையில் செப்டம்பர் மாதத்தில் 6.5 பில்லியனை செலுத்துவதுடன் அக்டோபர் மாதத்தில் மேலும் எட்டு பில்லியனை திறைசேரிக்கு வழங்க எதிர்பார்த்துள்ளோம். டிசம்பர் மாதம் ஆகும்போது 26 பில்லியனை முழுமையாக லிற்றோ கேஸ் நிறுவனம் திறைசேரிக்கு வழங்கும் என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

# முஸ்லிம் காங்கிரஸ் ஏற்பாட்டில் தமிழ் சங்கத்தில் நினைவேந்தல்





தமிழ் இலக்கியத் துறையில் பெரும் பங்காற்றி அண்மையில் காலஞ்சென்ற சிரேஷ்ட சட்டத்தரணி ராஜகுலேந்திரன், திறனாய்வாளர், கே. எஸ். சிவகுமாரன் ஆகியோருக்கான நினைவேந்தல் நிகழ்வொன்றை ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸின் புதிய வெளிச்சங்கள் இலக்கிய மையம், கொழும்பு 6, ருத்ரா மாவத்தையில் அமைந்துள்ள கொழும்பு தமிழ்ச் சங்க, சங்கரப்பிள்ளை மண்டபத்தில் எதிர்வரும் அக்டோபர் 2ஆம் திகதி ஞாயிறு மாலை 4.00 மணிக்கு நடாத்தவுள்ளது.

ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் தலைவரும், பாராளுமன்ற உறுப்பினருமான ரவூப் ஹக்கீமின் தலைமையில் நடைபெறவுள்ள பிரஸ்தாப நிகழ்வில், உலக அறிவிப்பாளர் பீ. எச். அப்துல் ஹமீத், சாஹித்ய ரத்னா மு. சிவலிங்கம், சிரேஷ்ட ஊடகவியலாளர் என். எம். அமீன், மருத்துவக் கலாநிதி 'ஞானம்' ஞானசேகரம் ஆகியோர் உரையாற்றவுள்ளனர். கலாநிதி எம். ஏ. எம். சுக்ரி மணிப்புலவர் மருதூர் ஏ மஜீத் நினைவு அரங்கில் நடை பெறவுள்ள இந் நிகழ்வு முஸ்லிம் காங்கிரஸின் புதிய வெளிச்சங்கள் இலக்கிய மையம் தமிழுக்கு தொண்டாற்றியவர்களை நினைவு கூரும் வரிசையில் முன்னர் கவிக்கோ அப்துல் ரஹ்மான்,செனட்டர் மஷூர் மௌலானா, எஸ். எச். எம். ஜெமீல் போன்றோருக்கு நடாத்திய நினைவேந்தல் நிகழ்வுத் தொடரில் ஒன்றாகும்.

## கொழும்பிலிருந்து கண்டிக்கு...

முற்பகல் 9 .18 மணிக்கு கண்டியை சென்றடைவதுடன் மீண்டும் கண்டியிலிருந்து அந்த ரயில் பிற்பகல் 4.50 மணிக்கு கொழும்பு கோட்டையை நோக்கி புறப்படும். அந்த ரயில் இரவு 7.40 மணிக்கு கொழும்பு கோட்டையை வந்தடையமென்றும் அமைச்சர் தெரிவித்துள்ளார்.

சனி மற்றும் ஞாயிற்றுக்கிழமைகளில் இந்த ரயில் சேவை நடைபெறுமென தெரிவித்துள்ள அவர், வார இறுதி நாட்களில் அதிகரிக்கும் பயணிகளின் நலனைக் கருத்திற் கொண்டு இந்த ரயில் சேவை ஆரம்பிக்கப்படுவதாகவும் தெரிவித்துள்ளார்.

இந்த ரயிலில் முதலாம் வகுப்பு கட்டணம் 2,000 ரூபாவாகவும் இரண்டாம் வகுப்பு கட்டணம் 1,500 ரூபாவாகவும் அமையும் என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

கண்டி தலதா மாளிகைக்கு யாத்திரை செல்வோர் மற்றும் பேராதனை பூங்காவை பார்வையிட செல்வோர் உட்பட கண்டி நகரின் எழிலை கண்டுகளிப்பதற்காக செல்லும் வெளிநாட்டு உல்லாசப் பிரயாணிகளின் வசதி கருதியே இந்த ரயில் சேவை ஆரம்பிக்கப்பட்டுள்ளதாக தெரிவித்துள்ள அவர், சொகுசு ரயில் சேவையாக பாதுகாப்புடன் இந்த சேவை அமைவதாகவும் தெரிவித்துள்ளார்.

அதே வேளை,அனுராதபுரத்துக்கு யாத்திரை செல்லும் மக்களின் நலன் கருதி கொழும்பு கோட்டையிலிருந்து அனுராதபுரத்துக்கு விசேட ரயில் சேவையை விரைவில் ஆரம்பிப்பதற்கு தீர்மானித்துள்ளதாகவும் அமைச்சர் தெரிவித்துள்ளார்.

ஊடக அமைச்சில் நேற்று நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பின் போதே அமைச்சர் இதனைத் தெரிவித்தார்.

இந்த ஊடக சந்திப்பில் அரசாங்க தகவல் திணைக்கள பணிப்பாளர் நாயகம், ரயில்வே பொது முகாமையாளர் உட்பட பலரும் கலந்து கொண்டனர்.

## தவறான சிகிச்சையால்...

உயிரிழந்த சம்பவம் தொடர்பில் சுகாதார அமைச்சு ராகமை வைத்தியசாலையிடம் அறிக்கை கோரியுள்ளது.

இலக்கம் 199/A தெலத்துர ஜாஎல பிரதேசத்தில் வசித்து வந்த புத்திக்க ஹர்ஷனி தர்மவிக்கிரம என்ற திருமணமான இளம்பெண்ணே இவ்வாறு உயிரிழந்துள்ளார்

சம்பவம் தொடர்பில் விசாரணைகளை மேற்கொள்ளுமாறு உயிரிழந்த பெண்ணின் உறவினர்கள் செய்த முறைப்பாட்டின் பிரகாரம், சுகாதார அமைச்சு ராகமை வைத்தியசாலைக்கு அறிக்கை கோரியுள்ளது.

பித்தப்பையில் கற்கள் இருந்ததையடுத்து கடந்த 31ஆம் திகதி வத்தளையிலுள்ள தனியார் வைத்தியசாலையில் அவருக்கு சத்திரசிகிச்சை மேற்கொள்ளப்பட்டதாக தெரியவந்துள்ளது.

ராகமை வைத்தியசாலையில் 25 நாட்களாக சிகிச்சை பெற்று வந்த அவர் கடந்த 25ஆம் திகதி உயிரிழந்துள்ளார்.

வத்தளை தனியார் வைத்தியசாலையில் உரிய பராமரிப்பின்றி மேற்கொள்ளப்பட்ட சத்திரசிகிச்சையினால் தனது சகோதரி மிகவும் துரதிஷ்டவசமாக உயிரிழந்துள்ளதாக அவரது சகோதரர் குற்றம் சுமத்தியுள்ளார்.

திருமணமாகி ஒரு மாதமும் சில நாட்களும் ஆன இளம் பெண் துரதிஷ்டவசமாக உயிரிழந்துள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

## ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க

ஆசிய பிராந்திய ஒத்துழைப்பை மேம்படுத்துவதன் மூலம் இலங்கைக்கும் பிலிப்பைன்ஸுக்குமிடையிலுள்ள நீண்டகால நட்புறவை மேலும் வலுப்படுத்த முடியுமென ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தெரிவித்தார்.

உத்தியோகபூர்வ விஜயம் மேற்கொண்டு பிலிப்பைன்ஸ் சென்றுள்ள ஜனாதிபதி, அந்நாட்டு ஜனாதிபதி பேர்டினன்ட் ஆர். மார்க்கோஸை ( Ferdinand R. Marcos) நேற்றுக் காலை (29) மணிலாவில் சந்தித்த போதே மேற்கண்டவாறு தெரிவித்தார்.

மணிலாவில் உள்ள மலாக்கனங் மாளிகைக்கு வருகை தந்த ஜனாதிபதி விக்கிரமசிங்கவுக்கு, பிலிப்பைன்ஸ் ஜனாதிபதி மகத்தான வரவேற்பளித்தார்.

தலைவர்கள் இருவரும் இருதரப்பு கலந்துரையாடலில் ஈடுபட்டனர்.

இச்சந்திப்பில், இலங்கை மற்றும் பிலிப்பைன்ஸுக் கிடையிலுள்ள நீண்ட கால நட்புறவை புதிய அணுகு முறைகளில் வலுப்படுத்துவது தொடர்பில் அதிக கவனம் செலுத்தப்பட்டது.

இந்தச் சந்திப்பில், தேசிய பாதுகாப்பு தொடர்பான ஜனாதிபதியின் சிரேஷ்ட ஆலோசகரும் ஜனாதிபதியின் பணிக்குழாம் பிரதானியுமான சாகல ரத்நாயக்க, நிதியமைச்சின் செயலாளர் மஹிந்த சிறிவர்த்தன, பிலிப்பைன்ஸுக்கான இலங்கைத் தூதுவர் ஷோபினி குணசேக்கர ஆகியோருடன் இலங்கையிலிருந்து சென்ற பிரதிநிதிகளும் கலந்து கொண்டனர்.

## அச்சமின்றி திரிபோஷாவை...

திரிபோஷா சத்துணவு தொடர்பில் தேவையற்ற அச்சத்தை தவிர்க்குமாறும் உண்மைக்கு புறம்பான தகவல்களே, இது தொடர்பில் வெளியிடப்படுவதாகவும் குடும்ப சுகாதார சேவை அலுவலகத்தின் பணிப்பாளர் விஷேட வைத்தியர் சித்ரமாலி டி சில்வா தெரிவித்துள்ளார்.

Aflatoxin என்ற பதார்த்தம் அடங்கியிருப்பதாக பரிசோதனையின் மூலம் உறுதி செய்யப்பட்ட திரிபோஷா பயன்பாட்டிலிருந்து அகற்றப்பட்டுள்ளது. எனவே, சிகிச்சை சேவை நிலையங்களுக்கு வழங்கப்பட்டுள்ள திரிபோஷாவை பயன்படுத்த முடியுமென்றும் பணிப்பாளர் தெரிவித்தார்.

மூன்று மாதங்களுக்கு முன்னர் திரிபோஷா நிறுவனத்தால் விநியோகிக்கப்பட்ட திரிபோஷாவில் Aflatoxin அளவு கூடுதலாக இருந்தமை ஆய்வில் உறுதி செய்யப்பட்டது. இவ்வாறு Aflatoxin இருந்ததாக உறுதி செய்யப்பட்ட திரிபோஷா தற்பொழுது அழிக்கப்பட்டுள்ளதாகவும் சுகாதார அமைச்சு மற்றும் திரிபோஷா நிறுவனம் உறுதி செய்துள்ளது.

## ஐந்து கோடி ரூபா...

பிரஜையொருவர் கட்டுநாயக்க விமான நிலையத்தில் கைதுசெய்யப்பட்டுள்ளார். சுங்கத் திணைக்களத்தின் போதைப்பொருள் கட்டுப்பாட்டு பிரிவின் அதிகாரிகள் குழுவினர் இவரை கைது செய்ததாக சுங்கப் பேச்சாளரும், சுங்கத் திணைக்களத்தின் பிரதிப் பணிப்பாளருமான (சட்ட விவகாரங்கள்) சுதத் சில்வா தெரிவித்தார்.

உகாண்டாவைச் சேர்ந்த 43 வயதான விவசாயி ஒருவரே,இச்சம்பவத்தில் கைதானார்.

சந்தேக நபர் உகாண்டாவிலிருந்து கட்டார், டோஹாவை சென்றடைந்து, அங்கிருந்து கட்டார் ஏர்வேஸ் KR664 விமானம் மூலம் நேற்று முன்தினம் (28) காலை 09.10 மணியளவில் கட்டுநாயக்க விமான நிலையத்தை வந்தடைந்தார்.

இந்நபர் மீது சந்தேகம் கொண்ட அதிகாரிகள், கட்டுநாயக்க விமான நிலையத்தின் புறப்படும் வாயிலுக்கருகில் வைத்து அவரை விசாரணைக்கு உட்படுத்தினர்.இவரை விமான நிலைய ஸ்கேனிங் இயந்திரத்தில் சோதனை செய்தபோது வயிற்றில் கொக்கேயின் போதைப்பொருள் இருப்பது தெரியவந்தது.

இதனையடுத்து அவரை சுங்க போதைப்பொருள் தடுப்பு பிரிவு அதிகாரிகள் மேலும் விசாரித்தனர். சுமார் ஐந்து கோடி ரூபா பெறுமதியான 80 கொக்கேயின் உருண்டைகளை விழுங்கியுள்ளதாக அவர் தெரிவித்தார்.

இதையடுத்து, கொக்கேயின் உருண்டைகள் அவரது வயிற்றிலிருந்து வெளியே எடுக்கப்பட்டன.

## குறைந்த வருமானம் பெறும்...

இது தொடர்பான அமைச்சரவைப் பத்திரமும் அண்மையில் அங்கீகரிக்கப்பட்டது.

இதற்கென, பல்வேறு காரணங்களால் நிர்மாணப் பணிகள் பாதியில் நிறுத்தப்பட்ட 69,000 வீடுகளில் 25,000 வீடுகள் தெரிவு செய்யப்பட்டன. அந்த வீடுகளின் மேற்கூரையில் அமைக்கப்பட்டுள்ள சூரிய சக்தி சோலார் பெனல்கள் மூலம் 20 கிலோவோர்ட் மின்சாரம் உற்பத்தி செய்யப்படும். தேசிய மின் கட்டமைப்பில் இது சேர்க்கப்படுமென்றும் அமைச்சர் தெரரிவித்தார்.

குறைந்த வருமானம் பெறும் குடும்பங்களுக்கென தேசிய வீடமைப்பு திட்டம் 2017 இல், ஆரம்பிக்கப்பட்டது.இவ்வீட்டுத் திட்டங்கள் தற்போது பல்வேறு காரணங்களால் இடை நிறுத்தப்பட்டன. இதன்படி மொனராகலை, அம்பாறை, மட்டக்களப்பு, திருகோணமலை,பொலன்னறுவை, அநுராதபுரம், வவுனியா, மன்னார், முல்லைத்தீவு, கிளிநொச்சி மற்றும் யாழ்ப்பாணம் ஆகிய 11 மாவட்டங்களில் அரச காணிகளில் கிராமங்களாக ஆரம்பிக்கப்பட்டு தெரிவு செய்யப்பட்ட வீட்டுத் திட்டங்களுக்கு இத் திட்டம் நடைமுறைப்படுத்தப்படவுள்ளது.

இந்தத் திட்டம் வெளிநாட்டு நிறுவனத்துடன் இணைந்து செயல்படுத்தப்படுமென்றும் சூரிய மின் தகடுகளின் பராமரிப்பு 20 ஆண்டுகளுக்கு முதலீட்டாளர்களால் மேற்கொள்ளப்படுமென்றும் அமைச்சர் குறிப்பிட்டார்.

இத்திட்டத்தின் முதல் 07 ஆண்டுகளுக்கு ஒரு அலகு மின்சாரத்திற்கு 0.116அமெரிக்க டொலர்கள் முதலீட்டாளர்களுக்குச் செலுத்தப்படும். எஞ்சியுள்ள 13 ஆண்டுகளுக்கு ஒரு அலகு மின்சாரத்திற்கு 0.0816 அமெரிக்க டொலர்கள் செலுத்தப்படும்.

சோலார் பெனல் திட்டம் மூலம் ஆண்டுக்கு 648 கிகாவோர்ட் மின்சாரம் உற்பத்தி செய்யப்படும். எனவே இலங்கைக்கு எரிபொருளை இறக்குமதி செய்வதற்கான வருடாந்த செலவில் 116.64 மில்லியன் அமெரிக்க டொலர்கள் சேமிக்கப்படுமென்றும் அமைச்சர் தெரிவித்தார்.

ஒப்பந்தம் செய்யப்பட்ட 20 வருட காலப் பகுதியில் 2,332.80 மில்லியன் அமெரிக்க டொலர் அன்னியச் செலாவணி மதிப்பின் பெறுமதியை இந்தத் திட்டத்தினால் நாட்டுக்கு சேமிக்க முடியுமென அமைச்சர் பிரசன்ன ரணதுங்க தெரிவித்தார்.

## குரல்தேர்வில் வெற்றிபெற்றோர்...

வாரமஞ்சரியில் வெளியாகிறது. யாழ் எப்.எம், பிறை எப் எம், மலையக சேவை, தமிழ்ச்சேவை என்பனவற்றுக்காக தேர்வுசெய்யப்பட்ட சுயாதீன அறிவிப்பாளர்கள் விபரத்தை முழுமையாக அறிய நாளை மறுதினம் 02 ஆம் திகதிய வாரமஞ்சரியைப் பார்க்கவும்.

## இராஜாங்க அமைச்சர்...

விடுத்துள்ளது. நிஸ்சங்க பந்துல கருணாரத்ன மற்றும் ஆர்.குருசிங்க ஆகியோர் அடங்கிய மேன்முறையீட்டு நீதிமன்ற நீதியரசர் குழாம் இந்த உத்தரவை பிறப்பித்துள்ளது.

## தடுக்கத் தவறியதாக...

பொலிஸ் மாஅதிபரின் பணிப்புரைக்கமைய இந்த இடமாற்றங்கள் வழங்கப்பட்டுள்ளன.

எவ்வாறாயினும் இந்த 23 பொலிஸ் பொறுப்பதிகாரிகளும், கடந்த மே மாதம் 09 ஆம் திகதியும் அதனை அண்மித்தும் நாட்டில் பதிவான வன்முறைகலின்போது, அரசியல்வாதிகளின் வீடுகள் தீக்கிரையாக்கப்பட்ட சம்பவங்களை தடுக்கத் தவறியமையை மையப்படுத்தி இவ்வாறு இடமாற்றம் செய்யப்பட்டுள்ளதாக பொலிஸ் தலைமையக தகவல்கள் தெரிவித்தன.

தமது கடமைகளை சரிவரச் செய்யாதமை தொடர்பில் இவர்கள் இவ்வாறு இடமாற்றம் செய்யப்பட்டதாக கூறப்படுகிறது.

அதன்படி உயிலன்குளம் பொலிஸ் பொறுப்பதிகாரி எச்.ஜே.முத்தட்டு தென்ன களனி வலயத்தின் சாதாரண கடமைகளுக்காக இடமாற்றப்பட்டுள்ளார். அநுராதபுரம் தலைமையக பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி பிரதான பொலிஸ் பரிசோதகர் ஆர். எல்.எல். விஜேரத்ன குளியாபிட்டிய வலயத்துக்கு மாற்றப்பட்டுள்ளார்.

## 22 ஆவது திருத்தம் மீதான...

சமர்ப்பிக்கப்பட்டு, அதற்கான விவாதத்தை 06 மற்றும் 07ஆம் திகதிகளில் நடத்துவதற்கு கட்சித் தலைவர்கள் இணக்கம் தெரிவித்துள்ளதாகவும் அந்த திணைக்களம் தெரிவித்தது.

சபாநாயகர் மஹிந்த யாப்பா அபேவர்தனவின் தலைமையில் நேற்று (29) முற்பகல் பாராளுமன்ற கட்டடத்தில் கூடிய பாராளுமன்ற விவகாரங்கள் தொடர்பான தெரிவுக்குழு கூட்டத்திலேயே, இந்த தீர்மானம் மேற்கொள்ளப்பட்டுள்ளதாகவும் அந்த திணைக்களம் தெரிவித்தது.

அதேவேளை இம்முறை பாராளுமன்ற அமர்வுகள் அக்டோபர் 03ஆம் திகதி முதல் 07 ஆம் திகதி வரை நடைபெறவுள்ளன. அத்துடன் எதிர்வரும் மூன்றாம் திகதி திங்கட்கிழமை வாய்மூல விடைக்கான வினாக்களுக்காக ஒதுக்குவதற்கும் தீர்மானிக்கப்பட்டுள்ளதாக மேற்படி தொடர்பாடல் திணைக்களம் தெரிவித்துள்ளது.

## கடலரிப்பை தடுக்க...

நிந்தவூர் பிரதேச கடற்கரைப் பகுதி, கடந்த பல வருடங்களாக கடலரிப்பால் பாதிக்கப்பட்டு வந்த நிலையில், கடந்த மாதம் இது உக்கிரமடைந்து பாரிய சேதங்களை ஏற்படுத்தியிருந்தது. இந்நிலையில், கடல் அரிப்பைக் கட்டுப்படுத்துவதற்காக, கரையோர பாதுகாப்பு மற்றும் கரையோர வளங்கள் முகாமைத்துவ திணைக்களம், பல்வேறு நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகிறது. இந்த நடவடிக்கைகளைத் துரிதப்படுத்தவும், கடலரிப்புக்கு நிரந்தர தீர்வைப்

பெறுவதற்கும்,நிந்தவூர் பிரதேச சபையின் தவிசாளர் மற்றும் பிரதித் தவிசாளர் ஆகியோர் கடும் முயற்சி எடுத்தனர்.

இதையடுத்தே, பணிப்பாளர் நாயகம் இங்கு விஜயம் மேற்கொண்டிருந்தார்.

இங்கு கருத்து தெரிவித்த பணிப்பாளர் நாயகம் ஆர்.ஏ.எஸ். ரணவக்க ;

இலங்கையில் எந்த ஊரிலும் ஏற்படாத கடலரிப்பை, நிந்தவூரில் அவதானித்தேன்.இக்கடல் அரிப்பால் பிரதேச மீனவர்கள் தங்களது வாழ்வாதாரத்தையும் இழந்துள்ளனர்.இந்த விஜயத்தில் இதை அவதானிக்க முடிந்தது. இந்தப்பிரச்சினைக்கு நிரந்தர தடுப்பு நடவடிக்கைகள் எடுக்கப்படும் என்றார்.

இந்த விஜயத்தின் போது நிந்தவூர் பிரதேச சபையின் தவிசாளர் எம்.ஏ.எம் தாஹிர், உப தவிசாளர் வை.எல் சுலைமாலெவ்வை, பிரதேச சபை உறுப்பினர்களான எம்.எம்.எம். அன்சார், சட்டத்தரணி ரியாஸ் ஆதம், ஏ.அஸ்வர், கே.எம். ஜாரிஸ், ஏ.எம். ரபீக், பிரதேச சபையின் முன்னாள் உறுப்பினர்களான ஏ.எம். மஜீத், எம். வாஹிட் மற்றும் மட்டக்களப்பு திருகோணமலை மாவட்டங்களுக்கான கரையோர பாதுகாப்புத் திணைக்களத்தின் பிராந்திய பொறியியலாளர் எம்.துளசிதாசன், நிந்தவூர் எமரெல்ட் விளையாட்டு கழகத்தின் தலைவரும், சமூகவியலாளருமான எம்.சி.எம். றிபாய் மற்றும் மீனவர்களும் கலந்து கொண்டனர்.

## ஊன நிலைக்கு ஆளான...

பிறப்பித்துள்ளது. பியகய பிரதேசத்தைச் சேர்ந்த சந்துணி அனாஷா என்ற வலது குறைந்த குழந்தை அதன் தாயாரை உதவியாளராக பெயரிட்டு தாக்கல் செய்துள்ள வழக்குக்கு நீண்ட விசாரணைகளுக்கு பின்னர் நேற்று நீதிமன்றம் தீர்ப்பளித்துள்ளது. கொழும்பு மேலதிக மாவட்ட நீதிபதி கல்ஹாரி லியனகே இந்த தீர்ப்பை வழங்கியுள்ளார்.

கம்பஹா மாவட்ட வைத்தியசாலையில் கடந்த 2012ஆம் ஆண்டு பிரசவ அறையில் ஒன்றுக்கு உதவிய வைத்தியர்கள், தாதியர்கள் உள்ளிட்ட, பணிக் குழுவினருக்கே கொழும்பு மேலதிக மாவட்ட நீதிபதி கல்ஹாரி லியனகே உத்திரவிட்டார்.

குழந்தை பிரசவத்தின்போது அக்குழந்தையின் தொப்புள் கொடி கழுத்து பகுதியை சுற்றி இறுகிள்ளதை அறிந்திருந்தும்,சுகப்பிரசவம் ஊடாக அக்குழந்தையை பிரசவிக்கச் செய்தமையால் அக்குழந்தை நிரந்தர ஊனமுற்ற நிலைக்கு ஆளாகியமையை அவதானித்து நீதிமன்றம் இந்த தீர்ப்பை அறிவித்தது.

பிரசவம் தொடர்பில் செயற்பட்ட வைத்தியர்களும், பணிக்குழுவினரும், குழந்தையின் கழுத்து பகுதியை தொப்புள்கொடி

சுற்றி இறுக்கி சுவாசம் தடைப்படுவதை அறிந்திருந்தும், அது தொடர்பில் மேலதிக பரிசோதனை எவற்றையும் முன்னெடுக்காது,சுக பிரசவத்துக்கு இடமளித்தமையால் ஒட்சிசன் குறைந்து குழந்தையின் கழிவுகள் வெளியேறி மூளையின் செயற்பாடு குறைவடைந்துள்ளமை தொடர்பில் சாட்சி ஊடாக வெளிப்படுத்தப்பட்டுள்ளதாக தீர்மானித்த நீதிபதி இந்த தீர்ப்பை அறிவித்தார்.

நீதிமன்றத்தில் முன்வைக்கப்பட்ட சாட்சியங்களின் பிரகாரம் இந்த வழக்கின் தீர்ப்பை மனுதாரருக்கு சாதகமாக வழங்குவதாகவும், பிள்ளையின் எதிர்கால வாழ்வை கருத்திற்கொண்டு அவருக்கு தனது வாழ்வை முன்னெடுக்க இந்த பணத்தொகையை செலுத்துமாறும் நீதிபதி உத்தரவிட்டார்.

கடந்த 2012ஆம் ஆண்டு மே மாதம் 14ஆம் திகதி கம்பஹா மாவட்ட வைத்தியசாலையில் பிறந்த சந்துனி ஆகாஷ் எனும் முறைப்பாட்டாளரான பெண் பிள்ளை மற்றும், அவரது தாயார் இவ்வழக்கை கொழும்பு மாவட்ட நீதிமன்றத்தில் தாக்கல் செய்திருந்தார்.கம்பஹா மாவட்ட வைத்தியசாலையின் பணிக்குழுவினர் வழக்கின் பிரதிவாதிகளாக பெயரிடப்பட்டிருந்தனர்.

அக்கால பகுதியில் சேவையாற்றிய வைத்தியசாலை பணிக்குழுவினரின் அலட்சியமான நடவடிக்கை காரணமாக தற்போது தனது பிள்ளைக்கு வாய் பேச முடியாத நிலை ஏற்பட்டுள்ளதாகவும் கை,கால்களை அசைக்க முடியாமல் தொடர்ச்சியாக வலிப்பு நிலைக்கு முகம் கொடுப்பதாகவும் அதனால் அவரால் சாதாரண நபராக வாழ்வதற்கு முடியாத சூழல் உருவாகியுள்ளதாகவும் மனு ஊடாக குற்றம் சுமத்தப்பட்டுள்ளது. இது தொடர்பில் வைத்திய சான்றுகளும் நீதிமன்றத்தில் முன்வைக்கப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.

## தேசிய சபையின் முதலாவது...

சபாநாயகர் மஹிந்த யாப்பா அபேவர்த்தனவின் தலைமையில் நேற்று (29) பாராளுமன்றக் கட்டடத்தொகுதியில் நடைபெற்ற "தேசிய பேரவையின்" முதலாவது கூட்டத்திலேயே இத்தீர்மானம் எடுக்கப்பட்டது.

இக்கூட்டத்தில் பிரதமர் தினேஷ் குணவர்த்தன, சபை முதல்வர் அமைச்சர் சுசில் பிரேமஜயந்த, ஆளும் கட்சியின் பிரதமகொறடா அமைச்சர் பிரசன்ன ரணதுங்க, எதிர்க்கட்சியின் பிரதமகொரடா லக்ஷ்மன் கிரியெல்ல, அமைச்சர் டிரான் அலஸ், பாராளுமன்ற உறுப்பினர்களான அசங்க நவரத்ன, ரவூப் ஹக்கீம், ரிஷாட் பதியுதீன், மனோ கணேசன், பழனி திகாம்பரம், ஜீவன் தொண்டமான், சிசிர ஜயகொடி, நாமல் ராஜபக்ஷ, ஜோன்ஸ்டன் பெர்னாந்து, சாகர காரியவசம், அலி சப்ரி ரஹீம், ரோஹித அபேகுணவர்த்தன, வஜிர அபேவர்த்தன, சிவநேசதுரை சந்திரகாந்தன், சம்பிக ரணவக்க உள்ளிட்டோர் கலந்துகொண்டனர். பாராளுமன்ற செயலாளர் நாயகம் தம்மிக தசநாயக்கவும் இச்சந்தர்ப்பத்தில் இணைந்துகொண்டிருந்தார்.

பிரதமர் தினேஷ் குணவர்த்தன 20.09.2022 ஆம் திகதி தேசிய சபையை உருவாக்குவது தொடர்பான பிரேரணையைப் பாராளுமன்றத்தில் முன்வைத்திருந்ததுடன், இப்பிரேரணை எதிர்ப்பின்றி அங்கீகரிக்கப்பட்டிருந்தது. இதற்கமைய இதுவரை பெயரிடப்பட்டுள்ள பாராளுமன்ற உறுப்பினர்களின் பட்டியலை சபாநாயகர் கடந்த (23) பாராளுமன்றத்தில் முன்வைத்திருந்தார். தேசிய சபையின் முதலாவது கூட்டத்தின் பின்னர் பிரதமர் தினேஷ் குணவர்த்தன கருத்துத் தெரிவிக்கையில்,

ஆளும் கட்சி மற்றும் எதிர்க்கட்சி உறுப்பினர்கள் தேசிய பேரவையின் கூட்டத்தில் கலந்துகொண்டிருந்தனர். தேசிய ரீதியில், பாராளுமன்றத்தின் வேலைத்திட்டங்களை முன்னெடுத்துச் செல்வதற்கும், பொது மக்களுக்கும் பாராளுமன்றத்துக்கும் இடையில் காணப்படும் நம்பிக்கையை மேலும் உறுதிப்படுத்துவதற்கும் திறக்கப்பட்ட புதியதொரு கதவாக இது அமையும் என்றும் குறிப்பிட்டார்.

சகல பாராளுமன்ற அமர்வு வாரத்திலும் வியாழக்கிழமை தேசிய பேரவையைக் கூட்டுவதற்கும் நேற்று (29) தீர்மானிக்கப்பட்டது.



# உக்ரைன் விவகாரத்தில் இந்தியப் பிரதமர் ரஷ்ய அதிபருக்கு ஆலோசனை

ரஷ்யாவுக்கும் மேற்கத்திய நாடுகளுக்கும் இடையில் ஒரு நல்லுறவு பாலத்தை அமைக்கக் கூடிய ஒரு தகுதிவாய்ந்த நாடாக இந்தியா விளங்குவதாக அரசியல் விமர்சகர்கள் கருத்து வெளியிட்டுள்ளனர்.

சமீபத்தில் பிரதமர் மோடி ரஷ்ய அதிபர் விளாடிமிர் புட்டினுக்கு அனுப்பி வைத்த செய்தியில் ரஷ்யா – உக்ரைன் விவகாரத்துக்கு நிச்சயமாக யுத்தம் தீர்வு அல்ல என்றும் இதைத் தீர்ப்பதற்கு ரஷ்யா வேறு ஒரு வழிமுறையைக் கடைப்பிடிக்க வேண்டுமெனவும் இதேவேண்டுகோள் உக்ரைனுக்கும் பொருந்தும் எனவும் தெரிவித்திருந்தார். இதற்கு அமெரிக்காவும் பிரான்சும் சாதகமான சமிக்ஞைகளை வெளிப்படுத்தியுள்ளன.

இது குறித்து கருத்து வெளியிட்டுள்ள அரசியல் அவதானியான ஹார்ஷ் வி பாண்டே, ரஷ்யா என்ன செய்ய வேண்டும் என்று இந்தியா கூறவேயில்லை. அதே சமயம் இந்தியாவின் நிலைப்பாட்டை தான் புரிந்து கொண்டிருப்பதாக அதிபர் விளாடிமிர் புட்டின் தெரிவித்திருக்கிறார். ஏனெனில் பிரச்சினைக்கு யுத்தம் ஒரு தீர்வாக முடியாது என்று இந்தியா தனிப்பட்ட ரீதியாகவும் வெளிப்படையாகவும் மொஸ்கோவுக்கு தெரிவித்திருந்தது. இந்தியாவின் நீண்ட கால நிலைப்பாடு, பிரச்சினைகளை யுத்தத்தின் மூலம் தீர்க்க முடியாது என்பதாகவே இருந்து வந்திருக்கிறது. அதையே பிரதமர் மோடியும் வெளிப்படுத்தி இருக்கிறார் என்று தெரிவித்துள்ளார்.

# ஐ.நா பொது செயலாளரை சந்தித்து பேசிய ஜெய்சங்கர்



இந்திய வெளிவிவகார அமைச்சர் ஜெய்சங்கர், நியூயோர்க்கில் நடைபெற்ற ஐக்கிய நாடுகள் பொதுச் சபையின் 77 ஆவது கூட்டத் தொடரின் போது ஐ.நா பாதுகாப்பு கவுன்சில் பொதுச் செயலாளர் அன்டோனியோ குட்டெரஸை சந்தித்தார்.

அதேவேளை ரஷ்யா, சைப்ரஸ், ஜோர்டான், வெனிசுலா ஆகிய நாடுகளின் வெளியுறவு அமைச்சர்களையும், ஐக்கிய நாடுகளின் அபிவிருத்தித் திட்டத்தின் (UNDP) நிர்வாகி அச்சிம் ஸ்டெய்னரையும் ஜெய்சங்கர் சந்தித்துப் பேச்சு நடத்தினார்.

இந்திய வெளியுறவு அமைச்சர் ஜெய்சங்கர் தனது ட்விட்டர் பதிவில் ஐ.நா. தலைமையுடனான சந்திப்பு குறித்து தகவல் தெரிவித்துள்ளார்.

'ஐ.நா. பொதுச் செயலாளர் அன்டோனியோ குட்டெரஸுடனான சந்திப்பின் போது உலகளாவிய சவால்களை கட்டுப்படுத்துவது குறித்த விரிவாக விவாதிக்கப்பட்டது. உக்ரைன் மோதல், ஐ.நா. சீர்திருத்தம், G20, காலநிலை நடவடிக்கை, உணவு பாதுகாப்பு மற்றும் வளர்ச்சிக்கான தரவு ஆகியவை குறித்தும் பேசப்பட்டது' என்று ஜெய்சங்கர் தெரிவித்துள்ளார்.


கடற்தொழில் அமைச்சு

இலங்கை தேசிய மீன்வளர்ப்பு அபிவிருத்தி அதிகாரசபை (NAQDA)

**அரச-தனியார் கூட்டு முயற்சியின் கீழ் புத்தளம் குசல, பங்கதெனிய பல்வகை கடல் மீன் குஞ்சு பொரிப்பகத்தை நடத்துவதற்கான தொழில்நுட்ப மற்றும் நிதி முன்மொழிவுகளை (RFP) கோருதல்.**

**ஒப்பந்த இலக்கம் : NQ/DPC/2022/PPP/02**

கடற்றொழில் அமைச்சின் கீழ் ஸ்தாபிக்கப்பட்ட இலங்கையின் தேசிய நீர்வாழ் மீன் வளர்ப்பு அபிவிருத்தி அதிகாரசபையானது புத்தளம் மாவட்டத்தின் குசல, பங்கதெனிய பிரதேசத்தில் அனைத்து வசதிகளுடன் நிர்மாணிக்கப்பட்டுள்ள பல்வகை கடல் மீன் குஞ்சு பொரிப்பகத்தை அரச-தனியார் பங்காளித்துவத்தின் கீழ் நடத்துவதற்கு எதிர்பார்க்கப்படுகிறது.

இந்த குஞ்சு பொரிப்பகத்தில் ஏற்றுமதி சந்தையில் அதிக கேள்வி உள்ள கடல் மீன் இனங்கள் இனப்பெருக்கம் செய்ய எதிர்பார்க்கப்படுகிறது. இதற்கு தொழில்நுட்ப அறிவும் அனுபவமும் உள்ள தனியார் துறை தொழில்முனைவோர்களை ஈடுபடுத்துவது அவசியமாகியுள்ளது. மேற்குறிப்பிட்ட பல்வகை கடல் மீன் குஞ்சு பொரிப்பகத்தை அடுத்த 05 ஆண்டுகளுக்கு இயக்க பொது-தனியார் கூட்டு முயற்சியின் கீழ் ஆர்வமுள்ள விவசாயிகளிடமிருந்து தொழில்நுட்ப மற்றும் நிதி முன்மொழிவுகள் (RFP) வரவேற்கப்படுகின்றன.

பூர்வாங்க முன்மொழிவுகளைச் சமர்ப்பித்தல் (RFP) **(அ).** தொழில்முனைவோரைப் பற்றிய பொதுவான விவரங்கள் **(ஆ).** வணிகத்தின் சட்ட நிலை (தனியார் / பொது / கூட்டு முயற்சி) **(இ).** தொழில்முனைவோரின் நிதித் திறனை உறுதிப்படுத்த பட்டய கணக்காளர் நிறுவனத்தின் பதிவு செய்யப்பட்ட கணக்காளரால் தணிக்கை செய்யப்பட்ட கடந்த மூன்று ஆண்டுகளாக நிறுவனத்தின் நிதி அறிக்கைகள் **(ஈ).** மீன் வளர்ப்பில் முன் அனுபவம் **(உ).** தொழில்நுட்ப மனிதவளத்தின் விவரங்கள் **(ஊ).** மீன்வளர்ப்புத் தொழில் தொடர்பான எந்தவொரு நீதி மன்றத்தினாலோ அல்லது அங்கீகரிக்கப்பட்ட நிறுவனத்தினாலோ குற்றவாளியல்லாதவர் என்பதற்கான வாக்குமூலங்களில் முழுமையான விவரங்கள் இருக்க வேண்டும். மேற்படி திட்டத்திற்கான தொழில்நுட்ப முன்மொழிவு மற்றும் நிதி முன்மொழிவை முன்மொழிபவர்கள் தனித்தனியாக சமர்ப்பிக்க வேண்டும் மற்றும் அது தொடர்பான ஆவணங்களை பத்தரமுல்லையில் உள்ள இலங்கை தேசிய நீர் உயிரினவளர்ப்பு அபிவிருத்தி அதிகார சபையின் அலுவலகத்திலிருந்து வேலை நாட்களில் **மு.ப.09.00** மணி முதல் **பி.ப.02.00** மணி வரை **ரூ.5000.00** கட்டணத்தை இலங்கை தேசிய மீன்வளர்ப்பு அபிவிருத்தி அதிகாரசபை பத்தரமுல்லையில் அமைந்துள்ள பிரதான அலுவலகத்தில் செலுத்தி பெற்றுக்கொள்ளலாம்.

மேற்படி குஞ்சு பொரிப்பகத்தை நடத்த விரும்பும் தொழில்முனைவோர்கள் மேற்கண்ட தகவல்களுடன் தமது முன்மொழிவுகளை இலங்கை தேசிய நீர் உயிரினவளர்ப்பு அபிவிருத்தி அதிகார சபை இல. 41/1, புதிய பாராளுமன்ற வீதி, பெலவத்த, பத்தரமுல்ல என்ற முகவரிக்கு **2022.10.28** அன்று **பி.ப.02.00** மணிக்குள் கிடைக்கப்பெறுமாறு அனுப்பிவைத்தல் வேண்டும். தபாலுறையின் இடது பக்க மேல் மூலையில், "தொழில்நுட்ப மற்றும் நிதி முன்மொழிவு - பங்கதெனிய பல்வகை கடல் மீன் குஞ்சு பொரிப்பகம்" என்று தெளிவாகக் குறிப்பிடல் வேண்டும்.

இந்த திட்டத்திற்காக சமர்ப்பிக்கப்பட்ட தொழில்நுட்ப மற்றும் நிதி முன்மொழிவுகளில் இருந்து, தொழில்நுட்ப முன்மொழிவுகளுக்கு குறைந்தபட்ச செயல்பாட்டு காரணி நிலை அல்லது அதற்கு மேற்பட்ட மதிப்பெண்களை பெற்ற விண்ணப்பதாரர்களிடமிருந்து மட்டுமே நிதி முன்மொழிவுகள் திறக்கப்படும், அதில் அதிக மனுக்கோரல் விடுத்துள்ள விண்ணப்பதாரர் செயற்திட்டத்திற்காக தெரிவு செய்யப்படுவார். இந்த மத்திய நிலையத்தில் வசதிகள் தொடர்பிலான தகவல்களை **www.naqda.gov.lk** இணையத்தளத்தில் இருந்து பெற்றுக்கொள்ள முடியும்.

**மேலதிக விபரங்களுக்காக தொடர்பு கொள்ளவும்**

பிரதிப் பணிப்பாளர் (கடற்கரை)
தொ.இல : +9411–2786578/+9411– 2786497/+9471 8055360
பெக்ஸ் : +9411 – 2786578 / +9411 – 2786493
மின்னஞ்சல் முகவரி : adcad@naqda.gov.lk

தலைவர்,
**இலங்கை தேசிய நீர் உயிரினவளர்ப்பு அபிவிருத்தி அதிகார சபை,**
**2022.09.30**



திகதி 28.09.2022 புதன்கிழமை உத்தியோகபூர்வ முடிவுகள் www.nlb.lk NLB

மஹஜன சம்பத — சீட்டிழுப்பு இலக்கம்: 4892
இச்சீட்டிழுப்பில் வெல்லப்பட்டுள்ள மொத்த பரிசுத்தொகை ரூ. 9,206,580.00
ஆங்கில எழுத்து D வெற்றி இலக்கங்கள் 8 9 9 2 5 6
அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு ரூ.16,787,443.00

கொவிசெத Govisetha — சீட்டிழுப்பு இலக்கம் 3134
இச்சீட்டிழுப்பில் வெல்லப்பட்டுள்ள மொத்த பரிசுத்தொகை ரூ. 4,586,220.00
ஆங்கில எழுத்து O வெற்றி இலக்கங்கள் 24 25 28 41
அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு ரூ. 78,835,206.80

ராசி சுப பலன் Handahana — சீட்டிழுப்பு இலக்கம்: 201
இச்சீட்டிழுப்பில் வெல்லப்பட்டுள்ள மொத்த பரிசுத்தொகை ரூ. 7,391,880.00
இலக்கினம் தனுசு வெற்றி இலக்கங்கள் 14 15 38 62 விசேட இலக்கினம் தனுசு
அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு ரூ. 2,612,121.60

ஜாதிக சம்பத — சீட்டிழுப்பு இலக்கம் : 1347
இச்சீட்டிழுப்பில் வெல்லப்பட்டுள்ள மொத்த பரிசுத்தொகை ரூ. 1,977,160.00
வெற்றி இலக்கினம் தனுசு வெற்றி இலக்கங்கள் 6 1 5 2 2 7
அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு ரூ. 11,153,512.80

தன நிதானய — சீட்டிழுப்பு இலக்கம் : 922
இச்சீட்டிழுப்பில் வெல்லப்பட்டுள்ள மொத்த பரிசுத்தொகை ரூ. 2,324,340.00
வெற்றி இலக்கினம் B வெற்றி இலக்கங்கள் 06 11 43 47
அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு ரூ. 127,480,273.20

கோடி 27 + Mega Power மெகா பவர் — சீட்டிழுப்பு இலக்கம் 1240
இச்சீட்டிழுப்பில் வெல்லப்பட்டுள்ள மொத்த பரிசுத்தொகை ரூ. 4,360,220.00
அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு ரூ. 272,874,958.00
I 04 15 44 49 71
அடுத்த பவர் சுப்பர் பரிசு ரூ. 10,000,000.00 அடுத்த கிராண்ட் சுப்பர் பரிசு ரூ. 10,000,000.00

தேசிய லொத்தர் சபை National Lotteries Board தொலைபேசி: 011-4607000, 011 - 4607001 - 2 பெக்ஸ்: 011-4669475 Email : info@nlb.lk Web : www.nlb.lk
இலக்கம் 32, தேஷமான்ய N.W.J. முதலிகே மாவத, கொழும்பு 01




# காலநிலை அனர்த்தங்களுக்கான நிதியியல் மற்றும் காப்புறுதியின் முக்கியத்துவம்

## மாத்தளை உணவேருவ கிராமத்தின் சம்பவ ஆய்வு



[illegible]

# ஆலமுல் இஸ்லாம்

மர்லின் மரிக்கார் aalamulislam.tkn@lakehouse.lk

# முஹம்மத் (ஸல்) அவர்கள் உலகுக்கான அருட்கொடை

அறிவியல் வளர்ச்சியும் நாகரீக முதிர்ச்சியும் அடைந்துள்ள இக்காலகட்டத்தில் நாளுக்கு நாள் நிமிடத்திற்கு நிமிடம் உலகின் நாலா பக்கங்களிலும் பல்வேறு பிரச்சினைகள் தோன்றிய வண்ணமுள்ளன. பிரச்சினைகளுக்கு ஈடுகொடுக்க முடியாமல் மனித சமுதாயம் தவித்துக் கொண்டிருக்கின்றது. நிம்மதியின்றி, வாழ வழியின்றி நரக வாழ்க்கை வாழும் தற்கால மனித சமூகத்துக்கு இவற்றிலிருந்து விடிவு கிடைக்குமா? என்பது கேள்விக்குறியே. ஆனால் இப்பிரச்சினைகளுக்கெல்லாம் விடையும் தீர்வையும் கொண்டதாகவே இஸ்லாம் விளங்கிக் கொண்டிருக்கின்றது.

அந்த வகையில் அல்லாஹ்வின் தூதர் முஹம்மது நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களின் வாழ்வை முன்மாதிரியாகக் கொண்டு வாழும் போது பாரெங்கும் அமைதி, சுபீட்சம் தானாக உருவாகும். நபியவர்களைப் படைப்பதற்காகவே, உலகத்தை இறைவன் படைத்தான் என்பதால் அவர்களிலே, வேறு எவரிலும் இல்லாத விசேடத் தன்மை, மகத்துவம் இருக்கின்றது என்பதனை இலகுவாகப் புரிந்து கொள்ளலாம்.

நபி (ஸல்) அவர்கள் அன்பும்பண்பும் கொண்ட பொறுப்புள்ள குடும்பத்தலைவராகவும், நாணயமுள்ள வர்த்தகராகவும், வீரமுள்ள தளபதியாகவும், தலைசிறந்த சீர்திருத்தவாதியாகவும், நீதி வழுவா ஆட்சியாளராகவும், அறிவின் சிகரமாகவும் திகழ்ந்துள்ளார்கள். இவற்றை அன்னாரது வாழ்க்கைச் சரிதையும் பொன்மொழிகளும் தெளிவாக எடுத்துக் காட்டிக் கொண்டிருக்கின்றன. இதன்படி நபி (ஸல்) அவர்கள் முழு மனித வாழ்வுக்கும் முன்மாதிரியாக வாழ்ந்து காட்டியுள்ளார்கள் என்பது மிகவும் தெளிவானது. அவர்களுடைய முன்மாதிரியைப் பின்பற்றி நாமும் வாழ்வோமாயின் வாழ்க்கையில் எதுவித இடர்பாடுமின்றி ஈருலகிலும் மகிழ்ச்சிகரமான வாழ்வைப் பெற்றுக் கொள்ளலாம்

நபி (ஸல்) அவர்கள் பிறந்தபோது அரபு நாட்டின் நிலை எந்தளவுக்கு பின்னடைவுக்கு உள்ளாகி, சீரழிந்து இருந்தது என்பதை அக்காலத்தை விழிக்கப் பயன்படுத்தப்படும் 'அய்யாமுல் ஜாஹிலிய்யா' என்ற பதம் குறித்து நிற்கின்றது. 'அய்யாமுல் ஜாஹிலிய்யா' என்ற அரபுப்பதத்தின் பொருள் 'அறிவிலிகளின் காலம்' என்பதாகும். அறிவுத்துறையின் உச்சியிலே, விஞ்ஞானத்தின் விளிம்பிலே இருக்கும் இன்றைய சமூகத்தை அன்றைய 'அய்யாமுல் ஜாஹிலிய்யா' கால சமூகத்தோடு ஒப்பிட்டுப் பார்த்தால் மலைக்கும் மடுவுக்கும் இடையிலான வேறுபாட்டை அவதானிக்க முடியும். வாழ வழியின்றி, வழிகாட்டியின்றி, வழிகேட்டின் மொத்த உருவமாக இருந்த அச்சமூகத்தை இருளிலிருந்து ஒளியின்பாலும், வழிகேட்டிலிருந்து நேர்வழியின்பாலும், மிருக சுபாவத்திலிருந்து மனித சுபாவத்துக்கும் திசை திருப்பிடவே நபி (ஸல்) அவர்கள் அல்லாஹ்வின் கட்டளைக்கு ஏற்ப உழைத்தார்கள். அதன் பிரதிபலன்களை அன்னார் வாழ்ந்த சமூகம் முதல் ஒவ்வொருவரும் அடைந்து கொள்ளும் நிலை உருவானது.

'முட்டாளோடு பேச எட்டாளும் போதாது' என்றொரு உவமை உள்ளது. ஆனால்,

**நாவின்ன பைஸல்...**

மடமை யுகத்திலே முரட்டு சுபாவம் நிறைந்து கல்நெஞ்சம் கொண்ட மக்களைத் தனியே நின்று புனிதர்களாக மாற்றிய நபி (ஸல்) அவர்கள் ஆழமான அகச் சிந்தனையாளராக இருந்துள்ளார்கள். அன்றைய யுகம் அறிவியல் துறையில் மிகவும் பின்தங்கிய காலகட்டமாக இருந்தது. இன்று அவ்வாறான நிலைமை இல்லை.

அண்ணலாரின் அற்புத வாழ்க்கை வரலாறே, அவர்களது வாழ்வு மனிதனைப் புனிதனாக மாற்றவல்லது என்பதை எடுத்துக்காட்டிக் கொண்டிருக்கின்றன. அறிவுலக மேதை இமாம் கஸ்ஸாலி (ரஹ்) அவர்கள் 'முஹம்மது நபி (ஸல்) அவர்களது விருத்தாந்தத்தைப் பகுத்தறிவோடு, சிந்தனைத் தெளிவோடு படிக்கும் எவரும் அவர்கள் மீது உவப்பு வைக்காவிடில் உண்மையில் அவர்களது வரலாற்றைப் படித்தவரல்ல' என்று கூறியுள்ளார்கள்.

மேலும் நபி(ஸல்) அவர்கள் நற்குணத்தின் மொத்த உருவமாக இருந்தார்கள். 'கற்கண்டு எந்தப்பக்கத்தைக் கடித்தாலும் இனிக்கும்'. அதேபோன்று அகிலத்திற்கோர் அருட்கொடையாக அரேபியாவில் அவதரித்த நபி(ஸல்) அவர்களின் வாழ்வின் எல்லாப் பகுதியும் அமைந்துள்ளது. அவர்களது வாழ்வில் சிறிதளவேனும் கோணல் கிடையாது. இதற்கு அன்னாரது வாழ்வொழுங்கே சிறந்த முன்மாதிரியாகும்.

இது குறித்து அல்லாஹ்தஆலாவே, 'நபியே! உம்மை உலகத்தார் யாவருக்கும் ஓர் அருளாகவே அனுப்பியிருக்கிறோம்' (அல் குர்அன் 21:107) என்று குறிப்பிட்டு வைத்திருக்கின்றான். இதன்படி நபி (ஸல்) அவர்கள் குறித்த ஒரு சமூகத்தினருக்கு மாத்திரமன்றி முழு மனித சமூகத்திற்குமே அருளாக அனுப்பி வைக்கப்பட்டுள்ளார்கள்.

அதேநேரம் 'உங்களில் அல்லாஹ்வையும், இறுதிநாளையும் உறுதியாக நம்புகின்றவர்களுக்கு அழகிய முன்மாதிரி நிச்சயமாக அல்லாஹ்வின் தூதரிடத்தில் இருக்கிறது. அவர்கள் (அவரைப் பின்பற்றி) அல்லாஹ்வை அதிகமாக நினைத்து (துதி செய்து) கொண்டிருப்பார்கள்' (அல் குர்ஆன் 33:21) என்றும் அல்லாஹ்தஆலா தன் அருள்மறையில் தெளிவாகக் குறிப்பிட்டு வைத்திருக்கின்றான்.

மேலும், 'நூன், எழுதுகோலின் மீதும், அவர்கள் எழுதியவைகளின் மீதும் சத்தியமாக... (நபியே!) நீர் உமதிறைவனருளால் பைத்தியக்காரரல்லர்.

மேலும், நிச்சயமாக உமக்கு முடிவுறாத கூலியும் இருக்கின்றது. நிச்சயமாக நீர் மகத்தான நற்குணங்கள் உடையவராகவே இருக்கின்றீர்'. (அல் குர்ஆன் 68:14) என்று அல்லாஹ்தஆலாவே நபி (ஸல்) அவர்களின் அருங்குணத்திற்கு நற்சான்றிதழ் அளித்து இருக்கின்றான்.

அதனால் அண்ணலாரைப் பின்பற்றும் போது தமது வாழ்வு ஒளிமயமானதாகவும், நற்குணம் நிரம்பியதாகவும் விளங்கும் என்பதை இவ்வசனங்கள் எடுத்துக்காட்டுகின்றன. எனவே நபி (ஸல்) அவர்களை முன்மாதிரியாகக் கொண்டு முழு வாழ்வையும் அமைத்துக் கொள்வதில் ஒவ்வொருவரும் கவனம் செலுத்த வேண்டும்.

அதன் ஊடாக இம்மையிலும் மறுமையிலும் சுபீட்சமும் விமோசனமும் அடைந்து கொள்ள முடியும். அந்த விமோசனத்தையே இலக்காககவும் நோக்காகவும் கொண்டு செயற்படுவோம்.

# மனநிறைவு அடைந்திட...

நபி (ஸல்) அவர்கள் கூறியதாக அனஸ் (ரலி) அவர்கள் இவ்வாறு அறிவித்துள்ளார்கள்.

'ஒருவர் (நல்லறங்களில் ஈடுபடும் போது) மறுமையின் (நிலையான) வளங்களைப் பெறுவதையே நோக்கமாக கொள்கிறார் எனில், அல்லாஹ் அவருக்கு மனதில் செழிப்பையும் நிறைவையும் அளிக்கிறான். மனஉளைச்சலில் இருந்து அவரை விடுவிக்கிறான். நிம்மதியையும் மன உறுதியையும் அளிக்கிறான். உலகம் அவரிடம் வருகிறது. அவருக்கு முன்பாக எந்த மதிப்பையும் பெறாமல் அற்பமாக அது ஒதுக்கித் தள்ளப்படுகின்ற நிலைக்கு ஆளாகிறது.

இதற்கு நேர்மாறாக, ஒருவர் (நல்லறங்களில் ஈடுபடும் போது) உலக வளங்களையும் செழிப்பையும் ஈட்டிக் கொள்வதையே நோக்கமாகக் கொள்கிறார்கள் எனில் வறுமையையும் பற்றாக்குறையையும் அவருடைய கண்களுக்கு முன்னால் கொண்டு வந்து நிறுத்தி விடுகிறான்.

அவருடைய செயல்களில் குழப்பத்தையும் மன உளைச்சலையும் கவலையையும் விதைத்து விடுகிறான். இத்தனைக்குப் பிறகும் அவருடைய விதியில் எந்தளவுக்கு ஏற்கனவே தீர்மானமாகி விட்டதோ அந்தளவுக்கு அவருக்கு உலக வளங்கள் கிடைக்கப் பெறுகின்றன'.

**(ஆதாரம்: திர்மிதி, அஹ்மத், தாரமி)**

எம்மைப் பாடாய் படுத்துகின்ற கவலைகள், மன உளைச்சல்கள், சிந்தனை ரீதியான அலங்கோலங்கள் அனைத்துக்கும் மருந்து மறுமை வளங்கள் மீதான ஆசையை வரித்துக் கொள்வது தான். மறுமையின் நிலையான வளங்களைப் பெற வேண்டும் என்கிற ஆசை ஒருவருக்கு எத்தகைய மனநிம்மதியையும் ஆறுதலையும் தருமெனில் அதை சாதாரண மனிதனால் கற்பனை செய்தும் பார்க்க முடியாது.

உண்மையில் தேடி அடைய வேண்டியதும் விரும்பிப் பெற வேண்டியதுமானது தான் மறுமை தான். எவர் மறுமையின் நிலையான வளங்கள் மீது ஆசையை வளர்த்துக் கொண்டு அவற்றின் மீதே தன்னுடைய பார்வையையும் சிந்தையையும் குவித்து வைத்திருக்கின்றாரோ அவருக்கு அல்லாஹ் மனநிறைவு என்ற பரிசை அளித்தே தீர்வான். அது மனித வாழ்வைப் புடம்போட்டு பக்குவப்படுத்தக்கூடியதாக இருக்கும்.

**தொகுப்பு: மஸ்லமா...**

# மனிதநேயத்தின் அடையாளம்

எமது உயிரிலும் மேலான நபி (ஸல்) அவர்கள் மனித நேயத்தின் தந்தையாகவும் அடையாளமாகவும் திகழ்ந்துள்ளார்கள். ஒவ்வொருவரும் மனிதநேயத்துடன் வாழ்வதற்கு தேவையான தெளிவான வழிகாட்டல்களை அன்னார் வழங்கியுள்ளார்கள். அதற்கு நாயகத் தோழர் ஒருவர் அறிவித்துள்ள சம்பவமொன்றும் நல்ல எடுத்துக்காட்டாக உள்ளது.

ஒரு நாள் நாங்கள் முற்பகல் நேரத்தில் அல்லாஹ்வின் தூதர் (ஸல்) அவர்களிடம் இருந்தோம். அப்போது செருப்பணியாத, (அரை) நிர்வாணிகளான, வட்டமாய் கிழிந்த கம்பளி ஆடை அல்லது நீளங்கி அணிந்த ஒரு கூட்டத்தார் தம் (கழுத்துகளில்) வாட்களைத் தொங்கவிட்டவர்களாக நபிகளாரிடம் வந்தனர். அவர்களில் பெரும்பாலானோர் முளர் குலத்தைச் சேர்ந்தவர்களாக இருந்தனர். இல்லை அவர்களில் அனைவருமே முளர் குலத்தைச் சேர்ந்தவர்கள்தாம். அவர்களது ஏழ்மை நிலையைக் கண்ட நபி (ஸல்) அவர்களது முகம் நிறம் மாறிவிட்டது.

உடனே நபி (ஸல்) அவர்கள் (ஒருவிதத் தவிப்பு நிலையுடன்) வீட்டுக்குள் சென்று வெளியே வந்து, பிலால் (ரலி) அவர்களிடம் உத்தர விட, பிலால் (ரலி) அவர்கள் தொழுகைக்கு அறிவிப்புச் செய்து இகாமத்தும் கூறினார்கள்.

அல்லாஹ்வின் தூதர் (ஸல்) அவர்கள் தொழுதுவிட்டு, மக்களுக்கு உரை நிகழ்த்தினார்கள். அப்போது 'மக்களே! உங்களை ஒரே ஆன்மாவிலிருந்து படைத்த உங்கள் இறைவனை பயந்து கொள்ளுங்கள்' எனும் (அல் குர்ஆனின் 4:1) இறைவசனத்தை முழுமையாக ஓதிக்காட்டினார்கள்.

மேலும், 'அல்ஹஷ்ர்' அத்தியாயத்திலுள்ள 'நம்பிக்கையாளர்களே! நீங்கள் அல்லாஹ்வுக்கு அஞ்சுங்கள். ஒவ்வொரு ஆன்மாவும் நாளைக்கென்று எதனை அனுப்பியுள்ளது என்பதை கவனத்திற்கொள்ளட்டும். அல்லாஹ்வுக்கு அஞ்சுங்கள்' எனும் (அல் குர்ஆன் 59:18) வசனத்தையும் ஓதிக்காட்டி (முளர் கூட்டத்தாருக்கு தர்மம் செய்யுமாறு கூறி)னார்கள்.

அப்போது '(உங்களில்) ஒருவர் தமது பொற்காசு, வெள்ளிக்காசு, துணி, ஒரு ஸாஉ கோதுமை, ஒரு ஸாஉ பேரீச்சம் பழம் ஆகியவற்றைத் தர்மம் செய்யட்டும் என்று கூறி, பேரீச்சம் பழத்தின் ஒரு துண்டையேனும் தர்மம் செய்யட்டும் என்று வலியுறுத்தினார்கள். உடனே (நபித்தோழர்களில்) ஒவ்வொருவரும் தம்மிடமிருந்த பொற்காசுகளிலிருந்தும் வெள்ளிக் காசுகளிலிருந்தும் ஆடைகளிலிருந்தும் ஒரு ஸாஉ கோதுமையிலிருந்தும் ஒரு ஸாஉ பேரீச்சம் பழத்திலிருந்தும் தர்மம் செய்தார்கள்.

அப்போது அன்சாரிகளில் ஒருவர் ஒரு பை (நிறைய பொருட்களைக்) கொண்டு வந்தார். அதைத் தூக்க முடியாமல் அவரது கை திணறியது.

ஏன் தூக்கவே முடியவில்லை. பின்னர் தொடர்ந்து மக்கள் (தங்களின் தர்மப் பொருட்களுடன்) வந்து கொண்டிருந்தனர். இறுதியில் உணவுப் பொருட்களாலும் ஆடைகளாலும் இரு குவியல்கள் சேர்ந்து விட்டதை நான் கண்டேன்.

அப்போது நபி(ஸல்) அவர்களது முகம் பொன்னைப் போன்று மின்னிக் கொண்டிருப்பதையும் நான் கண்டேன். நபி(ஸல்) அவர்கள், 'யார் இஸ்லாத்தில் ஓர் அழகிய நடைமுறையை உருவாக்குகிறாரோ அவருக்கு அதற்குரிய நன்மையும் அவருக்குப் பின் அதன்படி செயல்படுபவர்களின் நன்மையும் உண்டு.

அதற்காக அவர்களது நன்மையில் எதுவும் குறைந்துவிடாது. அவ்வாறே, யார் இஸ்லாத்தில் ஒரு தீய நடைமுறையை உருவாக்குகிறாரோ அவருக்கு அதன் பாவமும் அவருக்குப் பின் அதன்படி செயல்படுபவர்களின் பாவமும் அ(தன்படி செயல்பட்ட)வர்களின் பாவத்திலிருந்து எதுவும் குறையாமல் உண்டு என்று கூறினார்கள். **(ஆதாரம்: முஸ்லிம்)**

இச்சம்பவம் நபி (ஸல்) அவர்களிடத்திலும் அவர்களுடைய தோழர்களிடத்திலும் காணப்பட்ட மனித நேயத்தை தெளிவாக எடுத்துரைக்கிறது. வறுமையால் பீடிக்கப்பட்ட அந்த மக்களைப் பார்த்த உடன் பெருமானாரின் முகம் மாறி அவர்கள் தவித்ததும் பொருட்கள் குவிந்த பின்பே அவர்களுடைய முகத்தில் மகிழ்ச்சி தென்பட்டது. அது அவர்களது அளவில்லா மனிதநேயத்தை வெளிப்படுத்தி நின்றது.

ஆகவே நபி (ஸல்) அவர்களை முன்மாதிரியாகக் கொண்டு மனித நேயத்தை வளர்த்துக் கொள்வோம். அதன் ஊடாக நபிகளாரின் ஸுன்னாவை உயிர்ப்பிப்போம்.

# சமூகநீதி: ஓர் இஸ்லாமிய நோக்கு

மனித உறவுகளை பல மிக்கதாகவும், உறுதியானதாகவும் அமைத்துக் கொள்ள இஸ்லாம் அடையாளப்படுத்தும் மிக பிரதான ஓர் அடிப்படை சமூக நீதியாகும். சமூகங்களுக்கிடையில் சமாதானம் மலர்ந்து, அமைதியும், மகிழ்ச்சியும் செழித்தோங்க வேண்டுமெனில் சமூகங்களுக்கிடையில் நீதி நிலைநாட்டப்பட வேண்டும் என்பது இஸ்லாத்தின் பலமான கட்டளை.

'நீதம்' என்ற இந்த உயரிய தெய்வீகப் பண்பு படைப்பினங்களுக்கு இடையில் பிரயோகப்படுத்துவதற்கான வரைவிலக்கணத்தை முன்வைப்பதில் அறிஞர்கள் பல்வேறு வகையான கருத்துக்களை கொண்டிருந்தாலும் அதிகமான அறிஞர்கள் பின்வரும் கருத்தையே வித்தியாசமான நடைகளில் முன்வைத்துள்ளார்கள். அதாவது நீதம் ஒவ்வொரு விவகாரத்திலும் எந்த இடத்தில், எந்த நேரத்தில், எந்த முறையில், எந்த அளவில், வீண் விரயம், பொடுபோக்கு, முற்படுத்தல், பிற்படுத்தல் என்பன முற்றாக தவிர்க்கப்பட்டு எவ்வாறு கையாளப்படவேண்டுமோ அவ்வாறு கையாள்வதற்கே நீதி எனப்படும். ***(ஆதாரம்: அல்ஜாஹிழ், தஹ்தீபுல் அஹ்லாக்)***

எனவே நீதி என்பது மனித வாழ்வின் அனைத்துத் துறைகளிலும் பின்னிப்பிணைந்து இருக்கக்கூடிய ஒரு அம்சம் என்பதை மேற்குறிப்பிடப்பட்ட வரைவிலக்கணத்தின் மூலம் புரிந்து கொள்ளலாம். மனித வாழ்வின் ஒவ்வொரு பகுதியும் சமநிலையோடும், அமைதியோடும் பயணிப்பதற்கான அச்சாணியாகவே இது பார்க்கப்படுகிறது. இது மாத்திரமன்றி மனிதனது ஒவ்வொரு செயற்பாடும் இறை திருப்தியை பெற்றதாகவும், இறை விசுவாசத்திற்கு உட்பட்டதாகவும் மாறுவதற்கும் அங்கு நீதம் கடைப்பிடிக்கப்பட வேண்டும் என்பதாக அல்லாஹ் எமக்கு பணிக்கிறான்.

நீதியை நிலைநாட்டுவதில் எவ்வித பாரபட்சமோ, பாகுபாடோ காட்டப்படக்கூடாது. அது அல்லாஹ்வுடைய திருப்தியை மட்டும் நாடியே நிலைநிறுத்தப்பட வேண்டும் என்பதும் தனிப்பட்ட விருப்பு வெறுப்புகளுக்கு எவ்வித முன்னுரிமையும் கொடுக்கக்கூடாது என்பதும் அல்குர்ஆன் எமக்கு விடுக்கின்ற கட்டளையாகும்.

அல்லாஹுத்தஆலா மனித குலத்தின் மாண்புமிகு மகுடமாக நீதியை ஆக்கி வைத்துள்ளான் என்பதும், அது மானுடப்படைப்பினங்கள் அனைத்திலும் சமநிலையோடு கையாளப்பட வேண்டும் என்பதையும் தெளிவு படுத்துகின்றான். நீதியை நிலைநாட்டுவதில் இனம், மதம், மொழி, சொந்தம், பந்தம் என்று எதுவுமே கருத்தில் கொள்ளப் படாமல் நீதத்தின் பிறப்பிடமாகிய அந்த அல்லாஹ்வை முன்னிறுத்தியே செயல்பட வேண்டும் என்பதை எமக்கு வலியுறுத்துகிறான். (ஆதாரம்: தப்ஸீர் அல்குர்துபி)

இஸ்லாத்தின் உயர்ந்த பெறுமானங்களையும் அதன் அழகையும் ஒருவர் மொத்தமாக புரிந்து கொள்வதற்கு அதன் நீதிக்கோட்பாட்டையும் முக்கியத்துவத்தையும் அறிந்து கொள்வதே போதுமானதாகும். யாராக இருந்தாலும் நீதம் பேணப்பட வேண்டும் என்பதே இஸ்லாத்தின் பலமான நிலைப்பாடு. இதன் காரணமாகத்தான் பல்வேறு சந்தர்ப்பங்களிலும் நெகிழ்வுத் தன்மையுடனும், விட்டுக்கொடுப்புடனும், வன்மமற்ற போக்குடனும் நடந்து கொண்ட நபி (ஸல்) அவர்கள் உரியவருக்கு உரிய நீதியை பெற்றுக்கொடுக்க வேண்டுமென்ற விடயத்தில் மிக உறுதியாகவும், காத்திரமாகவும் செயல்பட்டார்கள். இதற்கு பல நிகழ்வுகள் சான்றாகும்.

எந்த சமூகம் நீதிக்குப் புறம்பாக செயல்படுமோ அது அழிவின் பாதையில் சென்று கொண்டிருக்கிறது என்பதை நபி (ஸல்) அவர்கள் தெளிவுபடுத்தியுள்ளார்கள். அவ்வாறே மனிதர்களுக்கிடையில் ஏற்றத்தாழ்வோடும் குல, கோத்திர வேறுபாடுகளோடும் அநீதியின் வழியில் செயல்படுபவர்களின் வாழ்வும் நிம்மதி இழந்து அமைதி அற்றதாக மாறிவிடும் என்பதை சுட்டிக் காட்டியுள்ளார்கள். ஒரு தேசத்தின் நிலைபேறான வெற்றிக்கான ஆணிவேராக நீதியை நிலைநாட்டுதல் எனும் உயரிய கருத்தாடலே கருதப்படுகின்றது என்பதை மிகத் தெளிவாக விளக்கியுள்ளார்கள்.

இஸ்லாத்தின் சமூக நீதி மற்றும் மனித உரிமைகள் குறிப்பாக, பிற சமயத்தவர்களின் உரிமைகளையும் பாதுகாக்கும் பொருட்டு ஏற்படுத்தப்பட்ட மிகச்சிறந்த செயற்திட்டமாகவே மதீனா சாசனம் விளங்குகிறது. மனித உரிமைகள் பற்றி கொள்கை வகுப்பதிலும் செயல்படுத்துவதிலும் நபி (ஸல்) அவர்களால் மேற்கொள்ளப்பட்ட இச்சாசனமே முதன்மையானது. இவை வெறும் சித்தாந்தங்களாகவோ, வாய்வார்த்தைகளாகவோ நின்று விடாமல், முஸ்லிம்களின் ஆட்சி உலகில் நிலவிய காலமெல்லாம் மிகச்சிறப்பாகச் செயல்படுத்தப்பட்டன என்பதற்கு வரலாறு சான்றாக உள்ளது.

நபி (ஸல்) அவர்கள் முஹாஜிர்களுக்கும் அன்சாரிகளுக்குமிடையே சகோதரத்துவப் பிணைப்பை ஏற்படுத்தவும், முஸ்லிம்களுக்கும் முஸ்லிமல்லாதவர்களுக்குமிடையில் பரஸ்பர ஒத்துழைப்பை ஏற்படுத்தவும் எழுதிய சாசனம் பல்வேறு விடயங்களுக்கு ஆதாரமாக இருக்கின்றது. அதாவது இஸ்லாமிய சமூகக் கட்டமைப்பு சமூக நீதியை அடிப்படையாகக் கொண்டே அமைந்திருக்கும். இதற்கு அவர்களது வரலாறு சான்றாகும். தீவிர இஸ்லாமிய விமர்சகரான தோமஸ் ஆர்னோல்ட் என்பவரது பின்வரும் கூற்று அவதானத்திற்குரியது.

அபூ உபைதா (ரலி) அவர்கள் தலைமையில் இஸ்லாமியப் படை ஷாம் தேசத்தின் ஜோர்தான் சமவெளியில் உள்ள பஹ்ல் என்ற இடத்தில் தங்கியிருந்த போது, அப்பிரதேசத்தில் வாழ்ந்த கிறிஸ்தவர்கள் அரேபியர்களை விழித்து பின்வருமாறு ஒரு கடிதம் எழுதினார்கள்.

'முஸ்லிம்களே! பைஸாந்தியர்களை விட உங்களையே விரும்புகின்றோம். அவர்கள் எமது மதத்தை சேர்ந்தோராக இருப்பினும் சரியே. காரணம் நீங்கள் எங்களுடன் விசுவாசமாக நடந்து கொள்கிறீர்கள். எம்மோடு நீங்கள் இரக்கமாக இருக்கின்றீர்கள். எமக்கு அநீதி இழைப்பதிலிருந்து தவிர்ந்து கொள்கிறீர்கள். எங்கள் மீதான ரோமர்களது ஆட்சியை விட உங்களது ஆட்சி மிகச் சிறந்தது'. எவ்வளவு மகத்தான சாட்சியம் இது. இஸ்லாத்தின் நீதிக்கோட்பாட்டை தெளிவுபடுத்துவதற்கு இதைவிட வேறெதுவும் தேவையில்லை.

பொதுவாக கி.பி.1789 ஆம் ஆண்டு இடம்பெற்ற பிரான்சியப் புரட்சியின் அடிப்படையாக வகுக்கப்பட்ட கொள்கையைத் தொடர்ந்து மனித உரிமைகள் பற்றிய சிந்தனை முதல் தடவையாக உருப்பெற்றது என்றும், அதன் அடிப்படையாகவே 1948 இல் ஐக்கிய நாடுகள் சபையின் உலக மனித உரிமைகள் சாசனம் பிரகடனப்படுத்தப்பட்டது எனவும் கூறுவர். ஆயினும் மனித உரிமைகள் பற்றிய கொள்கைகளை வகுப்பதிலும் செயல்படுத்துவதிலும் இஸ்லாம் முன்னோடியாக அமைந்தது என்பதை வரலாற்றை காய்தல் உவத்தல் இன்றி நோக்குகின்ற எவரும் மறுக்க முடியாது. (ஆதாரம்: முஸ்லிமல்லாதவர்களின் உரிமைகள்)

சமூகநீதியென்பது தனி நபருக்கும் சமூகத்திற்குமிடையே உள்ள சமமான, நியாயமான உறவை குறிக்கின்றது. தேவைகளை நிறைவு செய்து, பாகுபாடற்ற நீதியையும் நியாயத்தையும் நிலைநிறுத்துவது தான். சமூகப் பெயர்ச்சிக்கான தடைகளை உடைத்து, சமூகப் பாதுகாப்பை உண்டாக்கி, பொருளாதார ஏற்றத்தாழ்வுகளை களைவதாகும். இதிலிருந்து சமூகநீதியென்பது சமூகங்களுக்கிடையில் சாந்தமான உறவை கட்டியெழுப்புவதற்கான பிரதான அம்சம் என்பதை யாரும் மறக்க முடியாது.

கலாநிதி அல்ஹாபிழ்,
எம்.ஐ.எம். சித்தீக் (அல்ஈன்ஆமி)
B.A.Hons, (Al Azhar university, Egypt)
M.A.& PhD
(International Islamic university, Malaysia)



# புலமைக் கதிர்

## தரம்–5 வகுப்பு மாணவர்களுக்கான




திருமதி.பத்மா சந்திரமோகன்
புனித அந்தோனியார் கல்லூரி
கொழும்பு - 13

## புலமைப் பரிசில் பரீட்சை மாதிரி வினாத்தாள் – I

1 மணித்தியாலம்

**எல்லா வினாக்களுக்கும் விடையளிக்குக.**
**சரியான விடையின் கீழ்க் கோடிடுக.**

1. 


i. 28 ii. 39 iii. 22

2. 
கடதாசி ஒன்றினை இவ்வாறு நான்காக மடித்து வெட்டிய பின் பெறப்படும் உருவானது

i.  ii.  iii. 

3. **வ** இந்த எழுத்தை முகம் பார்க்கும் கண்ணாடியில் பார்க்கும் போது தோன்றும் விம்பத்தை காட்டும் சரியான விடையை தெரிக.

i. **வ** ii. **ഖ** iii. **ந**

4. அதிக செங்கோணங்களைக் கொண்ட உரு எது?

i.  ii.  iii. 

5. 64 இன் அரைவாசியின் அரைவாசி எவ்வளவு?
i. 32 ii. 42 iii. 16

6. 2021ம் ஆண்டு மார்ச் மாதம் முதலாம் திகதி புதன்கிழமை எனில் அம்மாதத்தின் இறுதி நாள் என்ன கிழமை?
i. புதன்கிழமை ii. வியாழக்கிழமை iii. வெள்ளிக்கிழமை

7. நாம் எமது நாட்டுக்கு செய்ய வேண்டிய செயல் அல்லாதது.
i. எமது நாட்டு மரபுரிமையை பாதுகாத்தல்
ii. நாட்டின் சட்ட திட்டங்களை மதித்தல்
iii. எமது மதத்தை மட்டும் மதித்தல்

8. டியோனா முதலாம் படியிலும் கார்த்திகா ஐந்தாம் படியிலும் நிற்கின்றனர். டியோனா ஒரு படி ஏறும் போது கார்த்திகா ஒரு படி இறங்குவாளாயின் இருவரும் எத்தினையாவது படியில் சந்தித்து கொள்வார்கள்?
i. மூன்றாவது ii. இரண்டாவது iii. நான்காவது

9. ஒரு கம்பியானது மூன்று சம பகுதிகளாக வெட்டப்பட்ட பின்பு அதில் ஒருபகுதி மீண்டும் நான்கு சம பகுதியாக வெட்டப்பட்டது. அவ்வாறு வெட்டப்பட்ட ஒரு பகுதியின் நீளம் 5 cm எனில் கம்பியின் மொத்த நீளம் யாது?
i. 40 cm ii. 50 cm iii.60 cm

10. 81, 9, 64, 8, …….., ……… எண்கோலத்தினை பூரணப்படுத்தினால் வரவேண்டிய எண்கள்?
i. 49, 7 ii. 7, 49 iii. 48, 12

11. 4 மனிதர்கள் 8 நாட்களில் செய்யும் வேலையின் அரைவாசியை 2 மனிதர்கள் எத்தனை நாட்களில் செய்து முடிப்பார்கள்
i. 6 நாட்களில் ii. 8 நாட்களில் iii. 10 நாட்களில்

12. 
இதனைக் கொண்டு ஒரு சதுரமுகி அமைத்தால் கிடைக்கும் சரியான சதுரமுகியின் பக்கங்களைக் கொண்ட உரு எது?

i.  ii.  iii. 

13. தூரம், முடிவு, பூர்த்தி, அந்தம் இவற்றுள் வித்தியாசமான சொல் எது?
i. தூரம் ii. முடிவு iii. அந்தம்

14. கமலனின் வயது 14. நிமலன் கமலனிலும் பார்க்க 6 வயது மூத்தவன். விமலன் நிமலனிலும் பார்க்க 2 வயது இளையவன். எனவே விமலனின் வயது என்ன?
i. 22 ii. 20 iii. 18

15. ஒரு போத்தலிலுள்ள நீரின் அளவு 700 ml எனில். அதுபோல 9 போத்தல்களிலுள்ள நீரின் அளவு யாது?
i. 6 *l* 300 ml ii. 6300 *l* iii. 63 *l*

16. நியம நேரத்தைக் காட்டும் கடிகார முகம் ஒன்றிலே [11 : 49] எனக் காட்டப்படுகிறது. இன்னும் 15 நிமிடங்களின் பின்னர் இக்கடிகாரம் காட்டும் நேரம் என்ன?
i. [11 : 59] ii. [12 : 04] iii. [00 : 04]

17. உட்பக்கம் தெரியாத பெட்டி ஒன்றில் 6 பச்சைநிறப் பந்துகளும் 7 சிவப்பு நிறப் பந்துகளும் உள்ளன. பச்சை நிறப்பந்தொன்றினை பார்க்காமல் எடுக்க ஆகக்குறைந்தது எத்தனை தடவைகள் பந்துகளை வெளியே எடுக்க வேண்டும்?
i. ஆறாவது தடவை ii. ஏழாவது தடவை iii. எட்டாவது தடவை

18. ஒரு புகையிரதம் 47km தூரத்திலிருந்து 51 km தூரம் வரை பயணிப்பதற்கு 20 நிமிடங்கள் எடுத்தது. புகையிரதம் அதே வேகத்தில் செல்லுமாயின் இன்னும் 10 km தூரம் செல்ல எவ்வளவு நேரம் எடுக்கும்?
i. 50 நிமிடங்கள் ii. 40 நிமிடங்கள் iii. 60 நிமிடங்கள்

19. டிலக்ஷன் நின்ற வரிசையில் அவனுக்கு முன்னால் 7 பேர் நின்றனர். வரிசையின் கடைசியில் நின்றவர் முதலாவது நபராகி வரும் வகையில் அனைவரும் மறுபக்கத்திற்கு திரும்பினர் இப்போது டிலக்ஷனின் முன்னால் ஐந்து பேர் நின்றனர் எனில் அவ்வரிசையில் மொத்தம் எத்தனை பேர் நின்றனர்?
i. 12 பேர் ii. 13 பேர் iii. 11 பேர்

20. சதுரங்களுக்கு கோணங்கள் இருக்கும் இந்த உருவிற்கு கோணங்கள் இல்லை எனவே,
i. இது ஒரு சதுரமல்ல ii. இது ஒரு வட்டம்
iii. உறுதியாக கூறமுடியாது

**கீழேயுள்ள தகவலை அடிப்படையாகக் கொண்டு 21, 22, 23ம் வினாக்களுக்கு விடையளிக்குக.**




21. செவ்வகத்திற்கு மட்டும் உரிய இலக்கங்கள் எவை?
i. 1, 4, 7, 8 ii. 1, 6, 7, 8, 4 iii. 1, 2, 3, 4, 5, 6, 7, 8

22. செவ்வகத்திலுள்ள இலக்கங்களின் கூட்டுத்தொகை யாது?
i. 20 ii. 36 iii. 40

23. முக்கோணத்திற்கு மட்டும் உரிய இலக்கங்கள் எவை?
i. 2 ii. 2, 3, 5, 6 iii. எதுவும் இல்லை

24. அபி காலையில் நடந்து செல்லும் போது அவனது நிழல் அவனது பின்பக்கமாக நீண்டு நிலத்தில் தெரிந்தது. எனவே அவனின் வலது பக்கத்திலுள்ள திசை எது?
i. வடக்கு ii. தெற்கு iii. கிழக்கு

25. அப்பா பண்டிகைக்கு சிவப்பு, மஞ்சள், நீலம், பச்சை ஆகிய நிறங்களில் ஆடைகள் வாங்கி வந்தார். நான் மஞ்சள், சிவப்பு, பச்சை ஆகிய நிற ஆடைகளை எடுத்துக் கொண்டேன். தங்கை பச்சை, சிவப்பு நீல ஆடைகளையும் அக்கா பச்சை, சிவப்பு, மஞ்சள் ஆடைகளையும் எடுத்தாள். எனில் தங்கை மட்டும் தேர்ந்தெடுத்த நிறம் எது?
i. சிவப்பு ii. நீலம் iii. பச்சை

26. 4 சிறு பிள்ளைகளுக்கும் 3 முதியோர்களுக்கும் வழங்க ஒரு லீற்றர் பால் தேவைப்பட்டது எனில் 20 பிள்ளைகளுக்கும் 15 முதியோர்களுக்கும் வழங்க எத்தனை லீற்றர் பால் தேவைப்படும்?
i. 5 *l* பால் ii. 12 *l* பால் iii. 15 *l* பால்

27. 


i. 40 ii. 48 iii. 37

28. 2 ✷ 3 = 3 ▲ 3
மேலே இரண்டு பக்கங்களிலும் உள்ள இலக்கங்கள் சமனாக வேண்டுமாயின் ✷ , ▲ குறியீடுகள் காட்டும் கணித அடையாளங்கள் முறையே
i. +, X ii. X, + iii. X, X

29. மீனவனுக்கு வலை எனில் உழவனுக்கு
i. கலப்பை ii. வயல் iii. நெல்

30. கீழே தரப்பட்டுள்ள சொற்களில் வலமிருந்த இடமாகவோ இடமிருந்து வலமாகவோ வாசித்தாலும் ஒரே மாதிரியாக இருக்கும் சொல் அல்லாதது
i. விகடகவி ii. தாத்தா iii. மகாத்மா

31. இரண்டு உருளைகளை ஒன்றோடொன்று படத்தில் காட்டியுள்ளவாறு பொருத்திய பின்பு கிடைக்கும் உருவில் உள்ள விளிம்புகளின் எண்ணிக்கை யாது?



i. 2 ii. 4 iii. 8

32. 
இவ்வுருவில் நிழற்றப்பட்ட பகுதி முழு உருவின் என்ன பங்காகும்?
i. 3/8 ii. 5/8 iii. 4/8

33. 10690 இவ்வெண்ணில் நூறினிடத்து இலக்கத்தின் பெறுமானம் எவ்வளவு?
i. அறுநூறு ii. நூறு iii. தொண்ணூறு

34. ஐந்நூற்று நாற்பதுடன் நூற்று எண்பதினை கூட்டி அதில் எழுநூற்று இருபதினை கழித்தால் பெறப்படும் விடையானது
i. நூறு ii. பத்து iii. பூஜ்ஜியம்

35. 306 cm இதனை m, cm ல் எழுதினால்
i. 30m 6 cm ii. 3m 6 cm iii. 3m 60 cm

36. ஒரு கடிகாரத்தின் விலை ரூபாய் 500.00 ஐந்து கடிகாரங்கள் வாங்கினால் ஒன்று ரூ. 10.00 விலை குறைவு தருவதாக வியாபாரி கூறினார். நவிக்சன் 20 கடிகாரங்கள் வாங்கினான். அவன் செலுத்திய பணம் எவ்வளவு?
i. ரூபாய் 9800.00 ii. ரூபாய் 9500.00 iii. ரூபாய் 9300.00

(10ஆம் பக்கம் பார்க்க)

09 ஆம் பக்கத் தொடர்

## புலமைப் பரிசில் பரீட்சை மாதிரி வினாத்தாள் – I

37. சார்த்திக் தன்னிடமுள்ள பணத்தின் ½ பங்கினை புத்தகங்கள் வாங்க செலவிட்டான். மீதிப் பணத்தில் அரைவாசியில் காய்கறிகள் வாங்கினான். மிகுதியாக இருந்த பணத்தில் 2/3 பங்கினை தங்கைக்கு கொடுத்தான். இப்போது அவனிடம் இருந்த பணம் ரூபாய். 50.00 எனில் அவனிடமிருந்த முழுத்தொகை எவ்வளவு?

i. ரூபாய் 500.00 ii. ரூபாய் 400.00 iii. ரூபாய் 600.00

38.




i. 12 ii. 15 iii. 18

39.
5 ——— 30
4 ——— 20
6 ——— ?

i. 42 ii. 45 iii. 40

40.




சதுரவடிவான காணியொன்றில் போடப்பட்ட பாத்தி உருவில் காட்டப்பட்டுள்ளது. சதுரத்தின் ஒரு பக்க நீளம் 8m எனில் பாத்தியின் நீளம் யாது?

i. 8m ii. 16m iii. 12m

## வினாத்தாள் ii இற்கான விடைகள் (23.09.2022)

I. 1) கட்புல, செவிப்புல
2) உலக விடயங்களை அறிதல்/ கல்விக்கு உதவுதல் / சிறந்த பொழுது போக்கு
3) உலகம், வீடு
4) கணினி
5) அநேகமாக
6) (i) பூமி (ii) உபகாரம்

II. 7) கன்று
8) கூட்டம்
9) உலவுதல்
10) மறம்

III. 11) மிக மகிழ்தல்
12) தீர்ப்பு
13) (i) சென்றனர் (ii) பட்டது (iii) பறந்தன
14) (i) பொன்னல்ல (ii) நூறிலும் சாவு

IV. 15) நாங்கள்
16) விளையாடின
17) சிறுவர்கள்

V. 18) வெற்றிலை
19) புகையிலை

VI. 20) (i) Clock (ii) Rainbow (iii) தயவுசெய்து அமருங்கள்
21) (i) எலவலு (ii) பரிகனக (iii) வதுர

VII. 22) (i) கஸான் (ii) ஒரு தடவை (iii) ஒரு தடவை
23) 75430
24) (i) 34 (ii) வடக்கு, தெற்கு, கிழக்கு, மேற்கு
25) 20 தேங்காய்கள்
26) 3053
27) ரூபாய் 240.00
28) பத்தாயிரத்து எண்ணூற்று முப்பது
29) 24 Cm
30) 3
31) 1
32) 3
33) 1
34) 2
35) 1
36) 2
37) 2
38) 3
39) 3
40) 1
41) 2
42) 2
43) 3
44) 1
45) 3
46) 2
47) 1
48) 2
49) 3
50) 2
51) 2
52) 3
53) 2
54) 3
55) 3
56) 1
57) 2
58) 1
59) 1

# பேசாலை 'சங்கவி' திரையரங்கில் இன்றுமுதல் 'பொன்னியின் செல்வன்'

## கலாவிபூஷணன் மகுடம் சூட்டி கலைஞர்களை கௌரவித்து வரும் ஒரு கலைஞனின் திரையரங்கு



உலகில் நீண்டகால வரலாற்றைக் கொண்ட திரைப்படத்துறையானது, நவீன சாதனங்களின் வருகையுடனும் கொரோனாவுடனும் முடங்கியது. இந்த முடக்கத்தின் பயனாக கலைத்துறையும் திரைப்படத்துறையும் இன்றுவரை மீண்டும் பழைய நிலைக்கு வரவில்லை.

இதன் விளைவாக திரைப்படத்துறையை நம்பி தொழிலாற்றி வந்தவர்கள் பாதிக்கப்பட்டனர். அவர்களது வருமானத்திலும் பெரும் வீழ்ச்சி ஏற்பட்டது. திரைப்படங்கள் திரையிடப்பட்ட சினிமா தியேட்டர்களை மூட வேண்டிய நிலை ஏற்பட்டது.

இவ்வாறானதொரு பொருளாதார வீழ்ச்சியிலிருந்து திரைப்படத்துறையை மீட்டெடுக்க நீண்டகாலம் எடுக்கக்கூடும் என எல்லோரும் எண்ணிக் கொண்டிருக்கும் நிலையில், எந்தவொரு சவாலுக்கும் முகம்கொடுக்க தயார் என்ற வகையில் தமிழர்கள் செறிந்து வாழும் மன்னார், பேசாலையில் 'சங்கவி' என்ற பெயரில் தியேட்டர் ஒன்றை அமைத்து அதில் பாரிய செலவில் பெரிய பட்ஜட்டில் தயாரிக்கப்பட்ட திரைப்படங்களை திரையிடுவதில் இன்று முன்னணியில் இருக்கிறார் மன்னார், பேசாலையில் உள்ள 'சங்கவி' தியேட்டரின் உரிமையாளர் துரைராசா சுரேஷ்.



சினிமாவின் மீது கொண்ட மோகத்தால் ஆரம்பத்தில் 'சங்கவி' என்ற பெயரில் திரைப்பட நிறுவமொன்றை நிறுவி திரைப்படத் தயாரிப்பில் ஈடுபட்ட இவர், அவ்வப்போது இசை நிகழ்வுகளையும் கலை நிகழ்வுகளையும் நடத்தி கலைஞர்களையும் சமூக சேவையாளர்களையும் கௌரவித்து வந்தார்.

கலைஞர்களுக்கும் சமூக சேவையாளர்களுக்கும் விருதுகள் வழங்கி கௌரவித்து வந்த இவர், இந்த விருதுகளை ஒரே பெயரின் கீழ் வழங்கத் திட்டமிட்டு அந்த விருதுக்கு 'கலாவிபூஷணன்' என பெயரும் இட்டார். இந்த விருது வழங்கும் விழாவை கொழும்பு பண்டாரநாயக்க சர்தேச மாநாட்டு மண்டபத்தில் நடத்த திட்டமிட்டு இதற்கான விண்ணப்பங்கள் கோரப்பட்டபோது கொழும்பை விட யாழ்ப்பாணத்தில் இருந்து அதிக விண்ணப்பங்கள் வந்து குவிந்ததால் முதலில் இந்த விழாவை யாழ்ப்பாணத்தில் நடத்த எண்ணி முதலாவது கலாவிபூஷணன் விருது வழங்கும் விழாவை யாழ்ப்பாணம் கோண்டாவிலில் நடத்தினார்.

அதன் பின்னர் இந்த விழாவை ஒவ்வொரு மாவட்டத்திலும் நடத்த திட்டமிட்டனர். அதற்கமைய அடுத்த விழாவை மட்டக்களப்பில் நடத்த திட்டமிட்டபோதிலும், கொரோனாவால் அங்கு விழாவை நடத்த முடியாது போனதால் விண்ணப்பித்த ஏனைய கலைஞர்கள் அனைவரையும் கொழும்பு பண்டாரநாயக்க சர்தேச மாநாட்டு மண்டபத்திற்கு அழைத்து கலாவிபூஷணன் விருது வழங்கி கௌரவித்தார்.

புலம்பெயர்ந்த தமிழ்க் கலைஞர்களையும் கௌரவப்படுத்த நினைத்த அவர், கனடாவில் வசித்த புலம்பெயர்ந்த தமிழ்க் கலைஞர் குணா தயாரித்த 'கயிறு' என்ற திரைப்படத்தை இலங்கையில் திரையிட நடவடிக்கை எடுத்து அதனை நாட்டில் உள்ள தியேட்டர்கள் பலவற்றில் திரையிட்டார். இந்தத் திரைப்படத்தை திரையிட தியேட்டர் தேடி அலைந்தபோது, எதிர்நோக்கிய சவால்களை அடிப்படையாகக் கொண்டு தியேட்டர் ஒன்றை அமைக்க திட்டமிட்டு மன்னார் பேசாலையில் 'சங்கவி' என்ற பெயரில் தியேட்டரை அமைத்து திறந்து வைத்தார்.

தினகரன், தினகரன் வாரமஞ்சரி பத்திரிகைகளின் பிரதம ஆசிரியர் தெ. செந்தில்வேலவர் தலைமையில் இதன் திறப்புவிழா அண்மையில் நடைபெற்றது.

இந்தத் திரையரங்கம் திறந்துவைக்கப்பட்ட பின்னர் திரையிடப்படுகின்ற பெரிய பட்ஜட் செலவில் தயாரிக்கப்பட்ட முதலாவது திரைப்படம் 'பொன்னியின் செல்வன்' திரைப்படமாகும்.

# சிறுவர் உரிமைகளை மேம்படுத்துவது பெரியோர்களின் தலையாய கடமை

## சர்வதேச சிறுவர் தினம் நாளை

எல்லா உரிமைகளும் சிறுவர்களுக்கு உள்ளன. அதாவது வயது, பால், ஆற்றல், நிறம், இனம், மொழி அல்லது சமயம் என்பவற்றுக்கு அப்பாற்பட்டவர்கள் சிறுவர்கள்.

சிறுவர் உள்ளத்தில் பாகுபாடு புகுத்தக் கூடாது. ஆரோக்கியம், கல்வி அல்லது மேம்பாடு ஆகியன வளர்க்கப்பட வேண்டும். அப்போதுதான் சிறுவர் உலகம் விழிப்படையும். சிறுவர் துஷ்பிரயோகம் என்ற வார்த்தையும் மாறும்.

சிறுவர்கள் மதிப்புக்குரியவர்கள் என்பதை ஏற்றுக்கொண்டு அவர்களுக்குரிய நன்மைகள் அவர்களுக்குரிய பாதுகாப்பு ஆகியவற்றை வரைமுறைப்படுத்த வேண்டும். இவ்வாறு செய்யாது போனால் சிறுவர்கள் பாதிக்கப்படுவர்.

சிறுவர்களின் உள்ளம் மென்மையானது, பூவைப்போன்றது ஆனால் காந்த சக்தி மிக்கது. அதனால்தான் 'குழந்தையும் தெய்வமும் குணத்தால் ஒன்று' என்றனர் பெரியோர்.

சிறுவர்களுக்கு போதிய கல்வியின்மையினால்தான் சீரழிவுகள், சச்சரவுகள் ஏற்படுகின்றன. சீரான வாழ்க்கையை இழந்து சிறையிலே வாடுகின்றனர். இந்த நிலை நீக்கப்பட வேண்டும் என்பது இன்றைய சிறவர் சமூகத்திற்கு தேவையானதொன்றாகும்.

இராமாயணத்தில் லவகுசன் என்ற சிறுவனும், அரிச்சத்திரபுராணத்தில் தேவதாசன் என்ற சிறுவனும் கல்வியில் சிறந்து விளங்கியதனாலே கெட்ட நடத்தைக்கோ பிறர் பரிகாரத்திற்கோ ஆளாகவில்லை. பெற்றோருக்கு, குருவுக்கு கட்டுப்பட்டு நடந்தார்கள். புலவர்கள் புகழ்ந்து பாடினார்கள். சிறுவர்களுக்கு வழிகாட்டும் பொறுப்பு பெற்றோர்களுக்கும் கல்வி போதிக்கும் ஆசிரியர்களுக்கும் உண்டு. பிள்ளைகள் தகுந்த வாழ்க்கைத்தரத்தைப் பெறுவதை முதலில் பெற்றோர் உறுதி செய்ய வேண்டும்.

தனது சொந்த கலாசாரத்தை அனுபவிக்கவும் தமது சொந்த மதம், மொழி ஆகியவற்றைப் பயிலவும் சகல சிறுவர்களுக்கும் உரிமையுண்டு. ஓய்ந்திருக்கவும் ஓடி விளையாடவும் உரிமையிருக்கின்ற அதே நேரம் கெட்ட செயல்களில், வேண்டப்படாத விடயங்களில் தலையிடுவதற்கு உரிமையில்லை.

சிறுவர்கள் உரிமைகள் பற்றி ஐக்கிய நாடுகள் சபையின் சமவாயம் 1989ஆம் ஆண்டில் ஐக்கிய நாடுகள் பொதுச் சபையினால் ஏற்றுக் கொள்ளப்பட்டது. 1991 ஆம் ஆண்டில் இலங்கை அரசு அதனை உறுதி செய்திருந்தது. இந்த சமாவாயம் சிறுவர்கள் சிறப்பானவர்கள், மதிப்புக்குரியவர்கள் என்பதை ஏற்றுக்கொண்டு அவர்களுக்குரிய நன்மைகள், அவர்கள் பெற வேண்டிய பாதுகாப்பு ஆகியவற்றை வரைமுறைப்படுத்துகின்றது.

சிறுவர் பாதுகாப்பு ஒன்றியம் பிள்ளைகளுக்கான உலகின் மிகப்பெரிய சுயாதீன இயக்கமாகும். உலகெங்கும் 100க்கும் அதிகமான நாடுகளில் அது இயங்கி வருகின்றது. இலங்கையில் சுமார் மூன்று தசாப்த காலமாக நாடெங்குமுள்ள மக்களுடனும் சிறுவர், சிறுமியருடனும் இணைந்து பிள்ளைகளுக்கு நன்மை பயக்கும் திட்டங்களைச் செயற்படுத்தியும் பிள்ளைகளின் உரிமைகளை நிதர்சனமாக்கும் பிரசார முயற்சியில் ஈடுபட்டு வருகின்றது.

ஐக்கிய நாடுகளின் முகவரகமாகிய ஐக்கிய நாடுகள் சிறுவர் நிதியம் யுனிசெப் பிள்ளைகளுக்கென்றே பிரத்தியோகமாகத் தன்னை அர்ப்பணித்துள்ள நிறுவனமாக மிளிர்கின்றது. இன் நிறுவனம் எல்லாப் பிள்ளைகளின் உரிமைகளையும் பேணிப்பாதுகாக்கும் பணியில் ஐக்கிய நாடுகள் அமைப்பின் ஏனைய முகவரகங்கள், அரசாங்கங்கள், அரசசார்பற்ற அமைப்புக்கள் பொதுமக்கள் ஆகியோருடன் இணைந்து செயலாற்றி வருகின்றது.

பிள்ளைகளின் உயிர்வாழ்தல், மேம்பாடு, பங்குகொள்ளல், பாதுகாப்பு போன்ற உரிமைகளை ஏற்றக்கொண்டு நடைமுறைப்படுத்தி வருகின்றது. இன்றைய சிறுவர்கள் நாளைய தலைவர்கள். எனவே அவர்களுடைய உரிமைகளை பாதுகாத்து மேம்படுத்துவதன் மூலம் எதிர்கால சவால்களுக்கு முகங்கொடுக்க கூடிய நற்பிரஜைகளை உருவாக்க முடியும் என்பது நிதர்சனமாகும்.

இலக்கிய வித்தகர்
நாராயணபிள்ளை நாகேந்திரன்...
(ஓய்வுநிலை அதிபர்) களுவாஞ்சிகுடி

# தடைகளைத் தாண்டி சாதனை படைத்த கல்முனை மாணவி அப்துல் சலீம் சைசூன்



கல்முனையைச் சேர்ந்த மாணவி சைசூன் தரம் 9 இல் கல்வி கற்றுக் கொண்டு இருக்கும் போது தனது கண்பார்வையினை முழுமையாக இழந்த நிலையில் அதனை ஒரு சவாலாக கொண்டு கல்முனை மஹ்மூத் மகளிர் கல்லூரியில் கலை வர்த்தக பிரிவில் கல்வி கற்று பின்னர் இலங்கை தென்கிழக்குப் பல்கலைக்கழகத்தின் கலை, கலாசாரபீடத்தின் ஆங்கில மொழித்துறையில் முதற்தரத்தில் சித்தியடைந்துள்ளார்.

மாணவி அப்துல் சலீம் சைசூன் தற்போது பொதுநலவாய நாடுகளுக்கான உதவித் தொகை பெற்று பிரித்தானியாவிலுள்ள நோட்டிங்ஹாம் பல்கலைக்கழகத்தில் பட்டப்பின் படிப்பைத் தொடர்வதற்காகச் செல்லவுள்ளார். இம்மாணவி, தான் கல்வி கற்ற காலத்தில் பல மாணவர்களுக்கு முன்னுதாரணமாக திகழ்ந்தார்.

சைசூன் சவால்களை முறியடிப்பதிலும் தன்னுடைய தூரநோக்கில் பயணிப்பத்திலும் உள்ள சவால்களை எதிர்கொள்வதிலும் பல தடைகளைத் தாண்டி தன்னுடைய சக்திக்கு அப்பாலும் சில விடயங்களை செய்து சாதிக்க முடியும் என்பதனை நிரூபித்துக் காட்டியவர்.

குறித்த மாணவியின் அபரிமிதமான முன்னேற்றத்தை கௌரவித்து இலங்கை தென்கிழக்கு பல்கலைக்கழகம் அண்மையில் நினைவுச்சின்னம் வழங்கிக் கௌரவித்ததும் குறிப்பிடத்தக்கது.

அஷ்ரப் கான்...
(கல்முனை மத்திய தினகரன் நிருபர்)

# கிழக்கு பல்கலைக்கழகத்தின் பட்டமளிப்பு விழா நாளை

கிழக்குப் பல்கலைக்கழகத்தின் 26ஆவது பொதுப் பட்டமளிப்பு விழா நாளை 1ஆம் திகதியும் மறுநாள் 2 ஆம் திகதியும் நடைபெறவுள்ளதாக உபவேந்தர் பேராசிரியர் வல்லிபுரம் கனகசிங்கம் தெரிவித்தார்.

கிழக்குப் பல்கலைக்கழகத்தின் வந்தாறுமூலை வளாகத்தில் நடைபெற்ற ஊடக சந்திப்பின் போதே, அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

கிழக்குப் பல்கலைக்கழகம் ஆரம்பிக்கப்பட்டு 42 வது ஆண்டை நினைவுகூரும் முகமாக

பிரகடனப்படுத்தப்பட்ட பல்கலைக்கழக வாரமான ஒக்டோபர் 1 ஆம் திகதி முதல் 7 ஆம் திகதி வரையான காலப்பகுதியில் இடம்பெறும் முதலாவது நிகழ்வாக பல்கலைக்கழக பொதுப் பட்டமளிப்பு விழா இடம் பெறவுள்ளது.




பொதுப்பட்டமளிப்பு விழாவில் 2506 உள்வாரி, வெளிவாரி பட்டதாரி மாணவர்களுக்கும், பட்டப்பின் தகைமை மாணவர்களுக்கும் பட்டம் வழங்கப்படும். கிழக்குப் பல்கலைக்கழக நல்லையா கேட்போர் கூட மண்டபத்தில் விழா இடம் பெறவுள்ளது. இப்பட்டமளிப்பு நிகழ்வானது இவ் வருடத்தில் நடைபெறும் இரண்டாவது பட்டமளிப்பு நிகழ்வாகவும் கிழக்குப் பல்கலைக்கழகத்திற்கு புதிதாக நியமிக்கப்பட்ட வேந்தர் ஓய்வு நிலைப் பேராசிரியர் மாநாகப்போடி செல்வராஜா தலைமை வகித்து பட்டங்கள் வழங்கிக் கௌரவிக்கும் முதலாவது நிகழ்வாகவும் அமைகின்றது.

பிரதம விருந்தினர்களாக இலங்கைக்கான இந்திய உயர் ஸ்தானிகர் ஸ்ரீ கோபால் பாக்லே அவர்களும் தமிழ்நாடு ஆசிரியர் கல்வியியல் பல்கலைக்கழக துணைவேந்தர் பேராசிரியர் ந.பஞ்சநாதம் அவர்களும் கலந்து கொண்டு சிறப்பு உரையாற்றவுள்ளார்கள். இம்முறை நடைபெறவிருக்கும் பட்டமளிப்பு நிகழ்வானது கடந்த வருடங்களுடன் ஒப்பிடுகையில், அதிக மாணவர்களுக்கான பொதுப்பட்டமளிப்பு நிகழ்வாகும். அத்துட ன் முதன் முறையாக கிழக்குப் பல்கலைக்கழக தொழில்நுட்பம் மற்றும் முயற்சியாண்மையில் உயிர்முறைமைகள் தொழில்நுட்ப கௌரவ இளமாணி பட்டம் வழங்கப்படவிருப்பதும் சிறப்பம்சமாகும்.

இந்நிகழ்வில் கலாநிதிப்பட்டம் (PhD), முதுதத்துவமாணி (MPhil), விவசாய விஞ்ஞான முதுமாணி MSc(Agric.), முதுகலைமாணி (MA), முதுகல்விமாணி(MEd), வணிக நிர்வாகத்தில் முதுமாணி (MBA), அபிவிருத்திப் பொருளியலில் முதுமாணி (MDE), முகாமைத்துவ பட்டப்பின் டிப்புளோமா ஆகிய 123 பட்டப்பின் தகமைகளுக்கான பட்டங்களும், 263 இளமாணிப் பட்டங்களும் முதலாம் நாள் முதலாவது அமர்வில் வழங்கப்படவுள்ளன.

ஏனைய இளமாணிப் பட்டங்களுக்காக 2வது அமர்வில் 313 பட்டதாரி மாணவர்களும், 3 ஆவது அமர்வில் 548 பட்டதாரி மாணவர்களும், இரண்டாம் நாள் நிகழ்வில் முதலாவது அமர்வில் 396 பட்டதாரி மாணவர்களும், 2 ஆவது அமர்வில் 549 பட்டதாரி மாணவர்களும், 3 ஆவது அமர்வில் 314 பட்டதாரி மாணவர்களும் பட்டமளித்து கௌரவிக்கப்படவுள்ளனர்.

பட்டமளிப்பு நிகழ்வுகள் அனைத்தையும் பல்கலைக்கழக இணையத்தளத்தினூடாக (www.esn.ac.lk) நேரலையாக பார்வையிட முடியும் எனத் தெரிவித்தார்.

குறித்த ஊடக சந்திப்பில் கிழக்கு பல்கலைக்கழக பிரதி உபவேந்தர் பேராசிரியர் கலிஸ்ரஸ் எலியாஸ் கருணாகரன், பட்டமளிப்பு விழா 2021 இற்கான தவிசாளர் பொதுப் பேராசிரியர் மகேஸ்வரன் சிதம்பரேசன், பதிவாளர் அமரசிங்கம் பகீரதன், பிரதிப்பதிவாளர் திருமதி நிசாந்தினி நிருமிதன் ஆகியோர் கலந்து கொண்டனர்.

எஸ்.எஸ்.அமிர்தகழியான் ...

# மலைச்சாரல்









இந்திய அரசின் தொழில்நுட்ப பொருளாதார கூட்டுறவின் (ஐடெக் ) உதவியுடன் இந்தியா சென்று ஆளுமை விருத்தி பயிற்சி பெற்றவர்களுக்கான ஒன்றுகூடல் நிகழ்வு கண்டி இந்திய உதவித்தூதரக அனுசரனையுடன் மகாவலி ரீச் ஹோட்டலில் நடைபெற்றது. கல்வி அமைச்சின் இராஜாங்க அமைச்சர் அரவிந்த குமார் பிரதம விருந்தினராக கலந்து கொண்டதோடு, விளையாட்டு மற்றும் இளைஞர் விவகார அமைச்சின் இராஜாங்க அமைச்சர் ரோஹன திஸாநாயக்க, பேராதனைப் பல்கலைக்கழகத்தின் உபவேந்தர் பேராசிரியர் எம். டி. லமாவங்ச மற்றும் கண்டி மாநகர சபையின் மேயர் கேசர டி. சேனநாயக்க ஆகியோர் கௌரவ அதிதிகளாக கலந்து கொண்டனர். (படம்: கண்டி தினகரன் சுழற்சி நிருபர்)

## பேராதனை பல்கலை மாணவர்கள் ஐவருக்கு 2 வாரகால வகுப்பு தடை

கண்டி தினகரன் சுழற்சி நிருபர்)

பேராதனை பல்கலைக்கழக மாணவர்கள் ஐந்து பேருக்கு இரண்டு வாரம் ஒத்திவைக்கப்பட்ட இரண்டு வாரகால தடை உத்தரவும், இதற்கு எதிர்ப்பு தெரிவித்து ஆர்ப்பாட்டம் செய்த மாணவர் தலைவருக்கு காலம் குறிப்பிடப்படாத தடை உத்தரவும் விதிக்கப்பட்டுள்ளது.

யாழ் பல்கலைக்கழக ஒருங்கிணைந்த சுகாதார கற்கைநெறிப் பீடத்தைச் சேர்ந்த மாணவர்கள் 70 பேர் பேராதனைக்கு சுற்றுலா வந்ததோடு ஹந்தானை மலையையும், மகாவலி கங்கையையும் பார்வையிட்டு இரவு பேராதனைப் பல்கலைக்கழக ஒருங்கிணைக்கப்பட்ட சுகாதார பீட சிற்றுண்டிச்சாலையில் தங்கியுள்ளனர். இதுதொடர்பில் ஏற்கனவே பேராதனை மாணவர்கள் பீடாதிபதியிடம் முன் அனுமதி கேட்டபோது அனுமதி மறுக்கப்பட்டுள்ளது. எனினும் அதை மீறி தங்க வைக்கப்பட்டமையால் இதில் ஈடுபட்ட ஐந்து மாணவர்களை இரண்டுவாரம் ஒத்திவைக்கப்பட்ட இரண்டு வார பல்கலைக்கழக தடையுத்தரவு பீட ஒழுக்காற்று குழுவினால் வழங்கப்பட்டுள்ளது.

இதனை எதிர்த்து புதன்கிழமை இப்பீட மாணவர்கள் செனட் கட்டடத்திற்கு முன்பாக ஆர்ப்பாட்டம் செய்ததோடு உபவேந்தரை சந்திக்க நேரம் கோரியுள்ளனர். உபவேந்தர் மறுத்தமையால் மாணவர்கள் ஆர்ப்பாட்டத்தில் உபவேந்தருக்கு எதிராக தகாத வார்த்தைகளால் உரையாற்றியுள்ளனர்.

இதனால் இப்பீடத்தின் மாணவர் தலைவருக்கு காலம் குறிப்பிடப்படாத தடை உத்தரவும் விதிக்கப்பட்டுள்ளது. இதற்கு எதிராக அனைத்து பல்கலைக்கழக மாணவர் ஒன்றியம் நடவடிக்கை எடுக்கவுள்ளதாக அறிவித்துள்ளது.

## உணவு நெருக்கடியை குறைப்பதற்கு சகலரும் ஒத்துழைக்க வேண்டும்

### இராஜாங்க அமைச்சர் ரோகன திஸாநாயக்க



(அக்குறணை குறூப் நிருபர்)

உணவு நெருக்கடியை குறைப்பதற்கு சகலரும் ஒத்துழைக்க வேண்டும் என இராஜாங்க அமைச்சர் ரோகன திஸாநாயக்க தெரிவித்தார்.

மாத்தளை மாவட்ட செயலகத்தில் இடம்பெற்ற மாவட்ட அபிவிருத்திக் குழுக்கூட்டத்தில் கலந்துகொண்டு உரையாற்றும் போதே அவர் இதனைத் தெரிவித்தார். அவர் மேலும் தெரிவிக்கையில்,

சத்துணவுத் திட்டத்திற்குள் பிரவேசிப்பதன் மூலமே தற்போதைய நெருக்கடிக்கு பெரும்பாலும் தீர்வு காண முடியும், ஆனால் இச்சமயத்தில் சத்துணவுத் திட்டம் பற்றிய விடயங்களை நிறக்கண்ணாடிகளைப் போட்டுக்கொண்டு பார்க்கக் கூடாது. அதாவது இப் பிரச்சினையை அரசியல் கோணத்தில் பார்ப்பது முட்டாள்தனமாகும். மாத்தளை, தென்ன மகா வித்தியாலயம் மற்றும் ஒவிலிகந்த மகாவித்தியாலயம் என்பவற்றை

தேசிய பாடசாலைகளாக மாற்றுவதன் மூலம் நகரப் பாடசாலைகளில் நிலவும் நெரிசலுக்குத் தீர்வு காண நடவடிக்கை எடுக்கவும். கிராமப்புற வசதிகளை மேம்படுத்தி திறமையான மாணவர்களை உருவாக்க வழிவகை செய்யப்பட வேண்டும்.

மேலும் பல்வேறு காரணங்களால் புறக்கணிக்கப்பட்டுவரும் மாத்தளை இளைஞர் சேவை மன்ற கட்டடத்தை புனர் நிர்மாணம் செய்யவுள்ளதாகவும் அவர் தெரிவித்தார், எட்டு வருடங்களுக்கு மேல் புறக்கணிக்கப்பட்டு வரும் மாத்தளை பெர்னாட் அலுவிஹார விளையாட்டரங்கை நவீனமயப்படுத்தும் பணியை மேற்கொண்டு வருவதாகவும் அவர் தெரிவித்தார். இந்நிகழ்வில் மாத்தளை மாவட்ட அபிவிருத்திக் குழுத்தலைவர் நாலக பண்டார கோட்டேகொட, மாத்தளை மேயர் சந்தனம் பிரகாஷ், தம்புள்ளை மேயர் ஜாலிய ஓபாத்தா உட்பட பலர் கலந்துகொண்டனர்.

கட்சி தொழிற்சங்க பேதங்களை மறந்து

## தோட்ட சேவையாளர் சங்கத்தினருக்கு அனைவரும் ஒத்துழைக்க வேண்டும்

### இராதாகிருஷ்ணன் எம்.பி



ஹற்றன் சுழற்சி நிருபர்)

நாட்டில் ஏற்பட்டுள்ள பொருளாதார பின்னடைவு காரணமாக அனைத்து தரப்பினரும் பாரிய பாதிப்பை சந்தித்துள்ளனர். இலங்கை தோட்ட சேவையாளர் சங்கம் தமக்கு சம்பளம் அதிகரிக்கப்பட வேண்டும் என எதிர்வரும் ஒக்டோபர் முதலாம் திகதி தலவாக்கலை நகரில் முன்னெடுக்கின்ற போராட்டத்திற்கு கட்சி அரசியல் தொழிற்சங்க பேதங்களை மறந்து முழுமையான ஒத்துழைப்பை வழங்க முன்வர வேண்டுமென மலையக மக்கள் முன்னணியின் தலைவரும், நுவரெலியா மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினருமான வேலுசாமி இராதாகிருஷ்ணன் வேண்டுகோள் விடுத்துள்ளார். அவர் இது தொடர்பில் விடுத்துள்ள அறிக்கையில் மேலும் தெரிவித்துள்ளதாவது,

நாட்டில் பொருளாதார சீர்கேடு காரணமாக அனைத்து தரப்பினரும் தங்களுடைய குடும்பங்களை கொண்டு செல்ல முடியாது தவித்து வருகின்றனர். பாரியளவில் பொருட்களின் விலைகள் அதிகரித்திருந்தாலும் அதற்கு ஏற்ப சம்பள உயர்வு எந்த தரப்பினருக்கும் உயர்த்தப்படவில்லை. இதன் காரணமாக தங்களின் குடும்பங்களுக்கு மூன்று நேர உணவு, சிறுவர்களை பாடசாலைக்கு அனுப்பி வைத்தல் உட்பட ஏனைய தேவைகளை பூர்த்தி செய்துகொள்ள முடியாமல் தவித்து வருகின்றனர்.

## நுவரெலியா - ஹற்றன் பிரதான வீதியோரம் குப்பைகள் கொட்டப்படுவதால் சூழல் மாசு

### சுற்றுலா பயணிகள் அசௌகரியம்



நுவரெலியா ஹற்றன் பிரதான வீதியில் அமைந்துள்ள மகாத்மா காந்தியின் நினைவு மண்டபத்தின் அருகில் மீண்டும் குப்பைகள் கொட்டப்படுவதால் சூழல் மாசு ஏற்படுவதாக மக்கள் தெரிவிக்கின்றனர்.

கடந்த ஐந்து வருடங்களுக்கு முன்னர் மக்கள் பல்வேறு போராட்டங்களை மேற்கொண்டு இப்பகுதியில் குப்பை கொட்டுவதை நிறுத்தினர். முற்றிலும் அகற்றப்பட்ட குப்பைகளை மீண்டும் அவ்விடத்தில் கொட்டுவதால் நானுஓயா பிரதான நகரம் அசுத்தப்படுவதாகவும், சுகாதார பிரச்சினைகளை எதிர்நோக்குவதாகவும் பாதிக்கப்பட்ட மக்கள் தெரிவித்தனர்.

நுவரெலியா பிரதேச சபைக்குட்பட்ட நானுஓயா நகரம் வெளிநாட்டு,உள்நாட்டு சுற்றுலா பிரயாணிகளினால் அதிகமாக விரும்பப்படும் நகரமாகும்.

நுவரெலியா பகுதிக்கான ரயில் சேவையின் மத்திய நிலையமாகவும் இது காணப்படுகின்றது. நானுஓயா நகரம் வரலாற்று ரீதியாகவும் முக்கிய இடத்தை பெற்றுள்ளமை குறிப்பிடத்தக்கது.

நானுஓயா பிரதான நகரில் வர்த்தக நிலையங்களிலும்,வீடுகளிலும் சேகரிக்கப்படும் அழுகிய உணவுப்பொருட்கள்,மாமிசங்கள், எலும்புத்துண்டுகள்,எளிதில் உக்கிப்போகாத பொலித்தீன் பைகளில் கட்டப்பட்ட சில கழிவுப்பொருட்கள் இவ்விடத்தில் கொட்டப்படுகின்றன.

இதனால் குப்பைகளுடன் மழை நீர் சேரும் போது சாக்கடைகள் நிரம்பி வழிகின்றன. மொத்தத்தில் மண்,நீர் என்று மொத்தச் சுற்று சூழலுமே நச்சாக மாறுகின்றன .

இந்த நிலையில் அழகான இயற்கை காட்சிகளை புகைப்படம் எடுப்பதற்காக இப்பகுதிக்கு செல்லும் சுற்றுலா பயணிகள் அங்கு வீசும் துர்நாற்றங்களினால் மனம் நொந்து செல்வதை காணக்கூடியதாகவிருக்கின்றது .

நுவரெலியா ஹற்றன் பிரதான வீதியோரம் நானுஓயா மகாத்மா காந்தியின் நினைவு மண்டபத்திற்கு அருகில் குப்பைகள் குவிக்கப்பட்டுக் கிடக்கின்றமையால் நாய்கள், பறவைகள் அவற்றை நாலாபுறமும் இழுத்துச் சென்று போடுவதால் நடைபாதை, பிரதான பாதை அலங்கோலமாகக் காட்சி தருகின்றது, மற்றும் வாகன சாரதிகளும் பாதிக்கப்படுகின்றனர். குப்பைகள் பல நாட்களாக அகற்றப்படாமையால் அவை துர்நாற்றம் வீசுவது மாத்திரமன்றி, ஈக்களின் பெருக்கமும் ,நுளம்புகளின் பெருக்கமும் சமீப தினங்களாக அதிகரித்து காணப்படுகின்றன. இதனால் டெங்கு நோய்க்கு நிகராக, ஈக்களால் பரப்பப்படும் வாந்திபேதி, நெருப்புக் காய்ச்சல், மஞ்சள் காய்ச்சல், வயிற்றோட்டம் போன்ற வியாதிகளும் பரவும் அபாயம் காணப்படுவதாக மக்கள் விசனம் தெரிவிக்கின்றனர்.

அதேவேளை இரவு வேளைகளில் இந்த குப்பைகளை நாடி பன்றிகள் அதிகமாக வருகின்றமையினால் இப்பகுதியில் பயணிப்பவர்கள் பெரும் சிரமத்திற்கு ஆளாகின்றனர்.

மேலும் இந்தவிடயம் தொடர்பில் நுவரெலியா பிரதேச சபை தலைவர் வேலு யோகராஜிடம் தொடர்பு கொண்டு கேட்ட போது, கடந்த 10 வருடத்திற்கு முன்னர் அந்த இடத்தில் தான் பிரதேச சபையால் குப்பைகள் போடப்பட்டன. அதற்கு பிறகு மாற்று இடங்கள் தருவதாக கூறினர். ஆனால் இதுவரை வழங்கப்படவில்லை இவ்விடத்தில் குப்பைகளை பிரித்து வேறுபடுத்தி அனுப்புவதற்காக நாங்கள் இவ்விடத்தை புனரமைப்பதற்கு முயற்சி செய்தோம்.எரிபொருள் தட்டுப்பாடு, குப்பை சேகரிக்கும் வாகனத்தில் இயந்திர கோளாறு போன்ற காரணங்களினால் மகாத்மா காந்தியின் நினைவு மண்டபம் அருகில் குப்பை கொட்ட தொடங்கியுள்ளனர்.

சிறிது காலத்தில் எங்களுடைய வாகனத்தை பயன்படுத்தி மீண்டும் இவ்விடத்தை சுத்தம் செய்து தருவதாக கூறினார்.

எனவே குறித்த பகுதிக்கு பொறுப்பான சுகாதார அதிகாரிகள் இதனை கவனத்திற்கொண்டு உரிய நடவடிக்கை எடுக்குமாறு பொதுமக்களும், மாணவர்களும் கோரிக்கை விடுத்துள்ளனர்.

## உலர் உணவுப் பொருட்கள் வழங்கி வைப்பு

மஸ்கெலியா தினகரன் விசேட நிருபர்

மஸ்கெலியா பிரதேசசபைக்கு உட்பட்ட பகுதிகளில் 200 குடும்பங்களுக்கு உலர் உணவுப்பொருட்கள் வழங்கப்பட்டன.

இந்நிகழ்வில் நல்லதண்ணி பொலிஸ் பொறுப்பதிகாரி மற்றும் அப்பகுதி கிராம உத்தியோகத்தர் கலந்து கொண்டு சிறப்பித்தனர்.

நிகழ்வை தாய்வான் நாட்டின் அனுசரணையுடன் இயங்கும் உலக பௌத்த பல்கலைக்கழகத்தின் பிரதி வேந்தர் நாகானந்தவின் வழிகாட்டலில் இலங்கை முழுவதும் உள்ள வறுமைக்கோட்டில் வாழும் மக்களுக்கு வழங்க ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. நேற்று நல்லதண்ணி பொலிஸ் பிரிவிலுள்ள 200 குடும்பங்களுக்கு உலர் உணவு பொருட்கள் அடங்கிய பொதி வழங்கப்பட்டன.

இதனை நல்லதண்ணி விருந்தினர் விடுதி உரிமையாளர் கசுன்ஜயதுங்க ஏற்பாட்டு செய்து சிறப்பாக நடாத்தினார்.




கண்டி கும்புக்கந்துறை அல்ஹிக்மா முஸ்லிம் மகா வித்தியாலயத்தின் மாணவ தலைவர்களுக்கான சின்னம் சூட்டும் விழா பாடசாலை அதிபர் எப்.எம். ரஷாத் (நளீமி) தலைமையில் (28) பாடசாலை கேட்போர் கூடத்தில் நடைபெற்றது. இந்நிகழ்வில் பிரதம அதிதியாக கல்விப்பணிப்பாளர் ஐ. ஹாஷிம் மௌலவி, சிறப்பு அதிதிகளாக பாடசாலையின் பழைய மாணவரும் சவூதி அரேபியாவில் தனியார் நிறுவனமொன்றில் வணிக ஆலோசகராக தொழில் புரியும் கியாஸ் புவாத், ஓய்வு பெற்ற கடற்படை வாரண்ட் அதிகாரி ஏ.எம். ரகீப் உட்பட பெற்றோர்கள், பழைய மாணவர்கள், ஆசிரியர்கள், பிரதேசவாசிகள் என பலர் கலந்துக் கொண்டனர். (படம்: பூஜாபிட்டிய தினகரன் நிருபர்)





இலங்கையின் சுதந்திரப்போராட்டத்தின் போது மாத்தளை மக்களின் பங்களிப்பு எனும் கருப்பொருளில் ஊடகவியலாளர் மாத்தளை சோமரத்ன எழுதிய "மஹகத்தளாவேலே (மஹகத்தளாவே இரத்தம்) நூலின் வெளியீட்டு விழா நேற்று முன்தினம் மாத்தளை மாவட்ட செயலக கேட்போர் கூடத்தில் நடைபெற்றது. இதன்போது முதற் பிரதியை நூலாசிரியரிடமிருந்து இளைஞர் விளையாட்டுத்துறை இராஜாங்க அமைச்சர் ரோஹன திஸாநாயக்க, பாராளுமன்ற உறுப்பினர் நாலக கோட்ட கொடை ஆகியோர் பெற்றுக் கொள்வதையும் படங்களில் காணலாம்.

(படம்: மாத்தளை சுழற்சி நிருபர்)

# கிழக்கின் குரல்



## அனர்த்த தவிர்ப்பு சவுக்கு மரங்களை அழிக்கும் சட்டவிரோத நடவடிக்கை

**மட்டக்களப்பு சுழற்சி நிருபர்**



அனர்த்தங்களை தவிர்த்துக் கொள்வதற்காக மட்டக்களப்பு மாவட்டத்தில் கரையோரப் பிரதேசங்களில் பல இலட்சம் ரூபாய் செலவில் சுமார் 20 வருடங்களுக்கு முன்னர் உருவாக்கப்பட்ட சவுக்கு மரங்களை. சட்டவிரோதமாக வெட்டி அழிக்கும்

நடவடிக்கை தொடர்ச்சியாக நடைபெற்று வருவதாக பொதுமக்கள் கவலை தெரிவிக்கின்றனர்.

குறித்த கடலோரப் பிரதேசங்களில் சவுக்கு மரங்கள் பெருமளவில் நடுகை

பண்ணப்பட்டதால் கடல் நீரினால் ஏற்படும் அனர்த்தங்கள் தவிர்ப் பதற்கும் நிலத்துக்குள் நீர் சேமிக்கும் தன்மை .அதிகரிப்பு செய்வதற்கும் திட்டமிடப்பட்டிருந்தது.

இம்மாவட்டத்தில் கடலோரப் பிரதேசங்களில் இந்த சவுக்கு மர நடுகை பண்ணப்பட்டு . இயற்கை வளங்கள் பாதுகாக்கப்பட்டு வந்த நிலையில் தற்போதைய சூழலில் இந்த சவுக்கு மரங்களை அழித்து .விறகுக்காகவும் மற்றும் ஏனைய தேவைகளுக்கும்

பயன்படுத்துவதற்கு சட்டவிரோத செயல்களில் சிலர் ஈடுபட்டு வருவதாகவும் மக்கள் கவலை தெரிவிக்கின்றனர்.

குறிப்பாக மட்டக்களப்பு சவுக்கடி பகுதியிலேயே கூடுதலான மரங்கள் நாளாந்தம் தினமும் காலை 8 மணிக்கு முதலும் இரவு 9 மணிக்குப் பின்னரும் சட்டவிரோதமாக .அழிக்கப்பட்டு வருவதாகவும் இதனை தடுப்பதற்கு சம்பந்தப்பட்ட அதிகாரிகள் கூடிய கவனம் செலுத்த வேண்டும் என மக்கள் தெரிவிக்கின்றனர்.

## ஆதனவரி செலுத்தாதவர்கள் மீது காத்தான்குடி நகர சபை சட்ட நடவடிக்கை

### ஒரு கடைக்கு சீல் வைப்பு

**புதிய காத்தான்குடி தினகரன் நிருபர்**

காத்தான்குடி நகர சபை பிரிவில் ஆதன வரி செலுத்த தவறிய வர்த்தக நிலையங்களின் உரிமையாளர்களுக்கு எதிராக காத்தான்குடி நகர சபையினால் (28) புதன்கிழமை சட்ட நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டதுடன் வர்த்தக நிலைய மொன்றும் சீல் வைக்கப்பட்டு மூடப்பட்டது.

காத்தான்குடி நகர சபையின் கணக்காளர் முகம்மட் மனாஸிர் தலைமையில் நகர சபை வருமான வரி பரிசோதகர்கள், பொலிசார் மற்றும் நகர சபை உத்தியோகத்தர்கள் இணைந்து இந்த பரிசோதனை நடவடிக்கையில் ஈடுபட்டனர்.

இதன்போது காத்தான்குடி பிரதான வீதியிலுள்ள வர்த்தக நிலையங்களில் ஆதன வரி செலுத்த தவறிய வர்த்தக நிலையங்களுக்கு சென்ற உத்தியோகத்தர்கள் அவர்களை உடனடியாக ஆதன வரி செலுத்துமாறு அறிவுறுத்தியதுடன் ஆதன வரி செலுத்த தவறிய வர்த்தக நிறுவனமொன்று அதிகாரிகளினால் சீல் வைத்து மூடப்பட்டது. இந்த நடவடிக்கையின் போது ஆதன வரி தொடர்பான அறிவுறுத்தல்கள் வழங்கப்பட்டதுடன் வீதியோர மிதி படிகளில் வைக்கப்பட்டு வியாபாரம் செய்யும் பொருட்களை அகற்றுமாறும் அறிவுறுப்பட்டது.

## இறக்காமம் பிரதேச சிறுவர் கண்காணிப்புக் குழுக் கூட்டம்

**வரிப்பத்தான்சேனை தெற்கு குறூப் நிருபர்**

இறக்காமம் பிரதேச சிறுவர்களின் உரிமை, பாதுகாப்பு, அபிவிருத்தி, சிறுவர் நலன் மற்றும் மேம்பாடு என்பவற்றை ஆராய்கின்ற பிரதேச சிறுவர் உரிமை கண்காணிப்புக் குழுக் கூட்டம் (DCMC) இறக்காமம் உதவி பிரதேச செயலாளர் எம். ஏ.சி. அஹமட் நஸீல் தலைமையில் நேற்று (28) புதன்கிழமை இறக்காமம் பிரதேச செயலக கேட்போர் கூடத்தில் இடம்பெற்றது.

இக்கூட்டத்தில் பிரதேச சிறுவர்களின் உரிமை மற்றும் பாதுகாப்பு என்பவற்றை உறுதிப்படுத்தும் நோக்கில், பாடசாலை இடை விலகல், கல்வி ரீதியான பிரச்சினைகள், பாடசாலை மாணவர்களின் பாதுகாப்பு, பிரத்தியேக கல்வி நடவடிக்கைகள், சிறுவர்களை மையப்படுத்திய போதைப் பொருள் பாவனை, இளவயது திருமணம், சுகாதார மேம்பாடு, விஷேட தேவையுடைய சிறுவர்களின் நலனோம்பல் மற்றும் கிராம மட்ட சிறுவர் அபிவிருத்தி குழு (VCDC) மற்றும் முன்பள்ளிகள் தொடர்பான விடயங்கள் கலந்துரையாடப்பட்டன. மேலும் பாதிக்கப்பட்ட பெண்கள் அமைப்பு (Affected Women's Forum) சார்பாக கலந்து கொண்ட திட்டமிடல் உத்தியோகத்தர் திருமதி எஸ். ஜினோவினால் பால்நிலை வன்முறை தொடர்பான விழிப்புணர்வும் வழங்கப்பட்டது.

## போஷாக்கு நிறைந்த உணவுகளால் ஆரோக்கிய சமுதாயம் உருவாகும்

**ஒலுவில் விசேட நிருபர்**

ஆரோக்கியமான சமுதாயத்தை உருவாக்குவதன் மூலம் நாட்டில் ஆரோக்கியமான சமூகம் உருவாகுமென, பிரதேச விவசாய விரிவாக்கல் நிலையப் பொறுப்பதிகாரி விவசாயப் போதனாசிரியர் ஏ.எச். ஏ. முபாறக் தெரிவித்தார்.

ஜனாதிபதி செயலகத்தால் முன்னெடுக்கப்படும் உணவு பாதுகாப்பு செயற்குழுவுக்கு அமைய அட்டாளைச்சேனை பிரதேச செயலகத்துடன் இணைந்து அட்டாளைச்சேனை விவசாய விரிவாக்கல் நிலையம் ஏற்பாடு செய்த முன்பள்ளி ஆசிரியர்களுக்கான விழிப்புணர்வு கருத்தரங்கு புதன்கிழமை (28) மாவட்ட விவசாய பயிற்சி நிலையத்தில் நடைபெற்றது.

இதில் கலந்து கொண்டு உரையாற்றுகையிலேயே மேற்கண்டவாறு கூறினார்.

விவசாயப் போதனாசிரியர் ஏ.எச். ஏ. முபாறக் அங்கு தொடர்ந்து உரையாற்றுகையில்,

நாட்டில் ஆரோக்கியமான சிறந்த அறிவுத் திறனுடைய பிரஜைகளை உருவாக்குவதற்கு போசாக்கு நிறைந்த உணவுகளை பிள்ளைகளுக்கு வழங்க வேண்டும்.

முன்பள்ளி பாடசாலையில் கல்வி பயிலும் பிள்ளைகளின் பாதுகாப்பான உணவு விடயத்தில் முன்பள்ளி ஆசிரியர்கள் பொறுப்புடன் செயற்பட வேண்டும்.ஒரு பிள்ளையின் வளர்ச்சி 05 வயதுக்குள் முக்கிய இடத்தை வகிக்கின்றது.

இவ் வளர்ச்சிக்கு தேவையான சிறந்த ஊட்டச்சத்துள்ள உணவுகளை வழங்க வேண்டும் என்றார்.

## இருதய பாதிப்புக்களினால் 34 சதவீதமானவர்கள் மரணிக்கின்றனர்

**கந்தளாய் தினகரன் நிருபர்**

உலகம் முழுவதிலும் 17.3 மில்லியன் மக்கள் பக்கவாதம் மற்றும் இருதய நோயினால் இறப்பதாக அறிக்கைகள் தெரிவிக்கின்றன. இதிலிருந்து நாம் பாதுகாப்பு பெறுவதாக இருந்தால் 30 வயதுக்கு மேற்பட்ட ஆண், பெண் இரு பாலாரும் ஆண்டுக்கொருமுறை இதயம் சார்ந்த பரிசோதனைகளை செய்துகொள்ள வேண்டும் என்பதை அறிவுறுத்துவதற்காகவே உலக இதய தினம் ஒவ்வொரு ஆண்டும் கொண்டாடப்பட்டு வருவதாக குச்சவெளி பிரதேச சபை தவிசாளர் ஏ.முபாறக் தெரிவித்தார்.

உலக இருதய தினத்தை சிறப்பிக்கும் வகையில் நேற்று (29) குச்சவெளி பிரதேச சபையில் இடம்பெற்ற இலவச இரத்ததான குழுவினரை சபை உத்தியோகத்தர்களுக்குள் நியமிக்கும் நிகழ்வின் போதேஅவர்இவ்வாறுதெரிவித்தார்.

அங்கு அவர் மேலும் தெரிவிக்கையில்:

எமது நாட்டில் இடம்பெறும் உயிரிழப்புககளில் 34 சதவீதமானவை இருதய பாதிப்புக்களினால் இடம்பெறுவதாக சுகாதார அமைச்சு தெரிவித்துள்ளது. சுகாதார அமைச்சின் தொற்றாநோய்ப் பிரிவு, இருதய விசேட வைத்திய நிபுணர்களின் நிறுவன அமைப்புடன் இணைந்து வருடந்தோரும் உலக இருதய தினத்தை கொண்டாடி வருகிறது, அதேவேளை, இதய நோயிலிருந்து நாட்டு மக்களைப் பாதுகாக்கும் நோக்கில் பல்வேறு திட்ட வரைபுகளை எமது அரசு சுகாதாரத்துறையுடன் இணைந்து அதற்கான முன்னெடுப்புக்களையும் முன்னெடுத்து வருகின்றது.

வளர்ச்சியடைந்துள்ள தொழில் நுட்பத்திற்கு மத்தியில் எமதுநாடு எதிர் நோக்கியுள்ள கொவிட் தொற்றுக்கு மத்தியில் இருதய நோய் மற்றும் தொற்றாநோய் போன்றபல்வேறுபட்ட விழிப்புணர்வுகளை சுகாதார அமைச்சு மற்றும் அது தொடர்புபட்ட நிறுவனங்களும்மேற்கொண்டுவருவதுடன் அதற்காக பல மில்லியன் ரூபாய்களை செலவும் செய்து வருகின்றது என்றும் தவிசாளர் முபாறக் சுட்டிக்காட்டினார்.

உலகளவில் ஒவ்வொரு ஆண்டும் பிறக்கும் குழந்தைகளில் 10 இலட்சம் குழந்தைகள் பிறவியிலேயே இருதயக் கோளாறுடன் பிறக்கின்றன. இதயக் கோளாறு என்பது பெரும்பாலும் ஆண்களையும்,வயதானவர்களையும் மட்டுமே தாக்கும் என்ற கருத்து பரவலாக உள்ளது. அது தவறாகும். இதயத்தில் ஏற்படும் நோய்கள் குறித்தும், அதில் ஏற்படும் பிரச்சனைகளை தவிர்க்க, ஆரோக்கியமான உணவு மற்றும் உடற்பயிற்சி செய்வது போன்ற விழிப்புணர்வை பொதுமக்கள் மத்தியில் ஏற்படுத்துவதற்காக பல்வேறு நிகழ்ச்சிகள் இன்று உலகம் முழுவதும் நடைபெறுகின்றது என்றார்.

## மட்டக்களப்பு தேசிய கல்விக் கல்லூரியில் 'அறிவொளி' நூல் வெளியீடு

**வெல்லாவெளி தினகரன் நிருபர்**

மட்டக்களப்பு தேசிய கல்விக் கல்லூரியின் மூன்றாம் வருட சமூக,விஞ்ஞான பிரிவு மாணவர்களின் தேடலில் உருவான □அறிவொளி□ நூல் வெளியீட்டு விழா கல்லூரியின் பிரதான மண்டபத்தில் புதன்கிழமை (28) காலை 10 மணியளவில் நடைபெற்றது.

மட்டக்களப்பு தேசிய கல்வியற் கல்லூரியின் விரிவுரையாளர் சி.லோகராஜாவின் வழிகாட்டலில் சமூக விஞ்ஞான பிரிவைச் சேர்ந்த ஆசிரிய மாணவர்கள் இந்நூலினை கற்றல் கற்பித்தலுக்கு வலுச்சேர்க்கும் வகையில் படைத்திருந்தார்கள்.

இவ்விழாவில் மட்டக்களப்பு தேசிய கல்விக் கல்லூரியின் பீடாதிபதி எம்.ஐ.எம்.நவாஸ் பிரதம விருந்தினராக கலந்து கொண்டு நூலின் முதற் பிரதியையும் பெற்றுக் கொண்டார். இந்நிகழ்வில் கௌரவ அதிதிகளாக கல்லூரியின் உப பீடாதிபதிகள் கலந்து சிறப்பித்தனர்.

நிந்தவூர் கடலரிப்பு பாதிப்பு;

## கரையோர பாதுகாப்பு திணைக்களத்தின் பணிப்பாளர் நாயகம் நிந்தவூர்க்கு விஜயம்

**நிந்தவூர் குறூப் நிருபர்**



நிந்தவூர் பிரதேச சபையின் பிரதித் தவிசாளர் வை.எல் சுலைமாலெவ்வையின் அழைப்பையேற்று, கரையோர பாதுகாப்பு மற்றும் கரையோர வளங்கள் முகாமைத்துவ திணைக்களத்தின் பணிப்பாளர் நாயகம் பொறியியலாளர் ஆர்.ஏ. எஸ். ரணவக்க, நேற்று முன்தினம் (28) மாலை நிந்தவூர் பிரதேசத்திற்கு விஜயம் செய்தார்.

நிந்தவூர் பிரதேசத்தில் அண்மைக் காலமாக நிலவி வரும் தொடர் கடலரிப்பின் மூலமாக ஏற்பட்டுள்ள சேதங்களை நேரில் பார்வையிடுவதற்காகவும், எதிர்காலத்தில் கடலரிப்பினைத் தடுப்பதற்கான தடுப்புச் சுவரினை அமைக்கும் நிரந்தர நடவடிக்கைளுக்கான முன்னேற்பாட்டு நடவடிக்கைகளை மீளாய்வு செய்வதற்காகவும் பணிப்பாளர் நாயகத்தின் இந்த விஜயம் அமைந்தது.

நிந்தவூர் பிரதேச கடற்கரைப் பகுதியானது, கடந்த பல வருடங்களாக கடலரிப்பினால் பாதிக்கப்பட்டிருந்ததுடன், கடந்த மாதம் இது உக்கிரமடைந்து பாரிய சேதங்களை ஏற்படுத்தியிருந்தது.

இந்நிலையில், குறித்த கடல் அரிப்பினைக் கட்டுப்படுத்துவதற்காக, கரையோர பாதுகாப்பு மற்றும் கரையோர வளங்கள் முகாமைத்துவ திணைக்களமானது, பல்வேறு நடவடிக்கைகளை மேற்கொண்டு வரும் நிலையில், இவைகளைத் துரிதப் படுத்துவதற்காகவும், கடலரிப்பிற்கான நிரந்தர தீர்வினைப் பெற்றுக் கொடுப்பதற்காக நிந்தவூர் பிரதேச சபையின் தவிசாளர் மற்றும் பிரதித் தவிசாளர் ஆகியோர் எடுத்துக் கொண்ட முயற்சியின் பயனாகவுமே பணிப்பாளர் நாயகத்தின் இந்த விஜயம் அமைந்திருந்தது.

இங்கு கருத்து தெரிவித்த பணிப்பாளர் நாயகம் ஆர்.ஏ.எஸ். ரணவக்க;

இலங்கையில் எந்த ஊரிலும் ஏற்படாத கடலரிப்பினை, நிந்தவூரில் தான் கண்டு கொண்டுள்ளதாகவும், குறிப்பாக கடந்த காலங்களில் இப் பகுதியில் ஏற்பட்ட கடல் அரிப்பு மூலம் பிரதேச மீனவர்கள் தங்களது வாழ்வாதாரத்தை இழந்துள்ளதை அவதானிக்க முடிந்தது. அத்துடன் தற்போது ஏற்பட்டுள்ள இந்த பிரச்சினையினை கட்டாயம் தீர்த்து வைத்து, நிரந்தர தடுப்பு நடவடிக்கைகள் எடுப்பதற்கான அனைத்து நடவடிக்கைகளும் என்னால் மேற்கொள்ளப்படும் என்றார்.

## திருமலையில் முச்சக்கர வண்டி சாரதிகள் உழைப்பின்றி வாடுகின்றனர்

**ரொட்டவெவ குறூப் நிருபர்**




திருகோணமலை முச்சக்கர வண்டி சாரதிகள் தங்களுடைய அன்றாட தேவைகளை நிறைவேற்றிக் கொள்ள முடியாத நிலை ஏற்பட்டுள்ளதாக கவலை தெரிவிக்கின்றனர்.

வாரத்தில் ஒரு முறை கியூ ஆர் கோட் மூலமாக 5 லீட்டர் பெட்ரோல் கிடைப்பதாகவும் இதனால் தமது தேவைகளை நிறைவேற்றிக் கொள்ள முடியாத நிலை ஏற்பட்டுள்ளதாகவும் தமது ஜீவனோபாயத்தை உயர்த்திக் கொள்ள முடியாத நிலையில் நாளுக்கு நாள் கடனாளியாகவே உள்ளாக்கப்பட்டு வருவதாகவும் கவலை தெரிவிக்கின்றனர்.

பெட்ரோல் விலை அதிகரிப்பு காரணமாக ஹையர் ஓடும் சக்கர வண்டி சாரதிகள் லீசிங் கட்டுவதற்காக கிடைக்கின்ற பணத்தில் அதற்கு ஒதுக்குவதாகவும் உண்பதற்கு போதிய அளவு பணம் இல்லாமையினால் பல குடும்பங்களுக்கு இடையில் முரண்பாடுகள் ஏற்படுவதாகவும் சுட்டிக் காட்டுகின்றனர்.

குறிப்பாக கிழமையில் வழங்கப் படுகின்ற ஐந்து லிட்டர் பெட்ரோல் ஒரு நாளைக்கு தமது பிள்ளைகளை பாடசாலைக்கு அழைத்துச் செல்வதற்கு செலவழிவதாகவும் குறிப்பிடுகின்றனர்.

ஆகவே அரசாங்கம் முச்சக்கர வண்டி சாரதிகளின் நலன் கருதி மானிய அடிப்படையில் சில உதவிகளை வழங்க வேண்டும் எனவும் கோரிக்கை விடுக்கின்றனர்.

## இளம் எழுந்தாளர்களை ஊக்குவிக்கும் மேம்பாட்டு கூடல் நிகழ்வு

**வாச்சிக்குடா விஷேட நிருபர்**

கிழக்கு மாகாண பண்பாட்டலுவல்கள் திணைக்களத்தின் ஏற்பாட்டில் இளம் எழுந்தாளர்களை ஊக்குவிக்கும் முகமான இளம் எழுத்தாளர் மேம்பாட்டு கூடல் நிகழ்வு ஆலையடிவேம்பு பிரதேச செயலக கலாசார மண்டபத்தில் நேற்று நடைபெற்றது.

மாகாண பணிப்பாளர் திருமதி சரண்யா சுதர்சனின் வழிகாட்டலில் அம்பாரை மாவட்ட கலாசார உத்தியோகத்தர் ஏ.எல்.தௌபீக்கின் தலைமையில் ஆலையடிவேம்பு பிரதேச செயலக கலாசார உத்தியோகத்தர் எம்.எஸ்.ஜௌபர் ஒருங்கிணைப்பில் இடம்பெற்ற நிகழ்வில் பிரதம அதிதியாக ஆலையடிவேம்பு பிரதேச செயலாளர் வி.பபாகரன் கலந்து கொண்டார்.

தலைமை உரை ஆற்றிய அம்பாரை மாவட்ட கலாசார உத்தியோகத்தர் ஏ.எல்.தௌபீக் இளம் எழுத்தாளர்களை ஊக்குவிப்பதை அடிப்படையாக கொண்டே மாகாண பணிப்பாளர் இவ்வாறான திட்டங்களை நடைமுறைப்படுத்துமாறு பணிப்புரை வழங்கியுள்ளார்.

ஆகவே சமூக மட்டத்தில் தற்போது குறைந்து கொண்டு செல்லும் எழுத்தாளர்களின் எண்ணிக்கையினை இதுபோன்ற நிகழ்வுகள் அதிகரிக்கச் செய்யும் என நம்பிக்கை தெரிவித்தார்.

தேநேரம் இங்கு உரையாற்றிய பிரதேச செயலாளர்,

கலை என்பது நம் வாழ்வில் இணைந்திருக்க வேண்டியது. அது இறைவனால் கொடுக்கப்படும் வரம். சிலருக்கு இயற்கையாகவே கலைத்திறன் இருக்கும். அவர்கள் இலகுவாக தமது திறனை வெளிப்படுத்துவர். சிலருக்கு கலைத்திறன் உள்ளிருக்கும். வெளிக்கொண்டுவரப்படுவதில்லை. அவ்வாறு உள்ளிருக்கும் கலைத்திறனை வெளிக்கொண்டுவரும் சந்தர்ப்பங்கள் கிடைத்தால் அவர்களும் கலைஞர்களாக உருவாக கூடும் என்றார்.

## பொலிஸாரை தாக்கிய சந்தேக நபர் கைது

**ரொட்டவெவ குறூப் நிருபர்**

திருகோணமலை ஹொரவ்பொத்தானை பிரதான வீதி, ரொட்டவெவ வீதி சோதனை சாவடியில் கடமையிலிருந்த பொலிஸ் உத்தியோகத்தரை தாக்க முட்பட்ட சந்தேக நபர் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

இச்சம்பவம் (28) 9.00 மணியளவில் இடம்பெற்றுள்ளது.

டிமோ பட்டா லொறியொன்றில் அனுராதபுரம் பகுதியில் இருந்து திருகோணமலை நோக்கி இளைஞர்கள் சென்று கொண்டிருந்த லொறியை ரொட்டவெவ வீதி சோதனை சாவடியில் பொலிஸ் உத்தியோகத்தர் நிறுத்தி உள்ளார்.

இந்நிலையில் பின்னால் இருந்து வந்த இளைஞரொருவர் மது போதையில் பொலிஸாரின் கடமைக்கு இடையூறு விளைவித்ததுடன் அவர் அணிந்திருந்த சீருடையை கிழிப்பதற்கு முற்பட்டுள்ளார்.

இதனையடுத்து குறித்த வீதி சோதனை சாவடியில் இராணுவத்தினர், சிவில் பாதுகாப்பு படை வீரர்கள், பொலிசார் கூட்டாக இணைந்து கடமையில் இருந்த வேலை தாக்கியதாக குறித்த நபர் கைது செய்யப்பட்டுள்ளார்.

கைது செய்யப்பட்ட சந்தேக நபர் மிகிந்தலை பகுதியைச் சேர்ந்த 29 வயதுடையவர் எனவும் பொலிஸார் தெரிவித்தனர்.

சந்தேக நபரை மஹதிவுல்வெவ பிரதேச வைத்தியசாலையில் வைத்திய பரிசோதனைக்கு உட்படுத்திய போது மது போதையில் இருந்ததாகவும் வைத்தியரின் அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

தினகரன்
வடக்கின் உதயம்
Vadakkin Uthayam
2022 செப்டெம்பர் 30
வெள்ளிக்கிழமை

# கர்ப்பிணிப் பெண்களுக்கு குருதிச்சோகை பாதிப்புகள்

## பின்தங்கிய கிராமங்களில் அடையாளம்

ஓமந்தை விஷேட நிருபர்



பின்தங்கிய கிராமங்களைச் சேர்ந்த கர்ப்பிணித்தாய்மாருக்கு அதிக ளவில் குருதிச்சோகை ஏற்படுவ தாக வவுனியா பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் வைத்தியர் எம்.மகேந்திரன் தெரிவித்தார்.

வவுனியாவில் இடம்பெற்ற நிகழ் வொன்றில் கலந்துகொண்டு கருத்து தெரிவிக்கும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

தொடர்ந்து கருத்து தெரிவித்த அவர், பின்தங்கிய பகுதிகளில் பொதுவாக போஷாக்கு பிரச்சினை கள் நீண்டகாலமாக காணப்படுகின் றன. தற்போதைய பொருளாதார நிலைக்கு முன்பிருந்த காலப்பகுதியி லும் கூட பின்தங்கிய கிராமப்புறங்க ளில் குருதிச்சோகையால் அதிகளவில் கர்ப்பிணித்தாய்மார்கள் பாதிக்கப்பட் டிருந்தன.

இந்நிலையில் கர்ப்பிணித்தாய்மா ருக்கு சுகாதார திணைக்களம் ஊடாக உரிய குருதி பரிசோதனை யினை மேற்கொண்டு அவ் வாறான அறிகுறிகளை கொண்டவர்கள் தொடர் பில் மேலதிக கவனமெடுக் கவேண்டும்.

அவர்களுக்கு மாத்தி ரைகள் வழங்குவதுடன் ஏனைய விடயங்களிலும் கவனம் செலுத்தவேண் டும். அது குழந்தை பிறக் கும் போது ஏற்படும் பிரச்சினைகளை முடிந்தவரை தவிர்ப்பதற்கு உதவும். இதேவேளை குழந்தை சரியான நிறை யுடன் பிறப்பதற்கும் தாய்மார்களின் போஷாக்கு முக்கிய காரணியாகவுள் ளது.

# யாழ்.போதனா வைத்தியசாலையில் கையடக்க தொலைபேசி திருட்டு

யாழ். விசேட நிருபர்



யாழ். போதனா வைத்திய சாலை விடு திகளில் தங்கியுள்ள வர்களின் கையடக் கதொலை பேசிகளை திருடிய குற்றச் சாட்டில் 21 வயதான இளைஞன் பொலிஸாரால் கைது செய்யப்பட் டுள்ளான்.

யாழ்.போதனா வைத்தியசாலை விடுதிகளில் தங்கியுள்ளவர்களின் கையடக்க தொலைபேசிகள் தொடர்ந்து திருட்டு போயுள்ளன.

அவை தொடர்பில் யாழ்ப்பாண பொலிஸ் நிலையத்தில் சிலர் முறைப்பாடு செய்திருந்தனர்.

முறைப்பாட்டின் பிரகாரம் விசாரணைகளை முன்னெ டுத்த பொலிஸார் 21 வயதான இளைஞனை கைது செய்து விசார ணைகளை முன்னெடுத்தனர்.

இதன்போது இளைஞனிடமி ருந்து 21 கையடக்க தொலைபேசி களை பொலிஸார் மீட்டுள்ளன.

இவை யாழ்.வைத்தியசாலை யில் திருடப்பட்டவை என தெரிய வருகின்றது.

வைத்தியசாலையில் தொலை பேசிகள் திருட்டுப்போனமை தொடர்பில் யாழ்ப்பாண பொலிஸ் நிலையத்தில் பலர் முறைப்பாடு செய்துள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

# யாழ்.வைத்தீஸ்வரா கல்லூரியின் புதிய வகுப்பறைக் கட்டடத்தொகுதி திறப்பு





பருத்தித்துறை விசேட நிருபர்

யாழ்ப்பாணம் வைத்தீஸ்வரா கல் லூரியில் புதிய வகுப்பறைக் கட்ட டத்தொகுதி நேற்றைய தினம் திறந்து வைக்கப்பட்டது.

அண்மையிலுள்ள பாடசாலை சிறந்த பாடசாலை எனும் தேசிய வேலைத்திட்டத்தின் கீழ் நிர்மா ணிக்கப்பட்ட வகுப்பறைக் கட்ட டத் தொகுதி நேற்று காலை 9 மணி யளவில் கடற்றொழில் அமைச்சர் கே.என்.டக்ளஸ் தேவானந்தாவி னால் திறந்து வைக்கப்பட்டது.

பாடசாலை அதிபர் வாசுகி தவ பாலன் தலைமையில் இடம்பெற்ற நிகழ்வில் வட மாகாண கல்வி அமைச்சின் செயலாளர் இ.வரதீஸ் வரன், வட மாகாண கல்விப் பணிப் பாளர் செ.உதயகுமார், யாழ்ப்பாண வலயக் கல்வி பணிப்பாளர் மு.இரா தாகிருஷ்ணன், பாடசாலை ஆசிரியர் கள் மாணவர்கள் என பலரும் கலந்து கொண்டனர்.

# மோட்டார் சைக்கிள் விபத்து 68 வயது முதியவர் பலி

ஓமந்தை விஷேட நிருபர்

வவுனியா தாலிக்குளம் பகுதியில் இடம் பெற்ற விபத்தில் முதியவர் ஒருவர் பரிதா பகரமாக உயிரிழந்துள்ளார். தாலிக்குளம் பகுதியைச் சேர்ந்த ராஜகோபால் என்ற 68 வயதுடைய முதியவரே இவ்வாறு உயிரி ழந்துள்ளார். நேற்று (29) பிற்பகல் மன்னார் வீதியூடாக துவிச்சக்கர வண்டியில் வந்து கொண்டிருந்த முதியவரை அதே திசையின் பின்னால் வந்துகொண்டிருந்த மோட்டார் சைக்கிள் மோதியமையால் விபத்து இடம் பெற்றுள்ளது. விபத்தில் படுகாயமடைந்த முதியவர் வைத்தியசாலைக்கு கொண்டு செல்லப்பட்ட போது உயிரிழந்தார்.

மோட்டார் சைக்கிளை செலுத்திய இளைஞன் வைத்தியசாலையில் அனும திக்கப்பட்டுள்ளார்.

# மன்னார் மாவட்ட முன்னாள் அபிவிருத்தி சபை தலைவர் பி.எம்.செபமாலை காலமானார்

தலைமன்னார் விஷேட நிருபர்



மன்னார் மாவட்ட முன்னாள் அபிவிருத்தி சபைத் தலைவர் பி.எம். செபமாலை (வயது 81) நேற்று புதன்கிழமை (28.09.2022) காலமானார்.

இவர் தனது ஆரம்பக் கல்வியை பாலைக்குழி றோமன் கத்தோலிக்க தமிழ் கலவன் பாட சாலையிலும் பின்னர் 4ஆம் ஆண்டிலிருந்து 11 ஆம் வகுப்பு வரை மன்னார் புனித சவேரியார் ஆண்கள் தேசிய பாடசாலையி லும் பின்னர் கொழும்பு சென். பெனடிக் கல்லூரியில் கல்விப் பொதுத்தராதர சாதாரண உயர்தரம் வரை படிப்பை தொடர்ந்தார். இவர் தமிழர் விடுதலைக் கூட்டணியில் இணைந்து தமிழர் உரிமைக்காக மேடைப் பேச்சுக்களை நிகழ்த்தி வந்ததுடன் 1972 இல் மாந்தை வடக்கு கிரா மோதய சபை தலைவராக தெரிவு செய்யப்பட்டிருந்தார்.

இவர் விளையாட்டுத் துறையில் மாத்திரமல்ல நாட்டுக்கூத்துக்கள் கவிதைகள் போன்ற சிறந்த எழுத் தாற்றல் கொண்டவராக நூல்கள் பல வெளியீடு செய்துள்ளார்.



கொழும்பு தமிழ்ச் சங்கத்தின் புலமைக் குழுவும் மாங்குளக்கிளையும் ஏற்பாடு செய்திருந்த கல்விக் கருத்தரங்கு நேற்று வியாழக்கிழமை மாங்குளம் துணுக்காய் கல்வி அலுவலகத்தில் நடைபெற்றது. இந்நிகழ்வில் கொழும்பு தமிழ்ச் சங்கத்தின் தலைவர் சட்டத்தரணி நடராஜா காண்டீபன் மற்றும் துணைத் தலைவர் எம். கணபதிப்பிள்ளை வலயக் கல்வி பணிப்பாளர் திருமதி. மாலதி முகுந்தன் உட்பட பலரும் கலந்து கொண்டிருந்தனர்.

# முறிகண்டியில் காட்டுவிலங்குகளை வேட்டையாடிய இருவர் கைது

பரந்தன் குறூப் நிருபர்

கிளிநொச்சி முறிகண்டி காட்டுப் பகுதியில் காட்டுவிலங்குகளை வேட்டையாடி இறைச்சியினை உட மையில் வைத்திருந்த இருவர் நேற் றுமுன்தினம் கைதுசெய்யப்பட்டு நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தப்பட் டுள்ளனர்.

கிளிநொச்சி முறிகண்டி காட்டுப்ப குதியில் காட்டு விலங்குகளை வேட் டையாடிய குற்றச்சாட்டில் இருவர் வன ஜீவராசிகள் திணைக்கள அதிகா ரிகளால் கைது செய்யப்பட்டு நேற் றுமுன்தினம் மாலை நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தப்பட்டுள்ளனர்.

வனஜீவராசிகள் திணைக்கள அதி காரிகள் மேற்கொண்ட சோதனை நடவடிக்கையின் போது அப்பகுதி களில் காட்டு விலங்குகளை வேட் டையாடி இறைச்சியாக்கி உடைமை யில் வைத்திருந்த குற்றச்சாட்டில் இருவர் கைது செய்யப்பட்டு கிளி நொச்சி மாவட்ட நீதிவான் நீதிமன் றில் ஆஜர்படுத்தப்பட்டதையடுத்து பிணையில் செல்ல அனுமதிக்கப் பட்டதுடன் முழுமையான விசார ணைகளுக்காக எதிர்வரும் நவம்பர் மாதம் 24 ஆம் திகதி வரை வழக்கு ஒத்திவைக்கப்பட்டுள்ளது.



கோப்பாய் பிரதேச தேசோதய சபை யினால் புன்னாலை கட்டுவன் வடக்கு 55 வீட்டு திட்டத்திலுள்ள தெரிவு செய் யப்பட்ட 50 பயனாளிகளுக்கு உலர் உணவுப் பொருட்கள் உடுபுடவைகள் மாற்றுத்திறனாளி ஒருவருக்கு முச் சக்கர மிதிவண்டி வழங்கும் நிகழ்வு 55 வீட்டு திட்ட இராவண சனசமூக நிலைய மண்டபத்தில் தேச உதய தலைவர் தேசாபிமானி இ. மயில் வாகனம் தலைமையில் நடைபெற் றது இந்நிகழ்வில் பொறியியலாளர் தேசாபிமானி சமாதான நீதவான் சா. தவசங்கரி, ஏற்பாட்டாளர் ரே. ரமண தாசன் நிலையத் தலைவர் ரு.ஜெ யராசாவும் கலந்து கொண்டனர். நிவாரணத்துக்கான நிதி உதவியை உரும்பிராய் கிழக்கை பிறப்பிடமாக வும் பின்லாந்து நாட்டை வசிப்பிடமா கவும் கொண்ட மு .லலிதா என்பவ ரால் வழங்கப்பட்டது.

# போதைப்பொருள் பாவனைக்கு எதிராக யாழில் போராட்டம்

யாழ். விசேட நிருபர்

போதைப்பொருள் பாவனைக்கு எதிராக விழிப்புணர்வுகளை ஏற்படுத்தும் முகமாக, யாழ்.போதனா வைத்தியசாலை தொழிற் சங்கங்களின் கூட்டமைப்பின் ஏற்பாட்டில் யாழ்ப்பாணத்தில் நேற்றைய தினம் வியாழக்கிழமை பேரணியொன்று முன்னெடுக் கப்பட்டது.

யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலை முன்றலில் நேற்றைய தினம் வியாழக்கிழமை மதியம் 12 மணியளவில் இப்பேரணி ஆரம்பித்து மணிக்கூட்டு கோபுர வீதியூடாக, யாழ்.பொலிஸ் நிலையத்தை அடைந்து அங்கிருந்து பிரதான வீதியூடாக யாழ்ப் பாண மாவட்ட செயலகத்தை சென்றடைந்தது.

# தகவலறியும் உரிமைக்கான ஆணைக்குழுவினர் - வடக்கு ஊடகவியலாளர்கள் கலந்துரையாடல்

பரந்தன் குறூப் நிருபர்





சர்வதேச தகவல் உரிமை தினத் தினை முன்னிட்டு வெகுசன ஊடக அமைச்சின் ஏற்பாட்டில் இலங்கை தகவலறியும் உரிமைக்கான ஆணைக்குழுவினால் வடமாகாண ஊடகவியலாளர்களுடனான கலந் துரையாடலொன்று நேற்று இடம் பெற்றது.

யாழ்.மாவட்ட செயலக மாநாட்டு மண்டத்தில் நேற்று வியாழக்கிழமை (29) காலை 9 மணியளவில் இக்கலந் துரையாடல் இடம்பெற்றது.

தகவல் சட்டத்தை கையாளுகை யில் ஊடகவியலாளர்கள் எதிர்நோக் கும் சவால்கள் தொடர்பாக இதன் போது கலந்துரையாடப்பட்டன.

இந்நிகழ்வில் யாழ்.மாவட்ட அர சாங்க அதிபர் க.மகேசன், தகவல றியும் ஆணைக்குழுவின் தலைவர் உபாலி அபேரத்ன, தகவலறியும் ஆணைக்குழுவின் ஆணை யாளர் கிஸாலி பின்ரோ, தகவலறியும் ஆணைக்குழு வின் ஆணையாளர் எஸ். முகமட் நகியா, தகவலறியும் ஆணைக்குழுவின் பதில் பணிப்பாளர் நாயகம் எஸ். ஆர்.டபிள்யூ.எம்..ஆர்.பி. சத்குமார, சிரேஷ்ட சட்டத் தரணி ஜகத் லியனாராட்சி, யாழ் மாவட்ட மேலதிக அர சாங்க அதிபர் ம.பிரதீபன், தகவல் உரிமை ஆணைக்கு ழுவின் அதிகாரிகள், வடமா கணத்தை சேர்ந்த ஊடகவியலாளர் கள் கலந்துகொண்டிருந்தனர்.

NSB

## தேசிய சேமிப்பு வங்கி

## விலைமனுக்களுக்கான அழைப்பு

**கேள்வி இல: NSB/PT/2022/26**

**SUPPLY, INSTALLATION, COMMISSIONING AND MAINTENANCE OF AIR CONDITIONERS FOR NATIONAL SAVINGS BANK**

தேசிய சேமிப்பு வங்கி அங்கீகரிக்கப்பட்ட உள்நாட்டு முகவர்களிடமிருந்து மேற்காணும் கேள்விக்கு இயைபான முன்மொழிவுகளுக்கு முத்திரைக்குறி பொறிக்கப்பட்ட கேள்விகள் அழைக்கப்படுகின்றன.

| | |
|---|---|
| பெறுகையின் விளக்கம் | 12,000 BTU/hr Split Type Wall Mounted Inverter - 04Nos.<br>12,000 BTU/hr Ceiling Caste Inverter - 01 No.<br>18,000 BTU/hr Split Type Wall Mounted Inverter - 01No.<br>18,000 BTU/hr Ceiling Caste Inverter - 01 No.<br>24,000 BTU/hr Split Type Ceiling Mounted Inverter - 30 Nos. |
| பெறுகை முறை | தேசிய போட்டி ரீதியிலான கேள்வி கோரல் (NCB) |
| தேவைப்படுத்தப்படும் மீளளிக்கப் படாத கேள்விக் கட்டணம் | ரூபா 3,000.00 |
| சமர்ப்பிக்கப்பட தேவைப்படும் விலைமனுப் பெறுமதி | ரூபா 84,000.00 |
| விலைமனு ஆவணங்களை வழங்கும் இறுதித் திகதி மற்றும் நேரம் | 2022-10-20ஆம் திகதி பி.ப. 3.00 மணி |
| கேள்வி மூடும் திகதி மற்றும் நேரம் | 2022-10-21ஆம் திகதி மு.ப. 10.00 மணி |

1. எந்தவொரு கேள்விதாரர் சார்பாகவும் பிரதிநிதியொருவர் அல்லது உப பிரதிநிதியொருவர் அல்லது பெயர் குறிப்பிடப்பட்டவராக செயற்படும் எந்தவொரு நபரும் கேள்விக்காக விண்ணப்பிப்பதற்கு முன் 1987ஆம் ஆண்டின் 03ஆம் இலக்க பொது ஒப்பந்தங்கள் சட்டத்தின் கீழ் பதிவு செய்து கொள்ளல் கட்டாயமாகும் என்பதுடன் அவர் சார்பில் ஒப்பந்தத்தைப் பதிவு செய்து கொள்ளல் கட்டாயமாகும்.
2. 2022-09-30ஆம் திகதியிலிருந்து 2022-10-20ஆம் திகதி வரை வேலை நாட்களில் மு.ப. 8.30 மணியிலிருந்து பி.ப. 3.00 மணி வரை கொழும்பு-03, காலி வீதி, 255ஆம் இலக்கத்திலுள்ள தேசிய சேமிப்பு வங்கியின் வழங்கல்கள் பிரிவு, வழங்கல்கள் முகாமையாளரிடமிருந்து எழுத்துருவிலான கோரிக்கையொன்றின் பேரில் விலைமனு ஆவணங்களை பெற்றுக்கொள்ளலாம்.
3. முறையாகப் பூர்த்தி செய்யப்பட்ட விலைமனுக்கோரல் ஆவணங்கள் மேலே சுட்டிக்காட்டப்பட்டுள்ளவாறான தொகைக்கானதும், தேசிய சேமிப்பு வங்கியினால் ஏற்றுக்கொள்ளும் தன்மையிலுள்ளதும் வர்த்தக வங்கியொன்றினால் வழங்கப்பட்டதும் கேள்வியை திறக்கும் திகதியிலிருந்து ஆகக்குறைந்த காலப்பகுதியான 105 நாட்காட்டி நாட்களுக்கு செல்லுபடியாகும் தன்மையிலுள்ளதுமான வங்கி உத்தரவாதத்துடன்/விலைமனுப் பிணையொன்றுடன் இணைக்கப்பட்டிருத்தல் வேண்டும்.
4. விலைமனுக்கள் உரிய திகதியன்று மு.ப. 10.00 மணிக்கு அவைகளை மூடியதும் உடனடியாகவே திறக்கப்படுமென்பதுடன், மு.ப. 10.00 மணிக்கு பின்னர் பெற்றுக் கொள்ளப்படும் விலைமனுக்கள் நிராகரிக்கப்பட்டு திறக்கப்படாமலேயே திருப்பி அனுப்பப்படும்.
5. எந்தவொரு அல்லது அனைத்து விலைமனுக்களையும் நிராகரிப்பதற்கான உரிமையை கொண்டிருப்பதுடன், எவ்வித காரணங்களையும் முன் வைக்காமல் பாகமொன்றை ஏற்றுக்கொள்வதற்கான உரிமையை தேசிய சேமிப்பு வங்கி கொண்டுள்ளது.

இது தொடர்பான மேலதிக விபரங்களை தேசிய சேமிப்பு வங்கியின் (வழங்கல்) சிரேஷ்ட முகாமையாளரிடமிருந்து பெற்றுக்கொள்ளலாம்.

**தலைவர் - கூட்டு வர்த்தக பெறுகைக்குழு – மேல் மட்டம்,**
**தேசிய சேமிப்பு வங்கி,**
**இல. 255, காலி வீதி, கொழும்பு-03.**

NSB

## தேசிய சேமிப்பு வங்கி

## விலைமனுக்களுக்கான அழைப்பு

**கேள்வி இல: NSB/PT/ITE/2021/24**

இங்கு காட்டப்பட்டுள்ள கேள்விக்கு இயைபான பொருட்களை வழங்குதல், விநியோகித்தல், பொருத்துதல், செயற்பாடுத்திக் காண்பித்தல் மற்றும் பராமரிப்பதற்காக அங்கீகரிக்கப்பட்ட முதன்மை உற்பத்தியாளர்கள் / வழங்குநர்கள் அல்லது அவர்களின் இலங்கைக்கான உத்தியோகபூர்வ உள்நாட்டு முகவர்களிடமிருந்து முத்திரைக்குறி பொறிக்கப்பட்ட கேள்விகள் இத்தால் அழைக்கப்படுகின்றன.

| | |
|---|---|
| **பெறுகையின் விளக்கம்** | ENDPOINT SECURITY PROTECTION SOLUTION FOR CRITICAL IT SERVERS - CLIENT COMPUTERS |
| **பெறுகை முறை** | தேசிய போட்டி ரீதியிலான கேள்வி கோரல் (NCB) |
| **தேவைப்படுத்தப்படும் மீளளிக்கப்படாத கேள்விக் கட்டணம்** | ரூபா 2,000.00 |
| **சமர்ப்பிக்கப்பட தேவைப்படும் விலைமனுப் பெறுமதி** | ரூபா 40,000.00 |
| **விலைமனு ஆவணங்களை வழங்கும் இறுதித் திகதி மற்றும் நேரம்** | 2022-10-20ஆம் திகதி பி.ப. 3.00 மணி |
| **கேள்வி மூடும் திகதி மற்றும் நேரம்** | 2022-10-21ஆம் திகதி மு.ப. 10.00 மணி |

1. 2022-09-30ஆம் திகதியிலிருந்து 2022-10-20ஆம் திகதி வரை வேலை நாட்களில் மு.ப. 8.30 மணியிலிருந்து பி.ப. 3.00 மணி வரை கொழும்பு-03, காலி வீதி, 255ஆம் இலக்கத்திலுள்ள தேசிய சேமிப்பு வங்கியின் வழங்கல்கள் பிரிவு, வழங்கல்கள் முகாமையாளரிடமிருந்து எழுத்துருவிலான கோரிக்கையொன்றின் பேரில் விலைமனு ஆவணங்களை பெற்றுக்கொள்ளலாம்.
2. முறையாகப் பூர்த்தி செய்யப்பட்ட விலைமனுக்கோரல் ஆவணங்கள் மேலே சுட்டிக்காட்டப்பட்டுள்ளவாறான தொகைக்கானதும், தேசிய சேமிப்பு வங்கியினால் ஏற்றுக்கொள்ளும் தன்மையிலுள்ளதும் வர்த்தக வங்கியொன்றினால் வழங்கப்பட்டதும் கேள்வியை திறக்கும் திகதியிலிருந்து ஆகக்குறைந்த காலப்பகுதியான 91 நாட்காட்டி நாட்களுக்கு செல்லுபடியாகும் தன்மையிலுள்ளதுமான வங்கி உத்தரவாதத்துடன்/ விலைமனுப் பிணையொன்றுடன் இணைக்கப்பட்டிருத்தல் வேண்டும்.
3. விலைமனுக்கள் உரிய திகதியன்று மு.ப. 10.00 மணிக்கு அவைகளை மூடியதும் உடனடியாகவே திறக்கப்படுமென்பதுடன், மு.ப. 10.00 மணிக்கு பின்னர் பெற்றுக் கொள்ளப்படும் விலைமனுக்கள் நிராகரிக்கப்பட்டு திறக்கப்படாமலேயே திருப்பி அனுப்பப்படும்.
4. எந்தவொரு அல்லது அனைத்து விலைமனுக்களையும் நிராகரிப்பதற்கான உரிமையை கொண்டிருப்பதுடன், எவ்வித காரணங்களையும் முன் வைக்காமல் பாகமொன்றை ஏற்றுக்கொள்வதற்கான உரிமையை தேசிய சேமிப்பு வங்கி கொண்டுள்ளது.

இது தொடர்பான மேலதிக விபரங்களை தேசிய சேமிப்பு வங்கியின் (வழங்கல்) சிரேஷ்ட முகாமையாளரிடமிருந்து பெற்றுக்கொள்ளலாம்.

**தலைவர் - கூட்டு வர்த்தக பெறுகைக்குழு – கீழ் மட்டம்,**
**தேசிய சேமிப்பு வங்கி,**
**இல. 255, காலி வீதி,**
**கொழும்பு-03.**

## சிறு விளம்பரம்



### மோட்டார் வாகனங்கள்

### வர்த்தகம்



122

**மோட்டார் சைக்கிள், திரீவீலர்கள்**

விற்பனைக்கு

WP QO-9225 Bajaj, 2008, CP QD-8408 Bajaj, 2006, three-wheel கூடிய விலைக்கு கேள்விக்கு வெலிபல் பினான்ஸ் பிஎல்சி இல. 310, காலி வீதி, கொழும்பு03. தொ.பே. 0711 2 10 810 057223

Repeat Your ad For Better Offers



218

**மருத்துவ பொருட்கள்/ சிகிச்சை**

New Thihariya Abdeen Medical, 116C, Colombo - Kandy Road, Thihariya Junction Next to Petrol Shed 0 740656333. எல்லா வித மருத்துவ ஆய்வுகூட பரிசோதனைகள் தரமான ஆய்வுகூடம் மூலம் பெற்றுக் கொள்ளவும். உடல் உறுப்புக்களின் சீராக்களுக்கும், தோல் நோய்கள், சிறுநீர் தொற்று மாதவிடாய் ஒழுங்கீனம் உட்பட எல்லா நோய்களுக்கும் தொடர்பு கொள்ளவும். 055040

Best way to fulfil your Future Dreams

Marriage Proposals

in the

Sunday Observer

## விலை கோரலுக்கான அழைப்பு

### மேல் மாகாண சபை

### பொறியியல் பணியகம்

1. பின்வருமாறு விபரிக்கப்பட்டுள்ள வேலைகளுக்காக இயைபுடைய பிராந்தியப் பொறியியலாளர் பெறுகைக் குழுத் தலைவரினால் தகுதி மற்றும் தகைமை வாய்ந்த விலைமனுதாரர்களிடமிருந்து முத்திரைக் குறி பொறிக்கப்பட்ட விலைமனுக்கள் கோரப்படுகின்றன.
2. I. தேசிய போட்டி ரீதியில் விலைக்கோரல் மூலம் ஒப்பந்ததாரர்கள் தெரிவு செய்யப்படுவர். 04/2016(iii)ஆம் இலக்க நிதிச் சுற்றறிக்கையின் பிரகாரம் (வெட் மற்றும் ஏனைய வரிகள் இன்றி) மொத்தப் பெறுகையின் பெறுமதி 50 மில்லியன் ரூபாவுக்குக் குறைவாக இருப்பதனால் பிராந்திய முன்னுரிமை மற்றும் CIDA பதிவுத் தர முன்னுரிமை பிரயோகிக்கப்படும்.
3. ஒப்பந்தத்தைப் பெற்றுக்கொள்ளும் வெற்றிகரமான விலைகூறுநர் அபகீர்த்தியாளர் பட்டியலில் உள்வாங்கப்பட்டவர்களாக இருத்தல் ஆகாது என்பதுடன் விலைமனு ஆவணத்தின் பிரகாரம் பின்வரும் தேவைப்பாடுகளைப் பூர்த்தி செய்திருத்தல் வேண்டும்

| (1) தொ. இல. | (2) ஒப்பந்தத்தின் இலக்கம் | (3) வேலையின் பெயர் | (4) 03ஆம் இலக்க பொது ஒப்பந்தத் தேவைப்பாடு | (5) CIDA பதிவு | (6) மீளளிக்கப் படாத கட்டணம் (ரூபா) | (7) விலைமனுப் பிணை / விலைமனுப் பிணையின் செல்லுபடியாகும் காலம் | (8) விலைமனு ஆவணங்கள் வழங்கப்படும் இடம் மற்றும் தொலைபேசி இலக்கம் |
|---|---|---|---|---|---|---|---|
| 1 | WP/PU/CON/22/172 | அவிசாவளை மாவட்ட பொது வைத்தியசாலை சாக்கடை வழியின் புதுப்பித்தல் வேலைகள் | இல்லை | C9 மற்றும் C8 | 1,000.00 | ரொக்கப் பண வைப்பு - ரூபா 6,000.00 | பிரதேச பொறியியலாளர் அலுவலகம் (ஹோமாகம), நீதிமன்ற வீதி, ஹோமாகம. தொலைபேசி இல-: 0112-855719 |
| 2 | WP/PU/CON/22/173 | பாதுக்க மாவட்ட வைத்தியசாலையின் தொழிலாளர் விடுதிகளின் புதுப்பித்தல் வேலைகள் மற்றும் சிற்றூழியர் விடுதிகளின் புதுபித்தல் மற்றும் நவீனமயப்படுத்தல் வேலைகள் | ஆம் | C7 மற்றும் C6 | 2,500.00 | ரொக்கப் பண வைப்பு - ரூபா 32,000.00 விலைமனுப் பிணை முறி - ரூபா 64,000.00 | |
| 3 | WP/PU/CON/22/174 | ஹோமாகம ஆதார வைத்தியவசாலை சமையலறை கூரையின் திருத்தவேலைகள் | ஆம் | C7 மற்றும் C6 | 3,000.00 | விலைமனுப் பிணை முறி - ரூபா 100,000.00 | |
| 4 | WP/PU/CON/22/175 | அவிசாவளை மாவட்ட பொது வைத்தியசாலையில் HO விடுதியின் கூரை புதுப்பித்தல் வேலைகள் | ஆம் | C7 மற்றும் C6 | 3,000.00 | ரொக்கப் பண வைப்பு - ரூபா 40,000.00 விலைமனுப் பிணை முறி - ரூபா 80,000.00 | |
| 5 | WP/PU/CON/22/176 | பாதுக்க மாவட்ட வைத்தியசாலையிலுள்ள அத்தியாவசிய புதுப்பித்தல் வேலைகள் மற்றும் விஸ்தரிப்புகள் | இல்லை | C9 மற்றும் C8 | 1,000.00 | ரொக்கப் பண வைப்பு - ரூபா 8,000.00 | |
| 6 | WP/PU/CON/22/177 | மேமா/கொ/சங்கமித்தா மகளிர் வித்தியாலயத்தில் தடுப்புச் சுவர் மற்றும் எல்லைச் சுவரை நிர்மாணித்தல் | இல்லை | C8 மற்றும் C7 | 2,000.00 | ரொக்கப் பண வைப்பு - ரூபா 25,000.00 விலைமனுப் பிணை முறி - ரூபா 50,000.00 | பிரதேச பொறியியலாளர் அலுவலகம், இல. 151/4/2/1, மாளிகாவத்த பிளேஸ், மாளிகாவத்தை, கொழும்பு-10. தொலைபேசி-: 011-2447773 |
| 7 | WP/PU/CON/22/178 | மேமா/கம்.:.தொம்பே பிரிவெனா வித்தியாலத்தின் 70'×25' இரண்டு மாடிக் கட்டிடத்தின் திருத்தவேலைகள் | ஆம் | C6 மற்றும் C5 | 3,500.00 | விலைமனுப் பிணை முறி - ரூபா 110,000.00 | பிரதேச பொறியியலாளர் அலுவலகம் கம்பஹா, நீதிமன்ற வீதி, கம்பஹா. தொலைபேசி இல. 033-2222515 |
| 8 | WP/PU/CON/22/179 | ஜா-எல மாவட்ட வைத்தியசாலையின் ETU கட்டிட நிர்மாணத்தை பூர்த்தியாக்கல் (இறுதி நிலை) | ஆம் | C8 மற்றும் C7 | 2,500.00 | ரொக்கப் பண வைப்பு - ரூபா 30,000.00 விலைமனுப் பிணை முறி - ரூபா 60,000.00 | பிரதேச பொறியியலாளர் அலுவலகம், வத்தளை, இல. B/25/1, மகுள்பொக்குண வீதி, ராகம. தொலைபேசி இல. 0112952126 |
| 9 | WP/PU/CON/22/180 | தக்ஷிலா மகா வித்தியாலயத்திலுள்ள (பொலிஸ் நிலையத்திற்கு அருகில்) 40'×48' மூன்று மாடிக் கட்டிடத்தின் இரண்டாம் மாடியின் மிகுதி வேலைகள் | இல்லை | C8 மற்றும் C7 | 2,000.00 | ரொக்கப் பண வைப்பு - ரூபா 25,000.00 விலைமனுப் பிணை முறி - ரூபா 50,000.00 | பிரதேச பொறியியலாளர் அலுவலகம், ஹொரண, பல்லபிட்டிய, ஹொரண. தொலைபேசி: 034-2261019 |
| 10 | WP/PU/CON/22/181 | பிம்புர ஆதார வைத்தியசாலையில் தற்போதுள்ள புதிய O.P.D PCU மற்றும் X-ray கட்டிடத்திற்கு நடைபாதையை நிர்மாணித்தல் (படிநிலை 1) | ஆம் | C6 மற்றும் C5 | 7,000.00 | விலைமனுப் பிணை முறி - ரூபா 250,000.00 | பிரதேச பொறியியலாளர் அலுவலகம், மத்துகம. ஆனந்த சிராஸ்தலாய, மத்துகம. தொலைபேசி இல. 034-2243082 |

04. இதில் ஆர்வம் கொண்டுள்ள விலைமனுதாரர்கள் மேலதிக விபரங்களை அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள இயைபுடைய பொறியியல் அலுவலகங்களில் பெற்றுக்கொள்ளலாம் என்பதுடன் அலுவலக நேரத்தினுள் இதே அலுவலகத்தில் விலைமனு ஆவணங்களை இலவசமாகப் பரீட்சித்துப் பார்க்கலாம்.

05. மீளளிக்கப்படாத கட்டணத்தை (01 முதல் 09 வரையான திட்டங்களுக்கு) 2022-09-30ஆம் திகதி முதல் 2022-10-13ஆம் திகதி வரையும் மற்றும் (10ஆம் இலக்க திட்டத்திற்கு) 2022-09-30ஆம் திகதி முதல் 2022-10-20ஆம் திகதி வரையுமான எந்தவொரு வேலை நாளிலும் மு.ப. 9.00 மற்றும் பி.ப. 03.00 மணிக்கிடையில் மேல் மாகாண சபைக்குச் செலுத்தியதன் பின் இயைபுடைய பிரதேச பொறியியலாளர் அவர்களுக்கு (அட்டவணையின் 08ஆம் நிரலில் குறிப்பிடப்பட்டுள்ளதன் பிரகாரம்) எழுத்து மூல விண்ணப்பமொன்றைச் செய்வதன் பேரில் எந்தவொரு வளமுள்ள விலைமனுதாரர் அல்லது அவரது அதிகாரபூர்வ பிரதிநிதி முழுமையான விலைமனு ஆவணத் தொகுதியொன்றைக் கொள்வனவு செய்யலாம். கொடுப்பனவை ரொக்கப் பணமாகச் செலுத்துதல் வேண்டும்.

06. முத்திரைக் குறி பொறிக்கப்பட்ட நகல் பிரதிகளுடனான விலைமனுக்களை வெவ்வேறான கடித உறைகளில் இட்டு கடித உறையின் இடதுபக்க மேல் மூலையில் செயற்றிட்டத்தின் பெயரைக் குறிப்பிட்டு இரு நகல்களில் தயாரிக்கப்பட்ட விலைமனுக்களை இயைபுடைய பிரதேச பொறியியலாளர் அலுவலகத்திற்கு (அட்டவணையின் 08ஆம் நிரலில் குறிப்பிடப்பட்டுள்ளதன் பிரகாரம்) (01 முதல் 09 வரையான திட்டங்களுக்கு) 2022-10-14ஆம் திகதி மு.ப. 10.30 மணி அல்லது அதற்கு முன்னரும் மற்றும் (10ஆம் இலக்க திட்டத்திற்கு) 2022-10-21ஆம் திகதி மு.ப. 10.30 மணி அல்லது அதற்கு முன் இயைபுடைய அதிகாரிகளுக்கு முகவரியிட்டுக் கிடைக்கச் செய்தல் வேண்டும். விலைமனுக்கள் ஏற்றுக்கொள்வது நிறைவடைந்த உடனடுத்து அவ்வேளையிலேயே விலைமனுதாரர்கள் அல்லது அவர்களின் தெரிவு செய்யப்பட்ட பிரதிநிதிகள் முன்னிலையில் விலைமனுக்கள் திறக்கப்படும். பிந்திக் கிடைக்கும் விலைமனுக்கள் நிராகரிக்கப்படும்.

07. சகல விலைமனுக்களுடனும் விலைமனுப் பிணை முறி அல்லது ரொக்கப் பண வைப்பு பற்றுச்சீட்டு இணைக்கப்பட்டிருத்தல் வேண்டும். (அட்டவணையின் 07ஆம் நிரலில் குறிப்பிடப்பட்டுள்ளதன் பிரகாரம்). செல்லுபடிக் காலமானது விலைமனு ஆவணத்தின் பிரகாரமாகவிருத்தல் வேண்டும்.

08. விலைமனுதாரர்கள் 1987இன் 3ஆம் இலக்க பொது ஒப்பந்தங்கள் சட்டத்தின் கீழ் பதிவு செய்து கொண்டிருத்தல் வேண்டும் என்பதுடன் பதிவுச் சான்றிதழைச் சமர்ப்பித்தல் வேண்டும். (அட்டவணையின் 04ஆம் நிரலில் குறிப்பிடப்பட்டுள்ளதன் பிரகாரம்)

**பெறுகைப் பிரிவு,**
**பொறியியல் பணியகம் (மே.மா),**
**5ஆம் மாடி, 204, டென்சில் கொப்பேகடுவ மாவத்தை, பத்தரமுல்ல.**
**2022-09-29**
**தொலைபேசி: 0112-092504, தொலைநகல்: 0112-092505**




# முதியோர்கள் எதிர்நோக்கும் சவால்கள்

பல ஆண்டுகளாக குடும்பத்திற்கு தூண்களாக இருந்து பெரும் ஆதரவு தந்து வந்தவர்கள் இன்று அவர்களில் சிலர் குழந்தைகளின் ஆதரவு இல்லாமல் பெரும் சிரமத்தில் இருக்கின்றார்கள். இவர்களில் ஒரு தொகுதியினர் நோய்களால் பாதிக்கப்பட்டு அதன் செலவுகளை சமாளிக்க முடியாதவர்களாக காணப்படுகின்றனர். இன்னொரு தொகுதியினர் பிள்ளைகளை வெளிநாடு அனுப்பிவிட்டு தனிமையில் வாழ்பவர்களாக உள்ளனர். இன்னும் சிலர் பிந்திய திருமணப் பிள்ளைப்பேற்றின் காரணமாக வாழ்க்கை செலவுகளை சமாளிக்க முடியாது திண்டாடுகின்றனர். இன்னும் சிலர் பெற்றோரை பராமரிக்க முடியாது முதியோர் இல்லத்திற்கு அனுப்பப்படுகின்றனர்.

அரச உத்தியோகத்தில் இருந்து ஓய்வு பெற்றவர்கள் தங்கள் ஓய்வூதியத்தை பெற வருடாவருடம் உயிருடன் இருப்பதனை உறுதிசெய்ய வேண்டியவர்களாக உள்ளனர், அது மாத்திரமன்றி போக்குவரத்து மற்றும் அலுவலகங்களில் முதியவர்களுக்கு முன்னுரிமை என வார்த்தைகளால் சொல்லப்படுகின்ற போதும் அதனை நடைமுறைப்படுத்துவதில் உள்ள குறைபாடு காரணமாக முதியவர்கள் பல்வேறு அசௌகரியங்களை எதிர்நோக்குகின்றனர்.

## சுகாதார நிலை

முதியவர்களின் சுகாதார பிரச்சினைகள் பெரும் சவாலாக உள்ளதெனவும் நல்வாழ்விற்காக உழைத்த முதியவர்கள் அடிப்படை சுகாதார வசதிகளுக்காக அவதிப்படும் நிலை காணப்படுகிறது. முதியவர்களிற்கு ஆதரவு கொடுக்க ஆட்பற்றாக்குறை உள்ளதெனவும் அவர்களுடன் உட்கார்ந்து பேசுவதற்கு இளைய சமுதாயத்தினருக்கு நேரமில்லாது போய்விடுகிறது. முதியோர் தமது செயற்பாடுகளை சுதந்திரமாக செய்யக்கூடியதாக இருத்தல், இயங்கக்கூடிய தன்மை, உடன்பாடான தன்மை, நாட்பட்ட நோய்களை கொண்டிருக்காமை போன்றவற்றை தமது ஆரோக்கியமாக உணர்வதாக குறிப்பிட்டுள்ளதுடன் வயதான காலத்தில் ஆரோக்கியம் குன்றுவது தவிர்க்க முடியாதெனினும் ஆரோக்கியத்துடன் தொடர்புடைய இக்காரணிகள் பொருத்தமான தலையீடுகள், மற்றும் ஆதரவினூடாக மாற்றப்படக்கூடியதெனவும் கூறப்பட்டுள்ளது.

மனிதன் முதுமைப் பருவத்தினை எட்டும் போது எலும்பு மூட்டுக்கள் வீக்கமடைதல், தொடர் முதுகுவலி, இடுப்புவலி, எலும்புகள் நலிவுறுதல், முள்ளந்தண்டின் உட்பகுதி குறுக்கம் அடைதல் போன்றவற்றினால் முதியோர் உடல்ரீதியான நோய்களை எதிர்கொள்கின்றனர். இது அவர்களின் இயல்பான செயற்பாடுகளை மேற்கொள்வதற்கு பெரும் சவாலாக உள்ளது.

முதியோரின் உடல்நிலையினையும் அவர்களின் செயற்பாடுகளையும் நோக்கின் இவர்கள் உயர் இரத்த அழுத்தம், நீரிழிவு, தொய்வு போன்ற நோய்களினால் பாதிக்கப்பட்டவர்களாகவும் என்பு, மூட்டு போன்றவற்றின் தேய்மானங்களினால் உடலினுடைய இயக்கம் குறைந்தவர்களாகவும் காணப்படுகின்றனர். இவற்றுடன் முதியோர், தோல் சுருக்கமடைந்திருத்தல், எடை குறைவானவர்களாக இருத்தல், புலன்களில் குறைபாடுடையவர்களாக இருத்தல் போன்ற முதுமை வெளிப்பாடுகளைக் கொண்டவர்களாக இருப்பதனை காணக்கூடியதாக உள்ளது.

முதியோர் தமது தேவைகளை பல்வேறுபட்ட சிரமங்களின் மத்தியில் நிறைவேற்றுவதனை அவதானிக்கக்கூடியதாக உள்ளது. தமது உடல் இயலாமை காரணமாக 63.33 % மானோர் தமது தேவைகளை நிறைவேற்ற தமது பிள்ளைகளில் தங்கியிருக்க வேண்டிய நிலை காணப்படுகிறது. இருப்பினும் ஏனைய 36.66 % மானோர் தமது செயற்பாடுகளை தாமே மேற்கொள்கின்ற அளவிற்கு ஓரளவு ஆரோக்கியம் உடையவர்களாக காணப்படுகின்றனர். முதியோர்கள் பிறரில் தங்கியிருக்க வேண்டிய நிலை காரணமாக உளரீதியாக பாதிப்படைந்தவர்களாக உள்ளனர்.

இன்றைய நவீன வாழ்க்கை முறையினால் முதியோர் பராமரிப்பானது பின்தங்கியதாக இருப்பதனை அறிந்து கொள்ளக்கூடியதாக உள்ளது. பிள்ளைகள், வேலை மற்றும் வெளிச்செயற்பாடுகளுக்காகவும் வீட்டை விட்டு வெளியில் அதிக நேரம் செலவழிப்பதனால் முதியோர்களை பராமரிப்பதற்கான நேரம் குறைவாகவே காணப்படுகிறது. இதனால் இவர்கள் நோய் நிலையினை கவனிப்பது என்பது குறைவாக உள்ளது. அத்துடன் முதியோர்கள் தமது பிள்ளைகளை கஸ்டப்படுத்தக்கூடாது என்ற எண்ணத்தில் பிள்ளைகளிடம் நோய், இயலாமை பற்றி கூறாமல் உள்ளனர். இதனால் அவர்கள் ஆரோக்கியமானது நலிவுற்ற நிலையில் இருப்பதனை காணக்கூடியதாக உள்ளது.

திட்டமிடப்படாத வீட்டின் அமைப்பு முறை மூலம் முதியவர்கள் அன்றாட வாழ்க்கையில் பல சிரமங்களை எதிர்கொள்கின்றனர். அதாவது மாடிவீடுகளில் வசிப்பவர்கள் படிக்கட்டுக்களில் ஏறி இறங்குவதிலும் நெருக்கமான சனத்தொகையினால் சுவாசிப்பதிலும் கஸ்ரப்படுகின்றனர் என்பதுடன் மலசலகூடங்களை பயன்படுத்துவதிலும் அதனை கையாள்வதிலும் எரிச்சலடைந்து காணப்படுகின்றனர். அது மாத்திரமன்றி அதிகமான மலசலகூடங்களில் வழுக்கி விழுந்து உடல் காயங்களையும் உண்டு பண்ணுகின்றனர். வெற்றிலை பாக்கு பாவனையினை மேற்கொள்பவர்கள் எச்சில் துப்புவதில் சிரமங்களை எதிர்கொள்கின்றனர். இதன் விளைவாக மற்றவர்களுடைய நாகரிக வாழ்க்கைக்கு அஞ்சி சமூக இணைப்புக்களை குறைத்துகொள்கின்றனர். கதிரையை விட்டு எழுந்தால் விழுந்து விடுவேன் என அஞ்சி கதிரையை விட்டு எழுவதையே குறைத்து விடுகின்றனர்.

முதியோர் தமது பிள்ளைகள், பேரப்பிள்ளைகள் தம்முடன் நேரம் செலவழிப்பது குறைவாக உள்ளதென குறிப்பிடுகின்றாகள். இதனடிப்படையில் அன்புத்தேவையை எதிர்பார்க்கும் உளநிலை உடையவர்களாக இருப்பதனை அறிந்துகொள்ளக்கூடியதாக உள்ளது. முதியோர்களில் 56.66 % மான முதியோர் அதிகளவிலான நேரத்தினை தனிமையில் கழிப்பவர்களாக உள்ளனர். இதனால் தமது ஆசைகள், ஏக்கங்களை பிள்ளைகளுக்கோ, பேரப்பிள்ளைகளுக்கோ அல்லது ஏனைய உறவினர்களுக்கோ



தெரியப்படுத்துவதற்கான சந்தர்ப்பங்களை அதிகளவில் இழந்தவர்களாக காணப்படுகின்றனர். இவற்றுடன் முதியவர்களில் பெரும்பாலானோர் வாழ்க்கை துணையினை இழந்தவர்களாக இருப்பதனாலும் உளரீதியாக பாதிக்கப்பட்டவர்களாக உள்ளனர்.

முதியவர்கள் வீட்டை விட்டு வெளியில் கோயில் போன்ற இடங்களுக்கு சென்றுவர வேண்டும் எனும் விருப்பினைக் கொண்டவர்களாக இருந்தாலும் ஏனையவர்களின் துணையுடன் செல்ல வேண்டிய நிலை காணப்படுவதனால் தாம் வெளியில் செல்வது மிகக் குறைவென குறிப்பிடுகின்றனர். இதனால் உள அழுத்தங்களுக்குட்பட்டிருப்பதனையும் காணக்கூடியதாக உள்ளது.

இவற்றுடன் 43.34 % முதியவர்கள் தமது பேரப்பிள்ளைகளுடன் தமது நேரத்தை செலவழிப்பதனால் தாம் மகிழ்ச்சியுடன் இருப்பதாக குறிப்பிட்டதனடிப்படையில் இவர்கள் தமது உறவினர்களுடன் நேரம் செலவழிப்பதனை விரும்பும் மனநிலை உடையவர்களாக இருப்பதனையும் கண்டறியக்கூடியதாக உள்ளது.

முதியவர்கள் பெரும்பாலும் மருத்துவத் தேவைகளைக் கொண்டவர்களாகவே காணப்படுகின்றனர். இதனால் இவர்கள் இத்தேவைகளை நிறைவேற்றும் பொருட்டு மருத்துவமனைகளுக்கு செல்லவேண்டிய நிலை காணப்படுகிறது. இத்தகைய நிலையில் இவர்களது உடல்நிலை காரணமாக வைத்தியசாலைக்குச் செல்வதில் பல்வேறு சிரமங்களை எதிர்கொள்பவர்களாக உள்ளனர்.

முதியோர்களின் பொருளாதார நிலை என்று பார்க்குமிடத்து முதியோர்களுக்கும் பிள்ளைகள் ஓரளவிற்கு பொருளாதார ரீதியாக ஆதரவு வழங்குபவர்களாக உள்ளனர். இவற்றுடன் இவர்களுள் 13.33 % மானோர் அரச ஓய்வூதியத்தினை பெற்றுக்கொள்பவர்களாகவும் 20 % வீதமானோர் முதியோர் கொடுப்பனவினை பெற்றுக்கொள்பவர்களாகவும் காணப்படுகின்றனர். இவர்களது பொருளாதார நிலையானது அவர்களது உடல்நிலை, நோய்நிலை போன்றவற்றிற்கான மருத்துவச்செலவுகளுடன் ஒப்பிட்டுப்பார்க்கும் போது பின்தங்கிய நிலையில் இருப்பதனை அறிய முடிகிறது. இவர்களில் 66 % மானோர் பொருளாதார நிலையில் தாம் ஏனையவர்களை எதிர்பார்க்க வேண்டி உள்ளதென்ற நிலைப்பாட்டில் தாம் உயிருடன் இல்லாமல் போய்விட வேண்டும் என்ற விரக்தி மனப்பான்மையுடன் இருப்பதனையும் அவதானிக்கக்கூடியதாக உள்ளது.

## சமூக நிலை

முதியவர்களின் சமூகநிலையினை நோக்குமிடத்து சமூக அங்கத்தவர்களில் பெரும்பாலானோர் தாமும் ஒரு நாள் முதியவர்கள் எனும் நிலையை அடைவோம் என்ற உண்மையை மறந்து முதியவர்களை அலட்சியம் செய்யும் போக்கு காணப்படுகிறது. முதியோருக்கு உதவி செய்யும் மனப்பாங்கென்பது அரிதாகவே உள்ளது. வைத்தியசாலை, பேரூந்து நிலையங்கள், கோவில்கள் போன்ற பொது இடங்களில் “பழசு”, “கிழடு” என்றெல்லாம் கேலி செய்யும் தன்மையையும் அவதானிக்கக்கூடியதாக உள்ளது. இத்தகைய தன்மைகளால் இவர்கள் மனம் வருந்தபவர்களாகவும் உளரீதியாக தாக்கத்திற்குட்பட்டிருப்பதனையும் அறியமுடிகிறது. முதியோர்களின் உடல் நிலையும் அவர்களின் செயற்பாடுகளும், முதியோர் பராமரிப்பு நிலை, முதியோர்களின் உளநிலை, முதியோர்களின் பொருளாதார நிலை, முதியவர்களின் சமூகநிலை என உளசமூக பிரச்சினைகள் காணப்படுகின்றன.

*- கிருஷாந்தி*

# பெரியவர்களின் வசதியை மேம்படுத்த நிதி நன்கொடை அளிக்கும் FRIENDS Adult Diapers

இலங்கையில் டார்லி பட்லர் அன்ட் கம்பனியால் சந்தைப்படுத்தப்படும் பிரண்ட்ஸ் அடல்ட் டயப்பர்ஸ், முதியோர்களின் வசதியை மேம்படுத்துவதில் தொடர்ந்து பங்களித்து வருகிறது. சமூகத்தில் அடிக்கடி புறக்கணிக்கப்பட்ட பிரிவினருக்குப் பயனளிக்கும் வகையில், அவர்களின் தற்போதைய கூட்டாண்மை சமூகப் பொறுப்பு (CSR) திட்டங்களின் ஓரங்கமாக, ஹெல்ப் ஏஜ் ஸ்ரீலங்காவிற்கு ஒரு மில்லியனுக்கும் அதிகமான நிதியுதவியை வழங்கியது, இது மருத்துவம் மற்றும் கண் பராமரிப்புக்கான நடமாடும் பேருந்துக்கான உபகரணங்களை கொள்வனவு செய்யப் பயன்படுத்தப்பட்டது. சிரேஷ்ட பிரஜைகளின் வாழ்க்கைத் தரத்தை மேம்படுத்த / பிரண்ட்ஸ் அடல்ட் டயப்பர்ஸ் மேற்கொள்ளும் 4வது **CSR** முயற்சியாக இது உள்ளது. முதியவர்களுக்கான டார்லி பட்லரின் பெருநிறுவன அர்ப்பணிப்பைக் குறிக்கும் வகையில், விற்கப்படும் ஒவ்வொரு FRIENDS அடல்ட் டயப்பர்ஸ் பொதியிலிருந்தும் நிதிப் பங்களிப்பு ஹெல்ப் ஏஜ் ஸ்ரீலங்காவுக்குச் செல்கிறது. FRIENDS வாடிக்கையாளர்களின் ஒவ்வொரு கொள்வனவின்போதும் சிரேஸ்ட குடிமக்களுக்கு பங்களிக்கப்படுகிறது, மேலும் அவர்கள் சிறந்த மற்றும் வசதியான வாழ்க்கையை நடத்த உதவுகிறது.

FRIENDS Adult Diapers பெரியவர்களின் உண்மையான நண்பன். வாழ்க்கையில் கூடுதல் ஆதரவு தேவைப்படும் பெரியவர்களின் ஆறுதலையும் நம்பிக்கையையும் மேம்படுத்துவதாக அறியப்படுகிறது. FRIENDS Adult Diapers முதியவர்களை கண்ணியத்துடனும் பெருமையுடனும் வாழ உதவுவதோடு, அவர்களுக்குத் தேவையான கவனத்தை அளிப்பதன் மூலம் அவர்களின் சுய கௌரவத்தைப் பேணுகின்றது.

டார்லி பட்லர் அன்ட் கம்பனி சமூகத்தின் முன்னேற்றத்தில் உண்மையான இதயப்பூர்வமான அக்கறை கொண்டுள்ளது மற்றும் அதன் விளைவாக இலங்கையில் FRIENDS Adult Diapers அறிமுகப்படுத்தப்பட்டது. நாட்டில் உள்ள முதியோர் சமூகத்தின் சிறந்த எதிர்காலத்திற்காக போராடுவதில் நிறுவனம் உறுதியாக உள்ளது. தலைமுறைகள் கடந்து செல்ல, பெரியவர்களின் நிலை மோசமடைகிறது. பெரியவர்களை ஆதரிப்பதன் முக்கியத்துவம் மற்றும் மதிப்பைப் பற்றிய விழிப்புணர்வை ஏற்படுத்துவதன் மூலமும், சமூகத்தில் முன்னேற்றத்திற்கு அவர்கள் எவ்வாறு பங்களிக்கிறார்கள் என்பதை முன்னிலைப்படுத்துவதன் மூலமும் இந்த மனநிலையை மாற்ற டார்லி பட்லர் தொடர்ந்தும் முயற்சிக்கின்றது.

FRIENDS Adult Diaperகள் இந்தியாவைச் சேர்ந்தவை என்பதால், அளவுகள் மற்றும் வடிவமைப்புகள் இலங்கையருக்கு கச்சிதமாகப் பொருந்துவதோடு ஆசுவாசமும் அளிக்கும். FRIENDS என்பது இந்தியாவின் முதல்தர வயது வந்தோருக்கான டயப்பர் வர்த்தக நாமம் என்பதோடு பாக்டீரியாவுக்கு எதிரான பாதுகாப்பு, அதிக உறிஞ்சும் திறன், ஈரத்தன்மை காட்டி, கசிவு பாதுகாப்பு மற்றும் எட்டு மணிநேர பாதுகாப்பு போன்ற பல சிறந்த பண்புகளை கொண்டது. சிறுநீரகத்தின் சுக்கிலச் சுரப்பிக் கோளாறுகள், மூலம், சிறுநீரக பிரச்சினைகள் போன்றவற்றால் அவதியுறுவோருக்கும் மற்றும் நீரிழிவு நோயாளிகளுக்கும் வயது வந்தோருக்கான டயப்பர்களை மருத்துவர்கள் பரிந்துரைக்கின்றனர். இது படுத்த படுக்கையாக அல்லது ஊனமுற்ற நோயாளிகளுக்கும் பயன்படுத்தப்படுகிறது. FRIENDS வயது வந்தோருக்கான டயப்பர்களைப் பயன்படுத்திய மில்லியன் கணக்கான



சிரேஷ்ட குடிமக்கள் கண்ணியத்துடன் சுறுசுறுப்பான வாழ்க்கை முறையைத் தழுவியுள்ளனர்.

பிரெண்ட்ஸ் அடல்ட் டயப்பர்கள் இந்தியாவில் சுகாதாரப் பொருட்களின் மிகப்பெரிய உற்பத்தியாளரான நோபல் ஹைஜீனால் தயாரிக்கப்படுகின்றது. இந்நிறுவனம் 2 தசாப்த கால அனுபவத்தையும், 40 ஏக்கர் பரப்பளவிலான அதிநவீன உற்பத்தி வசதியையும் கொண்டுள்ளது. இது ISO 9001:2015, WHO GMP மற்றும் ஐரோப்பிய தரநிலைகள் உட்பட பல சர்வதேச தரச் சான்றிதழ்களைப் பெற்றுள்ளது. அமெரிக்கா, அவுஸ்திரேலியா, நெதர்லாந்து, குவைத் மற்றும் கென்யா உட்பட **20+** நாடுகளுக்கு FRIENDS Adult Diaperகள் ஏற்றுமதி செய்யப்படுகின்றன.

கடந்த காலங்களில், டார்லி பட்லர் தனது பங்காளியான ஹெல்ப் ஏஜ் ஸ்ரீலங்காவுடன் இணைந்து முதியோர்களை மையமாக வைத்து பல்வேறு சமூகப் பொறுப்புணர்வு திட்டங்களை முன்னெடுத்துள்ளது.

முதியோர் தினத்தன்று முதியோருக்கான கொண்டாட்டங்களை நடத்துதல், குறைந்த வருமானம் பெறும் முதியோர் 30 பேருக்கு இலவச மருத்துவம் மற்றும் தேவையான மருத்துவ சேவைகளைப் பெறுவதற்கான “தேது புரவசி சுவாசஹானா“ உதவித்தொகை அட்டைகள் பரிசாக வழங்குதல் மற்றும் அவர்களுக்கு கல்வி கற்பதற்கான கருத்தரங்குகள் ஆகியவை அடங்கும். முதியவர்களின் மதிப்பைப் பற்றி மக்களிடையே நேர்மறையான விழிப்புணர்வைப் பரப்பும் அதே வேளையில், கதிர்காமத்தில் உள்ள முதியவர்களைக் கொண்டாடும் ஒரு நடைப்பயணமும் இடம்பெறும்.






இப்பத்திரிகை அஸோஸியேட்டட் நியூஸ் பேப்பர்ஸ் ஒப் சிலோன் லிமிடட் கம்பனியரால் கொழும்பு இல. 35, டி.ஆர். விஜயவர்தன மாவத்தையிலுள்ள லேக் ஹவுஸில் 2022 செப்டெம்பர் மாதம் 30ம் திகதி வெள்ளிக்கிழமை அச்சிட்டுப் பிரசுரிக்கப்பட்டது.

# இலங்கை லெஜன்ட்ஸ் அணியின் அரையிறுதிப் போட்டியில் மாற்றம்



இலங்கை லெஜன்ட்ஸ் மற்றும் மேற்கிந்திய தீவுகள் லெஜன்ட்ஸ் அணிகளுக்கு இடையிலான வீதிப் பாதுகாப்பு உலகத் தொடரின் அரையிறுதிப் போட்டி இன்றைய (30) தினத்திற்கு மாற்றப்பட்டுள்ளது.

நேற்று வியாழக்கிழமை நடைபெறவிருந்த இந்தப் போட்டி திகதி மாற்றப்பட்டிருக்கும் அதே நேரம் கடந்த புதன்கிழமை நடைபெற்ற இந்தியா மற்றும் மேற்கிந்திய தீவுகள் லெஜன்ட்ஸ் அணிகளுக்கு இடையிலான முதல் அரையிறுதிப் போட்டி மழை காரணமாக பாதியில் இடைநிறுத்தப்பட்டது.

முதலில் துடுப்பெடுத்தாடிய ஆஸி. லெஜன்ட்ஸ் 17 ஓவர்களில் ஐந்து விக்கெட்டுகளை இழந்து 136 ஓட்டங்களைப் பெற்ற நிலையில் இடைநிறுத்தப்பட்ட இந்தப் போட்டி நேற்று நடைபெற்றது.

டி.எம். டில்ஷான் தலைமையிலான இலங்கை லெஜன்ட்ஸ் அணி ஆரம்பச் சுற்றுப் போட்டிகளில் தோல்வியுறாத அணியாகவே அரையிறுதிக்கு முன்னேறியது. இந்தத் தொடரின் இறுதிப் போட்டி வரும் சனிக்கிழமை (01) மாலை 7.30க்கு ரைப்பூரில் திட்டமிட்டபடி நடைபெறும்.

# ரொட்டரி கழகத்தின் கொல்ப் கிளசிக் போட்டி ஒக்டோபரில்

றோயல் கொழும்பு கொல்ப் கழகம் மற்றும் டயலொக் என்டபிரைசஸ் உடன் இணைந்து கொழும்பு மாநகர ரொட்டரி கழகம் தொடர்ச்சியாக ஆறாவது ஆண்டாகவும் நடத்தும் பார் 3 கொல்ப் கிளசிக் போட்டி வரும் ஒக்டோபர் 29 ஆம் திகதி நடைபெறவுள்ளது.

இம்முறை இரு வெவ்வேறு குழுக்களாக பிரிக்கப்பட்ட ஒரு நாள் போட்டியாக நடைபெறவுள்ளது.

கொழும்பு மாநகர ரொட்டரி கழகத்தினால் மேற்கொள்ளப்படும் பல் சமூக அபிவிருத்தித் திட்டங்களுக்கு நிதி சேகரிக்கும் நோக்கிலேயே இந்த வருடாந்த கொல்ப் போட்டி நடத்தப்படுகிறது.




டயலொக் என்டபிரைசஸ் நிறுவனம் இந்த போட்டிகளுக்கு பிரதான அனுசரணை வழங்கும் நிலையில் சௌத் பீச் வெலிகம பிளாட்டினம் அனுசரணை வழங்குகிறது.

(படம்: சுதத் மலவீர)

# யாழ். மத்தியக் கல்லூரி அணிக்கு இலகு வெற்றி



இலங்கை 19 வயதின் கீழ் பிரிவு மூன்று பாடசாலை அணிகளுக்கு இடையிலான ஒருநாள் கிரிக்கெட் தொடரில் கடந்த புதன்கிழமை (28) நடைபெற்ற போட்டியில் யாழ். மத்தியக் கல்லூரி அணி, ஸ்ரீ பங்கானந்த தேசிய பாடசாலையை வீழ்த்தி வெற்றிபெற்றது.

தங்களுடைய சொந்த மைதானத்தில் நடைபெற்ற இந்தப் போட்டியில் நாணய சுழற்சியில் வென்ற யாழ். மத்தியக் கல்லூரி எதிரணிக்கு முதலில் துடுப்பெடுத்தாட பணித்தது. எனினும் ஸ்ரீ பங்கானந்த தேசிய பாடசாலை 176 ஓட்டங்களுக்கு சுருண்டது.

பந்துவீச்சில் ஆனந்த கஜன் 4 விக்கெட்டுகளையும் விதுசன் 3 விக்கெட்டுகளையும் பதம்பார்த்தனர். பதிலெடுத்தாடிய யாழ். மத்தியக் கல்லூரி 31.5 ஓவர்களிலேயே 3 விக்கெட்டுகளை மாத்திரம் இழந்து 180 ஓட்டங்களை பெற்று வெற்றியீட்டியது. மதீஷ்வரன் சஞ்சயன் (69) மற்றும் நிஷான்தன் அஜன் (50) அரைச்சதம் பெற்றனர்.

# களுத்துறை இளைஞர் லீக் அணிக்கு ருஸ்ளான் தெரிவு

பேருவளை விசேட நிருபர்



பேருவளை அல் ஹுமைஸரா தேசிய பாடசாலையில் 8ஆம் தரத்தில் கல்வி கற்கும் மாணவன் ருஸ்ளான் ஹிஷாம், 2022 ஆம் ஆண்டுக்கான 15 வயதுக்குட்பட்ட இளைஞர் லீக்கில், களுத்துறை மாவட்ட கடினப் பந்து கிரிக்கெட் அணிக்கு தெரிவு செய்யப்பட்டுள்ளார்.

களுத்துறை மாவட்ட பாடசாலைகளுக்கிடையில் பல நாட்களாக நடைபெற்ற தெரிவுச் சுற்றுப் போட்டிகளில் கலந்து கொண்ட மாணவர்களில், திறமையின் அடிப்படையில் ருஸ்ளான் ஹிஷாம் உட்பட 13 வீரர்கள் தெரிவு செய்யப்பட்டனர்.

சுழற்பந்து வீச்சாளரான இவர், தேசிய கிரிக்கெட் அணியில் இணைந்து விளையாட வேண்டும் என்பதே தனது எதிர்பார்ப்பு என்று குறிப்பிட்டுள்ளார்.

# தம்பலகாமம் பிரதேச செயலக கழக அணிக்கு பத்து பதக்கங்கள்

கந்தளாய் தினகரன் நிருபர்,
தம்பலகாமம் குறூப் நிருபர்



கிழக்கு மாகாண விளையாட்டு திணைக்களத்தின் ஏற்பாட்டில் 47ஆவது மாகாண மட்ட விளையாட்டு விழாவில் தம்பலகாமம் பிரதேச செயலக கழகம் சார்பாக பங்குபற்றிய வீரர்கள் 3 தங்கம் உட்பட 10 பதக்கங்களை வென்றுள்ளனர்.

கந்தளாய் லீலாரத்ன மைதானத்தில் அண்மையில் இந்தப் போட்டிகள் நடைபெற்றன. இந்த வீரர்கள் தேசிய மட்ட போட்டிகளிலும் பங்கேற்கவுள்ளனர்.

தம்பலகாமம் பிரதேச செயலாளர் ஜெயகௌரி ஸ்ரீபதி வழிகாட்டலுக்கிணங்க விளையாட்டு உத்தியோகத்தர் கே.எம். ஹாரிஸ் சிறப்பாக வழிநடாத்தியதுடன் இவர்களுக்கான பயிற்சியையும் வழங்கினார்.

# 'திப்பரே சம்பியன்ஷிப்' தொடர் ஆரம்பம்

விளையாட்டு இணையத்தளமான ThePapare.com ஒழுங்கு செய்திருக்கும், 3ஆவது திபப்பரே கால்பந்து சம்பியன்ஷிப் நேற்று (29) ஆரம்பமானது.

சுமார் மூன்று ஆண்டுகளுக்குப் பின் நடத்தப்படும் இந்த ஆண்டுக்கான தொடரில் இலங்கையில் கால்பந்து விளையாட்டில் முன்னணியில் உள்ள இருபது முன்னணி பாடசாலைகள் பங்கேற்றுள்ளன.

2020ஆம் ஆண்டின் முற்பகுதியில் நடைபெற்ற தொடரின் இரண்டாவது பருவகாலத்துக்கான இறுதிப் போட்டியில் கொழும்பு புனித பேதுரு கல்லூரியை தோற்கடித்த கொழும்பு ஸாஹிரா கல்லூரி தொடரின் நடப்புச் சம்பியனாக இம்முறை போட்டியில் களமிறங்குகிறது.

தொடரின் முதல் சுற்றில் ஐந்து அணிகள் கொண்ட நான்கு குழுக்களாகப் பிரிக்கப்பட்டு மோதல்கள் இடம்பெறவுள்ளதோடு, ஒவ்வொரு குழுவிலிருந்தும் முதல் இரண்டு இடங்களைப் பெறும் அணிகள் தொடரின் காலிறுதிச் சுற்றுக்கு முன்னேறும்.



# சப்தகோசி உயர் அணை திட்டத்திற்கு உடன்பாடு



இந்தியா மற்றும் நேபாளம் சப்தகோசி உயர் அணைத் திட்டத்தை மேலதிக ஆய்வுகள் மூலம் முன்னெடுத்துச் செல்ல ஒப்புக்கொண்டுள்ளன.

நேபாள தலைநகர் கத்மண்டுவில் இரு தரப்பு மூத்த அதிகாரிகள் கடந்த வாரம் சந்தித்தபோது இது பற்றி முடிவு எடுக்கப்பட்டுள்ளது. சப்தகோசி உயர் அணை, நேபாளத்தின் சப்தகோசி அணையில் பல்நோக்கு திட்டம் ஒன்றாக முன்மொழியப்பட்டது. தென்கிழக்கு நேபாளம் மற்றும் வடக்கு பிஹாரில் வெள்ளத்தை கட்டுப்படுத்துவது மற்றும் நீர் மின் உற்பத்தி மேற்கொள்வது இந்தத் திட்டத்தின் முதன்மை நோக்காகும்.

# ஒத்துழைப்பை அதிகரிக்க குவாட் அமைப்பு இணக்கம்



இந்தோ – பசிபிக் பிராந்தியத்தில் சீனாவை அச்சுறுத்தும் செயற்பாடுகளுக்கு மத்தியில் இந்தப் பிராந்தியத்தின் தற்போதைய நிலையை மாற்றுவது அல்லது பதற்றங்களை அதிகரிக்க முயற்சிக்கும் எந்தவொரு ஒருதலைப்பட்சமான செயல்களையும் கடுமையாக எதிர்ப்பதாக இந்தியா, அவுஸ்திரேலியா, ஜப்பான் மற்றும் அமெரிக்காவின் குவாட் அமைப்பு கடும் எதிர்ப்பை வெளியிட்டுள்ளது.

77ஆவது ஐக்கிய நாடுகள் பொதுச் சபைக் கூட்டத்திற்கு மத்தியில் நியூயோர்க்கில் சந்தித்த இந்தக் குழுவின் வெளிநாட்டு அமைச்சர்கள் இந்த அறிவிப்பை வெளியிட்டுள்ளனர். சுதந்திரமான மற்றும் திறந்த இந்தோ–பசிபிக் பகுதியை முன்னேற்றுவதற்கு பலதரப்பு ஒத்துழைப்பை அதிகரிக்க இணக்கம் எட்டப்பட்டது.

# ஸ்வாட்டில் சட்டவிரோத குழுக்களின் நடமாட்டம்



வட மேற்கு கைபர் பக்துன்க்வா மாகாணத்தின் ஸ்வாட் பள்ளத்தாக்கில் சட்ட விரோதக் குழுவினரின் நடமாட்டம் அதிகரித்துள்ளதாக பாகிஸ்தான் முன்னெச்சரிக்கை விடுத்துள்ளது.

அரசாங்கத்திற்கும் பாகிஸ்தான் தலிபான்களுக்கும் இடையிலான சமாதான பேச்சுவார்த்தை ஸ்தம்பிதமடைந்துள்ளதைத் தொடர்ந்து இந்நிலைமை ஏற்பட்டுள்ளதாக தி நியூஸ் இன்டர்நேஷனல் தெரிவித்துள்ளது. இம்மாகாணத்திலுள்ள ஸ்வாட் பள்ளத்தாக்கின் மட்டா உட்பிரிவு மலைப் பிரதேசங்களில் தலிபான்களின் நடமாட்டம் அதிகரித்து காணப்பட்டமை அவதானிக்கப்பட்டுள்ளது. இது அண்டை மாவட்டங்களில் அச்ச நிலையை ஏற்படுத்தியுள்ளதோடு ஸ்வாட் பள்ளத்தாக்கின் சுற்றுலா துறைக்கும் பாதிப்பை ஏற்படுத்தியுள்ளது.

## சர்வதேச செய்திகள்

# இயன் புயலால் அமெரிக்காவில் பலத்த சேதம்: மின் துண்டிப்பு



அமெரிக்காவின் புளோரிடா மாநிலத்தை தாக்கியுள்ள இயன் புயலால் மில்லியன் கணக்கானோருக்கு மின்சாரம் துண்டிக்கப்பட்டிருப்பதோடு வெள்ளப்பெருக்கு ஏற்பட்டுள்ளது.

அமெரிக்காவை கடந்த பல ஆண்டுகளில் தாக்கிய மிக மோசமான புயலாக மாறியிருக்கும் இயன் புயலால் மணிக்கு 241 கிலோமீற்றர் வேகத்தில் காற்று வீசியுள்ளது.

கடந்த புதன்கிழமை கரையை அடைந்த இந்தப் புயலால் மருத்துவமனை ஒன்றில் கூரை வீசி எறியப்பட்டதோடு, கார்கள் மூழ்கடிக்கப்பட்டு மரங்கள் பிடிங்கி எறியப்பட்டன.

புயல் காரணமாக கனமழை பெய்தது. பல இடங்களில் வெள்ளம் புகுந்தது. வீதிகளில் நிறுத்தப்பட்டிருந்த வாகனங்கள் காற்றில் கவிழ்ந்து, வெள்ளத்தில் அடித்துச் செல்லப்பட்டன. விமான நிலையத்தில் விமானங்கள் சேதம் அடைந்துள்ளன.

இயன் தற்போது நான்காம் வகை புயலாக தீவிரம் குறைந்துள்ளது. எனினும் மக்களை பாதுகாப்பான இடங்களுக்குச் செல்லும்படி எச்சரிக்கப்பட்டுள்ளது.

கடல் அலைகள் சுமார் 3.6 மீற்றருக்கு உயர்ந்ததாகத் தெரிவிக்கப்பட்டது. அதனால் பெரு வெள்ளம் ஏற்பட்டுள்ளது. சில வீடுகள் தரை மட்டமாயின.

இயன் புயலால் பாதிக்கப்பட்டுள்ள நகரங்களில் பெருமளவு சேதம் ஏற்பட்டிருப்பதாக வானிலை ஆய்வு நிலையம் குறிப்பிட்டுள்ளது.

மெக்ஸிகோ வளைகுடா வழியாக புளோரிடாவுக்குச் செல்வதற்கு முன், இயன் புயல் கடந்த செவ்வாய்க்கிழமை ஒரு பெரிய புயலாக மேற்கு கியூபாவைக் சூறையாடி, இரண்டு பேரை காவுகொண்டதோடு நாட்டின் மின் கட்டமைப்பை செயலிழக்கச் செய்தது.

# கூட்டத்தில் இறந்தவரை அழைத்த ஜோ பைடன்

உணவு, உணவுப்பழக்கம் குறித்த மாநாட்டில் அமெரிக்க ஜனாதிபதி ஜோ பைடன் கடந்த மாதம் உயிரிழந்த ஒருவரை அழைத்த சம்பவம் ஆச்சரியத்தை ஏற்படுத்தியுள்ளது.

'ஜேக்கி, இங்கு இருக்கிறீர்களா? எங்கே இருக்கிறார், ஜேக்கி? அவர் இங்கு இருப்பார் என்று நினைத்தேன்,' என்று பைடன், குடியரசுக் கட்சியின் காலஞ்சென்ற உறுப்பினர் ஜேக்கி வலோர்ஸ்கியைக் கூட்டத்தில் அழைத்தார்.

மாநாட்டின் ஏற்பாட்டுக் குழுவில் ஒருவரான வலோர்ஸ்கி கடந்த மாதம் கார் விபத்தில் உயிரிழந்தார்.

அவர் இன்னும் உயிருடன் இருக்கிறார் என்ற எண்ணத்தில் பைடன் பேசியதைப் போல் தோன்றியது. வலோர்ஸ்கி மரணித்தபோது, ஜனாதிபதி இரங்கல் தெரிவித்திருந்தார்.

மாநாட்டில் உரையாற்றியபோது பைடன் வலோர்ஸ்கி குறித்து எண்ணியிருக்கலாம், அதனால் சற்றுக் குழப்பம் அடைந்திருக்கலாம் என்று வெள்ளை மாளிகைப் ஊடகச் செயலாளர் கரீன் ஷான் பியர் கூறினார்.

இந்த மாநாடு தொடர்பில் வலோர்ஸ்கி முக்கியப் பங்காற்றியவர் என்றும் அவர் குறிப்பிட்டார்.



இப்பத்திரிகை அஸோஸியேட்டட் நியூஸ் பேப்பர்ஸ் ஒப் சிலோன் லிமிடட் கம்பனியரால் கொழும்பு இல. 35, டி ஆர். விஜயவர்தன மாவத்தையிலுள்ள லேக் ஹவுஸில் 2022 செப்டெம்பர் மாதம் 30ம் திகதி வெள்ளிக்கிழமை அச்சிட்டுப் பிரசுரிக்கப்பட்டது.

தினகரன்
THINAKARAN
තිනකරන්

# கேள்வி மற்றும் ஏனைய விளம்பரங்கள்

## கேள்வி கோரல் அழைப்பு

### அரசாங்க இரசாயனப் பகுப்பாய்வாளர் திணைக்களம்

### பெலவத்த, பத்தரமுல்ல

## ஆய்வுகூட உபகரணங்களை கொள்வனவு செய்தல்

1. அரசாங்க இரசாயனப் பகுப்பாய்வாளர் திணைக்களம் சார்பாக திணைக்கள பெறுகைக் குழுவின் தலைவரால் கீழே விபரிக்கப்பட்டுள்ள ஆய்வுகூட உபகரணங்களின் பெறுகைக்காக தகைமையுள்ள கேள்விதாரர்களிடமிருந்து பொறியிடப்பட்ட கேள்விகள் கோரப்படுகின்றன.

**2. ஆய்வுகூட உபகரணங்கள் பற்றிய விபரம்**

| கேள்வி இலக்கம் | விபரம் | கேள்விப் பிணை (ரூ) |
|---|---|---|
| GAD/ACC11/ 2022/CF/07 | Supply, Installation & Maintenance of Universal Comparison Microscope | 500,000.00 |

உபகரணங்களுக்காக பரிந்துரைக்கப்பட்ட மாதிரிகள் (Specifications) விண்ணப்பத்துடன் விநியோகிக்கப்படும்.

3. கேள்வி கோரல் தேசிய போட்டி கேள்வி முறை (NCB) மூலம் மேற்கொள்ளப்படும்.
4. கேள்விகளை சமர்ப்பிப்பதற்காக ஆர்வம் காட்டுகின்ற தகைமையுடைய கேள்விதாரர்களுக்கு அரசாங்க இரசாயனப் பகுப்பாய்வாளர் திணைக்களத்தின் பிரதம கணக்காளரின் தொ.பே. இலக்கம் - 011-2786396/ 076-0961578 மூலம் தேவைப்படும் மேலதிக விபரங்களை பெற்றுக்கொள்ள முடிவதுடன் 2022.10.03 முதல் 2022.10.24 வரையான காலத்திற்குள் வாரத்தின் கடமை நாட்களில் மு.ப. 9.00 முதல் பி.ப. 3.00 வரை இல. 31, இசுரு மாவத்த, பெலவத்த, பத்தரமுல்லையில் அமைந்துள்ள, அரசாங்க இரசாயனப் பகுப்பாய்வாளர் திணைக்களத்தில் கேள்வி கோரல் ஆவணங்களைப் பரீட்சித்துப் பார்க்கலாம். அவ்வாறு இல்லையெனில் கேள்வி ஆவணத்தை எமது இணையதளத்திற்கு பிரவேசித்து இலவசமாக பதிவிறக்கம் செய்துகொள்ள முடிவதுடன், govanalyst.finance@gmail.com என்ற மின்னஞ்சல் ஊடாக வேண்டுவதன் மூலமும் அவ் ஆவணங்களைப் பெற்றுக்கொள்ளலாம்.
5. எழுத்துமூல விண்ணப்பமொன்றை, ரூ. 7,500/- மீளளிக்கப்படாத வைப்பை அரசாங்க இரசாயனப் பகுப்பாய்வாளர் திணைக்களத்தின் காசாளரிடம் காசாக மட்டும் செலுத்தி, குறித்த கேள்வி கோரல் ஆவணத் தொகுதியொன்றை 2022.10.03 முதல் 2022.10.24 வரையான காலத்திற்குள் வாரத்தின் அலுவலக நாட்களில் மு.ப. 9.00 முதல் பி.ப. 3.00 வரை பெற்றுக்கொள்ளலாம்.
6. ஆய்வுகூட உபகரணங்களுக்கான கேள்வி ஆவணங்களைப் பெற்றுக்கொள்வதற்கு வியாபார பதிவுச் சான்றிதழின் பிரதியொன்றை சமர்ப்பித்தல் வேண்டும்.
7. பூர்த்தி செய்யப்பட்ட கேள்விகள், அரசாங்க இரசாயனப் பகுப்பாய்வாளர் அரசாங்க இரசாயனப் பகுப்பாய்வாளர் திணைக்களம், இல. 31, இசுரு மாவத்தை, பெலவத்த, பத்தரமுல்ல என்ற முகவரிக்கு 2022.10.25ம் திகதி பி.ப. 2.00 இற்கு அல்லது அதற்கு முன் ஒப்படைத்தல் வேண்டும்.

சகல கேள்வியையும் குறித்தவாறு கேள்விப் பிணையுடன் சமர்ப்பித்தல் வேண்டும். தாமதமாகக் கிடைக்கும் கேள்விகள் நிராகரிக்கப்படும். கேள்விகள் திறத்தல் 2022.10.25 பி.ப. 2.00 இற்கு இடம் பெறுவதுடன் அவ்வேளையில் கேள்விதாரர் அல்லது அவரது அதிகாரமளிக்கப்பட்ட பிரதிநிதியொருவர் சமுகமளிக்கலாம்.

**தலைவர்,**
**திணைக்கள பெறுகைக் குழு,**
**அரசாங்க இரசாயனப் பகுப்பாய்வாளர் திணைக்களம்,**
**இல. 31, இசுரு மாவத்தை, பெலவத்த, பத்தரமுல்ல.**

### பொது நிர்வாகம், உள்நாட்டலுவல்கள், மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சு

## உள்ளூர் அபிவிருத்தி ஒத்துழைப்புத் திட்டம் – திட்ட அடையாள இல: IP 163305

### கிழக்கு மாகாணம், திருகோணமலை

1. உள்ளூர் அபிவிருத்தி ஒத்துழைப்பு திட்டத்தின் செலவுகளுக்காக உலக வங்கியிலிருந்து ஓர் கடனை இலங்கை சனநாயக சோஷலிசக் குடியரசு பெற்றுள்ளது அத்துடன் கீழேயுள்ள அட்டவணையில் தரப்பட்டுள்ள பொருட்களை வழங்குவதற்கான கட்டணங்களுக்கு இந்தக் கடனின் ஒரு பகுதியை பிரயோகிக்க எண்ணியுள்ளது.
2. பிரதான அலுவலகத்திற்கு இரும்பு தாங்கியுடனான சூரிய சக்தி அமைப்பை (Solar Power System) வழங்கி பொருத்துவதற்காக தகைமையும் தகுதியுமுள்ள விலைமனுதாரர்களிடமிருந்து பொறியிடப்பட்ட விலைமனுக்களை மூதூர் பிரதேச சபையின் சார்பாக உள்ளூர் அதிகார சபை பெறுகைக் குழுவின் தலைவர் அழைக்கின்றார்.
3. விலைமனுக்கள் தேசிய போட்டி விலைமனுக்கள் (NCB) முறைமை ஊடாக நடத்தப்படும்.
4. விலைமனு ஆவணத்தின் பிரிவு III இல் தகைமை தேவைப்பாடுகள் குறிப்பிடப்பட்டுள்ளன. விலைமனு தகவல் பத்திரத்தில் மேலதிக விபரங்கள் தரப்பட்டுள்ளன.
5. ஆர்வமுள்ள விலைமனுதாரர்கள் மேலதிக தகவல்களை உள்ளூர் அதிகாரசபையின் தலைவர், செயலாளரிடமிருந்து பெற்றுக்கொள்ளலாம் அத்துடன் எந்த வேலை நாட்களிலும் 9.00 மணி முதல் 10.00 மணி வரை அதே இடத்தில் விலைமனு ஆவணங்களைப் பரிசீலிக்கலாம்.
6. 2022.09.30 முதல் 2022.10.20 வரை 9.00 மணி முதல் 15.00 மணி வரை உள்ளூர் அதிகார சபைக்கு ஓர் எழுத்து மூல விண்ணப்பத்தை சமர்ப்பிப்பதன் பேரில் ஆர்வமுள்ள விலைமனுதாரர்களால் ஆங்கில மொழியிலான ஓர் முழுமையான தொகுதி விலைமனு ஆவணங்களைக் கொள்வனவு செய்யலாம்.
7. விலைமனுக்கள் 2022.10.21ம் திகதி 15.00 மணிக்கு அல்லது அதற்கு முன்பு கீழேயுள்ள அட்டவணையில் காட்டப்பட்டவாறு மூதூர் பிரதேச சபை, உள்ளூர் அதிகாரசபை பெறுகைக் குழு, தலைவருக்கு விநியோகிக்கப்படல் வேண்டும். தாமதமான விலைமனுக்கள் நிராகரிக்கப்படும். சமுகமளிக்கும் விலைமனுதாரரின் பிரதிநிதிகள் முன்னிலையில் விலைமனுக்கள் மூடப்பட்ட பின்பு உடனடியாகத் திறக்கப்படும்.
8. விலைமனுக்களை தயாரித்தல் அல்லது விநியோகிப்பதற்கு விலைமனுதாரர்களுக்கு ஏற்படும் எந்தச் செலவுகளுக்கும் கொள்வனவாளரால் பொறுப்புக் கூறப்படமாட்டாது.
9. கீழேயுள்ள அட்டவணையில் தரப்பட்டடுள்ள தகவல்களின் பிரகாரம் ஓர் விலைமனுப் பிணையை விலைமனுவுடன் இணைத்தல் வேண்டும்.

| உள்ளூர் அதிகார சபையின் பெயர் | பொருட்கள் மற்றும் வேலை இலக்கத்தின் விபரம் | உள்ளடக்க பெறுகை யின் பெயர் | விலைமனு ஆவணங்கள் கொள்வனவு செய்யப்படும் இடம் மற்றும் தொ.பே இலக்கம் | விலைமனு ஆவணத்தின் விலை | தேவைப்படும் விலைமனுப் பிணை | | விலைமனு செல்லு படியாகம் காலம் |
|---|---|---|---|---|---|---|---|
| | | | | | விலைமனு பிணை தொகை (ரூ) | செல்லுபடி யாகும் காலம் | |
| மூதூர் பிரதேச சபை | மூதூர் பிரதேச சபையில் பிரதான அலுவலகத்திற்கு இரும்புத் தாங்கியுடன் சூரிய சக்தி அமைப்பை வழங்குதல் மற்றும் பொருத்துதல் | மூதூர் பிரதேச சபை | மூதூர் பிரதேச சபை 026-2238376 | 3500.00 | 70,000.00 | 2023.02.02 வரை | 2023.01.05 |

**தலைவர்,**
**உள்ளூர் அதிகார சபை பெறுகைக் குழு,**
**மூதூர் பிரதேச சபை**
**29.09.2022**

## நலன்புரி நன்மைகள் சபை

### நிதி, பொருளாதார உறுதிப்பாடு மற்றும் தேசியக் கொள்கைகள் அமைச்சு

### விஷேட அறிவித்தல

**விண்ணப்பிப்பதற்கான காலம் நீடிக்கப்பட்டுள்ளது**

நலன்புரி நன்மைகள் செலுத்துதல் தொடர்பில் தகுதியான குடும்பம்/ நபர்களை கண்டறிதல் 2022 விண்ணப்பத்தினை ஒக்டோபர் 15 திகதி வரை நீடிக்க நலன்புரி நன்மைகள் சபை தீர்மானித்துள்ளது.

இதன்படி நீங்கள் அரசின் மூலம் செயற்படும் சமூர்த்தி, முதியோர், அங்கவீனோர், சிறுநீரக நோய் மற்றும் பொது நிதி போன்றவற்றிலோ அல்லது நலன்புரி நன்மைகள் போன்றவற்றின் கீழ் ஏற்கனவே பயன் பெறுபவராக இருப்பின் அல்லது பயன் பெற குடும்பம்/தகுதியானவராயின் கீழ் காணப்பட்ட படிவத்தின் படி தயாரிக்கப்பட்ட விண்ணப்பத்தில் நீங்கள் நிரந்தரமாக வசிக்கும் வசிப்பிடத்திற்கு தொடர்புடைய கிராம அலுவலகர்/சமூர்த்தி அபிவிருத்தி உத்தியோகத்தர்/ சமூக பாதுகாப்பு உத்தியோகத்தர் /முதியோர் உரிமைகள் ஊக்குவிப்பு உத்தியோகத்தர்களால் வழங்கப்பட்ட சான்றிதழ்களுடன் நீங்கள் அதிகார வரப்பிற்குட்பட்ட பிரதேசத்திலுள்ள பிரதேச செயலகத்திற்கு 2022 ஒக்டோபர் 15 ஆம் திகதிற்கு முன் ஒப்படைக்கப்பட வேண்டும் என்று தயவுடன் கேட்டுக் கொள்கின்றோம்.

பீ. விஜயரத்ன
தலைவர்/ஆணையாளர்
நலன்புரி நன்மைகள் சபை
1ம் மாடி, புது கட்டிடம்
நிதி, பொருளாதார உறுதிப்பாடு மற்றும் தேசியக் கொள்கைகள் அமைச்சு
கொழும்பு 01

தொலைபேசி - 0112484600 நீட்டிப்பு- 4117
தொலைநகல்- 0112151482
welfarebenefitboard2016@gmail.com

**மாதிரி விண்ணப்பப் படிவம்**

**நலன்புரி நன்மைகள் செலுத்துதல் தொடர்பில் தகுதியான குடும்பம்/நபர்களை கண்டறிதல் - 2022**

அலுவலக பாவனைக்கு மட்டும்

01. விண்ணப்பிப்போரின் முழுப்பெயர்:-..........................................
02. விலாசம்:-..........................................
03. தொலைபேசி இலக்கம் -..........................................
04. தேசிய அடையாள அட்டை இலக்கம்
வேறேதும் அடையாள அட்டை இலக்கம் இருப்பின் :-
05. மாகாணம் :- கிராம அலுவலகர் பிரிவு :- சமூர்த்தி பிரதேசம் :-
மாவட்டம் :- பிரதேச செயலக பிரிவு :-
06. நீங்கள்/குடும்பம் ஏதேனும் நலன்புரி நலத்திட்டத்தின் முலம் பயனடைபவராயின் அந் நலன்புரி நலத்திட்டத்தின் பெயர்
(1) .................................... தொகை (ரூ.)
(2) .................................... தொகை (ரூ.)
07. குடும்ப அங்கத்தவர்களின் எண்ணிக்கை
08. நீங்கள் ஏதேனும் நலன்புரி நலத்திட்டத்தில் காத்திருப்பு பட்டியலிலுள்ளவராயின் அத் திட்டம்
(1) .................................... (2) ....................................
09. நீங்கள் புதிதாக விண்ணப்பிப்பவரா? ஆம் இல்லை

நீங்கள் புதிதாக விண்ணப்பிப்பவராயின், விண்ணப்பிக்கும் நலன்புரி நலத்திட்டத்தின் பெயர் :-..........................................

என் மூலமாக மேற்படி வழங்கப்பட்ட தகவல்கள் அனைத்தும் உண்மையானது என்றும் சரியானது என்றும் இதன் மூலம் உறுதியளிப்பதோடு மற்றும் களத்தரவு சேகரிக்கும் போது தகவலை உறுதி செய்யப்படும் என்றும் தவறான தகவலை வழங்கினால் நலன்புரி நன்மைகள் சபையினால் பயன் ஏதும் கிடைக்கப்பெறாது என்றும் சான்றளிக்கின்றேன்.

.......................................... ..........................................
விண்ணப்பதாரியின் ஒப்பம் திகதி

மேற்குறிப்பிட்ட விடயங்கள் சரியானது என்று சான்றளிப்பதோடு .................................... என்பவரின் விண்ணப்பத்தை நலன்புரி நன்மைகள் திட்டத்தில் இணைக்க பரிந்துரைகின்றேன்

.......................................... ..........................................
கிராம அலுவலகர்/சமூர்த்தி அபிவிருத்தி உத்தியோகத்தர்/ பொருளாதார அபிவிருத்தி உத்தியோகத்தர்/ சமூக பாதுகாப்பு உத்தியோகத்தர் /முதியோர் உரிமைகள் ஊக்குவிப்பு உத்தியோகத்தர (உத்தியோகபூர்வ இலச்சினை மற்றும் கையொப்பத்தை இடவும்) திகதி

## மக்கள் வங்கி

### மக்கள் வங்கியின் பதுளை பிரதேச தலைமை அலுவலகம் மற்றும் கிளை அலுவலகத் தொகுதிகள் சுத்தப்படுத்தல் மற்றும் பராமரிப்புச் செயல்கள் செயற்படுத்துவதற்காக விலைமனுக்கள் கோரல் 2022/2023

கீழே குறிப்பிடப்பட்டுள்ள மக்கள் வங்கியின் கிளைகள், சேவை நிலையங்கள் மற்றும் பிரதேச தலைமை அலுவலகம் சுத்தப்படுத்தல் மற்றும் பராமரிப்புச் செயல்களுக்காக வெவ்வேறாக விலைமனுக்கள் அழைக்கப்படுகின்றன.

**கிளைகள்:-**
பதுளை, வெலிமடை, பண்டாரவளை, மஹியங்கனை, பசறை, தியத்தலாவை, ஊவா பரணகம, ஹல்தும்முல்ல, பொரலந்தை, அப்புத்தளை, ஹாலிஎல, கெப்பெட்டிபொல, கந்தகெட்டிய, லுணுகலை, கொஸ்லந்தை, கிராந்துரு கோட்டை, பதுளை முதியங்கன, சேவை நிலையங்கள்.

வெலேகடை, பசார் வீதி, வெலிமடை நகரம், பண்டாரவளை நகரம், பண்டாரவளை சிங்ஹகிரி, பல்லகட்டுவ, பெரஹெட்டிய, மடுல்சீமை, லூணுவத்தை, மெதவெல, போகஹகும்புர, அட்டம்பிட்டிய, தெமோதர, மீகஹகியுல, நவமெதகம், லோவர் வீதி, ஊவா மாகாண சபை அலுவலகத் தொகுதி, மாவட்டச் செயலாளர் அலுவலகத் தொகுதி.

**அலுவலகங்கள்:**
**பதுளை பிரதேச பிரதான அலுவலகத் தொகுதி**

(01) டெண்டர் விண்ணப்பங்கள் 2022.10.01 ஆம் திகதியிலிருந்து மீண்டும் செலுத்தப்படாத ரூ. 1000/- கட்டணம் செலுத்தி மக்கள் வங்கியின் பதுளை பிரதேச அலுவலகத்தால் பெற்றுக் கொள்ள முடியும். 2022.10.15 ஆம் திகதி மு.ப. 10.00 மணிக்கு முன், ''பிரதேச முகாமையாளர் மக்கள் வங்கி, பிரதேச பிரதான அலுவலகம் இலக்கம் 24, R.H. குணவர்தன மாவத்தை, பதுளை" எனும் விலாசத்துக்கு பதிவுத் தபால் மூலம் விலை மனுக்கள் அனுப்ப வேண்டும். அவ்வாறு இல்லாவிட்டால் சுயமாகச் சென்று இந்த அலுவலகத்தில் வைக்கப்பட்டுள்ள டெண்டர் பெட்டியினுள் விலை மனுக்கள் இட முடியும்.

(02) விலை மனு கோரல் கூறி அனுப்பும் கடிதம் சீல் வைத்து அனுப்ப வேண்டியதுடன் அக் கடிதத்தின் உரையின் இடது பக்க மேல் மூலையில் ''வங்கிக் கிளைத் தொகுதிகள் சுத்தப்படுத்தல் மற்றும் பராமரித்தல் தொடர்பான விலை மனுக்கள், "බැංකු ශාඛා පරිශ්‍ර පිරිසිදු කිරීම හා නඩත්තු කිරීම සඳහා වූ මිල ගණන්" என குறிப்பிட வேண்டும்.

(03) டெண்டர் விண்ணப்பம் சமர்ப்பிக்கும் போது அத்துடன் I. வியாபாரப் பெயர்கள் ரெஜிஸ்ட்டாரினால் வழங்கப்பட்டுள்ள வியாபாரங்கள் பதிவுச் சான்றிதழ் II. தற்போது தொடர்புடைய மற்றும் இதற்கு முன் நிறைவேற்றப்பட்ட இதற்கு சமமான ஒப்பந்தச் செயல்கள் பற்றிய சான்றிதழ்கள் (III) தனது பண நிலையை உறுதிப்படுத்தும் வங்கிக்கணக்குகள் பற்றிய விபரம் கணக்காய்வு இருப்பு நிலைக் குறிப்புகள் மற்றும் வருமான வரி விபரம் முன்வைத்தல் வேண்டும்.

(04) விலைமனுக்கள் கவனத்திற் கொள்தலின் அடிப்படை: ஒரு சேவையாளருக்காக வரியின்றி ஒரு மாதத்துக்காக அறவிடப்படும் பணத் தொகை (மேலதிக நேர வேலைப் படி, வங்கி விடுமுறை நாட்களுக்கான சேவை மற்றும் வாரத்தின் 05 நாட்களுக்கு மேலதிகமாக சேவை பெற்றுக் கொண்டால் செலுத்தும் கொடுப்பனவுகள் தவிர்த்து) ஆகும். இத் தொகைப் பணம் ஒரு மாதத்துக்கு உரிய வேலைநாட்கள் அல்லது சேவை வழங்கும் ஸ்தானத்துக்கு அமைய மாற்ற முடியாது.

(05) தேவைப்படுமெனக் கருதும் மதிப்பிடப்பட்டுள்ள சேவையாட்களின் தொகை 33 ஆகும். சேவை கொள்திறன்கள் மற்றும் இணைந்த சேவை மத்திய நிலையங்களிலிருந்து பிரதான கிளைக்குள்ள தூரங்களுக்கேற்ப இத் தொகை கூடக் குறையலாம். கிளைகளுக்காக வெவ்வேறாக அல்லது ஒரு சிலதுக்கு அல்லது எல்லா கிளைகளுக்கும் விலை மனுக்கள் முன் வைக்கலாம். அதற்காக ஒரு விண்ணப்பப்படிவம் முன் வைத்தல் போதுமாகும்.

(06) ஒப்பந்தக் காலம் ஒரு வருடமாகுவதுடன் அக் காலத்துக்காக வங்கியுடன் ஒப்பந்தமொன்றுக்கு வரவேண்டும்.

(07) சுத்தப்படுத்தல் செயல்களுக்காகத் தேவைப்படும் இயந்திர மற்றும் ஏனைய உபகரணங்கள், இரசாயனப் பொருட்களும் (கிருமி நாசினி, பொலிஸ், வெக்ஸ், சலவை வகைகள், சவர்க்காரம்) மற்றும் குப்பை போடும் உறைகள்

போன்றவைகளையும் ஒப்பந்தக்காரரினால் பூர்த்தி செய்தல் வேண்டும். நாளாந்தம், வாராந்தம் மற்றும் மாதாந்தம் செய்ய வேண்டுமென வங்கியினால் நிர்ணயிக்கப்படும் சுத்தப்படுத்தும் கால அட்டவணைப் படி செயல் படவும், ஒப்பந்தத்துக்கு சம்மதிக்கும் போது அறியத் தரப்படும், வங்கிக்குரிய விஷேட சட்டபூர்வ நிலைமைகளுக்கு மற்றும் பயிற்சிகளுக்கு அனுகூலமாக செயல்படவும் ஒப்பந்தக்காரர் இணங்க வேண்டும். இச் செயல்பாடுகளுக்காக வேறு எந்த மேலதிக செலுத்துதல் நடத்தப்பட மாட்டாது.

(08) அனைத்து அல்லது எந்தவொரு டெண்டரையும் ஏற்றுக் கொள்ளல் அல்லது நிராகரித்தல் மற்றும் எதுவித காரணமும் காட்டாமல் டெண்டரொன்றில் எந்தவொரு பகுதியும் ஏற்றுக் கொள்ளும் உரிமை மக்கள் வங்கிக்குண்டு.

(09) தெரிவு செய்யப்படும் நிறுவனம் மூலம் இலங்கை மத்திய வங்கி ஏற்றுக் கொண்டுள்ள வணிக வங்கியொன்று மூலம் பெற்றுக்கொண்ட ஒப்பந்தத்தின் வருடாந்த பெறுமதியின் 05% பெறுமதிக்கு சமமான காரிய சாதனை பிணையொன்று ஒப்பந்தமாகும் சந்தர்ப்பத்தில் முன்வைத்தல் வேண்டும்.

(10) முன்வைக்கும் விலைமனுக்கள் மற்றும் சேவை நிலவரங்கள் பற்றி கவனம் செலுத்தி தகுந்த சேவை வழங்குநர் ஒருவர் தெரிவு செய்தல் வங்கியின் விருப்பப்படி நடாத்தப்படும். தெரிவு செய்யப்பட்ட சேவை வழங்குநருடன் எட்டப்படும் ஒப்பந்தம் எந்தவொரு சந்தர்ப்பத்திலும் இரத்துச் செய்யும் உரிமை வங்கிக்குண்டு.

**பிரதேச முகாமையாளர்**
**மக்கள் வங்கி, பிரதேச பிரதான அலுவலகம்**
**இல. 24, R.H. குணவர்தன மாவத்தை, பதுளை.**
**055-2222165/ 055-2222342**

மக்கள் வங்கி
PEOPLE'S BANK
www.peoplesbank.lk

# இலங்கை துறைமுக அதிகார சபை

## விலைமனுக்களுக்கான அழைப்பு (IFB)

1. பின்வரும் பொருட்களுக்காக தகைமை வாய்ந்த விலைமனுதாரர்களிடமிருந்து முத்திரை பொறிக்கப்பட்ட விலைமனுக்களை இலங்கை துறைமுக அதிகார சபையின் சார்பில் திணைக்கள பெறுகைக் குழுவின் தவிசாளர் கோருகிறார்.

| கேள்வி இல. | கேள்வியின் பெயர் | கேள்விப் பிணைத் தொகை (ரூபா) | ஆவணக் கட்டணம் (VAT உள்ளடக் கப்பட்டுள்ளது) | முடிவுறுத்தல் திகதி மற்றும் நேரம் |
|---|---|---|---|---|
| CES/FP/05/PT/6387(MP) | 02 Nos. Accumulators for the TCM FD 250-3 Forklift | 30,000.00 | 1,000.00 | 01-11-2022 மு.ப. 10.00 மணி |
| CMS/LP/21/PT/01/054 | Cloth Polyester Brown Suiting – 7700 Meters | 50,000.00 | 1,000.00 | 19-10-2022 பி.ப. 1.30 மணி |
| CMS/LP/22/PT/09/052 | 2100 Ltr. SAE 15W-40 Multi Grade Engine Oil | 19,000.00 | 1,000.00 | 19-10-2022 பி.ப. 1.30 மணி |
| CMS/LP/22/PT/09/055 | 50 Nos. Sealed Type Battery 12V 90AMPH (SEMI-MAINT.FREE) | 15,000.00 | 1,000.00 | 19-10-2022 பி.ப. 1.30 மணி |
| CMS/LP/22/PT/10/012-A | 16 Nos. of Tabs Rugged | 40,000.00 | 1,000.00 | 20-10-2022 பி.ப. 1.30 மணி |
| CMS/LP/21/PT/10/054 | Over Board Valves for the Launches Pilot 14 & 15 | 30,000.00 | 1,000.00 | 20-10-2022 பி.ப. 1.30 மணி |
| CMS/LP/22/PT/10/055 | 15 Nos. of Motor Tyres 1800X25 40PLY | 120,000.00 | 3,500.00 | 20-10-2022 பி.ப. 1.30 மணி |
| CMS/LP/22/PT/14/007 | Supply, Installation & Commissioning of Computed Radiograph (CR) + Dental CR System for Upgrading the Existing X-Ray Machine | 25,000.00 | 1,000.00 | 21-10-2022 பி.ப. 1.30 மணி |
| CMS/LP/22/PT/14/019 | Supply of ZED GI Purlin | 100,000.00 | 3,500.00 | 21-10-2022 பி.ப. 1.30 மணி |

2. 5 மில்லியன் ரூபாவிற்கு மேற்படும் கேள்விகளுக்கு 1987இன் 03ஆம் இலக்க பொது ஒப்பந்தங்கள் சட்டத்தின் ஏற்பாடுகள் பிரயோகிக்கப்படும் என விலைமனுதாரர்கள் இத்தால் அறிவுறுத்தப்படுகிறார்கள். இதற்கமைய சகல தரப்பினரும் மேற்குறிப்பிட்ட ஒவ்வொரு கேள்வியின் பொருட்டும் ஒப்பந்தக் காலப்பகுதியில் கூறப்பட்ட சட்டத்தை கண்டிப்பாக பின்பற்றுதல் வேண்டும். மேலும் யாராவது விலைமனுதாரர் ஒரு முகவராகவோ, உப முகவராகவோ, ஒரு பிரதிநிதியாகவோ அல்லது யாராவது வெளிநாட்டு உற்பத்தியாளரின் சார்பில் பெயர் குறிப்பிடப்பட்டவராகவோ அல்லது வழங்குநரோ தம்மை பொது ஒப்பந்தங்கள் பதிவாளரிடம் பதிவு செய்து கொள்ளும்படி வேண்டப்படுவதோடு முறையாகப் பூர்த்தி செய்யப்பட்ட பதிவுச் சான்றிதழை கேள்வி ஆவணங்களுடன் சமர்ப்பித்தல் வேண்டும்.
3. விலைமனுதாரர்கள் மேற்குறிப்பிட்டவைகளுக்கு நிகரான பொருட்களை வழங்கும் வியாபாரத்தில் ஆகக் குறைந்தது ஐந்து (5) வருடங்கள் ஈடுபட்டிருத்தல் வேண்டும்.
4. ஆர்வமுள்ள விலைமனுதாரர்கள் மேலதிகத் தகவல்களை வழங்கல்கள் மற்றும் பொருட்கள் முகாமைத்துவ பிரதான முகாமையாளரிடமிருந்து பெற்றுக்கொள்ளலாம் என்பதுடன் விலைமனு ஆவணங்களை பின்வரும் முகவரியில் அலுவலக நேரங்களில் பரீட்சித்துப் பார்க்கலாம்.
5. ஆர்வமுள்ள விலைமனுதாரர்கள் 4ம் நிரலில் குறித்துரைக்கப்பட்டுள்ள மீளளிக்கப்படாத கட்டணத்தைச் செலுத்தியதன் பின் 2022 செப்டெம்பர் 30ஆம் திகதி தொடக்கம் வேலை நாட்களில் மு.ப. 9.00 மணி முதல் பி.ப. 3.00 மணி வரையான நேரத்தில் முடிவுறுத்தப்படும் திகதிக்கு முதல் நாள் வரை பின்வரும் முகவரிக்கு எழுத்து மூலமான விண்ணப்பமொன்றைச் சமர்ப்பிப்பதன் மூலம் ஆங்கில மொழியிலான விலைமனு ஆவணங்களின் முழுமையான தொகுதியொன்றைக் கொள்வனவு செய்யலாம். கொடுப்பனவுகள் காசாகச் செலுத்தப்படல் வேண்டும்.
6. விலைமனுக்கள் பின்வரும் முகவரிக்கு இறுதி நேரம் அல்லது அதற்கு முன்னர் ஒப்படைக்கப்படல் வேண்டும். தாமதமாகக் கிடைக்கும் விலைமனுக்கள் ஏற்றுக்கொள்ளப்பட மாட்டாது. விலைமனுக்கள் பின்வரும் முகவரியில் முடிவுறுத்தப்படும் வேளையில் நேரடியாகச் சமுகமளித்திருக்கும் விலைமனுதாரர்களின் பிரதிநிதிகள் முன்னிலையில் திறக்கப்படும். அனைத்து விலைமனுக்களுடனும் மேற்குறிப்பிடப்பட்ட விலைமனுப் பிணையொன்று இணைக்கப்படல் வேண்டும்.

**பிரதான முகாமையாளர் (வழங்கல்கள் மற்றும் பொருட்கள் முகாமைத்துவம்),**
**வழங்கல்கள் பிரிவு,**
**இலங்கை துறைமுக அதிகார சபை,**
**இல. 45, லேடன் பஸ்தியன் வீதி, கொழும்பு-01.**

**தொலைபேசி எண்கள்: 2482231, 2483338, 2482499, 2482832, 2482409, 2482652, 2483024, 2482638**
**தொலைநகல் எண்: 2381652, 2470443**

# பண்டாரகம பிரதேச சபை

## கேள்வி அறிவித்தல்

### பண்டாரகம நகரின் மத்தியிலமைந்துள்ள சுப்பர் வர்த்தகக் கட்டிடத் தொகுதியின் மேல் மாடியிலுள்ள வர்த்தக வளாகங்களை குத்தகைக்கு வழங்கல்/ வாடகைக்கு வழங்கல் 2022

பண்டாரகம பிரதேச சபைக்கு உரித்தான, பண்டாரகம நகர மத்தியிலமைந்துள்ள சுப்பர் வர்த்தகக் கட்டிடத் தொகுதியின் முதலாம் மாடியின் மற்றும் இரண்டாம் மாடியின் வர்த்தக வளாகங்கள் நான்கை 2022.11.01 முதல் 2033.10.31 வரையான பத்து ஆண்டுகளிற்கு குத்தகை/ வாடகை அடிப்படையில் குத்தகைக்கு விடுவதற்கு/ வாடகைக்கு விடுவதற்கு என்னால் கேள்விகள் கோரப்படுகின்றன.

**ஆகக் குறைந்த கேள்விகள் பின்வருமாறு:**

| கடை அறை இலக்கம் | விஸ்தீரணம் துர மீற்றர் | ஆகக் குறைந்த மாதாந்த மதிப்பீடு | | வைப்புத் தொகை ரூபா. ச. |
|---|---|---|---|---|
| | | வளாகமொன்றின் ஆகக் குறைந்த பெறுமதி ரூபா. ச. | இரண்டு வளாகங்களின் ஆகக் குறைந்த பெறுமதி ரூபா. ச. | |
| முதலாம் மாடி | | | | |
| கடை அறை இலக்கம் - A | 247.146 + 178.43 | - | 260,000.00 | 3,120,000.00 |
| A-1 | 247.146 | 150,000.00 | - | 1,800,000.00 |
| A-2 | 178.43 | 110,000.00 | - | 1,320,000.00 |
| இரண்டாம் மாடி | | | | |
| கடை அறை இலக்கம் - B | 178.47 + 247.146 | - | 162,000.00 | 1,944,000.00 |
| B-1 | 247.146 | 92,000.00 | - | 1,104,000.00 |
| B-2 | 178.43 | 70,000.00 | - | 840,000.00 |

முதலாம் மாடியின் வளாகங்கள் தனித்தனியாக அல்லது வளாகங்களிரண்டையும் ஒன்றாகவும் (247.146 + 178.43) இரண்டாம் மாடியின் இரண்டு வளாகங்களையும் தனியாக அல்லது இரண்டையும் ஒன்றாக (178.47+247.146) உம் கணித்து தகுதியானவியாபார மொன்றை நடைமுறைப்படுத்துவதற்காக கேள்விகள் கோரப்படுகின்றன.

1. முதலாம் மாடியின் அல்லது இரண்டாம் மாடியின் வர்த்தக வளாகங்களைத் தனித்தனியாக அல்லது இரண்டு வளாகங்களையும் ஒன்றாகக் குத்தகைக்குப பெற்றுக்கொள்ள ஆர்வமுள்ள விண்ணப்பதாரர்கள், மீளளிக்கப்படும் ரூபா 5,000.00 இற்கான கேள்வி வைப்புத் தொகையையும், மீளளிக்கப்படாத ரூபா 2,000.00 இற்கான கேள்விப் படிவக் கட்டணத்தையும் 2022.10.19 அன்று பி.ப. 3.00 இற்கு முன்னர் அரச விடுமுறை தினம் தவிர்ந்த வார நாட்களில் பண்டாரகம பிரதேச சபையின் பிரதான அலுவலகததில் செலுத்தி இதற்கான மாதிரிப்படிவங்களைப் பெற்றுக்கொள்ளலாம். அத்துடன் இணைக்கப்பட்டுள்ள நிபந்தனைகளின் பிரகாரம் கேள்விப் படிவங்கள் பூரணப்படுத்தப்படல் வேண்டும்.
2. நகல் பிரதியொன்றுடன் கூடிய கேள்விப் படிவங்கள் முதிரையிடப்பட்ட உறையொன்றில் சேர்த்து அவ் உறையின் இடது பக்க மேல் மூலையில் 'பண்டாரகம நகர மத்தியிலமைந்துள்ள சுப்பர் வர்த்தக வளாகக் கடை அறைகளைக் குத்தகைக்கு பெற்றுக்கொள்வதற்கான விண்ணப்பம்' எனக் குறிப்பிட்டு, 2022.10.20 அன்று பி.ப. 2.00 இற்கு முன்னர், 'தலைவர், பண்டாரகம பிரதேச சபை பாணந்துறை வீதி பண்டாரகம' என்ற முகவரிக்குப் பதிவுத்தபாலில் அனுப்புதல் அல்லது அலுவலகத்தில் வைக்கப்பட்டுள்ள பெறுகைப்பெட்டியிற் சேர்த்தல் மேற்கொள்ளலாம்.
3. விலைமனுத்திறத்தல் 2022.10.20 அன்று பி.ப. 2.05 இற்கு பண்டாரகம பிரதேச சபையின் பிரதான அலுவலகத்தில் மேற்கொள்ளப்படுவதுடன், அவ் வேளையில் விண்ணப்பதாரர் அல்லது அவரின் அதிகாரமளிக்கப் பெற்ற பிரதிநிதியொருவர் சமுகமளித்திருக்கலாம்.
4. தேர்ந்தெடுக்கப்படும் குத்தகைக்காரருக்கு அது பற்றி அறிவிக்கப்பட்டு 14 நாட்களிற்குள் கைக்காசை பண்டாரகம பிரதேச சபையில் ஒரே முறையில் செலுத்தி குத்தகை உரிமையை உறுதிப்படுத்திக் கொள்ளல் வேண்டும். கேள்வி ஏற்றுக்கொள்ளப்பட்டதென அறிவிக்கப்பட்டதன் பின்னர் பணம் செலுத்துதல் நிராகரிக்கப்பட்டால் கேள்வி வைப்புத் தொகை சபைக்கு உரித்தாக்கப்படும்.
5. இதற்காக ஆர்வமுள்ள கேள்விதாரர்கள் பின்வரும் முகவரியில் கேள்விப்படிவங்களையும் வளாகங்களையும் இலவசமாகப் பரீட்சித்துப் பார்க்கலாம்.
6. இது தொடர்பான மேலதிக தகவல்கள் தேவையெனின் அலுவலகத்திற்குச் சமுகமளித்து அல்லது பின்வரும் தொலைபேசி என் மூலம் பெற்றுக்கொள்ளலாம்.
7. கேள்வி மாதிரிப்படிவங்கள் கேள்வி நிபந்தனைகள் போன்ற அனைத்தும் இவ் அறிவித்தலின் பகுதியொன்றெனக் கணித்தல் வேண்டும்.
8. அனைத்துக் கேள்விகளையும் அல்லது பகுதிகளாக கேள்விகளை ஏற்றுக்கொள்ளும் அல்லது நிராகரிக்கும் உரிமை பண்டாரகம பிரதேச சபைக்கு உரித்தாகும்.

**எச்.ஏ.எச். தேவேந்திர பெரேரா**
**தலைவர்**
**பண்டாரகம பிரதேச சபை**

**2022.09.26**
**பண்டாரகம பிரதேச சபை**
**பண்டாரகம**
**0382290975**

# கேள்வி கோரல் அழைப்பு

## அரசாங்க இரசாயனப் பகுப்பாய்வாளர் திணைக்களம்
## பெலவத்த, பத்தரமுல்ல

## சேவைகளை வழங்குதல்

1. அரசாங்க இரசாயனப் பகுப்பாய்வாளர் திணைக்களம் சார்பாக திணைக்கள பெறுகைக் குழுவின் தலைவரால் கீழே விபரிக்கப்பட்டுள்ள சேவைகளை வழங்குவதற்காக தகைமையுள்ள கேள்விதாரர்களிடமிருந்து பொறியிடப்பட்ட கேள்விகள் கோரப்படுகின்றன.
2. **சேவைகள் வழங்குதல்**

| கேள்வி இலக்கம் | விபரம் | கேள்விப் பிணை (ரு) |
|---|---|---|
| அ.இ.ப/கி11/2022/23 | சுத்திகரிப்பு சேவை 2022/ 2023 | 150,000.00 |
| அ.இ.ப/கி11/2022/23 | பாதுகாப்பு சேவை 2022/ 2023 | 125,000.00 |

3. கேள்வி கோரல் தேசிய போட்டி கேள்வி முறை (NCB) மூலம் மேற்கொள்ளப்படும்.
4. கேள்விகளை சமர்ப்பிப்பதற்காக ஆர்வம் காட்டுகின்ற தகைமையுடைய கேள்விதாரர்களுக்கு அரசாங்க இரசாயனப் பகுப்பாய்வாளர் திணைக்களத்தின் பிரதம கணக்காளரின் தொ.பே. இலக்கம் - 011-2786396/ 076-0961578 மூலம் தேவைப்படும் மேலதிக விபரங்களை பெற்றுக்கொள்ள முடிவதுடன் 2022.10.03 முதல் 2022.10.25 வரையான காலத்திற்குள் வாரத்தின் கடமை நாட்களில் மு.ப. 9.00 முதல் பி.ப. 3.00 வரை இல. 31, இசுரு மாவத்த, பெலவத்த, பத்தரமுல்லையில் அமைந்துள்ள, அரசாங்க இரசாயனப் பகுப்பாய்வாளர் திணைக்களத்தில் கேள்வி கோரல் ஆவணங்களைப் பரீட்சித்துப் பார்க்கலாம். அவ்வாறு இல்லையெனில் கேள்வி ஆவணத்தை எமது இணையதளத்திற்கு பிரவேசித்து இலவசமாக பதிவிறக்கம் செய்துகொள்ள முடிவதுடன், govanalyst.finance@gmail.com என்ற மின்னஞ்சல் ஊடாக வேண்டுவதன் மூலமும் அவ் ஆவணங்களைப் பெற்றுக்கொள்ளலாம்.
5. எழுத்துமூல விண்ணப்பமொன்றை, ரூ. 3,500/- மீளளிக்கப்படாத வைப்பை அரசாங்க இரசாயனப் பகுப்பாய்வாளர் திணைக்களத்தின் காசாளரிடம் காசாக மட்டும் செலுத்தி, ஒரு சேவையை வழங்குவதுடன் சம்பந்தப்பட்ட கேள்வி கோரல் ஆவணத் தொகுதியொன்றை 2022.10.03 முதல் 2022.10.21 வரையான காலத்திற்குள் வாரத்தின் அலுவலக நாட்களில் மு.ப. 9.00 முதல் பி.ப. 3.00 வரை பெற்றுக்கொள்ளலாம்.
6. பூர்த்தி செய்யப்பட்ட கேள்விகள், அரசாங்க இரசாயனப் பகுப்பாய்வாளர் அரசாங்க இரசாயனப் பகுப்பாய்வாளர் திணைக்களம், இல. 31, இசுரு மாவத்தை, பெலவத்த, பத்தரமுல்ல என்ற முகவரிக்கு 2022.10.25ம் திகதி மு.ப. 10.00 இற்கு அல்லது அதற்கு முன் கேள்விப் பிணையுடன் பதிவுத் தபால் மூலம் அல்லது கையோடு கொண்டுவந்து கேள்விப் பெட்டியில் உள்ளிடுவதன் மூலம் ஒப்படைத்தல் வேண்டும் அத்துடன் தாமதமாகக் கிடைக்கும் கேள்விகள் நிராகரிக்கப்படும். கேள்விகள் திறத்தல் 2022.10.25 மு.ப. 10.00 இற்கு இடம் பெறுவதுடன் அவ் வேளையில் கேள்விதாரர் அல்லது அவரது அதிகாரமளிக்கப்பட்ட பிரதிநிதியொருவர் சமுகமளிக்கலாம்.

**தலைவர்,**
**திணைக்கள பெறுகைக் குழு,**
**அரசாங்க இரசாயனப் பகுப்பாய்வாளர் திணைக்களம்,**
**இல. 31, இசுரு மாவத்தை, பெலவத்த,**
**பத்தரமுல்ல.**

**කෘෂිකර්ම අමාත්‍යාංශය**
**கமத்தொழில் அமைச்சு**
**Ministry of Agriculture**

## இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு
## விவசாயத் துறையை நவீனமயமாக்கும் செயற்றிட்டம் - கமத்தொழில் அமைச்சு

**IDA Credit No.: 5873 LK**

# பெறுகை அறிவித்தல்

## வடக்கு, வடமத்திய மற்றும் ஊவா மாகாணங்களுக்கு பழங்கள் மூடும் உறைகள் (Covering Bags) (வாழை), மஞ்சள்நிற ஒட்டும் அட்டைகள் (Yellow Sticky Cards), பொலி மல்ச் சீட்களை (Poly Mulch Sheet) வழங்குதல் மற்றும் விநியோகித்தல்

1. கமத்தொழில் அமைச்சின் விவசாயத் துறை நவீனமயமாக்கல் செயற்றிட்ட (ASMP) கிரயச் செலவிற்காக 58.63 மில்லியன் ஐக்கிய அமெரிக்க டொலருக்கு நிகரான தொகையை பலவிதமான பணத்தொகைகளில் கடனொன்றை சர்வதேச அபிவிருத்தி சங்கத்திடமிருந்து (IDA) இலங்கை சனநாயக சோசலிச குடியரசானது பெற்றுள்ளதுடன் இக்கடனின் பெறுகைகளின் பகுதியொன்றை வடக்கு, வடமத்திய மற்றும் ஊவா மாகாணங்களுக்கு பழங்கள் மூடும் உறைகள் (Covering Bags) (வாழை), மஞ்சள்நிற ஒட்டும் அட்டைகள் (Yellow Sticky Cards), பொலி மல்ச் சீட்களை (Poly Mulch Sheet) வழங்குதல் மற்றும் விநியோகித்தல் என்பவற்றிற்கான ஒப்பந்தத்தின் கீழுள்ள தகுதியுள்ள பணக்கொடுப்பனவுகளுக்காக செலவிடுவதற்கு உத்தேசித்துள்ளது.
2. வடக்கு, வடமத்திய மற்றும் ஊவா மாகாணங்களுக்கு பழங்கள் மூடும் உறைகள் (Covering Bags) (வாழை), மஞ்சள்நிற ஒட்டும் அட்டைகள் (Yellow Sticky Cards), பொலி மல்ச் சீட்களை (Poly Mulch Sheet) வழங்குதல் மற்றும் விநியோகித்தல் எனும் பெறுகைக்காக தகுதியும் தகைமையுமுள்ள விலைமனுதாரர்களிடமிருந்து முத்திரைக் குறியிடப்பட்ட விலைமனுக்களை கமத்தொழில் அமைச்சின் விவசாயத்துறை நவீனமயமாக்கல் செயற்றிட்டத்தின், செயற்றிட்டப் பெறுகைக் குழுவின் தலைவர் அழைக்கிறார்.

| விபரங்கள் | ஒப்பந்த இலக்கம் | எண்ணிக்கை | விலைமனுப் பிணை முறியின் பெறுமதி (ரூபா) | மீளளிக்கப் படாத கட்டணம் (ரூபா) |
|---|---|---|---|---|
| மொனராகலை மாவட்டத்திற்கு வர்ண ரிபன்கள் சகிதம் பழங்கள் மூடும் உறைகளை (வாழை) வழங்குதல் மற்றும் விநியோகித்தல் | LK-MOA-PMU-315357-GO-RFB | 250,000.00 | 300,000.00 | 5,000.00 |
| யாழ்ப்பாண மாவட்டத்தின் உருளைக்கிழங்கு செய்கைக்கு பொலி மல்ச்களை வழங்குதல் மற்றும் விநியோகித்தல் | LK-MOA-PMU-312522-GO-RFB | 750,000 LM | 580,000.00 | 7,500.00 |
| வடமத்திய மாகாணத்தில் உலர்ந்த மிளகாய்ச் செய்கைக்கு மஞ்சள்நிற ஒட்டும் கார்டுகளை வழங்குதல் மற்றும் விநியோகித்தல் | LK-MOA-PMU-315390-GO-RFB | 136,500 | 270,000.00 | 5,000.00 |

3. விலைமனுக்கோரலானது உலக வங்கியினால் அங்கீகரிக்கப்பட்ட தேசிய போட்டி ரீதியிலான விலைமனுக்கோரல் நடைமுறை மூலம் நடாத்தப்படும்.
4. ஆர்வமும் தகுதியுமுள்ள விலைமனுதாரர்கள் மேலதிக தகவல்களை கமத்தொழில் அமைச்சு, விவசாயத்துறை நவீனமயமாக்கல் செயற்றிட்ட, பெறுகை திணைக்களத்திலிருந்து 2022-10-30ஆம் திகதி முதல் 2022-10-20ஆம் திகதி வரையிலான காலப்பகுதியில் வேலை நாட்களில் மு.ப. 9.00 மணியிலிருந்து பி.ப. 2.00 மணி வரையில் 0777419521 எனும் தொலைபேசி இலக்கத்தினூடாக பெற்றுக்கொள்ளலாம்.
5. மீளளிக்கப்படாத கட்டணத்தைச் செலுத்திய பின்னர், பின்வரும் முகவரிக்கு எழுத்துருவிலான விண்ணப்பமொன்றைச் சமர்ப்பிப்பதன் மூலம் ஆங்கில மொழியிலுள்ள விலைமனுக்கோரல் ஆவணங்களின் முழுமையான தொகுதியொன்றை ஆர்வமுள்ள விலைமனுதாரர்கள் கொள்வனவு செய்யலாம். பணக்கொடுப்பனவானது செயற்றிட்டத்தின் நிதியிடல் முகாமையாளருக்கு ரொக்கப் பணத்தில் மேற்கொள்ளப்படல் வேண்டும்.
6. 2022-10-20ஆம் திகதி பி.ப. 2.00 மணிக்கு அல்லது அதற்கு முன்னராக கிடைக்கும் வகையில் பின்வரும் முகவரிக்கு விலைமனுக்கள் ஒப்படைக்கப்படல் வேண்டும். இலத்திரனியல் விலைமனுக்கள் அனுமதிக்கப்படமாட்டாது. தாமதமான விலைமனுக்கள் ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது. 2022-10-20ஆம் திகதி பி.ப. 2.00 மணிக்கு பின்வரும் முகவரியில் தாமாக வருகை தந்துள்ள விலைக்கோரலில் பங்குபற்ற தெரிவுசெய்யப்பட்ட விலைமனுதாரர்களின் பிரதிநிதிகளின் முன்னிலையில் விலைமனுக்கள் திறக்கப்படும்.
7. பூர்த்தி செய்யப்பட்ட விலைமனுக்களை இரு பிரதிகளில் மூலப்பிரதி மற்றும் நகல்பிரதி என சமர்ப்பிக்கப்படல் வேண்டும். மூலப்பிரதி மற்றும் நகல் பிரதி என்பன தனித்தனியான உறைகளில் இடப்பட்டு 'மூலப்பிரதி' மற்றும் 'நகல்பிரதி' என தபாலுறைகளில் குறிக்கப்படல் வேண்டும். அதன் பின்னர் இவ்விரண்டு தபாலுறைகளும் வேறொரு தபாலுறையில் இட்டு முத்திரைக் குறி பொறித்து அதன் இடது பக்க மேல் மூலையில் ஒப்பந்த இலக்கத்தைக் குறிப்பிட்டு "வடக்கு, வடமத்திய மற்றும் ஊவா மாகாணங்களுக்கு பழங்கள் மூடும் உறைகள் (Covering Bags) (வாழை), மஞ்சள்நிற ஒட்டும் அட்டைகள் (Yellow Sticky Cards), பொலி மல்ச் சீட்களை (Poly Mulch Sheet) வழங்குதல் மற்றும் விநியோகித்தல்" எனக் குறிப்பிடப்படல் வேண்டும்.
8. மேற்குறிப்பிடப்பட்ட முகவரியானது:

**தலைவர்,**
**செயற்றிட்ட பெறுகைக் குழு,**
**விவசாயத்துறை நவீனமயமாக்கல் செயற்றிட்டம்,**
**இல. 123/2, பன்னிப்பிட்டிய வீதி, பத்தரமுல்ல.**

**தொலைபேசி: 0112696086 அல்லது 0777419521**
**திகதி: 2022-09-30.**

# சிவில் பாதுகாப்பு திணைக்களம்

## சீருடைகள் கொள்வனவிற்கான விலைமனுக்கோரல்

01. சிவில் பாதுகாப்பு திணைக்களத்திற்கு தேவையான சீருடைகள் கொள்வனவு செய்வதற்காக திறந்த மனுக்கள் கோரப்படுகின்றது.

| தொடர் இல. | பொருள் | அளவு | மனு ஆவணங்கள் கொள்வனவு செய்யப்படும் திகதி | மனுக்கோரல் முடிவுறும் திகதி | மனுக்கோரல் முடிவுறும் திகதி | மீள்செலுத்தப்படாத மனுக் கட்டணம் (ரூ) |
|---|---|---|---|---|---|---|
| 01. | பச்சை உருமறைப்பு சீருடை துணிகள் | 100,000 மீ | 03.10.2022 | 21.10.2022 | 25.10.2022 | ரூ. 5,000.00 |
| 02. | பாலைவன உருமறைப்பு சீருடை துணிகள் | 100,000 மீ | 03.10.2022 | 21.10.2022 | 25.10.2022 | ரூ. 5,000.00 |
| 03. | கருப்பு கென்வஸ் காலணிகள் | 30,000 ஜோடிகள் | 03.10.2022 | 21.10.2022 | 25.10.2022 | ரூ. 5,000.00 |

02. மனுக்கோரலானது தேசிய மனு கோரல் போட்டி முறைக்கமைய நடைபெறும்.

03. மேலே குறிப்பிட்டுள்ள மீளச்பெற முடியாத கட்டணத்தை பணமாக செலுத்திய பின்னர் கீழ்க் குறிப்பிடப்பட்டுள்ள முகவரியில் பொது விடுமுறைகள் தவிர்ந்த வார நாட்களில் **மு.ப.09.00 மணி** முதல் **பி.ப.03.00 மணி** வரை நிதிப் பிரிவில் பொருளாலரிடம் செலுத்தி மனு ஆவணங்களை பெற்றுக்கொள்ளலாம்.

04. விலைமனுக்கள் நகல் பிரதிகள் இரண்டுடன் சமர்ப்பிக்கப்பட வேண்டும். (அசல் மற்றும் நகல்) குறிப்பிட்ட திகதி மற்றும் நேரத்திற்குப் பின்னர் கிடைக்கப்பெறும் மனுக்கள் தாமதமானதாக கருதப்பட்டு திறக்கப்படாமல் நிராகரிக்கப்படும்.

05. இதற்காக ஆர்வம் காட்டும் அல்லது தகுதியான மனுதாரர்கள் பின்வரும் முகவரியில் மனு ஆவணங்களை பரிசீலனை செய்துகொள்ளலாம் மேலும் கீழ்க் குறிப்பிடப்பட்டுள்ள தொலைபேசி இலக்கங்களினூடாக மேலதிக விபரங்களை பெற்றுக்கொள்ளலாம்.

பணிப்பாளர் - வழங்கல்
சிவில் பாதுகாப்பு திணைக்களம்,
ஜெய மாவத்தை, கட்டுபெத்த,
மொரட்டுவ.

பணிப்பாளர் நாயகம்,
**சிவில் பாதுகாப்பு திணைக்களம்**

பணிப்பாளர் வழங்கல் : 011-2044854/5
தொலைநகல் இல : 011-2044855

# பெறுகை அறிவித்தல்

## போக்குவரத்துச் சேவை அதிகார சபை - மத்திய மாகாணம்

01. மத்திய மாகாண போக்குவரத்துச் சேவை அதிகார சபையின் பெறுகைக்குழுத் தலைவரினால் மத்திய மாகாணத்தில் சேவையில் ஈடுபடுத்தப்படும் அனுமதி பெற்றுள்ள பஸ்களிற்குத் தேவையான பயணிகள் பயணச்சீட்டுகளை அச்சிடல்களிற்காகப் பின்வருமாறு கேள்விகள் கோரப்படுகின்றன.

| ஒப்பந்த இலக்கம் | ஒப்பந்தத்தின் பெயர் | மீளளிக்கப்படாத படிவக் கட்டணம் ரூபா | மீளளிக்கப்படும் கேள்விப் பிணைத் தொகை ரூபா |
|---|---|---|---|
| CPC/TA/P/2022/05 | பயணிகள் பயணச்சீட்டு சுருள்களை (Ticket Roll) அச்சிடல் | 5000.00 | 55000.00 |
| CPC/TA/P/2022/06 | பயணிகள் பயணச்சீட்டுப் புத்தகங்களை அச்சிடல் | 5000.00 | 15000.00 |

02. 2022 செப்டம்பர் 30 முதல் 2022 ஒக்டோபர் 12 வரை மு.ப. 10.00 முதல் பி.ப. 2.00 வரை அலுவலக வேலை நாட்களில் இலக்கம் 595, திகன வீதி, பல்லேகெலே, குண்டசாலை என்ற முகவரியிலமைந்துள்ள போக்குவரத்துச் சேவை அதிகார சபையின் பிரதான அலுவலக சிறாப்பரிடம் விண்ணப்பப்படிவக் கட்டணத்தைச் செலுத்திப் பெற்றுக் கொள்ளும் பற்றுச்சீட்டை கணக்குப்பிரிவில் சமர்ப்பித்து கேள்விக்கான மாதிரி விண்ணப்பப்படிவங்களைப் பெற்றுக்கொள்ளலாம்.

03. ஒவ்வொரு ஒப்பந்தத்திற்கும் தனித்தனியான கேள்விகளைச் சமர்ப்பித்தல் வேண்டும்.

04. உரியவாறு பூரணப்படுத்தப்பட்டு முத்திரையிடப்பட்ட கேள்விகள் உறையொன்றில் சேர்க்கப்பட்டு தபாலுறையின் இடது பக்க மேல் மூலையில், ‘2022 கேள்வி கோரல் - பயணிகள் பயணச்சீட்டு சுருள்களை (Ticket Roll) அச்சிடல்’ CPC/TA/P/2022/05 மற்றும் 2022 பெறுகை கோரல் - பயணிகள் பயணச்சீட்டுப் புத்தகங்களை அச்சிடல் CPC/TA/P/2022/06 எனக் குறிப்பிட்டு 2022 ஒக்டோபர் 13 அன்று மு.ப. 10.00 இற்கு முன்னர் கிடைக்கக்கூடியவாறு, ‘தலைவர், பெறுகைக்குழு, போக்குவரத்துச் சேவை அதிகார சபை, இலக்கம் 595, திகன வீதி, குண்டசாலை’ என்ற முகவரிக்குப் பதிவுத் தபாலில் கிடைக்கக்கூடியவாறு முன்வைக்கலாம் என்பதுடன், அல்லது அதே முகவரியில் வைக்கப்பட்டுள்ள கேள்விப் பெட்டியிலும் வைப்புச் செய்யலாம்.

05. 2022 ஒக்டோபர் 13 அன்று மு.ப. 11.00 இற்கு இலக்கம் 595, திகன வீதி, குண்டசாலை என்ற முகவரியிலமைந்துள்ள, மத்திய மாகாண போக்குவரத்துச் சேவை அதிகார சபையில் கேள்விகள் திறக்கப்படவுள்ளதால், அவ் வேளையில் கேள்விதாரர் அல்லது அவரின் அதிகாரம் அளிக்கப்பெற்ற பிரதிநிதியொருவர் சமுகமளித்திருக்கலாம்.

06. தேவையான மேலதிக விபரங்களை அலுவலக நேரங்களில், குண்டசாலை, திகன வீதி இலக்கம் 595, இல் உள்ள போக்குவரத்துச் சேவை அதிகார சபையின் பொது முகாமையாளரிடம் அல்லது 081-2424372 மூலம் கணக்குப் பிரிவை அழைத்துப் பெற்றுக்கொள்ளலாம்.

**தலைவர்,**
**பெறுகைக்குழு,**
**போக்குவரத்துச் சேவை அதிகார சபை**
**இலக்கம் 595, திகன வீதி,**
**குண்டசாலை.**

# இலங்கை ரூபவாஹினி கூட்டுத்தாபனம்

## 2023ஆம் வருடத்திற்கான வழங்குநர்களைப் பதிவு செய்தல்

### முடிவுறுத்தல் திகதி: 2022 — 10 — 30

2023ஆம் ஆண்டில் பின்வரும் வகுதிகளையுடைய பொருட்கள் மற்றும் சேவைகளை இலங்கை ரூபவாஹினி கூட்டுத்தாபனத்திற்கு வழங்குவதற்காக அரச நிறுவனங்கள், உற்பத்தியாளர்கள், முகவர்கள், இறக்குமதியாளர்கள், விற்பனையாளர்கள் மற்றும் ஏனைய புகழ்வாய்ந்த கம்பனிகள் அவர்களை பதிவு செய்வதற்காக அழைக்கப்படுகின்றனர்.

**பண்டங்கள் மற்றும் பொருட்கள்:**

| உருப்படி இல. | உருப்படி |
|---|---|
| 01) | கட்புல/செவிப்புல உபகரணங்கள் மற்றும் துணைப்பாகங்கள் மற்றும் உதிரிப்பாகங்கள் |
| 02) | அலைபரப்பிகள் மற்றும் தொடர்பாடல் வாங்கிகள் மற்றும் துணைப்பாகங்கள் |
| 03) | வீடியோ புகைப்படக்கருவிகள் மற்றும் துணைப்பாகங்கள் |
| 04) | மின்னொளி வழங்கும் உபகரணங்கள் மற்றும் மின்குமிழ்கள் |
| 05) | செவிப்புல/கட்புல ஒலிநாடாக்கள்/ இறுவட்டு/டிவிடி/விசிடி/XDCAM Discs |
| 06) | பிலிம்கள் மற்றும் புகைப்படப் பொருட்கள் |
| 07) | ஒப்பனைச் சாதனங்கள் |
| 08) | கிரபிக் பொருட்கள் மற்றும் படம்வரைதல் உபகரணங்கள் |
| 09) | கணனிகள் மற்றும் கணனி துணைப்பாகங்கள் |
| 10) | நிழற்படபிரதியாக்கல் இயந்திரங்கள் மற்றும் ஏனைய வகை அலுவலக இயந்திரங்கள் |
| 11) | அலுவலக உபகரணங்கள் மற்றும் இணைப்புகள் |
| 12) | மர தளபாடம் (அலுவலக மற்றும் வீட்டுப்பாவனை) /தளபாட ஒழுங்குமுறையில் நிறுவுதல் |
| 13) | மின்னியல் பொருட்கள் மற்றும் கேபிள்கள் |
| 14) | ரீவி/விசிஆர் உதிரிப்பாகங்கள் மற்றும் துணைப்பாகங்கள். |
| 15) | மின்னியல் /மின்சார விசிறிகள் இன்னுப் பலவும் அடங்கலாக இலத்திரனியல் சாதனங்கள். |
| 16) | தொலைபேசி உபகரணங்கள் மற்றும் துணைப்பாகங்கள். |
| 17) | தீயணைப்பு மற்றும் பத்திரத்தன்மை உபகரணங்கள். |
| 18) | அரியப்பட்ட பலகை/ஒட்டுப்பலகை. |
| 19) | கட்டிடப் பொருட்கள். |
| 20) | வாகனங்களுக்கான டயர்கள் மற்றும் டியுப்புகள் |
| 21) | வாகனங்கள் /UPS இன்னும் பலவற்றிற்கான மின்சேமிப்புக்கலங்கள். |
| 22) | கணனி காகிதாதி, ரிப்பன்கள் மற்றும் கார்ட்ரிச்கள் |
| 23) | காகிதாதி மற்றும் அலுவலக தேவைப்படுத்தல்கள். |
| 24) | அச்சு வேலைகள் மற்றும் புத்தகம் கட்டும் வேலைகள் |
| 25) | டிஜிட்டல் அச்சடித்தல் (Flex மற்றும் ஸ்டிக்கர்கள்) |
| 26) | கனரகப் பொருட்கள் மற்றும் நிறப்பூச்சுகள் |
| 27) | இசைக்கருவிகள் (மேலைத்தேயம் மற்றும் கீழைத்தேயம்) |
| 28) | பாதுகாப்பு உபகரணங்கள். |
| 29) | உள்ளக அலங்கரிப்புகள். |
| 30) | சீருடை பொருட்கள். |
| 31) | நினைவுச்சின்னங்கள் மற்றும் பதக்கங்கள். |
| 32) | வளிச்சீராக்கிகள், வளியிறுக்கிகள் மற்றும் வளிச்சீராக்கி உதிரிப்பாகங்கள். |
| 33) | அனைத்து வகையான பெயாரிங்ஸ். |
| 34) | இரசாயனங்கள் - (கொ-கொண்டக் (Co-Contact) சுத்தம் செய்யும் சாதனம் மற்றும் ஏனைய சுத்தம் செய்யும் இரசாயனங்கள்) |
| 35) | அனைத்து வகையான சீரான மின் வழங்கிகள். |
| 36) | ரீ-சேட்டுக்கள், தொப்பிகள், கொடிகள் மற்றும் பதாகைகளின் வழங்கல். |
| 37. | வாகன உதிரிப்பாகங்களை வழங்கல் |

**சேவைகள் மற்றும் ஒப்பந்தங்கள்**

**பிரிவு “A” - நிகழ்ச்சிகளுக்கான பொருட்களின் வழங்கல் (வெளிநாடு மற்றும் உள்ளூர்)**

i) பண்பியல்பு படங்கள் /திரைப்படங்கள்.
ii) உயிரோட்டமுள்ள தொடர்கள் நிகழ்ச்சிகள்
iii) சிறுவர்கான தொடர்கள்.
iv) விளையாட்டுத்துறை நிகழ்ச்சிகள்.
v) நகைச்சுவைத் தொடர்கள்.
vi) துப்பறியும் தொடர்கள்.
vii) வீரச்செயல்கள் தொடர்கள்.
viii) இசை நிகழ்வுகள் /நிகழ்ச்சிகள்
ix) ஏனைய விஷேட நிகழ்ச்சிகள்.

**பிரிவு “B” நிர்மாண வேலைகள் :**

| # வகுதி | | ICTAD வழிகாட்டிகளுக்கமைவாக தேவைப்படுத்தப்படும் தரம். |
|---|---|---|
| i) | கட்டிட நிர்மாணங்கள் | C8, C9 மற்றும் C10 |
| ii) | அலுமினிய பகுதிபிரிப்புகள் | |
| iii) | நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்பு | |
| iv) | பாதுகாப்பு வேலி நிர்மாணம் | |
| v) | சிறிய திருத்த வேலைகள் மற்றும் பேணல் | |

பிரிவு ‘B” ‘i’இலிருந்து ‘V’ வரையிலான நிர்மாண வேலைகளுக்கு கொழும்பு-07, விஜேராம மாவத்தை, 123ஆம் இலக்கத்திலுள்ள ICTAD அலுவலகத்தினால் வழங்கப்பட்ட பதிவுப் புத்தகத்தின் நிழற்படப்பிரதியொன்றுடன் விண்ணப்பம் சமர்ப்பிக்கப்படல் வேண்டும். மேலேயுள்ள வேலைகளுக்காக ரூபவாஹினி கூட்டுத்தாபனத்துடன் பதிவு செய்துள்ள நபர்கள் மேலேயுள்ள ICTAD பதிவுடன் 2023ஆம் ஆண்டிற்கான புதுப்பித்தலுக்காக எழுத்துருவிலான விண்ணப்பமொன்றைச் சமர்ப்பிக்கலாம்.

**பிரிவு “C” தொலைக்காட்சி தயாரிப்புகளுக்காக உபகரணங்கள் மற்றும் தொடர்புற்ற சேவைகளை வாடகைக்கமர்த்தல்**

| வகுதி எண் | வகுதி |
|---|---|
| 01. | கட்புல செவிப்புல உபகரணங்களை வாடகைக்கமர்த்தல் |
| 02. | செவிப்புல ஸ்டுடியோக்களை வாடகைக்கமர்த்தல் |
| 03. | மின்பிறப்பாக்கிகள் மற்றும் உயர்த்திகள் போன்றவற்றை வாடகைக்கமர்த்தல் |
| 04. | Gantries / Scaffolding போன்றவற்றை வாடகைக்கமர்த்தல் |
| 05. | கூடாரங்களை அமைத்தல் |
| 06. | கெமரா Tracks மற்றும் Dollies/Jib Arms வாடகைக்கமர்த்தல் |
| 07. | ஒளி முறைமைகள் - ஒளியேற்றும் விசேட effectsகளை வாடகைக்கமர்த்தல் |
| 08. | செட்டுகள், மேடைகள், ஒப்பனைகள், தளபாடங்கள் வாடகைக்கமர்த்தல் |
| 09. | ஒலி உபகரண முறைமைகளை வாடகைக்கமர்த்தல் |
| 10. | இசைக்கருவிகள்/இசைக்குழுக்களை வாடகைக்கமர்த்தல் |
| 11. | அரங்கு/செவிப்புல/குரல்பதிவு ஸ்டுடியோக்கள் (ஒலி ஸ்டுடியோ பதிவு செய்யும் வசதிகள்) |
| 12. | வீடியோ கெமராக்கள், Coptercams, தொகுக்கும் வசதிகள் & OB வசதிகள் |
| 13. | இயந்திரங்களை (மழை, காற்று, பணி, நுரை, புகை போன்றவை) வாடகைக்கமர்த்தல் |
| 14. | ஒலிபெருக்கி சாதனங்கள்/நடமாடும் PA ஸ்டுடியோ ஊக்குவிப்பு வண்டிகள் போன்றவற்றை வாடகைக்கமர்த்தல் |
| 15. | வீடியோ புறொஜெக்டர்கள், திரையிடல், LED மதில்கள் மற்றும் தொலைக்காட்சிப் பெட்டிகள் |
| 16. | 8 மணித்தியால Call sheet பிரகாரம் புகைப்பட கலைஞர்கள், ஒலியிடல் தொழில்நுட்பவியலாளர்கள், ரெக்கோடிங்குகள் போன்றோரை வாடகைக்கமர்த்தல் |
| 17. | தயாரிப்பு குழுவினருக்கான தங்குமிட வசதிகள் |

“மாகாண மட்டத்தில் (நாடு முழுதும்) கீழே குறிப்பிடப்பட்டுள்ள “பிரிவு C” கீழாக, வழங்குநர்கள் மற்றும் சேவை வழங்குநர்கள் பதிவுசெய்து கொள்ளப்படுவதுடன் நிகழ்ச்சி தயாரிப்பு பகுதிகளில் வசிக்கும் நபர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும்.

**பிரிவு “D” வாகனங்களை புதுப்பித்தல் மற்றும் அது சார்ந்த வேலைகள்**

| வகுதி இல | வகுதி | குறிப்பு |
|---|---|---|
| 01 | மோட்டார் வாகன திருத்தவேலைகள் | கொழும்பு, தெஹிவளை, கல்கிஸ்சை மற்றும் கோட்டே மாநகர சபை எல்லைகளுக்குள் அமைந்துள்ள திருத்தகங்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும். |
| 02. | மோட்டார் வாகன சேர்விஸ்கள் | |
| 03. | தகர வேலை மற்றும் நிறப்பூச்சு வேலைகள் | |
| 04. | மோட்டார் வகனங்களின் Upholstery வேலைகள் | |
| 05. | வாகன வளிச்சீராக்கல்கள் | |
| 06. | வாகன மின்சார வேலைகள் | |
| 07. | இயந்திரம் Rebuilder | |
| 08. | கடைசல் இயந்திர வேலைகள் | |

**பிரிவு “E” ஏனைய சேவைகள்**

| வகுதி இல | வகுதி |
|---|---|
| 01. | அலுவலக இயந்திரங்கள் மற்றும் உபகரணங்களின் திருத்தவேலைகள் |
| 02. | உருக்குத் தளபாடங்களின் திருத்தவேலைகள் - கபோர்ட்கள் மற்றும் கெபினட்டுகள் உட்பட |
| 03. | அலுவலக தளபாடங்களின் திருத்தவேலைகள் |
| 04. | Colour processing and developing of films |
| 05. | வாகனங்களை வாடகைக்கு பெறல், வேன் வண்டிகள், கார்கள், ஜீப் வண்டிகள் மற்றும் லொறிகள் |
| 06. | தளபாடங்கள் மற்றும் வீட்டுப் பாவனைப் பொருட்கள் வாடகைக்கு பெற்றுக்கொள்ளல் |
| 07. | கொடி கம்பங்களை (G.I.) வாடகைக்குப் பெறல் |
| 08. | தொழிலாளர்களை வாடகைக்கமர்த்தல் (திறனுள்ள மற்றும் திறனற்ற) |
| 09. | அச்சுக்கோர்ப்பு - நிறம் பிரித்தெடுத்தல் (Screen Printing) |
| 10. | கட்அவுட்கள்/Billboard/பதாகைகள்/டிஜிட்டல் திரைகள் என்பவற்றை எழுப்புதல் |
| 11. | உயிரோட்டமுள்ள திரைபடங்கள் (Animation) |
| 12. | DVD மற்றும் VCD என்பவற்றை பிரதியீடு செய்தல். |
| 13. | பீடைகளை கட்டுப்படுத்தல் |

ஒவ்வொரு உருப்படி வகுதிக்குமான (நிர்மாண வேலைகள் நீங்கலாக) தனித்தனியான விண்ணப்பங்களை பின்வரும் விபரங்களுடன் பதிவுத் தபாலில் “2023ஆம் ஆண்டிற்கான வழங்குநர்களை பதிவு செய்தல்” என குறிப்பிட்டு 2022.10.30ஆம் திகதி அல்லது அதற்கு முன்னராக கொழும்பு-7, இலங்கை ரூபவாஹினி கூட்டுத்தாபனம், பணிப்பாளர் நாயகத்தை வந்தடையும் வகையில் அனுப்பப்படல் வேண்டும். இப்பத்திரிகை அறிவித்தல் நியதியின் பிரகாரம் 2022ஆம் வருடத்திற்கு பதிவு செய்தவர்களும் புதிய பதிவிற்காக மீள்விண்ணப்பம் செய்தல் வேண்டும். விண்ணப்பிக்கும் ஒவ்வொரு வகுதி உருப்படிக்கும் பதிவுக் கட்டணமாக 500.00 ரூபாவிற்கான காசோலையொன்றை தயவு செய்து அனுப்பவும். கீழே குறிப்பிட்டுள்ளவாறு காசோலைகள் இலங்கை ரூபவாஹினி கூட்டுத்தாபனத்தின் பெயரில் வழங்கப்பட்டு விண்ணப்பத்துடன் அனுப்பப்படல் வேண்டும்.

**குறிப்பு:** ஒன்றுக்கு மேற்பட்ட வகுதிகளுக்கு விண்ணப்பித்தால், கொடுப்பனவுகளை ஒரே காசோலை மூலம் செலுத்துதல் வேண்டும்.

## மாதிரி விண்ணப்பப் படிவம்

01) உருப்படியின் வகுதி மற்றும் உருப்படி இல. …………… (தயவு செய்து இருப்பிலுள்ள உருப்படிகளின் பட்டியலை இணைக்கவும்)
02) வியாபார பதிவு (தயவு செய்து பிரதியொன்றை இணைக்கவும்)
03) பெசேவ பதிவெண்:
04) பெசேவ இற்கு பதிவில்லையெனில் -
(கம்பனியானது பெசேவ இற்கு பதிவு செய்யப்படவில்லையென உள்நாட்டு இறைவரி திணைக்கள ஆணையாளரினால் உறுதிப்படுத்தப்பட்டு வழங்கப்பட்ட கடிதத்தின் பிரதியொன்றை தயவு செய்து இணைக்கவும்)
05) நீங்களொரு உற்பத்தியாளர் அல்லது உற்பத்தியாளரினால் நியமனம் செய்யப்பட்ட முகவரொருவரெனின், தயவுசெய்து இதற்கான ஆவணச் சான்றை இணைக்கவும்.
06) நிறுவனத்தின் பெயர் மற்றும் முகவரி :
07) தொலைபேசி இல.:................. தொலைநகல் இல.:..... ..............
மின்னஞ்சல்:............................
08) வங்கியாளர்கள் : ......................................................
09) கிடைக்கத்தக்க கடன் வசதிகள் (கடன் வசதிகள் ஆகக் குறைந்தது 30 நாட்களுக்காவது இருத்தல் வேண்டும்)
10) கிடைக்கத்தக்க விநியோக வசதிகள் :
11) விண்ணப்பத்துடன் கம்பனியின் விபரங்களை சமர்ப்பிக்கவும்.

...................................................
விண்ணப்பதாரியின் கையொப்பம் திகதி :

**குறிப்பு:** இந்த விளம்பரத்தின் கீழ் பதிவு செய்யப்பட்ட வழங்குநர்களிடமிருந்து மாத்திரமே விலைமனுக் கூறுகளைக் கோர வேண்டுமென கடப்பாடு இலங்கை ரூபவாஹினிக் கூட்டுத்தாபனத்திற்கு இல்லை.

**பணிப்பாளர் நாயகம்,**
**இலங்கை ரூபவாஹினி கூட்டுத்தாபனம்,**
**சுதந்திர சதுக்கம்,**
**கொழும்பு - 07.**

# போதனா வைத்தியசாலை

## அநுராதபுரம்

## பொருட்கள் மற்றும் சேவைகள் வழங்குநர்களைப் பதிவு செய்தல் — 2023

2023ஆம் வருடத்திற்காக அநுராதபுரம் போதனா வைத்தியசாலைக்கு பொருட்கள் மற்றும் சேவைகளை வழங்குவதற்கு பதிவு செய்து கொள்வதற்காக இலங்கையிலுள்ள வழங்குநராக பதிவு பெற்ற வர்த்தக நிறுவனங்கள், கூட்டுறவுச் சங்கங்கள், கூட்டுத்தாபனங்கள் உட்பட அரச நிறுவனங்கள் மற்றும் அங்கீகரிக்கப்பட்ட வர்த்தக நிறுவனங்களிலிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

01. அனைத்து விண்ணப்பங்களும் பணிப்பாளர், போதனா வைத்தியசாலை அநுராதபுரம் என்ற விலாசத்துக்கு பதிவுத் தபாலில் அனுப்பி வைக்கப்படல் வேண்டும். விண்ணப்பங்களைத் தாங்கி வரும் உறையில் இடது பக்க மேல் மூலையில் ''2023ஆம் ஆண்டுக்கான வழங்குநர்களைப் பதிவு செய்தல்'' எனக் குறிப்பிடப்படல் வேண்டும்.

**(அ) வழங்கல்**

1. அனைத்துவிதமான காகிதாதிகள் (தொலைநகல் மற்றும் கணனி காகிதங்கள் உட்பட)
2. அனைத்துவித வீட்டுத் தளபாடங்களும் அலுவலக உபகரணங்களும் (மரம்/ இரும்பு/ பிளாஸ்டிக்)
3. மருத்துவமனை மெத்தை (றப்பர் கலந்த/ தும்பு)
4. பாதணி, செருப்பு, பூட்ஸ், ரெக்ஸின் மற்றும் றப்பர் உற்பத்தி
5. சீருடைத் துணி
6. மருத்துவமனை துணி வகைகள் (கட்டமிடப்பட்ட துணி, கட்டில் விரிப்பு, நுளம்பு வலை, GS துவாய்கள் என்பன)
7. சகல மின்சார உபகரணங்கள் (குளிர்சாதனப்பெட்டி, காற்றுச்சீராக்கி போன்றன)
8. அலுவலக உபகரணங்கள் (ரோனியோ இயந்திரம், புகைப்படப் பிரதி இயந்திரம், தொலைநகல் இயந்திரம் போன்றன)
9. அலுமினியம் மற்றும் இரும்புப் பொருட்கள்
10. நிர்மாணம் மற்றும் பராமரிப்பு உதிரிப்பாகங்கள் (மின்சாரம்/ இரும்பு/ நீர் குழாய்)
11. வாகனங்களுக்கான டயர், டியூப், பற்றரி
12. அனைத்து மரக்குற்றிகள், பலகை வகைகள் மற்றும் முடிவுறுத்தப்பட்ட பொருட்கள் (வீட்டுத் தளபாடங்கள் அல்லாதவை)
13. அனைத்து வைத்திய உபகரணங்கள், சத்திரசிகிச்சை உபகரணங்கள், இரசாயனகூட உபகரணங்கள் மற்றும் சத்திரசிகிச்சையில் பாவிக்கப்படும் பொருட்கள்
14. சத்திரசிகிச்சை பாவனைப் பொருட்கள் வழங்குதல் (இதயநோய்)
15. சத்திரசிகிச்சை பாவனைப் பொருட்கள் வழங்குதல் (கதிரியக்கம்)
16. சத்திரசிகிச்சை பாவனைப் பொருட்கள் வழங்குதல் (சிறுநீரகம்)
17. சத்திரசிகிச்சை பாவனைப் பொருட்கள் வழங்குதல் (தொன்டை, காது, மூக்கு)
18. சத்திரசிகிச்சை பாவனைப் பொருட்கள் வழங்குதல் (கண்)
19. சத்திரசிகிச்சை பாவனைப் பொருட்கள் வழங்குதல் (சத்திரசிகிச்சைகூடம்)
20. சத்திரசிகிச்சை பாவனைப் பொருட்கள் வழங்குதல் (விகாரமான உறுப்புக்கள்)
21. சத்திரசிகிச்சை பாவனைப் பொருட்கள் வழங்குதல் (ஏனையவை)
22. அனைத்து இரசாயனகூட உபகரணங்கள்
23. அனைத்து இரசாயனகூடத்துக்கான இரசாயனப் பொருட்கள்
24. மோட்டார் வாகன உதிரிப்பாகங்கள்
25. L.P. காஸ் (உணவு சமைப்பதற்கு)
26. கணனிகளும் அதற்குரித்தான துணைப்பாகங்களும்
27. மின்சார மற்றும் இயந்திர வேலைகளுக்குத் தேவையான துணைப்பாகங்கள்
28. மட்பாண்டப் பொருட்கள், கண்ணாடி உபகரணங்கள், பிளாஸ்டிக் உபகரணங்கள்
29. மருத்துவமனை கட்டில்கள், நோயாளர் காவிகள், சக்கர நாட்காலி, ட்ரொலி, சேலைன் தாங்கி ஆகியன
30. மருந்துகளும் கட்டுத்துணிகளும்
31. அனைத்து வகையான பாவனைப் பொருட்கள் (மின் குமிழ்கள், டியுப், பல்புகள், டோச் பெற்றரி, வயர், சவர்க்கார வகைகள், மலசலகூட சுத்திகரிப்புக்கான திரவங்கள், தூள் வகைகள், விளக்குமாறு/ துடைப்பங்கள்/ பிரஷ் வகைகள்)
32. தீயணைப்பு உபகரணங்கள் வழங்குதல்
33. மருத்துவ உபகரணங்களுக்கான உதிரிப்பாகங்களை வழங்குதல்
34. அச்சு இயந்திரத்திற்காக பாவிக்கப்படும் டோனர், ரிபன் மற்றும் தீந்தை

**(ஆ) சேவைகள்**

1. அலுவலக உபகரண திருத்தவேலைகள், பராமரிப்பு மற்றும் வலையமைப்பிடல் வேலைகள் (புகைப்படப் பிரதி இயந்திரம், கணனிப் பொறி போன்றன)
2. சகல மின்சார உபகரணங்களின் திருத்தவேலைகள்
3. அனைத்து விதமான மோட்டார் வாகனங்களின் திருத்தவேலைகள் செய்தல் (வளிச்சீராக்கி)
4. அனைத்து விதமான மோட்டார் வாகனங்களின் திருத்தவேலைகள் செய்தல் (மின்னியல்)
5. அனைத்து விதமான மோட்டார் வாகனங்களின் திருத்தவேலைகள் செய்தல் (வளிச்சீராக்கம் மற்றும் மின்னியல் திருத்தவேலைகள் தவிர்ந்தவை)
6. அனைத்து விதமான மோட்டார் வாகனங்களை சேர்விஸ் செய்தல்
7. உருக்கு/ மர வீட்டுத்தளபாடங்களைப் பழுதுபார்த்தல் (கதிரை பின்னுதல், நிறப்பூச்சு பூசுதல், பொலிஷ் பண்ணுதல் போன்றன)
8. இறப்பர் முத்திரைகள் தயாரித்தல்
9. அச்சு வேலைகள்
10. சத்திரசிகிச்சை கூடம், இரசாயனகூடம், மற்றும் மருத்துவமனை அனைத்து உபகரணங்களைப் பழுதுபார்த்தல்
11. காஸ் மற்றும் ஒக்ஸிஜன் உபகரணங்களைப் பழுதுபார்த்தல் (காஸ் பர்னர் மற்றும் காஸ் அடுப்பு பழுதுபார்த்தல்)
12. வைத்தியசாலையிலிருந்து அப்புறப்படுத்தப்படும் பிளாஸ்டிக் போத்தல்கள், சிரட்டை, காட்போட்களை கொள்வனவு செய்தல்
13. தீயணைப்பு உபகரணங்களை மீள் நிரப்புதல்
14. சக்கர நாற்காலிகள் மற்றும் ட்ரொலிகளின் திருத்தவேலைகள்
15. குஷன் செய்தல் (வாகனம் மற்றும் தளபாடங்கள்)
16. உணவு பானங்களை வழங்குதல் (உணவுப் பொதிகள், சிற்றுண்டிகள், தேநீர், இனிப்புகள்)
17. உத்தியோகபூர்வ அடையாள அட்டைகளைத் தயாரித்தல்
18. மருத்துவ வாயு முறைமைகளை வழங்கி பொருத்துதல் மற்றும் திருத்தவேலைகள்
19. தொலைபேசி மற்றும் தொலைபேசி இணைப்பு முறைமைகளின் திருத்தவேலைகள்

02. விண்ணப்பப் படிவங்கள் 2022.10.01ஆம் திகதி முதல் 2022.10.31ஆம் திகதி வரையான அரச வேலை நாட்களில் பி.ப. 3.00 மணி வரை விநியோகிக்கப்படும். அவ்வப் பொருட்கள் மற்றும் சேவைகளுக்காக கீழ்வரும் மாதிரிப் படிவத்தின் அடிப்படையில் தனித்தனியான விண்ணப்பங்களைச் சமர்ப்பித்தல் வேண்டும்

03. மேலும் மீளளிக்கப்படாத பதிவுக் கட்டணமாக 1000.00 ரூபாவை வெவ்வேறாக ஒவ்வொரு பொருள் மற்றும் சேவைக்காக செலுத்த வேண்டும். இக்கொடுப்பனவை இந்த அலுவலகத்தின் காசாளரிடம் செலுத்தி பெற்றுக்கொண்ட பற்றுச்சீட்டை விண்ணப்பத்துடன் இணைத்தல் வேண்டும். காசோலைகள் மற்றும் காசுக் கட்டளைகள் ஏற்றுக்கொள்ளப்பட மாட்டாது.

04. வழங்குதல் மற்றும் சேவைகளுக்கான பதிவு செய்யப்பட்ட வழங்குநர்களுக்கு விலைமனு கோரலின்போது முன்னுரிமை வழங்கப்படுவதுடன் பதிவு செய்யப்படாத ஏனைய அங்கீகாரம் பெற்ற வழங்குநர்களிடமிருந்தும் விலைமனு கோருவதற்கு நிறுவனத்திற்கு உரிமை உண்டு. உரிய தரம் மற்றும் மாதிரிகளுக்கு அமைய பொருட்களும் சேவை வழங்கலையும் செய்யாதவர்கள், மேலும் விலைமனு கோரும் போது சரியான முறையில் பதிலை வழங்காத வழங்குநர்களின் பெயர் எதுவித முன்னறிவித்தலுமின்றி பதிவுப் புத்தகத்திலிருந்து அகற்றுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும்.

05. அனைத்து விண்ணப்பங்களும் 2022.11.15ஆம் திகதி பி.ப. 2.00 மணி வரை ஏற்றுக் கொள்ளப்படும். அதன் பின் கிடைக்கும் விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும்.

06. வியாபாரப் பதிவுச் சான்றிதழின் பிரதியொன்றை விண்ணப்பத்துடன் சமர்ப்பித்தல் கட்டாயமாகும்.

07. நீங்கள் வெட் வரி செலுத்தும் செயற்பாட்டு பங்களிப்பாளரானால் அச்சான்றிதழின் பிரதியொன்றை விண்ணப்பத்துடன் சமர்ப்பித்தல் கட்டாயமாகும்.

08. சரியான முறையில் தகவல்கள் தரப்படாத விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும்.

............................

**தவிசாளர்,**
**பிராந்திய கேள்விச் சபை,**
**போதனா வைத்தியசாலை,**
**அநுராதபுரம்.**

## அற்றோணி தத்துவத்தை இரத்துச் செய்தல்

கொழும்பில் வசிக்கும் பிரசித்த நொத்தாரிசு கே.ஆர். பீரிஸ் என்பவரினால் 2006.12.02 அன்று அத்தாட்சிப்படுத்தப்பட்ட 1265 இலக்க அற்றோணி தத்துவத்தின் மூலம் ரோஸ் விலா பத்தேகம இல் வசிக்கும் தற்பொழுது 16, மாஸ்டர்ஸ் ஸ்ட்ரீஸ் டெண்டினோன் விக்டோரியா 3175 அவுஸ்திரேலியாவில் வசிக்கும் ருமாலி அநுருத்திகா மடவல என்பவரினால் நுகேகொடை, தலபத்பிட்டிய, தெல்கஹவத்த, இலக்கம் 14 இல் வசிக்கும் விதானச்சிகே தோன தகுனி ரங்கலாஸ னா கணேகம என்பவருக்கு வழங்கப்பட்ட அற்றோணி தத்துவமானது இரத்துச் செய்யப்படுகின்றதென இத்தால் அனைவருக்கும் அறிவித்துக் கொள்கின்றேன். இது 2007.01.19ஆம் திகதி D.B. இலக்கம் 776 இன் கீழ் 26/350 என்ற பக்கத்தில் பதிவு செய்யப்பட்டுள்ளது.

## பெறுகை அறிவித்தல்

### மருந்து உறைகளை கொள்வனவு செய்தல்

**தள வைத்தியசாலை (போதனா) - கம்பளை**

01. கீழ்க்காணும் மருந்து உறைகளை வழங்குவதற்காக கம்பளை, தள வைத்தியசாலை (போதனா) பெறுகைக் குழுவின் தலைவரால் பொறியிடப்பட்ட விலைமனுக்கள் கோரப்படுகின்றன. அத்துடன் விலைமனுக்கள் 2022.10.19ம் திகதி மு.ப. 10.30 வரை பெற்றுக்கொள்ளப்படும்.
02. இலங்கை சந்தைக்கு மருந்து உறைகளை வழங்கும் உற்பத்தியாளர்கள் மாத்திரம் இந்த கேள்வியில் பங்குபற்ற தகைமைபெறுவர்.
03. கீழ்க்காணும் விடயங்களை சமர்ப்பிப்பதன் பேரில் எந்த ஆர்வமுள்ள தகைமையான விலைமனுதாரர், முகவர், பிரதிநிதி அல்லது ஓர் விலைமனுதாரரின் சார்பான பெயர் குறிப்பிடுபவர்களால் கொள்வனவு செய்யப்படும் ஓர் முழுமையான தொகுதி விலைமனு ஆவணங்களில் விலைமனு ஆவணங்கள் சமர்ப்பிக்கப்படல் வேண்டும்.
    அ. கம்பளை, தள வைத்தியசாலை (போதனா), பெறுகைக் குழுவில் தலைவருக்கு ஓர் எழுத்து மூல விண்ணப்பம்.
    ஆ. வேலை நேரங்களில் கம்பளை, தள வைத்தியசாலை, கணக்காளருக்கு ஓர் மீளளிக்கப்படாத கட்டணம் ரூ. 1000.00 ஐ காசாகச் செலுத்துவதன் பேரில்
    இ. வியாபார பதிவுச் சான்றிதழ் ஓர் புகைப்படப் பிரதியுடன் அல்லது உறுதி செய்யப்பட்ட பிரதி
04. விலைமனு ஆவணங்களை வேலை நாட்களில் மு.ப. 9.30 முதல் பி.ப. 2.00 இற்கு இடையில் 2022.09.30 முதல் 2022.10.18 வரை கம்பளை, தள வைத்தியசாலை (போதனா) இலிருந்து பெற்றுக்கொள்ள முடியும்.
05. 2022.10.19ம் திகதி மு.ப. 10.30 மணிக்கு அல்லது அதற்கு முன் கம்பளை, தள வைத்தியசாலை (போதனா), கணக்காளரின் அலுவலகத்தில் உள்ள கேள்விப் பெட்டியில் பொறியிடப்பட்ட விலைமனு ஆவணங்களை வைப்பிலிடலாம் அல்லது கீழே உள்ள முகவரிக்கு பதிவுத் தபாலில் அனுப்புதல் வேண்டும்.
06. 2022.10.19ம் திகதி மு.ப. 10.30 மணிக்கு கம்பளை, தள வைத்தியசாலை (போதனா), பெறுகைக் குழு, தலைவரின் அலுவலகத்தில் கேள்விகள் மூடப்பட்ட பின்னர், உடனடியாக விலைமனுக்கள் திறக்கப்படும். அவ்வேளையில் விலைமனுதாரர் அல்லது அவரது பிரதிநிதி ஓர் அவதானிப்பாளராக கலந்து கொள்ளமுடியும்.

**டொக்டர் துமிந்த டயஸ்**
**பணிப்பாளர்,**
**தலைவர், பெறுகைக் குழு**
**தள வைத்தியசாலை (போதனா)**
**கம்பளை.**

## கொழும்பு மாநகர சபை

### மாநகர பொறியியலாளர் திணைக்களம்

### 2023ஆம் வருடத்திற்கான திண்மக் கழிவு முகாமைத்துவ முன்மொழிவுகளை தயாரிப்பதற்கு ஆலோசகர்களைப் பதிவு செய்தல்

2023ஆம் வருடத்தில் உயர்ந்த கட்டிடங்களுக்கான திண்மக் கழிவு அனுமதியைப் பெற்றுக்கொள்வதற்காக திண்மக் கழிவு முகாமைத்துவ முன்மொழிவுகளைத் தயாரிப்பதற்காக கொழும்பு மாநகர சபையில் பதிவு செய்து கொள்வதற்காக தகுதி வாய்ந்த தனி நபர்கள் / நிறுவனங்களிடமிருந்து மேற்கூறப்பட்டவற்றுக்கான முத்திரைக்குறி பொறிக்கப்பட்ட விலைமனுக்களை கொழும்பு மாநகர சபையின் மாநகர ஆணையாளர் அழைக்கின்றார்.

மேற்படி தேவைப்பாட்டிற்காக கொழும்பு மாநகர சபையில் பதிவு செய்து கொள்ளும் நபர் கீழ்க் குறிப்பிடப்பட்டுள்ள தகைமைகளைக் கொண்டிருத்தல் வேண்டும்.

1. பொறியியல் அல்லது சுற்றாடல் விஞ்ஞானத்தில் பட்டப் பின்படிப்புத் தகைமை
2. பட்டய பொறியியலாளர் திண்மக் கழிவு முகாமைத்துவத்தில் (SWM) போதுமான அறிவு மற்றும் அனுபவத்தைக் கொண்டிருத்தல் வேண்டும்.
3. பட்டய கட்டிடக் கலைஞர்கள் திண்மக் கழிவு முகாமைத்துவத்தில் போதுமான அறிவு மற்றும் அனுபவத்தைக் கொண்டிருத்தல் வேண்டும்.
4. திண்மக் கழிவு / சுற்றாடல் பாடங்களில் கல்வி நிறுவனங்களில் பணியாற்றும் விரிவுரையாளர்கள்
5. தகுதி வாய்ந்த நபர் திண்மக் கழிவு முகாமைத்துவத்தில் 5 வருடத்திற்கு மேற்பட்ட அனுபவத்தைக் கொண்டிருத்தல் வேண்டும்.

கவனிக்கவும்: தற்போது அரச நிறுவனத்தில் கடமையாற்றும் நபர் மேற்படி பதிவுக்காக விண்ணப்பிப்பதற்கு தகுதியற்றவர்.

இயைபுடைய விண்ணப்பப் படிவங்களை வியாபாரக் கடிதத் தலைப்பில் வேண்டுகோள் ஒன்றைச் செய்வதன் பேரில் மற்றும் மீளளிக்கப்படாத கட்டணமாக 2,000.00 + வெட் ரூபாவை ரொக்கப் பணமாக செலுத்தி கொழும்பு-07. நகர மண்டபம், மாநகர பொறியியல் திணைக்களத்தின் செயற்றிட்ட முகாமைத்துவப் பிரிவிலிருந்து கொள்வனவு செய்யலாம். 3,500.00 + வெட் ரூபா பதிவுக் கட்டணம் முன்கூட்டியே அறவிடப்படும் என்பதுடன் அந்தப் பற்றுச்சீட்டின் புகைப்படப் பிரதியை விண்ணப்பத்துடன் இணைத்து சமர்ப்பித்தல் வேண்டும். பதிவுக் கட்டணமானது பதிவு செய்வதற்கு தகுதியற்ற விண்ணப்பதாரிகளுக்கு மீளளிக்கப்படும்.

முறையாகப் பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பப் படிவங்களை ஆதரவு ஆவணங்களுடன் 2022 ஒக்டோபர் 30ஆம் திகதி அல்லது அதற்கு முன் கிடைக்கும் வகையில் ''பொறியியல் பணிப்பாளர் (SWM), மாநகர பொறியியலாளர் திணைக்களம், கொழும்பு மாநகர சபை, நகர மண்டபம், கொழும்பு-07'' எனும் முகவரிக்கு பதிவுத் தபாலில் அனுப்புதல் வேண்டும். முத்திரைக்குறி பொறிக்கப்பட்ட கடித உறையின் இடதுபக்க மேல் மூலையில் ''2023ஆம் வருடத்திற்கான ஆலோசகர்களைப் பதிவு செய்தல்'' எனக் குறிப்பிடுதல் வேண்டும்.

திண்மக் கழிவு முகாமைத்துவத்திலுள்ள அறிவின் செய்முறை விளக்கம் மற்றும் தகைமைகள் மற்றும் அனுபவத்தை உறுதி செய்து கொள்வதற்கு விண்ணப்பதாரர்கள் நேர்முகத் தேர்வொன்றிற்கு அழைக்கப்படுவார்கள்.

நேர்முகத் தேர்வின்போது சான்றிதழ்கள் / ஆதரவு ஆவணங்களின் மூலப் பிரதிகள் மற்றும் உண்மைப் பிரதிகளைச் சமர்ப்பித்தல் வேண்டும்.

மேலதிக விபரங்களை மாநகர பொறியியல் திணைக்களத்தின் திண்மக் கழிவு முகாமைத்துவ பிரிவின் 011-2691191-283 அல்லது 011-2691222 எனும் தொலைபேசி இலக்கங்களின் ஊடாக பொறியியல் பணிப்பாளரிடமிருந்து (SWM) பெற்றுக்கொள்ளலாம்.

**ஜே.எம். பத்ராணி ஜயவர்தன,**
**மாநகர ஆணையாளர்**
**கொழும்பு மாநகர சபை,**
**நகர மண்டபம்,**
**கொழும்பு 07.**

## அறிவித்தல்

## நாத்தாண்டிய பிரதேச சபை

### 2023 ஆண்டிற்கான குறைநிரப்பு வரவு செலவுத் திட்ட அறிக்கை

1987 இல 15 பிரதேச சபை சட்டத்துடன் வாசிக்கப்பட வேண்டிய, வடமேல் மாகாண ஆளுநரால் 2020.10.29ம் திகதி இல 2199/15 எனும் இலங்கை சனநாயக சோஷலிச குடியரசு வர்த்தமானியில் (அதிவிசேட) பிரசுரிப்பதற்கு உள்ள பிரதேச சபை வரவு செலவுத் திட்ட தயாரிப்பு மற்றும் அமுலாக்கல் விதிகள் இல. 10(2) பிரகாரம் நாத்தாண்டிய பிரதேச சபையினால் 2023ம் ஆண்டிற்காக தயாரிக்கப்பட்ட குறைநிரப்பு வரவு செலவுத் திட்ட அறிக்கை 2022.10.03ம் திகதி முதல் நாத்தாண்டிய பிரதேச சபை தலைமையகத்தில், அலுவலக நேரங்களில் பொது மக்களுக்கு பரீட்சித்துப் பார்ப்பதற்கு வசதிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளதாக இதன் மூலம் அறிவித்துக் கொள்கிறேன்.

சட்டத்தரணி ரொஷான் நிலந்த பெர்னான்டோ

**தலைவர்**
**பிரதேச சபை**
**நாத்தாண்டிய**
**2022.09.26ம் திகதி பிரதேச சபை அலுவலகத்தில்.**

## சிலாபம் நகர சபை

### 2022ஆம் ஆண்டிற்கான வரவு – செலவுத்திட்ட வரைவு

சிலாபம் நகரசபையின் 2023 ஆம் ஆண்டிற்கான வரவு-செலவுத்திட்ட வரைவு ஆவணம் 2022 ஒக்டோபர் மாதம் 03 ஆம் திகதி முதல் 2022 ஒக்டோபர் 12 ஆம் திகதி வரை (அரசாங்க விடுமுறை தினங்கள் மற்றும் ஞாயிறு தினங்கள் தவிர) அலுவலக நேரங்களில் சிலாபம் நகரசபை அலுவலகத்தில் பொது மக்களின் பரிசீலனை பொருட்டு வைக்கப்பட்டுள்ளது என்பதனை நகரசபை வரவு-செலவுத்திட்டத் தயாரித்தல் மற்றும் வலுப்படுத்தல் விதிகளின் 10.2 (ஆ) ஆம் விதி பிரகாரம் பொது மக்களுக்கு இத்தால் அறிவிக்கப்படுகிறது.

**டப்.எம்.ஏ.துஷான் சத்துரங்க**
**தலைவர்**
**சிலாபம் நகர சபை**

**சிலாபம் நகர சபை அலுவலகம்.**
**சிலாபம்.**
**2022 செப்டெம்பர் 30 ஆம் திகதி**

## ரணபிம றோயல் கல்லூரிக்கு மாணவர்களை அனுமதித்தல் - 2022

2023ம் ஆண்டிற்கான கண்னொருவ ரணபிம றோயல் கல்லூரியில் தரம் 6ல் மாணவர்களைச் சேர்த்துக்கொள்ளும் போட்டிப் பரீட்சைக்காக நிகழ்நிலை (Online) முறையில் மாத்திரம் விண்ணப்பிக்க முடியும். ஆகவே http:exam.cpedu.lk/ என்னும் இணையதளத்திற்கு பிரவேசித்து பாடசாலை அதிபரின் ஊடாக விண்ணப்பிக்க வேண்டும். விண்ணப்பங்கள் பெற்றுக்கொள்ளும் இறுதி திகதி 2022.10.14 வரை நீடிக்கப்பட்டுள்ளது.

**மத்திய மாகாணக் கல்விப் பணிப்பாளர்**

## குளியாபிட்டிய பிரதேச சபை

### 2023ஆம் ஆண்டிற்கான வரைவு வரவு செலவு அறிக்கையைப் பரிசீலனை செய்து கொள்வதற்காக பொது மக்களுக்கு விடுக்கப்படும் அறிவித்தல்

1987ஆம் ஆண்டின் 15ஆம் இலக்க பிரதேச சபை சட்டத்தின் பிரகாரம் மற்றும் 2020 வரவு செலவு அறிக்கை தயாரித்தல் மற்றும் அமுலாக்கல் விதிகளின் பிரகாரம் 2023ஆம் ஆண்டிற்கான வரைவு வரவு செலவு அறிக்கையானது, 2022.09.30 முதல் 2022.10.11 வரை வார வேலை நாட்களில் மு.ப. 9.00 முதல் பி.ப. 3.00 வரை பிரதேச மக்களின் பரிசீலனைக்காக பிரதான அலுவலக வளாகத்தில் வைக்கப்பட்டுள்ளதென இத்தால் அறிவிக்கப்படுகின்றது.

**ஈ.எம். விஜயசிரி ஏக்கநாயக்க,**
**தலைவர்,**
**குளியாபிட்டிய பிரதேச சபை.**

## கந்தகெட்டிய பிரதேச சபை

### 2023ஆம் வருடத்திற்கான வரவு செலவு திட்ட வரைவு ஆவணத்தை பரிசோதித்து பார்ப்பதற்காக பொது மக்களுக்கு சந்தர்ப்பமொன்றை வழங்குவது தொடர்பாக செய்யப்படும் அறிவித்தல்

2023ஆம் வருடத்திற்காக கந்தகெட்டிய பிரதேச சபையினால் சமர்ப்பிக்கப்படும் வரவு செலவு திட்ட வரைவு ஆவணத்தை கந்தகெடிய பிரதேச சபைக்கு சொந்தமான கந்தகெட்டிய பொது நூலகத்தில் பரிசோதித்து பார்ப்பதற்காக பொது மக்களுக்கு 2022 ஒக்டோபர் மாதம் 14ஆம் திகதி முதல் 2022 ஒக்டோபர் மாதம் 27ஆம் திகதி வரை சந்தர்ப்பம் வழங்கப்படுமென இங்ஙனம் அறியத்தருகிறேன்.

**ஆர்.எம். கமல் ராஜபக்ச**
**தவிசாளர்**
**கந்தகெட்டிய பிரதேச சபை**

**2022.09.23**

## அலவ்வ பிரதேச சபை

**2023ஆம் ஆண்டிற்கான நிகழ்ச்சித்திட்ட வரவு செலவு அறிக்கை**

அலவ்வ பிரதேச சபையின் 2023ஆம் ஆண்டிற்கான வரைவு வரவு செலவு அறிக்கையானது, 2022 செப்டம்பர் 30 முதல் 2022 ஒக்டோபர் 11 வரை (அரச விடுமுறை நாட்கள் மற்றும் ஞாயிற்றுக்கிழமைகள் தவிர்ந்த) அலுவலக நேரங்களில் அலவ்வ பிரதேச சபையின் அலுவலகத்தில் பொது மக்களின் பரிசீலனைக்காக வைக்கப்பட்டுள்ளதென, பிரதேச சபை வரவு செலவு அறிக்கையை அமுலாக்கும் சட்டத்தின் 10.2(ஆ) இன் பிரகாரம் பொது மக்களுக்கு இத்தால் அறிவிக்கப்படுகின்றது.

**பத்மாலேத்தேவ**
**தலைவர்**
**அலவ்வ பிரதேச சபை**

**2022 செப்டம்பர் 23ஆம் திகதி**
**அலவ்வ பிரதேச சபை**
**அலவ்வ.**

### அற்றோணித் தத்துவப்பத்திரத்தை இரத்துச் செய்தல்

கொழும்பு-10, பன்சல மாவத்தை, இல. 17, இடத்தில் மற்றும் தற்பொழுது இத்தாலி, மிலானோ, இல. 20145, குச்செப்பி காலோ வியா சோலொன்ஜி-02ல் வசிக்கும் புஸ்ஸல்ல ஹேவகே ஷிரோமி சம்பிக்க என்பவரினால் இத்தாலியில், மிலானில் ஸ்ரீ லங்கா கொன்சல் ஜெனரல் அலுவலகத்தில் உதவி கொன்சலரான மஹேஷ் குணவர்தன அவர்களால் உறுதிப்படுத்தப்பட்ட 2017ம் ஆண்டு செப்டம்பர் மாதம் 05ந் திகதியுடைய அற்றோணித் தத்துவப்பத்திரத்தின் மூலம் தெஹிவளை, நெதிமாலை, கடவத்த வீதி, இல. 308சி என்ற இடத்தில் வசிக்கும் லொகு லியனகே அனோமா தீப்தி கப்ரால் ஆகிய எனக்களிக்கப்பட்ட அற்றோணித் தத்துவப்பத்திரத்தை 2022ம் ஆண்டு செப்டம்பர் மாதம் 16ந் திகதியிலிருந்து நடைமுறைக்கு வரும்வகையில் இரத்துச் செய்துள்ளதாக, ஸ்ரீ லங்கா அரசிற்கும் பொதுமக்களுக்கும் இத்தால் அறியத் தருகிறேன்.

**லொகு லியனகே அனோமா தீப்தி கப்ரால்**
**அற்றோணித் தத்துவம் வழங்குபவர்.**

### கல்கமுவ பிரதேச சபையின் 2023ஆம் வருடத்திற்காக தயாரிக்கப்பட்டுள்ள வரவு செலவுத்திட்ட வரைவு ஆவணம் தொடர்பில் பொதுமக்களுக்கு அறிவித்தல்

கல்கமுவ பிரதேச சபையின் 2023ஆம் வருடத்திற்காக எதிர்பார்க்கப்படும் வருமானம் 184.00 மில்லியன் ரூபா மற்றும் மூலதன வருமானம் 40 மில்லியன் ரூபாவைக் கொண்டுள்ளதுடன் உத்தேச செலவானது 171.19 மில்லியன் ரூபா என்பதுடன் மூலதன செலவு 52.80 மில்லியன் ரூபாவுக்கும் மற்றும் மேலதிகமாக 1873.00 ரூபாவைக் கொண்டும் தயாரிக்கப்பட்டுள்ள வரவு செலவுத் திட்டம் நகல் வரைவு பொதுமக்களின் பார்வைக்காக கல்கமுவ பிரதேச சபை அலுவலகம் மற்றும் சபைக்குரித்தான கல்கமுவ, நான்னேரிய, எஹெட்டுவெவ எனும் பொது நூலகங்களில் வைக்கப்பட்டுள்ளதாக இத்தால் அறிவிக்கப்படுகின்றது.

**தலைவர்,**
**பிரதேச சபை,**
**கல்கமுவ.**

### அட்டோர்ணி அதிகாரத்தை இரத்துச் செய்தல்/ இல்லாதொழித்தல்

இலங்கை சனநாயக சோஷலிச குடியரசின் வெலிகம, தளுவத்த மாவத்த, செட்டியார் தெரு, இல. 6/9 ஆகிய இடம் மற்றும் தற்போது Youngjin Sannop, Gimhae si, Sangdong Myeong Dongbukro 437 bon gil 83-1, South Korea எனுமிடத்தில் வசிக்கும் (இல. 751981511V எனும் தேசிய அடையாள அட்டை மற்றும் இல. - N 5277953 கொண்ட கடவுச் சீட்டு கொண்ட) ஹெந்தா விதாரன கல்யான் ரிஷாந்த குலசூரிய ஆகிய நான் காலி பகிரங்க நொத்தாரிசு பிரசங்க சமந்த குமார அபேகுணவர்தனவினால் எழுதி உறுதி செய்த இல. 275, மற்றும் 2015 ஜுலை 02ம் திகதிய அட்டோர்ணி அதிகாரப் பத்திரத்தின் மூலம் மேற்படி இலங்கை குடியரசின் வெலிகம, தளுவத்த மாவத்த, செட்டியார் தெருவில் இல. 6/9 எனும் இடம் மற்றும் தற்போது காலி, போத்தல், நாராவல, "செனதம" என்ற இடத்தில் வசிக்கும் இல. 838361935V எனும் தேசிய அடையாள அட்டையைக் கொண்ட கொடாமன விதானகே திலானி அசங்கா என்பவருக்கு வழங்கப்பட்ட அட்டோர்ணி அதிகாரத்தை இத்தால் இல்லாதொழித்து இரத்துச் செய்வதாக இலங்கை அரசிற்கும் சகல மக்களும் சகலரும் அறிந்துகொள்ள மேற்படி அட்டோர்ணி தத்துவத்தின் குறிப்பிடப்படும் அட்டோர்ணி அதிகாரியினால் இத்தினத்தின் பின்னர் என் சார்பாக மேற்கொள்ளும் செயற்பாடுகள் அல்லது கொடுக்கல் வாங்கல்கள் சம்பந்தமாக என்னால் எந்தப் பொறுப்பும் கூறப்படமாட்டாது என்பதை சகலரும் இத்தால் அறிந்துகொள்க.

**ஹெந்த, விதாரண கல்யான் ரிசாந்த குலசூரிய**




இலங்கை சனநாயக சோசலிச குடியரசு
தொழிநுட்ப அமைச்சு
ஆட்களைப் பதிவு செய்யும் திணைக்களம்

## விலை மனுக்கோரல் (IFB)

**ஆட்களை பதிவு செய்யும் திணைக்களத்தின் (DRP) பிரதேச செயலக அலுவலகங்களில் உள்ள 331 எண்ணிக்கையிலான Fujitsu Scanner க்கு ஒரு வருட காலத்திற்கான சேவை வழங்கல்கள் மற்றும் பராமரித்தல்**

**IFB No : DRP/ACC/07/40/2022**

01. ஆட்களைப் பதிவு செய்யும் திணைக்களத்தின் கொள்முதல் குழுவின் தலைவரினால் ஆட்களைப் பதிவு செய்யும் திணைக்களத்தின் **பிரதேச செயலக அலுவலகங்களில் உள்ள 331 எண்ணிக்கையிலான Fujitsu Scanner களுக்கு ஒரு வருட காலத்திற்கான சேவை வழங்கல்கள் மற்றும் பராமரித்தல்** சேவைக்காக தகுதியான மனுதாரர்களிடமிருந்து முத்திரையிடப்பட்ட மனுக்கள் கோரப்படுகின்றது.
02. மனுகோரல்கள் தேசிய மனு கோரல் போட்டி முறைக்கமைய நடைபெறும் (NCB).
03. ஆர்வமுள்ள மற்றும் தகுதியான மனுதாரர்கள் **வாரத்தில் வேலைநாட்களில் மு.ப.9.00 மணி முதல் பி.ப.3.00 மணி** வரையான காலப்பகுதியினுள் வேலை நாட்களில் **0115226172** மூலம் ஆட்களைப் பதிவு செய்யும் திணைக்களத்தின் கணக்காளரிடம் மேலதிக தகவல்களைப் பெற்றுக்கொள்ளலாம் மேலும் மனு ஆவணங்களை நிதிப் பிரிவில், **"சி" பகுதி, 12 வது மாடி, ஆட்களைப் பதிவு செய்யும் திணைக்களம், சுஹுருபாய, பத்தரமுல்லையில்** எமது அதிகாரப்பூர்வ வலைத்தளம் **(www.drp.lk)** மூலமாக **2022.09.30** முதல் **2022.10.20** வரையான காலப்பகுதியினுள் இலவசமாக பரிசிலனை செய்யலாம்.
04. இதற்காக ஆர்வம் காட்டும் மனுதாரர்கள் **2022.09.30** ஆம் திகதியிலிருந்து **2022.10.20** ஆம் திகதி வரை **மு.ப.09.00** மணியிலிருந்து **பி.ப.3.00 மணி வரையான காலப்பகுதியினுள்** எழுத்து மூல விண்ணப்பத்தை **பத்தரமுல்லை, சுஹுருபாயவில் அமைந்துள்ள ஆட்களைப் பதிவு செய்யும் திணைக்களம் "சி" பகுதி, 12வது மாடியில் கணக்காளரிடம் மீள் செலுத்தப்படாத கட்டணமாக** (ரூ.5,000.00) மனுக் கட்டணத்தை பணமாகச் செலுத்துவதன் மூலம் அச்சிடப்பட்ட ஆங்கில மொழியிலான விண்ணப்பத்தை பெற்றுக்கொள்ள முடியும்.
05. பூரணப்படுத்தப்பட்ட மனு ஆவணங்களை இரண்டு பிரதிகளுடன் **(அசல் மற்றும் நகல்) 2022.10.21** ஆம் திகதி **பி.ப.2.00** மணித்தியாலங்களுக்கு முன் பந்தி 3 இல் குறிப்பிடப்பட்டுள்ள விலாசத்திற்கு அனுப்ப வேண்டும். அல்லது **கணக்கு பிரிவு, ஆட்களை பதிவு செய்யும் திணைக்களம், "சி" பகுதி, 12 ஆம் மாடி, ஸ்ரீ சுபூதிபுர வீதி, சுஹுருபாய, பத்தரமுல்லை** எனும் முகவரியில் மனுக்களை சேகரிப்பதற்காக வைக்கப்பட்டுள்ள பெட்டியில் இட வேண்டும். **மனுக்கள் மனுக்கள் கோரப்படும் திகதியில் இருந்து அல்லது நீட்டிக்கப்பட்ட திகதியிலிருந்து 77 நாட்கள் வரை செல்லுபடியானதாக இருத்தல் வேண்டும்.** காலம் தாழ்த்தி கிடைக்கும் விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும். மனு கோரல் நேரம் முடிவடைந்த பின்னர் உடனடியாக மனுக்கள் மனுதாரர்களால் நியமிக்கப்பட்ட பிரதிநிதிகள் முன்னிலையில் திறக்கப்படும்.
06. மனுக்கள் அடங்கியுள்ள கடித உறையின் இடது பக்க மேல் மூலையில் ஒப்பந்தத்தின் பெயர் மற்றும் IFB இலக்கம் என்பவற்றை குறிப்பிட வேண்டும். அனைத்து மனுக்களும் இலங்கையில் செயல்படும் ஏதேனும் உரிமம் பெற்ற வணிக வங்கியினால் வழங்கப்பட **இரண்டு இலட்சத்து இருபதாயிரம் ரூபாய் (ரூ.220,000.00)** மனுக்காப்புறுதிப் பிணையுடன் சமர்ப்பிக்கப்பட வேண்டும். அசல் மனுப்பாதுகாப்பு பிணையுடன் சமர்ப்பிக்கப்பட வேண்டும்

தலைவர்,
திணைக்களத்தின் கொள்முதல் குழு
ஆட்களைப் பதிவு செய்யும் திணைக்களம்
12 ஆம் மாடி, சுஹுருபாய, ஸ்ரீ சுபூதிபுர வீதி,
பத்தரமுல்லை.

---

## இலங்கை தென் மாகாண சபை

**விவசாய, கமத்தொழில் அபிவிருத்தி, நீர்ப்பாசனம், நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்பு, உணவு விநியோகம் மற்றும் வழங்கல் வர்த்தக மற்றும் கூட்டுறவு அபிவிருத்தி அமைச்சு – தென் மாகாணம்**

## கேள்விக்கான அழைப்பு

### தேசியபோட்டி கேள்விகோரல்

**தென் மாகாண கூட்டுறவு ஊழியர் ஓய்வூதிய திட்டத்திற்காக மெய்நிகர் கூட்டுறவு ஊழியர் ஓய்வூதிய தகவல் முகாமைத்துவ அமைப்பை உருவாக்குதல்.**

**ஒப்பந்த இலக்கம் SPCOD (கி/2/5/4/4-I) Service/NCB/2022/01**

1. இலங்கை தென் மாகாண சபையின் கூட்டுறவு அபிவிருத்தி திணைக்களத்தின் கீழ் காணப்படும் கூட்டுறவு அபிவிருத்தி நிதியத்தின் மூலம், தென் மாகாண கூட்டுறவு ஊழியர் ஓய்வூதிய திட்டததின் ஊடாக மானியம் ஒன்று கிடைத்துள்ளது கீழே விபரிக்கப்படும். ஒப்பந்தத்தின் கீழான தகைமையான கொடுப்பனவுகளை உள்ளடக்குவதற்காக ஈடுபடுத்துவதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளது.
2. அதற்காக தென் மாகாண கூட்டுறவு ஊழியர் சம்பளத்திட்டத்தின் சார்பாக விவசாய, கமத் தொழில் அபிவிருத்தி, நீர்ப்பாசனம், நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்பு, உணவு வழங்கல் மற்றும் விநியோகம் வர்த்தக கூட்டுறவு அபிவிருத்தி அமைச்சு செயலாளரினால் பொறியிடப்பட்ட கேள்விகள் கோரப்படுகின்றன.

| வழங்கல் விபரம் | கேள்விப் பிணை (இலங்கை ரூபா) |
|---|---|
| தென் மாகாண கூட்டுறவு ஊழியர் ஓய்வூதியதிட்டத்திற்கான மெய்நிகர் கூட்டுறவு ஓய்வூதிய தகவல் முகாமைத்துவ அமைப்பை உருவாக்குதல் | 60,000 |

3. கேள்வி கோரல் தேசிய போட்டி கேள்வி கோரலின் கீழ் இடம் பெறுவதுடன், இலங்கையில் தகைமையுள்ள எந்த கேள்விதாரருக்கும் திறந்துள்ளது.
4. ஆர்வம் காட்டுகின்ற கேள்விதாரர்களுக்கு 2022.09.30 முதல் 2022.10.20 வரை அலுவலக கடமை நாட்களில் மு.ப. 9.00 முதல் பி.ப. 3.00 வரை மீளளிக்கப்படாத கேள்வி ஆவணக் கட்டணமான ரூ. 3500/- தொகையைச் செலுத்துவதன் பேரில் அல்லது வங்கிப் பிணையொன்றின் மூலம் தென் மாகாண விவசாய, கமத்தொழில் அபிவிருத்தி, நீர்ப்பாசனம், நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்பு, உணவு வழங்கல் மற்றும் விநியோகித்தல் வர்த்தக மற்றும் கூட்டுறவு அபிவிருத்தி அமைச்சு செயலாளருக்கு செலுத்தி தமது வியாபார கடிதத் தலைப்பில் வேண்டுதலைச் சமர்ப்பித்த பின்னர் பெற்றுக்கொள்ளலாம்.
5. மேற்படி 4 இல் குறிப்பிடப்படும் கால எல்லைக்குள் இவ் அமைச்சின் கணக்குப் பிரிவிற்கு வருகைதந்து கட்டணங்கள் இன்றி இலவசமாக கேள்வி ஆவணங்களைப் பரீட்சித்துப் பார்க்கலாம்.
6. கேள்வி கோரல் முடிவடையும் திகதிக்கு முன்பான 14 நாள் கால எல்லைக்குள் இக் கேள்வி கோரல் பற்றி தெளிவுபடுத்துவதற்காக கேள்விக்கு முன்னரான சந்திப்பொன்று ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.
7. கேள்விப் பிணை முறி கேள்வி திறக்கப்படும் தினம் முதல் (அத்தினம் உற்பட) 91 நாட்களுக்கு செல்லுபடியாதல் வேண்டும். அத்துடன் அமைச்சு காசாளரிடம் காசாக செலுத்தி அல்லது வங்கிப் பிணை மூலம் வழங்கப்படல் வேண்டும்.
8. உங்களால் குறித்த கேள்வி ஆவணங்களை 2022.10.21ம் திகதி பி.ப. 2.00 இற்கு அல்லது அதற்கு முன்பு அமைச்சின் கணக்குப் பிரிவில் உள்ள கேள்விப் பெட்டியில் உள்ளிடுவதன் மூலம், பதிவுத் தபால் கூரியர் சேவை மூலம் அல்லது கையோடு கொண்டு வந்து ஒப்படைப்பதன் மூலம் சமர்ப்பிக்கலாம்.
9. கேள்விகள் திறத்தல் கேள்விகள் ஏற்கப்பட்டு முடிவடைந்தவுடன் அமைச்சில் இடம் பெறுவதுடன் தாமதமாகக் கிடைக்கும் கேள்விகள் ஏற்கப்படாமலேயே நிராகரிக்கப்பட்டு அனுப்பப்படும்.
10. இப்பெறுகை பற்றிய இறுதித் தீர்மானம் அமைச்சு பெறுகைக் குழுவிற்கு உரியது.

**செயலாளர்**
**விவசாய, கமத்தொழில் அபிவிருத்தி, நீர்ப்பாசனம், நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்பு, உணவு வழங்கல் மற்றும் விநியோகம்**
**வர்த்தக மற்றும் கூட்டுறவு அபிவிருத்தி அமைச்சு - தென்மாகாணம்**
**4ஆம் மாடி, தக்ஷினபாய,லபுதுவ, காலி.**
**தொலைபேசி: 091-4943088, பெக்ஸ்: 091-2247835**

---

நகர அபிவிருத்தி மற்றும் வீடமைப்பு அமைச்சு

## கூட்டு ஆதன முகாமைத்துவ அதிகார சபையின் பதவி வெற்றிடங்களிற்கு ஆட்சேர்த்தல்

கூட்டு ஆதன முகாமைத்துவ அதிகார சபையின் கீழ்க்காணப்படும் பதவிகளிற்காக தகைமையுள்ள விண்ணப்பதாரர்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

**1. பொது முகாமையாளர் HM 2-1 'சிரேஷ்ட முகாமையாளர்' பதவி 01**

**பதவிக்கான தகைமைகள்**

**வெளிவாரி விண்ணப்பதாரர்கள்**

(அ) முகாமைத்துவம், சிவில் பொறியியல், வாஸ்து விஞ்ஞானம் அல்லது சட்டம் போன்ற விடயப்பரப்புகளில் பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட ஆரம்ப பட்டம் ஒன்றைப் பெற்றிருத்தல்

*மற்றும்*

முகாமைத்துவம், பொறியியல், வாஸ்து விஞ்ஞானம் அல்லது சட்டம் போன்ற விடயப் பரப்பின் பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட பட்டப்பின் பட்டமொன்றைப் பெற்றிருத்தல் அல்லது இலங்கை பொறியியலாளர்களின் நிறுவனத்தில் (IESL) அல்லது வாஸ்து விஞ்ஞானிகளின் நிறுவனத்தில் (SLIA) (Chartered Engineers/ Chartered Architects) முழுமையான அங்கத்துவம் பெற்றிருத்தல்

*மற்றும்*

பட்டதாரிப்பட்டம் பெற்றுக்கொண்டதன் பின்னர், அரச கூட்டுத்தாபனமொன்றில் நியதிச் சபையொன்றில் அல்லது அங்கீகரிக்கப்பட்ட தனியார் நிறுவனமொன்றில் முகாமைத்துவ மட்டத்தின் பதவிகளில் குறைந்தபட்சம் இருபது (20) வருட அனுபவம் பெற்றிருத்தல், குறைந்தபட்சம் அதில் 05 ஆண்டுகள் சிரேஷ்ட முகாமைத்துவ மட்டத்தில் இருத்தல் வேண்டும்.

*அல்லது*

(ஆ) முகாமைத்துவம், சிவில் பொறியியல், வாஸ்து விஞ்ஞானம் அல்லது சட்டம் போன்ற விடயப் பரப்புகளில் பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட ஆரம்ப பட்டமொன்றைப் பெற்றிருத்தல்

*மற்றும்*

முகாமைத்துவம், பொறியியல், வாஸ்து விஞ்ஞானம் அல்லது சட்டம் போன்ற விடயப் பரப்புக்களில் கலாநிதிப்பட்டம் பெற்றிருத்தல்.

*மற்றும்*

கலாநிதிப்பட்டமொன்றைப் பெற்றுக்கொண்டதன் பின்னர், அரச கூட்டுத்தாபனமொன்றில் நியதிச் சபையொன்றில் அல்லது அங்கீகரிக்கப்பட்ட தனியார் நிறுவனமொன்றில் சிரேஷ்ட முகாமையாளர் மட்டத்தில் குறைந்தபட்சம் (05) ஐந்தாண்டுகள் மிக உயர்ந்த சேவையைக் கொண்டுள்ள அலுவலரொருவருக்கான அனுபவம்.

**உள்வாரி விண்ணப்பதாரர்கள்**

கூட்டு ஆதன முகாமைத்துவ அதிகார சபையில் சிரேஷ்ட முகாமைத்துவ சேவை வகுதியின் பதவியொன்றில் குறைந்தபட்சம் (05) ஐந்தாண்டுகள் உரித்தான விடயப்பரப்பில் திருப்திகரமான சேவைக்காலத்தைப் பூரணப்படுத்தி இருத்தல்.

*மற்றும்*

பல்வேறு வகையான கருமங்களை மேற்கொள்ளும் தொகுதிகளிற்குத் தலைமை தாங்குதல் மற்றும் மனிதவளம் மற்றும் ஏனைய வளங்களை வினைத்திறனுடன் முகாமைத்துவம் செய்வதில் நிலையான திறன்கள்.

**சம்பளம்**

HM 2-1 ரூ 91,645- 12x2,700 = 124,045

- தேர்ந்தெடுக்கப்படும் விண்ணப்பதாரர் அடிப்படைச் சம்பளத்தில் (ரூபா 91,645) இல் நிலைநிறுத்தப்படுவர்.
- அரசினால் அனுமதிக்கப்படும் அனைத்துக் கொடுப்பனவுகள் மற்றும் வாழ்க்கைச் செலவுக் கொடுப்பனவு வழங்கப்படும்.
- எரிபொருள் கொடுப்பனவுடன் உத்தியோகபூர்வ வாகனமொன்றை உபயோகிப்பதற்கான உரிமை கிடைக்கும்.

**வயது**

வயது 35 வருடங்களிற்குக் குறையாமலும் 55 வயதிற்கு மேற்படாமலுமிருத்தல் வேண்டும். உள்வாரி விண்ணப்பதாரர்களிற்கு உச்ச வயதெல்லை பொருந்தமாட்டாது.

**2. பிரதிப் பொது முகாமையாளர்**
**(மனித வளங்கள்/ நிருவாகம்)**
**முகாமைத்துவம் 'MM-1-1 பதவி 01**

**வெளிவாரி விண்ணப்பதாரர்கள்**

பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட மனித வளங்கள் முகாமைத்துவம்/ முகாமைத்துவம்/ வர்த்தக நிருவாகம்/ அரச முகாமைத்துவம் தொடர்பான பட்டமொன்றைப் பெற்றிருத்தல்

*மற்றும்*

பட்டதாரிப்பட்டத்தைப் பெற்றுக்கொண்டதன் பின்னர், அரச, அரச கூட்டுத்தாபனம், ஒன்றில், சபையொன்றில், நியதி நிறுவன மொன்றில் அல்லது அங்கீகரிக்கப்பட்ட தனியார் நிறுவனமொன்றில் குறைந்த பட்சம் (01) ஒரு வருடம் உரித்தான துறையில் அனுபவம் பெற்றிருத்தல்.

**உள்வாரி விண்ணப்பதாரர்கள்**

மேற்படி வெளிவாரி விண்ணப்பதாரர்களிற்கான தகைமைகளைப் பூரணப்படுத்தி இருத்தல்

*அல்லது*

கூட்டு ஆதன முகாமைத்துவ அதிகார சபையின் கனிஷ்ட முகாமையாளர் வகுதியின் (JM) உரித்தான துறையின் பதவியொன்றில் (05) ஐந்தாண்டுகள் திருப்திகரமான சேவைக் காலத்தைப் பூரணப்படுத்தி இருத்தல்

**வயது**

22 வயதிற்குக் குறையாமலும் 45 வயதிற்கு மேற்படாமலுமிருத்தல் வேண்டும் உள்வாரி விண்ணப்பதாரர்களிற்கு உச்ச வயதெல்லை பொருந்த மாட்டாது.

**சம்பளம்**

MM 1-1 ரூபா 53,175 - 10x1,375 - 15x1,910 = 95,575

- தேர்ந்தெடுக்கப்படும் விண்ணப்பதாரர்கள் அடிப்படைச் சம்பளமான ரூபா 53175.00 இல் நிலைநிறுத்தப்படுவர்.
- அரசு அனுமதிக்கும் அனைத்துக் கொடுப்பனவுகள் மற்றும் வாழ்க்கைச் செலவுக் கொடுப்பனவு வழங்கப்படும்.
- தொலைபேசிக் கட்டணப் பட்டியல்கள் வரையறைக்குட்படுத்தப்பட்டு மீளளிக்கப்படும்.

**அனைத்து விண்ணப்பதாரர்களும்.**

i. இலங்கைப் பிரசையாக இருத்தல் வேண்டும்.
ii. பதவிக்கான கருமங்களை செவ்வனே மேற்கொள்வதற்காக, மற்றும் நாட்டின் எந்தவொரு பிரதேசத்திலும் பணியாற்றுவதற்குத் தேவையான உடல் மற்றும் உள ஆரோக்கியம் கொண்டவராக இருத்தல் வேண்டும்.
iii. சிறந்த நல்ஒழுக்கம் உடையவராக இருத்தல் வேண்டும்.

**பதவிக்கான பொது நிபந்தனைகள்**

1. இப்பதவியானது நிரந்தரமானது என்பதுடன் ஓய்வுதியம் அற்றதாகும். ஊழியர் நலன்புரி நிதியத்திற்கு ஊழியரிடமிருந்து 10% உம் மற்றும் சேவை வழங்குநரிடமிருந்து 12% உம், ஊழியர் நம்பிக்கைப் பொறுப்பு நிதியத்திற்கு சேவை வழங்குநரிடமிருந்து 3% உம் பங்களிப்புச் செய்யப்படும்.
2. அரச கூட்டுத்தாபன/ நியதிச் சபைகளின் விண்ணப்பதாரர்கள், தம் நிறுவனத்தலைவரினூடாக விண்ணப்பங்களைச் சமர்ப்பித்தல் வேண்டும்.
3. விண்ணப்பதாரர் தொடர்பான தகவல்களைப் பெற்றுக்கொள்ளக்கூடிய, உறவினரல்லாத இரண்டு பரிந்துரையாளர்களின் பெயர்கள் மற்றும் முகவரிகள் விண்ணப்பங்களுடன் சமர்ப்பிக்கப்படல் வேண்டும்.
4. கல்வி, ஏனைய சான்றிதழ்கள் மற்றும் அனுபவம் தொடர்பான சான்றிதழ்களின் நிழற்படப் பிரதிகள் விண்ணப்பங்களுடன் இணைத்து அனுப்பப்படல் வேண்டும்.
5. விண்ணப்பதாரர்களினால், விண்ணப்பங்களை ஏற்றுக்கொள்ளும் இறுதித் தினத்தன்று அனைத்து தகைமைகளையும் பூரணப்படுத்தி இருத்தல் வேண்டும்.

**விண்ணப்பிக்கும் முறை**

இதற்காகத் தகைமையுள்ள விண்ணப்பதாரர்கள், கல்வி, தொழிற்றுறைத்தகைமைகள், அனுபவம் மற்றும் தனிப்பட்ட தகவல்கள் அடங்கிய சுய தரவுக் குறிப்புக்களை தபாலுறையில் சேர்த்து அதன் இடது பக்க மேல் மூலையில் விண்ணப்பிக்கும் பதவியின் பெயரைக் குறிப்பிட்டு 2022.10.17 இற்கு முன்னர் கீழ்க்காணப்படும் முகவரிக்குப் பதிவுத்தபாலில் அனுப்புதல் வேண்டும்.

தாமதமாகக் கிடைக்கப் பெறும், தெளிவற்ற, முழுமை பெறாத விண்ணப்பங்கள் மற்றும் அடிப்படைத் தகைமைகளைப் பூரணப்படுத்தாத நபர்களின் விண்ணப்பங்கள் முன்னறிவித்தலின்றி நிராகரிக்கப்படும்.

**தலைவர்,**
**கூட்டு ஆதன முகாமைத்துவ அதிகார சபை**
**1ஆம் மாடி, தேசிய வீடமைப்புத் திணைக்களக் கட்டிடம்,**
**சேர் சிற்றம்பலம் ஏ கார்டினர் மாவத்தை,**
**கொழும்பு- 02.**

சுகாதார அமைச்சு

# ஆதார வைத்தியசாலை - அக்கரைப்பற்று

## சிற்றுண்டிச்சாலை நடாத்துவதற்கான அழைப்பு

ஆதார வைத்தியசாலை அக்கரைப்பற்றின் பெறுகைக்குழு, வைத்தியசாலை உத்தியோகத்தர்கள், நோயாளிகளுக்கான சிற்றுண்டிச்சாலையினை 01.01.2023 தொடக்கம் 31.12.2023ம் திகதி வரையான ஒரு வருட காலத்திற்கு நடாத்துவதற்காக அனுபவம் வாய்ந்த கூட்டாண்மை, நிறுவனங்கள், தனிநபர்கள் மற்றும் பதிவு செய்யப்பட்ட சங்கங்கள் என்பனவற்றிடமிருந்து மூடப்பட்ட விலைமனுவினை இத்தால் கோருகின்றது.

| தொ. இ. | விபரம் | பெறுகை ஆவணத்திற்கான பணம் (மீளப்பெற முடியாதது) | கேள்வி பிணை (மீளப்பெற முடியுமானது) |
|---|---|---|---|
| 01 | சிற்றுண்டிச்சாலை சேவை வழங்கல் ஒரு வருட காலம் (2023) | 2,000.00 | 25,000.00 |

மேல் குறிப்பிட்ட தொகையினை வைத்தியசாலை காசாளரிடம் செலுத்திய பின்பே பெறுகை ஆவணங்கள் வழங்கப்படும். பெறுகை ஆவணங்கள் 03.10.2022 தொடக்கம் 02.11.2022 வரை பெறுகைப்பிரிவில் பெற்றுக்கொள்ளலாம்.

பூரணப்படுத்தப்பட்ட விலைமனு இரண்டு பிரதியில் தலைவர், பிராந்திய பெறுகைக்குழு ஆதார வைத்தியசாலை, அக்கரைப்பற்று எனும் முகவரிக்கு 2022.11.03ம் திகதி மு.ப.10.00 மணிக்கு அல்லது அதற்கு முன்பு கிடைக்கக் கூடியதாக பதிவுத்தபாலில் அனுப்பி வைக்கப்படல் வேண்டும். அல்லது கணக்குப்பிரிவிலுள்ள பெறுகைப்பெட்டியில் உள்ளிடல் வேண்டும்.

விண்ணப்பதாரர் இது தொடர்பில் அனுபவம் பெற்றிருப்பதோடு பதிவு செய்யப்பட்டிருக்க வேண்டும். மேலதிக தகவல்களுக்கு கணக்காளரை 0672278213 எனும் இலக்கத்தில் தொடர்பு கொண்டு பெற்றுக்கொள்ள முடியும். விலைமனு அதே நாள் 10.30 மணிக்கு நிர்வாக கட்டிடத்தில் திறக்கப்படும். 2021.11.03ம் திகதி மு.ப.10.00 மணிக்குப் பின்பு கிடைக்கப்பெறும் விலைமனுக்கள் நிராகரிக்கப்படும்.

**தலைவர் பிராந்திய பெறுகைக் குழு,**
**ஆதார வைத்தியசாலை,**
**அக்கரைப்பற்று.**
**30.09.2022**

# பெறுகை அறிவித்தல்

## களுத்துறை நகர சபை

பொஹறவத்த குப்பைக் களஞ்சியத்தில் உக்கிப் போகாத குப்பை மற்றும் மண்ணை துகள்களாக்குவதற்கு D4D இயந்திரமொன்றை வாடகை அடிப்படையில் பெற்றுக்கொள்ளல்.

01. இச்சபைக்கு சொந்தமான மேற்படி குப்பைக் களஞ்சியத்தில் உக்கிப் போகாத குப்பை மற்றும் மண்ணை துகள்களாக்கும் கீழே உள்ள மாதிரிகளைப் பூர்த்தி செய்துள்ள D4D இயந்திரம் ஒன்றை பெற்றுக்கொள்வதற்காக நிறுவனங்களில் இருந்து மற்றும் தனிநபர்களிடமிருந்து பெறுகைப் பத்திரங்கள் கோரப்படுகின்றன.

- ❋ Gross Power - 7511P min 90 max
- ❋ Length of blade - 10ft - 12ft
- ❋ Fuel Capacity - 200L - 250L
- ❋ உற்பத்தி ஆண்டு 2000ஆம் ஆண்டிற்குப் பின்
- ❋ Number of Track rollers for side - 5 min
- ❋ Track Gauge - 5ft min
- ❋ Operation Weight - 13500 kg
  Ground Pressure - 40kpa

**நிபந்தனைகள் :**

- ❖ இயந்திரம் செயற்பாட்டு நிலையில் உள்ளதாக இயந்திர பொறியியல் சான்றிதழொன்றைச் சமர்ப்பித்தல் வேண்டும்.
- ❖ தேர்ந்தெடுக்கப்படின் ஒரு வருட சேவை உடன்பாடொன்றிற்கு வரல் வேண்டும்.
- ❖ உடன்பாட்டின் நிபந்தனைகளை மீறாதவாறு தேவையான சேவையை வழங்குதல் வேண்டும்.

02. **பெறுகைப் பத்திரங்கள் விநியோகித்தல்** :- 2022.10.20 பி.ப. 3.00 வரை
03. **பெறுகைப் பத்திரங்கள் ஏற்றுக்கொள்ளல்** :- 2022.10.21 பி.ப. 2.00 வரை
04. **திறத்தல்** :- பெறுகைப் பத்திரங்கள் ஏற்றுக்கொள்ளல் முடிவடைந்தவுடன்
05. மீளளிக்கப்படாத படிவக் கட்டணம் ரூ. 1,000.00ஐயும், மீளளிக்கப்படும் படிவக் கட்டணம் ரூ. 20,000.00 ஐயும் செலுத்தி இது பற்றி ஆர்வம் காட்டுகின்றவர்களுக்கு நகர சபை அலுவலகத்திற்கு வருகை தந்து பெறுகைப் பத்திரங்களைப் பெற்றுக்கொள்ளலாம்.
06. செயற்றிட்டம் பற்றிய விபரங்களை வேலை அதிகாரியிடம் 034-2222275 தொ.பே. ஊடாகப் பெற்றுக்கொள்ளலாம்.

**2022.09.30**
**நகர சபை அலுவலகத்தில்,**
**ஆமிர் நசீர்,**
**தலைவர்,**
**களுத்துறை நகர சபை.**

NSB

# தேசிய சேமிப்பு வங்கி

## விலைமனுக்களுக்கான அழைப்பு

**கேள்வி இல: NSB/PT/ITE/2021/25**

இங்கு காட்டப்பட்டுள்ள கேள்விக்கு இயைபான பொருட்களை வழங்குதல், விநியோகித்தல், பொருத்துதல், செயற்படுத்திக் காண்பித்தல் மற்றும் பராமரிப்பதற்காக அங்கீகரிக்கப்பட்ட முதன்மை உற்பத்தியாளர்கள் / வழங்குநர்கள் அல்லது அவர்களின் இலங்கைக்கான உத்தியோகபூர்வ உள்நாட்டு முகவர்களிடமிருந்து முத்திரைக்குறி பொறிக்கப்பட்ட கேள்விகள் இத்தால் அழைக்கப்படுகின்றன.

| | |
|---|---|
| **பெறுகையின் விளக்கம்** | DOT MATRIX PRINTERS - 350CPS - 50 NOS.<br>DOT MATRIX PRINTERS - 550CPS - 50 NOS. |
| **பெறுகை முறை** | தேசிய போட்டி ரீதியிலான கேள்வி கோரல் (NCB) |
| **தேவைப்படுத்தப்படும் மீளளிக்கப்படாத கேள்விக் கட்டணம்** | ரூபா 5,000.00 |
| **சமர்ப்பிக்கப்பட தேவைப்படும் விலைமனுப் பெறுமதி** | ரூபா 205,000.00 |
| **விலைமனு ஆவணங்களை வழங்கும் இறுதித் திகதி மற்றும் நேரம்** | 2022-10-25ஆம் திகதி பி.ப. 3.00 மணி |
| **கேள்வி மூடும் திகதி மற்றும் நேரம்** | 2022-10-26ஆம் திகதி மு.ப. 10.00 மணி |

1. எந்தவொரு கேள்விதாரர் சார்பாகவும் பிரதிநிதியொருவர் அல்லது உப பிரதிநிதியொருவர் அல்லது பெயர் குறிப்பிடப்பட்டவராக செயற்படும் எந்தவொரு நபரும் கேள்விக்காக விண்ணப்பிப்பதற்கு முன் 1987ஆம் ஆண்டின் 03ஆம் இலக்க பொது ஒப்பந்தங்கள் சட்டத்தின் கீழ் பதிவு செய்து கொள்ளல் கட்டாயமாகும் என்பதுடன் அவர் சார்பில் ஒப்பந்தத்தைப் பதிவு செய்து கொள்ளல் கட்டாயமாகும்.
2. 2022-09-30ஆம் திகதியிலிருந்து 2022-10-25ஆம் திகதி வரை வேலை நாட்களில் மு.ப. 8.30 மணியிலிருந்து பி.ப. 3.00 மணி வரை கொழும்பு-03, காலி வீதி, 255ஆம் இலக்கத்திலுள்ள தேசிய சேமிப்பு வங்கியின் வழங்கல்கள் பிரிவு, வழங்கல்கள் முகாமையாளரிடமிருந்து எழுத்துருவிலான கோரிக்கையொன்றின் பேரில் விலைமனு ஆவணங்களை பெற்றுக்கொள்ளலாம்.
3. முறையாகப் பூர்த்தி செய்யப்பட்ட விலைமனுக்கோரல் ஆவணங்கள் மேலே சுட்டிக்காட்டப்பட்டுள்ளவாறான தொகைக்கானதும், தேசிய சேமிப்பு வங்கியினால் ஏற்றுக்கொள்ளும் தன்மையிலுள்ளதும் வர்த்தக வங்கியொன்றினால் வழங்கப்பட்டதும் கேள்வியை திறக்கும் திகதியிலிருந்து ஆகக்குறைந்த காலப்பகுதியான 210 நாட்காட்டி நாட்களுக்கு செல்லுபடியாகும் தன்மையிலுள்ளதுமான வங்கி உத்தரவாதத்துடன்/ விலைமனுப் பிணையொன்றுடன் இணைக்கப்பட்டிருத்தல் வேண்டும்.
4. விலைமனுக்கள் உரிய திகதியன்று மு.ப. 10.00 மணிக்கு அவைகளை மூடியதும் உடனடியாகவே திறக்கப்படுமென்பதுடன், மு.ப. 10.00 மணிக்கு பின்னர் பெற்றுக் கொள்ளப்படும் விலைமனுக்கள் நிராகரிக்கப்பட்டு திறக்கப்படாமலேயே திருப்பி அனுப்பப்படும்.
5. எந்தவொரு அல்லது அனைத்து விலைமனுக்களையும் நிராகரிப்பதற்கான உரிமையை கொண்டிருப்பதுடன், எவ்வித காரணங்களையும் முன் வைக்காமல் பாகமொன்றை ஏற்றுக்கொள்வதற்கான உரிமையை தேசிய சேமிப்பு வங்கி கொண்டுள்ளது.

இது தொடர்பான மேலதிக விபரங்களை தேசிய சேமிப்பு வங்கியின் (வழங்கல்) சிரேஷ்ட முகாமையாளரிடமிருந்து பெற்றுக்கொள்ளலாம்.

**தலைவர் - கூட்டு வர்த்தக பெறுகைக்குழு – கீழ் மட்டம்,**
**தேசிய சேமிப்பு வங்கி,**
**இல. 255, காலி வீதி,**
**கொழும்பு-03.**


Sunday Observer adz | தினகரன் வாரமஞ்சரி

Promotional Rates for Classified Advertisements (Only 15 Words)

| Any Single Newspaper | Two Newspapers | Three Newspapers |
|---|---|---|
| ரூ. 500/- (Except Thinakaran Varamanjari) | ரூ. 700/- (Except Thinakaran Varamanjari) | ரூ. 950/- |

- ISLANDWIDE -

SABARAGAMUWA PROVINCE

KEGALLE. 035-5677210, 035-2222427
